பனை மாத்திரமே பெரு வியப்பையளித்து அது என்ன இராகம் என்று அறிதற்கியலாமல் திகைக்கச் செய்தது. ஏனெனில் இந்த இராகத்தை அவர்கள் இதற்குமுன் கேட்டதில்லை. அவர்களால் அந்த இராகத்தைச் சிறிதும் அறிந்து கொள்ள முடியவில்லை. உடனே வைத்தியநாத ஐயர் அதுசக்கரவாகம் என்றும் அக்காலத்தில் பொதுவாகப் பாடப்படவில்லை என்றும் விளக்கிச் சொல்லி அந்த இராகத்தில் தியாகராஜ சுவாமிகளின் ''சுகுணமுலே'' என்ற கீர்த்தனத்தையும் பாடிக்காட்டினர். இச்சம்பவம் சுமார் நூருண்டுகளுக்கு முன் நடந்தது. பல ஆண்டுகள் கழிந்த பின்னும் இன்றுங்கூட ''வகுளாபரணம், கோகிலப்ரியா, ஹேமவதி, பவப்ரியா, கமனச்ரம, தர்மவதி, நடபைரவி, ஷட்விதமார்கிணி, ஸ்ரஸாங்கி முதலிய இராகங்கள் இசை வல்லுநர்களாகிய நம்மால் ரசிகர்களின் செவிக்குக் கொண்டுவர வேண்டியதாக இருக்கிறது!!!

இது இவ்வாறிருக்க (நாகானந்தினி, நவநீதம், மானவதி, தாதுவர்த்தனி, ரூபாவதி, ஜங்காரத்தொனி, ரகுப்ரியா, கோஸலம், சூலினி, சித்ராம்பரி, காந்தாமணி, ஸாலகம், நாஸிகாபூஷணி முதலிய இராகங்களின் நிலைகளைக் கேட்கவே தேவையில்லை) இத்தகைய தாழ்நிலைக்கு யாரைக் குற்றஞ் சொல்வது. என்னைப் பொறுத்தவரையில் இத்துணை ஆண்டுகளாக ''கல்யாணி, காம்போதி, சங்கராபரணம், பைரவி, தோடி, கீரவாணி, கரஹரப்ரியா, ஷண்முகப்ரியா'' முதலிய இராகங்களை மாத்திரம் (தன்னைக் காத்துக் கொள்ளுவதற்காக) அடிக்கடி பாடி வருகின்றவர்

களையே குற்றஞ் சொல்வேன். எனவே இக்காலத்துத் தேவை என்னவெனில் நம்மிடையே அப்பேர்ப்பட்ட ''மஹா'' என்றில்லாவிடினும் ஒருசில வைத்தியநாத சிவன்களாவது தேவை. ஆமாம்! வெறும் வைத்திய நாதசிவன்கள் வந்தாலும் போதும். நம்மால் புறக் கணிக்கப் பட்டும் அறியாமையால் விடப்பட்டும் இருக் கின்ற எவ்விதத் தவரும் குற்றமும் அற்று விளங்கும் அந்தப் பல இராகங்களுக்கு மீண்டும் உயிர் ஊட்ட வேண்டும்.

இன்னெரு கோணத்திலிருந்து இந்தத் தாழ் நிலையை மீண்டும் நோக்குகிறேன். நூறு ஆண்டு களுக்கு முன்னமேயே மகாவைத்தியநாத ஐயர் எழுபத்திரண்டு (72) மேளகர்த்தா இராகங்களை ஒன்று முதல் எழுபத்திரண்டு வரை வரிசைக்கிரமமாக ''மேள இராக மாலிகா'' என்ற மாபெரும் இசைநூல் வெளியிட்டிருக்கிருர். ஆயினும் இன்ரு நூருண்டுகள் கழிந்தும் நம் முன்னைய சந்ததி இசைவாணர்களில் பலர் இந்த மேளகர்த்தா இராகங்களின் பெரும்பான் மையைப் பாடமுடியாத, ஆராய முடியாத, வெளியிட முடியாத, ஏன்? தொடக்கூட முடியாத மர்மமாக்கி விட்டார்கள். ஆனல் அவர்களே கிடைத்த சமய மெல்லாம் மகாவைத்தியநாத ஐயரின் பிரதாபங்களை மட்டும் கூறுவதில் தவறியதில்லை! தியாகப்பிரம்மம், முத்துசாமி திஷிதர் முதலியோர் அந்த மேளகர்த்தா இராகங்களிலும் அதன் ஜன்ய இராகங்களிலும் பல கிருதிகளை இயற்றியுள்ளார்கள் என்பதை மேலே கூறிய வித்துவான்கள் தெரிந்துமிருக்கிருர்கள். அம்

மகான்களுடைய சீடர்கள் அவ்வப்போது அத்தகைய மேளகர்த்நா உருப்படிகளுக்குச் சுர அமைப்பு எழுதியும் வந்திருக்கிருர்கள். அவர்கள் தங்கள் குரு இயற்றியதையும் பாடியதையும் ஒருவித காழ்ப்பும் இல்லாமல் வெளியிட்டு வந்திருக்கிருர்கள். அதோடு மகாவைத்தியநாத ஐயர் போன்ருேர் வெவ்வேறு இராகங்களிலமைந்த அப்பாடல்களை சொந்த விருப்பு வெறுப்பு அன்னியில் பாடிவந்திருக்கிருர்கள். நூருண்டு காலத்துக்குப்பின் இப்பொழுது நாம் அத்தகைய பெரியோர் காத்துத்தந்த சிறப்பினை அடிக்கடி எளிமை பெறப் பாடியும் பழகியும் வரவேண்டிய நிலையில் இருக்கிருேம். நாம் புதியதாக ஒன்றும் இயற்ற வேண்டியதில்லை. நமது முன்னேர்கள் நமக்காக விட்டுச் சென்ற அந்த அரிய செல்வங்களை பாதுகாத்துத் தருவதற்காகவாவது முயலவேண்டாமா? இது நமது தெய்வீகப் பணியல்லவா?

இக்காலத்தில் உலகெங்கினும், மனிதனின் அறிவையும் நோக்கத்தையும் வளர்ப்பதற்காகப் பல எண்ணிறந்த புதையல்களை வெளிக் கொணர்ந்தும் உலக அரங்கிற்குக் காட்டியும் வருகிருர்களே. அவ்வாறிருக்க நேர்மாருக நமது இசையுலகில் பல உயிர்ச் சிறப்பு உள்ள இராகங்களைப் புதைத்து வருகிருேமே! இது நம் கண் முன்னேயே நடக்கப் பார்க்கின்ருேம்.

இந்த யுகத்தில் பல இசைவாணர்கள் மேற்கண்ட இராகங்களை அறியாமையினுலும் மன்னிக்க இயலாத காழ்ப்புக்களினுலும் அழியவிடப்படுவதை நன்ருக உணர்கிருர்கள். அவர்கள் இதற்கொரு வாழ்

வும் உயிரும் கொடுத்து இக்குறையைத் தீர்க்க முன் வந்திருக்கிருர்கள். அவர்களின் எண்ணிக்கை மிகப் பெரிது. அவர்கள் உண்மையில் அதிக எண்ணிக்கை தான். அவர்களைப் பற்றி நான் பெருமைப் படு கிறேன். அவர்களில் நானும் ஒருவன் என்றெண்ண வும் மிகப் பெருமைப் படுகிறேன்.

இந் நூலில் என்னை உருக்கிக் கண்ணீர் வரச் செய்யக் கூடிய பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன. மகா வைத்தியநாத ஐயருடைய எளிமையும் மிகச் சாதாரண பழக்கங்களும் அவருடைய மிக எளிய வாழ்க்கைத் தேவைகளும் எளிய உடையும் உணவும் கட்டுப்பாடான உணவு வகைகளும் - மிகச் சிறப்பாக அழகாக வெளியிடப்பட்டிருப்பதோடு இவற்றினின் றும் மாறுபட்ட பட்டினம் சுப்பிரமணிய ஐயருடைய பழக்க வழக்கங்களும் காட்டப் பெற்றிருக்கின்றன. அவர்களிருவர்களும் கோயில்களிலும் பிற இடங்களி லும் சந்திக்கும்பொழுது ஒருவர்க்கொருவர் வரவேற் புக் கூறிக் கொள்வது உண்மையில் நம்மை நெகிழ வைக்கின்றது. பழமானேறி சுவாமிநாத ஐயர் ஒரு பெரிய விருந்து உண்ணும்போது தம்முடைய குரு வாகிய மகாவைத்தியநாதசிவன் இத்தகைய விருந்து களை உண்ணுமல் எளிய முறையில் உண்டு வந்தாரே என்று எண்ணும்போது வருத்தத்தால் கண்ணீர் விட் டார் என்ற செய்தி நம்முடைய உள்ளத்தைத் தொடு கிறது. இதை நோக்க மகாமேதையாகிய இப்பெரிய மனிதர் மிக எளியவராக இருந்திருக்கிருர் எனத் தெரிகின்றது.

பல்லவி சுப்பையா பாகவதர் தமது மூத்த குருவாகிய இராமசாமிசிவன் வெளியிட்ட விசயசங்கிரகம் என்ற நூலில் பல இசைவாணர்களை வெளிப்படையாக குறை கூறி எழுதியதை நோக்கி வருந்தியும் காரணங் காட்டியும் சொல்லுவதை நோக்கும்போது சுப்பையா பாகவதருடைய நேர்மையான பண்பையும் அவருக்குச் சிவன் சகோதரர்களிடம் பிரச்சனைக்கு இடமில்லாத மதிப்பையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

அக்காலங்களில் கச்சேரிகளில் பல்லவி கட்டாயம் பாடப் படவேண்டும். ஒவ்வொரு மேடையிலும் அதனைக் கட்டாயமாக விரும்புவர். கச்சேரி ஏற்பாடு செய்கிறவர்கள் அப் பல்லவியைப் பாடும்படியும் கட்டளை யிடுவார்கள். பல்லவி பாடப்படாத கச்சேரிகளை நிறைவு பெற்ற ஒன்ருகச் சபையோர்கள் கருத மாட்டார்கள். இக்காலத்திலோ பழைய மரபை ஒட்டி கச்சேரி ஏற்பாடு செய்கின்றவர்களும் அவையோர்களும் பல்லவி கேட்க விரும்பினுலும் இதற்கு முந்தைய தலைமுறையினர் ஏற்படுத்திய சூழ்நிலையின் காரணமாக பல வித்துவான்கள் பல்லவி பாடுவதினின்றும் பெரும்பாலும் ஒதுங்குகிருர்கள். ஒருவேளை இங்குமங்குமாக ஒரு பல்லவியைப் பாட எடுத்துக் கொண்டாலும் இராகம் தானம் பல்லவி எல்லாவற்றையும் சேர்த்து பதினைந்து அல்லது இருபது நிமிடங்களில் முடித்து விடுகிருர்கள். இத்தகைய வியக்கத்தக்க நிகழ்ச்சிகளை டிசம்பர் சங்கீத சதசுகளிற் காணலாம். என்னுடைய தாழ்மையான அபிப்பிராயத்தில்

அரைகுறையாகப் பாடி இராக - தான - பல்லவி அம்சத்திற்கு அநீதி விளைவிப்பதைவிட பாடாமல் விட்டுவிடுவதே உசிதம்.

ஆயினும் இக்காலத்திலேயே மறைந்து போன பல இராகங்களைப் பழக்கத்திற்குக் கொண்டுவருவது போல பல்லவிகளை லய வின்னியாசச் சிறப்போடு முறையாகப் பாடி நிறை செலுத்துகின்ற இசைவாணர்களும் அதிர்ஷ்ட வசத்தால் நம்மிடையே இருக்கிறார்கள்; அவர்களால் பல்லவி நமது பழைய பெருமையை காத்துக் கொள்கிறது. இப்பெருங் காரியத்தை முந்தைய பரம்பரையைச் சேர்ந்த வித்துவான்கள் பலரும் தங்களுடைய தனிப்பட்ட வெறுப்பையும் மன வேற்றுமையையும் மறந்து ஒன்று சேர்ந்திருப்பார்களாயின் எளிதில் நிறைவேற்றிக் கொண்டிருக்கலாம். ஏனெனில் அக்காலத்தில் நம்முடைய இசையுலகில் எவ்விதப் போட்டியும் இல்லாதிருந்தது. இசை தன் முழு ஆற்றலோடு விளங்கிற்று. இசைவாணர்கள் முழுத் தெம்போடு இருந்தனர். தற்காலம் போல் திரைப் படங்களோ, நாடகங்களோ, நடனங்களோ போட்டியிடும் அளவிற்கு அக்காலத்தில் இல்லை. திரைப்படப் பின்னணிப் பாடகர்களுடைய சினிமாப் பாடல்களின் (!!!) இசை நிகழ்ச்சிகளும் கிடையாது. ஆங்கில மெல்லிசை நிகழ்ச்சிகளும் கிடையா. அரசியல் மேடைகளும் இலக்கிய விரிவுரைகளும் இன்றைய அளவிற்கு இல்லை. மேலும் தற்காலத்தைப் போல் வானொலிப் பெட்டிகளும் சுக சங்கீதங்களும் திரைப் படப் பாடல் ஒலிபரப்புக்களும் அக்காலத்திற் கிடையா.

இவ்வாறு பெரும்பான்மையோர் செய்யத் தவறியும் உணராமலும் போய் விட்ட இக்குறையை இப்பொழுது ஒரு சிலராவது கொஞ்சங் கொஞ்சமாக நீக்கிக் காப்பாற்றி வந்தால் வருங்காலத்தவரின் பழிச் சொல்லினின்று மீண்டவர்களாவோம்.

போக்குவரவு சாதனங்கள் முறையாகவும் விரைவாகவும் இல்லாத அக்காலத்தில் மகாவைத்தியநாத ஐயர் பல மாகாணங்களுக்கும் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் எவ்வாறு அடிக்கடி சென்று வந்தாரென்பது நமக்கு வெகு வியப்பைத் தருகிறது. பயணம் செய்வதால் நேரும் அலுப்புக்கள் இருந்தும் அவர் தம்முடைய சாரீர வளத்தையும் நலத்தையும் கெடாமற் காப்பாற்றி வந்தாரென்பது ஓர் எளிய செயலல்ல. அதுவே ஒரு பெரு வியப்பாகும். அவர்காலத்தில் அவரைப் போல வெளியூர்ப் பிரயாணங்கள் செய்த வேறொரு வித்துவான் இருந்திருக்க முடியுமா என்பது ஐயப்பாடு. உண்மையில் அவர் ஒரு வித்தகர், அவதார புருஷர், அமரர்.

சிவன் சகோதரர்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளும் (அவர்களுக்கு மாத்திரமே தெரிகின்ற) குறிப்பு மொழிகள் தனிப்பட்ட ஓர் அழகு மிகுந்ததே. ஏனையோருக்கு அவைகள் வெறும் சப்த சாலங்களாக விளங்கி திகைக்கும்படி செய்யும். யாராக இருந்தாலும் எத்துணைபேர் இருந்தாலும் யாவருக்கும் புலப்படாத இந்தப் பரிபாஷை எத்துணை அநுகூலமானது. அவர்கள் தங்களுடைய குறிப்பு மொழிகளால் எவரைப்

பற்றியோ அல்லது ஏதேனும் நிகழ்ச்சியைப் பற்றியோ வேடிக்கையாகக் கூட இரகசியமாகக் கூடப் பேசி யிருப்பார்களோ என்று நாம் ஹாஸ்ய உணர்ச்சி யுடன் எண்ண இடமளிக்கின்றது.

மைசூர் அரண்மனையில் மகாவைத்தியநாத ஐயருடைய பாடல்கள் ஒரு சமயம் பதிவு செய்யப் பட்டதாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. அக்காலத் தில் என்ன வகையான பதிவு யந்திரம் (ரிகார்டர்) பழக்கத்தில் இருந்தது என்பது தெரியவில்லை. என்ன முறையைக் கொண்டு அந்த ஒலியைப் பதிவு செய் தார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. கம்பிப் பதிவா? இசைத்தட்டா? என்னதான் அது? என்ற யோசனை. அந்தப் பெரிய அரண்மனையிலே இருக்கக் கூடிய இராசாங்கப் பரணில் எந்த மூலையில் அந்தப் பதிவு ரிகார்டு சிக்கிக்கொண்டிருக்கிறதோ?

இந்த நூலிலும் இதற்கும் முந்திய முதற்பாகத்திலும் சில நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகள் மீண்டும் கூறப் பெற்றிருக்கின்றன. இந்தஉண்மையைக் கோமதிசங்கர ஐயர் தமது முன்னுரையில் ஒளிவு மறைவு இல்லாமல் வெளிப்படையாக உத்தம மனத்துடன் ஒப்புக் கொண் டிருக்கிறார். அது அவருடைய நேர்மையைக் குறிக் கின்றது. இப்படிப்பட்ட கௌரவம் வாய்ந்த அவரைப் பாராட்டி வணங்குகிறேன்.

இந்த நூலில் நம்மைக் கவருகின்ற செய்திகளுள் ஒன்று பாலவனத்தம் சமீன்தார் பாண்டித்துரைத் தேவர் ஏற்பாடு செய்த தொடர்ந்த ஏழு நாள் இசை

விழாவைப் பற்றிய விளக்கமாகும். அந்த விழாவில் கலந்து கொண்ட இசை வித்துவான்களின் பட்டியல் எல்லோராலும் நினைத்து நினைத்துப் போற்றிப் பாராட் டற்குரியது. இந்த விழாவைப் பற்றிய செய்தி நம் உள்ளத்திற்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

ஆனல் அதே சமயத்தில், மகாவைத்தியநாத ஐயரோடு கல்யாணகிருஷ்ண பாகவதர், சேஷண்ணு சுப்பண்ணு, முதலியோர் வீணை வாசித்தார்கள் என்ற செய்தியைப் படிக்கும்போது என் மனம் சுத்தமான துல்லியமான பொருமையினல் வாட்டமுறுகிறது.

சில அபூர்வ சமயங்களில், சிவகங்கை பெரிய வைத்தியநாத ஐயர் என்ற சிறந்த வித்துவான் ஒத்துக் குழலையும் தவிலையும் பக்கமேளமாகக் கொண்டு பாடி யிருக்கிருர் என்று கூறப் பெற்றிருக்கிறது. இது கேட் டவுடன் ஒப்புக் கொள்ள முடியாத செய்திபோல் தோன்றினலும், பக்க மேளத்தார் இருவரும் இவருக்கு அநுசரணையாக ஒத்துழைத்து இம்முயற்சியைப் பரி மளித்திருக்க வேண்டும்.

திருவாங்கூர் இசை இராக்கதன் என்று புகழப் படும் கோயம்புத்தூர் இராகவ ஐயருடைய சீடரான பாலக்காடு அனந்தராமபாகவதரைப் பற்றியும் பல குறிப்புக்கள் உள.

பக்கம் 12, 13ல் மகாவைத்தியநாத ஐயர் ஆதி தாளத்தில் அட்சரத்திற்குப் பதினறு களைகள் வீதம் ஒன்பது ஆவர்த்தனத்துள் எழுபத்திரண்டு (72) மேள இராகமாலிகையைச் சுருக்கி வெகு அழகாகவும் அழி

யாச் செல்வமாக அமைத்துப் பாடியுள்ள செய்தி அவருடைய ஆச்சரியப் படத்தக்க இசைநுட்பத்தை அழகாக வெளியிடுகிறது! இது யாராலும் எளிதில் செய்ய முடியாததே. ஆனல் இந்தப் பெரிய மேதைக்கு முடியாதது ஒன்றுமில்லை. அவருடைய வாழ்நாளின் ஒவ்வொரு நிமிஷத்தையும் இசைக்குப் பயனுடையதாகவே செய்திருக்கிருர். அறிவிற்கு விருந்தாகவும் அமைகின்றது. இதனேடு ஒப்பிடுங்கால் நம் போன்றவர்களுடைய சோம்பல் மிகுந்த சாமானிய இசைவாழ்வு எத்தகைய இழிவானது எனத் தெரிகிறது. நாம் நம்மை ஏமாற்றிக் கொள்வதோடு வெற்றிகரமாக அவையோர்களையும் ஏமாற்றி விடுகிரும். ஆனல் நாம் இறைவனை ஏமாற்ற முடியுமா?

ஒரு நாட்டின் ஒவ்வொவருடைய வாழ்க்கை நிலையையும் எடுத்துக் காட்டுவதற்கு வரலாற்று ஆசிரியர்களும் சரித ஆசிரியர்களும் மிகமிகத் தேவையே. நம்முடைய தமிழ் நாட்டில் நுண்கலைகளுள் ஒன்றுகிய இசையைப்பற்றிக் குறிப்பிடும் சமீப காலத்துச் சரித ஆசிரியர்களுள் டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர், பல்லவி சுப்பையா பாகவதர், "எல்லார்வி", பேராசிரியர் சாம்பமூர்த்தி, டாக்டர் இராகவன் முதலியோர் ஆற்றி இருக்கின்ற தன்னலமற்ற சிறந்த தொண்டு மிக உயர்வாகப் போற்றக் கூடியதாகவும் எக்காலத்தும் அழியாச் செல்வமாகவும் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

இவ்வளவு எண்ணிலடங்காத நிகழ்ச்சிகளைப் பல குறிப்புக்களோடு எழுத சுப்பையா பாகவதர் எத்

தகைய பாடுபட்டிருப்பார்! அந்தச் செய்திகளின் ஒவ்வொன்றின் நுணுக்கத்தையும் உண்மையையும் ஆராய்ந்து சரிபார்த்து வெளியிட என்ன சிறமம் எடுத்திருப்பார்! அவைகளில் சில நமக்கு இப்போது மிகைப் படக் கூறப் பெற்றிருப்பதாகத் தோன்றலாம். ஏனெனில் அச்செய்திகள் ஒரு எழுத்தாளருடைய முழு உரிமையோடு அழகான மொழியில் சிறந்த கவி நயத்தோடு வார்த்தை ஜோடனைகளுடன் சொல்லப் பெற்றிருக்கின்றன.

அவர் தம்முடைய வாழ்நாளின் பெரும் பகுதியை இந்நூலுக்கு வேண்டிய செய்திகளைச் சேகரிப்பதில் செலவிட்டிருக்க வேண்டும்; அது அவர் தம் குருவினிடம் கொண்ட அப்பழுக்கற்ற பக்தியைக் காட்டுகின்றது; அதோடு இசைத் தெய்வ சந்நிதானத்தில் தம்மை அற்பணித்து இதனைச் சாதித்திருக்கிறார் என்று எளிதில் விளங்குகிறது.

இந்தச் சிறந்த கருவூலம் இப்பொழுது அச்சுக் கேறி ஷ பல்லவி சுப்பையா பாகவதரின் சிறந்த குமாரர் வீணை வித்துவான் கோமதிசங்கர ஐயருடைய பெரு முயற்சியால் வெளியுலகிற்கு வந்திருக்கிறது.

எத்துணையோ பொருட் செலவிற்கு உள்ளாகியும் எத்துணையோ இன்னல்களுக்கு உட்பட்டும் தம்முடைய உடல் சிறமத்தைக் கவனியாமலும் இதனால் வரும் லாப நஷ்டத்தைப் பற்றி அக்கரைப் படாமலும் இதனைப் பற்றி பலர் பலவாறு பேசுவதைப் பொருட் படுத்தாமலும் அவருடைய அன்றாடத் தொழில் ஒழுங்

கிற்கும் சொந்த அசௌகரியங்களுக்கும் இன்னும் பல் வேறு விதமான கஷ்ட நஷ்டங்களுக்கும் இடையில் கோமதிசங்கர ஐயர் இதனை நிறைவேற்ற வேண்டு மென்ற ஒரே நோக்கத்துடன் ஆக்கித் தந்த இந்த நூல்கள் பொதுவாக மக்களுலகுக்கும் சிறப்பாக இசை யுலகுக்கும் ஒரு சிறந்த தொண்டாகும்.

இசையைத் தெளிவாகக் கேட்பது என்பது ஒன்று. இசைவாணரைப் பற்றி அறிவது படிப்பது என்பது வேறொன்று. ஒரு இசைவாணனின் வாழ்க்கையில் இசையென்பது ஒரு பகுதிதான். அவனுடைய வாழ்க்கை, அன்றாடப் பழக்க வழக்கங்கள், அவனு டைய குடும்பம், நண்பர்கள், ரசிகர்கள், சீடர்கள், அவனது வாழ்க்கைச் சூழ்நிலை, அவனுடைய வாழ்க்கை அனுபவங்கள், குறிக்கோள்கள், ஆசைகள், உணர்ச்சிச் சிறப்புக்கள், அவனுடைய தனிச் சிறப்பான பண்புகள், வாழ்க்கையில் பெற்ற வெற்றிகள், நிறைவுகள், தோல் விகள், குறைகள், அவனது பயண அனுபவங்கள், அவன் சமகாலத்தவர்கள், அவர்களோடு இவனது உறவுகள், உள்ளத்து வளர்ச்சிகள், வெளித்தோற்றங் கள், கலை நுட்ப அறிவு, கடவுள் பயத்தோடு கூடிய பக்தி, பிறரையும் பிறபொருள்களையும் பற்றிய அவனது மதிப்பீடு, இவைகளெல்லாம் ஒரு இசைவாணனைப் பற்றி முழு விபரங்களைப் பரந்த நிலையில் நமக்குக் காட் டுகின்றன. அவனுடைய இசைச் சிறப்பைக் கேட்ட பின் அவனது மனிதத் தன்மையையும் அறிய முடி கிறது. மேற்கூறிய முறைகள், கலைஞர்கள், ஓவியர் கள், சிற்பிகள், ஸ்தபதிகள், அரசியல்வாதிகள், கவி

ஞர்கள், அறிவாளிகள், விஞ்ஞானிகள், நடிகர்கள், நாட்டியக்காரர்கள், முதலான வெவ்வேறு துறைகளில் உள்ள ஒவ்வொருவனுக்கும் பொருந்தும்.

மகாவைத்தியநாத ஐயருடைய சிறப்புக்களைப் பற்றி முன்பே எவ்வளவோ கேட்டிருக்கிறோம். இந்த நூல்களைப் படித்த பின் அவரைப் பற்றி இன்னும் அதிகமாகவும் நன்றாகவும் நெருக்கமாகவும் அறியும் பேறு பெறுகிறோம்.

நமது நன்றிக்கு உகந்த ஸ்ரீகோமதிசங்கர ஐயர், அவருடைய தகப்பனார் இவர்களால் மகாவைத்தியநாதசிவனுடன் ஒன்றி வாழ்ந்து விடுவது போன்ற மாபெரும் உணர்ச்சியை அனுபவிக்கிறோம்.

31. ஸலிவன்கார்டன் தெரு
மைலாப்பூர்
சென்னை-4
4—10—71

வீணைவித்துவான்
**பாலசந்தர்**

# நல்வாழ்த்து

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்து இசைக்கல்லூரியின் இசைத்துறைத்தலைவர் திரு V. S. கோமதிசங்கர ஐயரவர்கள் "இசையுலகில் மகாவைத்தியநாத சிவன்" என்ற தலைப்பில் எழுதிய புத்தகம் இரண்டாம் பாகத்தில், எனது பாட்டனர் பாடிய முறைப்படி அநேகம் பல்லவிகளைச் சுரதாளக்குறிப்புடன் குறித்து வெளியிட்டிருக்கிருர். சங்கீத அப்பியாஸம் செய்யும் இளம் வித்துவான்களுக்கு இது போன்ற பல நூதன தாளங்களைக் கற்பனைத் திறத்துடனும் இலக்கண வர முறைகளுடனும் செய்து தத்தம் மனோதர்மங்களை விமர்சனம் செய்துகொள்ள இந்நூல் சிறந்த வழிகாட்டியாக இருக்கும் என்பது எனது துணிபு.

வாசுதேவநல்லூர் பல்லவி சுப்பையாபாகவதர் அவர்கள் மகாவைத்தியநாதசிவனின் முதற்பாகம், இரண்டாம்பாகம் ஆகிய இவ்விரண்டு புத்தகங்களிலுமுள்ள விரிந்த செய்திகளை எந்தநோக்கத்துடன் குறித்து வைத்திருந்தாரோ, அதை அவருடைய குமாரரும் சிஷ்யருமான திரு V. S. கோமதிசங்கர ஐயர் பூர்த்தி செய்து வெளியிட்டதானது அவ்விருவர்களின் குரு பக்தியும் இசையினிடத்துள்ள ஆழ்ந்த அறிவும் ஆர்வமுமே காரணமென நான் நம்புகிறேன்.

மகாவைத்தியநாத சிவனவர்களுக்கு இயற்கையாகவே சாரீர வளமும், சங்கீத லட்சண முறைகளும் தெரிந்து இருந்தது. அதோடு அவருடைய சுவதர்ம அனுட்டானங்களில் (சந்தியாவந்தன-ஜப-தபாதிகள், சூதசம்ஹிதைப்பாராயணம், சிவாராதனம், ஆலய வழிபாடு, அடியார்கள்பூசை முதலியவை) இருந்த சிரத்தை காரணமாகவும், சித்தபுருடராகிய கோடகநல்லூர் சுந்தரஸ்வாமிகளுடைய மந்திர உபதேசம் காரணமாகவும், மற்றும் வடமொழி, தென்மொழி, வேதாந்தப் புலவர்களின் (இப்புத்தகம் பக்கம் 242-248ல் பார்க்கவும்) பழக்கத்தின் விளைவாகவும் எல்லாம் திருவருளின் செயலே என்ற உறுதியான எண்ணத்துடன் தனது தற்போதத்தை ஒழித்து தன் வாழ்க்கையை நடத்தி வந்தவர் என்பது இப்புத்தகத்தின் வாயிலாக விளக்கப்பட்டிருப்பது மேலாம் சிறப்பாகும்.


இந்த இரண்டாம் பாகத்தை படித்து பார்த்தவுடன் பதஞ்சலி வியாக்கிரபாதர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, துவாதசாந்தம் என்னும் மதுரைப் பதியில் கால்மாறியாடிய வெள்ளியம்பலவாணனின் நினைவுதான் எனக்குத் தோன்றுகிறது. அன்னவர் அனுகிரஹத்தால் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுகிறேன்.

''மன்றுளே மாறியாடு மறைச் சிலம்படிகள் போற்றி''

இங்ஙனம்

திருமயிலை
19—9—71

ஸ்ரீமகாவைத்தியநாதசிவனின் பேரரும்
ஸ்ரீவிச்வநாத ஐயரின் குமாரருமான
V. சுந்தரராஜன்



'வைணிக, காயக' 'மகாவித்துவான்' 'கலாசிகாமணி'

**V. S. கோமதி சங்கர ஐயர்**

# முன்னுரை

திருநெல்வேலி மாவட்டம் சங்கரநயினர் கோயில் வட்டத்தைச் சேர்ந்த வாசுதேவநல்லூர் கிராமத்தில் வசித்து வந்த என் தகப்பனரும் சங்கீத குருவும் ஆகிய பல்லவி சுப்பையாபாகவதர்கள், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வையைச்சேரி கிராமத்தில் வாழ்ந்து வந்தவரும் இசையில் மிகப்பெரும் சிறப்பும் புகழும் பெற்றவரும் ஆகிய மகாவைத்தியநாத சிவனிடம் முதல் இசைமாணவராக அமர்ந்து 1876ஆம் ஆண்டு முதல் 1882ஆம் ஆண்டுவரை ஏழாண்டுகள் குருகுல வாசம் செய்து இசை பயின்ருர்கள். இசையில் நற்றிறம் பெற்று இராகம், தானம், பல்லவி, நிரவல், சுரம் ஆகியவற்றை இசைப்பதில் பெரும் புகழடைந்தார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் பல இசைப்புலவர்களைத் தோற்றுவித்த பேராசாஞய்த் திகழ்ந்தார்கள். இசை, தமிழ், சோதிடம், வேதாந்தம் ஆகிய நான்கு கலைகளிலும் நிரம்பிய அறிவுத்திறம் பெற்று இவ்வொவ்வொரு கலையிலும் பலரையும் பயிற்றுவித்து அவர்களைத் தக்க புலவர்களாகச் செய்திருக்கிருர்கள்.

இசைமாணவராக அவர்கள் தாம் இருந்த காலத்து மகாவைத்தியநாத சிவனின் வாழ்க்கை, ஒழுக்கம், தயை, சிவபக்தி, பணிவு, நற்ருேற்றம், எளிமை, கலைத்திறம், குரல்நயம், இனிய பேச்சு,

சிவகதை செய்யும் ஆற்றல், இசையைச் சிறக்கச் செய்யும் திறம், நூலாராய்ச்சி ஆகிய இவைகளை நேரிற்கண்டு உணர்ந்தார்கள். ஆதலால் மகாவைத் தியநாத சிவனின் உயர்ந்த மனப்பான்மைகளையும், சிறந்த குணநலன்களையும் தம்மிடம் பயிலவரும் மாணவர்களின் முன்னேற்றம் கருதி எடுத்துக் கூறுவ துண்டு. அவ்வாற்ருன் எனக்கும் பல உணர்த்தியுள் ளார்கள். சில செய்திகளைக் குறிப்புக்களாக எழுதி யும் வைத்திருந்தார்கள். அந்தக் குறிப்புக்கள் சிதைந் தும், வரிகள் பிறழ்ந்தும், சில தாள்கள் துண்டுபட்டும் இருந்தன.

1951ஆம் ஆண்டில் மகாவைத்தியநாத சிவனின் தமையனுரான இராமசாமி சிவனின் மூன்ருவது குமாரரும் பூர்வாசிரமத்தில் இராமலிங்கம் என்ற பெயருடையவரும் சந்நியாஸ ஆசிரமத்தில் ஸ்ரீபரிபூர் ஞனந்த இராமலிங்க பிரம்மேந்திர சரஸ்வதி என்ற திருநாமம் உடையவருமான சான்ருேர், அண்ணுமலை நகர் வந்து என் வீட்டில் மூன்று மாதங்களுக்கும் மேல் தங்கினர். மகாவைத்தியநாத சிவனைப்பற்றி என் தகப்பனர் எனக்குக் கூறிய நிகழ்ச்சிகளை நான் அவரிடம் கூறினேன். அப்போது அவர் தம் சிறிய தகப்பனராகிய மகாவைத்தியநாதசிவனைப் பற்றியும், தம் தகப்பனராகிய இராமசாமி சிவனைப் பற்றியும் பல செய்திகளைக் கூறினர். அச் செய்திகளை நான் ஆர்வமுடன் குறித்துக் கொண்டேன். இன்னும் அவ்வப்போது பல செய்திகளை இசையனுபவமுடைய

பெரியோர்களிடமிருந்து அறிந்து கொண்டேன். எனவே எல்லாவற்றையும் தொகுத்து ‘‘இசையுலகில் மகாவைத்தியநாதசிவன்’’ என்ற நூலாக வெளியிடுகின்றேன்.

இந்நூல் நானூற்று ஐம்பது பக்கங்களுக்கும் மேலாக விரிந்தமையால் இதை இரண்டு பாகங்களாகப் பிரித்து இருநூற்று ஆறு பக்கங்களடங்கிய முதற்பாகம் இதற்குமுன் 1970 டிசம்பரில் வெளியிட்டேன். இப்பொழுது இது இருநூற்று ஐம்பத்து மூன்று பக்கங்களடங்கிய இரண்டாம் பாகமாக வெளிவருகின்றது. இந்நூலிலே மகாவைத்தியநாத சிவனுல் பாடப்பெற்ற அபூர்வ கற்பனைத் திறமமைந்த நூதனத் தாளத்தில் செயற்படுத்திய பல்லவி ஒன்பதும், கல்யாணியில் அதுவரைப் பாடிவந்த சிம்மனந்தனத் தாளத் தில்லானுவை திருவாவடுதுறை சந்நிதானத்தின் விருப்பப்படி திடீரெனக் கானடா இராகத்தில் மாற்றிப் பாடிய நிகழ்ச்சியும், அத்தில்லானுவின் சுரக் குறிப்பும், குருதுதியாகப் பாடிய ஒரு கீர்த்தனமும், இரட்டைப் பல்லவி சிவராம ஐயர் எட்டு வயது இளைஞரான மகாவைத்தியநாத சிவனின் திறம் அறிதலை முன்னிட்டுப் பாடிய ஒரு பல்லவியும், பட்டினம் சுப்பிரமணிய ஐயர் பாடிய மூன்று பல்லவிகளும், பல்லவி சேஷ ஐயர் பாடிய ஒரு பல்லவியும், குன்னக்குடி கிருஷ்ணையர் பாடிய ஒரு பல்லவியும், நாமக்கல் நரசிம்ம ஐயங்கார் பாடிய ஒரு பல்லவியும், அபயாம்பிகா கடாட்சம் என்ற ஒரு அப்பாவிப் பிராமணர் தம் வாய்க்கு வந்தபடி சொற்களையமைத்துப் பாடிய

நகைச்சுவைப் பல்லவியும், இன்னும் வேடிக்கையான சொற்களைக் கொண்ட பல்லவிகள் ஐந்தும், பூச்சி ஸ்ரீனிவாஸ ஐயங்கார் இயற்றிய ஒரு தில்லானாவும் ஆக இருபத்திரண்டு (22) பல்லவிகளும், இரண்டு(2) தில்லானக்களும், ஒரு (1) கீர்த்தனமும், இதில் இடம் பெற்றுள்ளன. இப்பல்லவிகளையும் அதன் தாளவகைகளையும் அதன் கற்பனைத் திறத்தின் சிறப்புக்களையும் இக்கால மட்டுமின்றி வருங்கால இசைக் கலைஞர்கள் யாவரும் அறியவேண்டியதொன்று. இவை இதுவரை அறியப்படாத சிறப்பு மிக்கன.

இன்னும் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகளின் அபூர்வமான ஆத்தும சக்திகள் வியப்பைத் தரும்படியான நிகழ்ச்சிகள் ஆங்காங்குக் குறிக்கப் பெற்றுள்ளன. அவருடைய சந்ததியார்களுக்குக் கூட இவ்வற்புத நிகழ்ச்சிகள் தெரிந்திராதென்று தோன்றுகின்றது. அக்காலத்து வித்துவான்கள் ஒருவரோடொருவர் பழகி வந்த சிறப்பை இந்நூலினுள் நன்கறியலாம். இக்காலம் அது மிகவும் பயன்தரத் தக்கதாகும். ஏனைய புலவர்களிடம் நாம் எவ்வாறு பழகுதல் வேண்டும், நடந்துகொள்ளல் வேண்டுமென்ற முறைகளை மகாவைத்தியநாத சிவனுடைய ஒவ்வொரு செயற்பாடுகளின் மூலமும் அறிந்து பயனுறலாம்.

இந்நூலின் முடிவிலே மகாவைத்தியநாதசிவனோடு பழகிய அரசர், சமீன்தார், பிரபுக்கள், மடாதிபதிகள், தென்மொழிப் புலவர், வடமொழிப்புலவர்,

இசைப்புலவர், வேதாந்தப் புலவர் ஆகிய இன்னே ரன்னவர்கள் பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளது, வரலாற்ருராய்ச்சிக்குத் துணைபுரிவதாகும்.

நூல் முழுதும் படித்துப் பார்த்த பேராசிரியர், இசைப் பேரறிஞர் உயர்திரு P. சாம்பமூர்த்தி அவர்கள் இதில் பல அரிய பெரிய செய்திகள் நிரம்பி இருத்தலால் இசையுலகம் பயன் அடைதலை முன்னிட்டு இது வெளிவருதல் வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்தி என்னை இச்செயலில் ஈடுபடுத்தினுர்கள். அவர்கள் தந்த ஊக்கமே இந்நூல் வெளிவருவதற்குப் பெரிதும் காரணமெனலாம்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள இசைப் புலவர்களும், வெளியூர்களிலுள்ள பல இசைப் புலவர்களும், இன்னும் பல இசைச் சுவைஞர்களும் இதற்கு முன் வெளிவந்த நூல்களைப் படித்துவிட்டு எனக்குப் பெருமளவு ஊக்கம் தந்து இப்புத்தகம் வெளிவரத் தூண்டித் துணைபுரிந்தார்கள்.

மகாவைத்தியநாத சிவனவர்களால் கையாளப் பட்டுச் சிறப்பையடைந்த எழுபத்திரண்டு (72) மேளகர்த்தா இராகங்களும் அவருக்குப் பின்னுல் பாடப் பெருமல் மறைந்து பட்டன. அம் மேளகர்த்தா இராகங்களை இக்காலத்தவர்களுக்கும் வருங்கால சந்ததிகளுக்கும் பயன்படுமாறு வீணை S. பாலசந்தர் நீண்ட நேர ரிகார்டுகள் (இசைத்தட்டு) மூலம் நிலை பெறும் மாபெரும் பணியைச் செய்து வருகிருர். ஒரு

மேளகர்த்தா இராகம் எட்டு நிமிஷம் வீதம் ஒரு இசைத்தட்டில் ஆறு இராகங்கள் அடங்கும். அவ் வாறு பன்னிரண்டு இசைத்தட்டில் ($12 \times 6 = 72$) எழு பத்திரண்டு மேளகர்த்தா இராகங்களும் அடங்கிச் சிறப்புறுகிறது. இவற்றுள் இரண்டு இசைத்தட்டுகள் வெளிவந்து அவற்றைக் கேட்டு மகிழ்ந்தேன். இன்னும் ஒருமுறை அவரை நேரில் சந்தித்த காலத்தில் அறுபத்தேழாவது (67)மேளகர்த்தாவாகிய "ஸுசரித்ர" என்ற இராகத்தை வாசிக்கும்படி கேட்டுக்கொண்டேன். அவர் சிறிதும் தயக்கமின்றி கேட்போர் மனம் நெகிழும்படி இரண்டு மணி நேரம் அந்த இராகத்தை வாசித்து என்னையும் அங்கு குழுமியிருந்தோரையும் மெய்மறக்கச் செய்தார். விவாதி சுரங்கள் அடங்கிய நாற்பது மேளகர்த்தாக்களை சுவைதருமாறு வாசிப்பது எளிதல்ல. வீணையில் மகாமேதையாக விளங்குபவரும், வீணை வாத்தியத்தை இனி எவராலும் அதுபோன்று கையாள இயலாது என்று தம் திறம் காட்டி எல்லா நாட்டு மக்களும் புகழும்படியான சிறப்புடையவரும், இசைக் கலைஞர்களாலும் இசை சுவைஞர்களாலும் பலப்பலப் பட்டப் பெயர் பெற்றவரும், மனோதர்ம சங்கீதத்தின் சிறப்பைப் பிரகாசிக்கச் செய்து வருபவருமான வீணை S. பாலசந்தர் அவர்களிடம் இந்நூலைக்காட்டி அதில் வரப் பெறும் பல்லவிகளின் நயங்களையும் கற்பனைகளையும் எடுத்துக் கூறினேன். அவர் மன நிறைவோடு அதனைச் சுவைத்துக் கேட்டார். பின்பு இந் நூலுக்குச் சிறந்த மதிப்புரையை மனமுவந்து நல்கினார். இந்நூலிலுள்ள ஒவ்

வொரு நுணுக்கத்தையும் படித்தறிந்து தக்கதொரு மதிப்புரையை எழுதி உதவிய அவருக்கு என்னுடைய பரிபூர்ணமான ஆசிகளும், நன்றியும் உரித்தாகும்.

1931 ஆம் ஆண்டு முதல் என்னை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் வீணை ஆசிரியர் பதவி வகிக்கும் படி செட்டிநாட்டரசர் பெருங்கொடை வள்ளல் டாக்டர். இராஜா. சர். மு. அண்ணுமலைச் செட்டி யாரவர்கள் ஏற்பாடு செய்தார்கள். அப்பதவி யிலிருந்து நான் மேலும் பணிபுரியத் தமிழிசைக் காவலர் செட்டிநாட்டரசர் உயர்திரு டாக்டர் இரா ஜா. சர். எம். ஏ. முத்தையா செட்டியாரவர்கள் அன்புள்ளங் கொண்டுள்ளார்கள். அதன்பயனுக நான் பல தமிழிசைநூல்கள் வெளியிட்டுள்ளேன். இன்னும் பல தமிழிசை நூல்களை உருவாக்குவதற்குரிய அரும் பெரும் குறிப்புகளைத் திரட்டியுள்ளேன். அறிவைப் போற்றி அன்புக்கு வாழ்வளித்த வள்ளல் டாக்டர் இராஜா. சர். மு. அண்ணுமலைச் செட்டியாரவர் களுக்கும்; உயர்திரு. டாக்டர். இராஜா. சர். எம். ஏ. முத்தையா செட்டியாரவர்களுக்கும் என் மனமுவந்த வணக்கத்தைச் செலுத்திக்கொள்கிறேன்.

என்பெரிய தாயாராகிய கோமதியம்மாள் சிறந்த வேதாந்தி. வேதாந்தத்தில் நல்ல பயிற்சியுடையவர் களின் சந்தேகத்தையும் தீர்த்துவைக்கும் வல்லமை பெற்றவர். அன்னுரின் அறிவு முதிர்வைப்பற்றி என் தகப்பனுரும் வயது முதிர்ந்த பலரும் மனநிறைவோடு புகழ்ந்து கூறுவதை நான் கேட்டறிந்துள்ளேன். அப் பெரியாரின் பெயரையே முதலில் தாங்கி நிற்கும்

நான் இனிமேலாகிலும் அவ் உன்னத அறிவைப் பெற அருள் பாலிக்க வேண்டுமென்று பணிந்து இந் நூலே என்பெரிய தாயாராகிய கோமதியம்மாளுக்குக் காணிக்கையாக்கி நினைவு கூறுகின்றேன்.

சிதைந்தும் வரிபிறழ்ந்தும் இருந்த இந்நூலே முதன் முதலாகப் பார்த்து அதனைத் திருத்தி உதவிய அண்ணுமலைப்பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. இலட்சுமணசாமி (எம். ஏ. பி. எல்.) அவர்களுக்கு என் நன்றி உரித்தாகும்.

இப்படியை மறுமுறையும் சரிபார்த்துத் தந்து உதவியவர் என் நண்பரும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறை ரீடர் வித்துவான் க. வெள்ளை வாரணனாரவர்கள். அவருடைய உதவி இந்நூலிற்குப் பெருத்துணை செய்தது. அவருக்கு என் நன்றி உரித் தாகும்.

இந்நூல் அச்சேறுங்காலத்து இப்படி முழுவதை யும் படித்துப்பார்த்து கூறியது கூறுதலை விலக்கி, சுருக்கவேண்டியதைச் சுருக்கி, படிப்போர்க்கு எளிமை பெற்று விளங்குவதுபோல திருத்தி உதவியவர் திரு. உளுந்தூர்பேட்டை சண்முகமவர்கள் ஆவார். அவருக்கு என் நன்றி உரித்தாகும்.

இந்நூலின் ஆங்கில மதிப்புரையைத் தமிழாக்கம் செய்து தந்து உதவியவர் என் நண்பரும் அண்ணு மலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறை ரீடர் திரு. A. இராமசாமிபிள்ளை, M. A., L. T., M.LITT அவர்

களும் ஆவர். அவருக்கு என் நன்றி உரித்தாகும்.

மகாவைத்தியநாதசிவனின் பேரரும், ஷயாரின் இளைய குமாரர் திரு விசுவநாத ஐயரின் குமாரருமான திரு. V. சுந்தரராஜன் (51-நாட்டுசுப்பராய முதலித்தெரு-மைலாப்பூர்-சென்னை 4) என்பவர் மகாவைத்தியநாத சிவனின் நிழற்படம்; கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளின் நிழற்படம்; மகாவைத்திய நாதசிவன் பூசித்து வந்த நடராஜர்படம்; அவர் பூசித்துவந்த சிவலிங்கம் முதலிய நிழற்படம் ஆகிய இவைகளை எடுத்துக்கொள்ள அவர் வீட்டிலுள்ள படங்களை உதவியதற்கும், இந்நூலுக்கு அன்பு கொண்டு நல்வாழ்த்து உதவியதற்கும் என் மனம் உவந்த வணக்கமும் நன்றியும் உரித்தாகும்.

இந்நூலை அழகான பதிப்பாக மிக விரைவில் அச்சிட்டுத்தந்த சிவகாமி அச்சகத்தின் (அண்ணமலை நகர்) உரிமையாளராகிய G. இராசசுந்தரம், M. A., M. Litt. அவர்களுக்கு என் நன்றி உரியதாகும்.

இன்னும் மகாவைத்தியநாதசிவன் அநுசரித்து வந்த "சிவஸ்வரோதயம்" என்ற கைக்காப்பி ஒன்று என் தகப்பனுர் குறிப்புக்களினின்றும் கிடைத்தது. அதில் 395 சூத்திரங்கள் நாகரலிபியிலும் அதற்கு விளக்கம் தமிழிலும் உள்ளது. இன்னும் அவரைப் பற்றிய ரசமான சில குறிப்புக்களும் கிடைத்துள்ளது. அத்துடன் இன்னும் கிடைப்பனவற்றையும் சேகரித்து "இசையுலகில் மகாவைத்தியநாதசிவன்" மூன்ரும்

பாகமாக வெளியிட எண்ணியுள்ளேன். தில்லைக் கூத்த பெருமான் துணை செய்வாராக.

முத்தமிழ் வித்தகர்களும், கலைஞர்களும், சுவைஞர்களும் என்முயற்சியை வரவேற்று ஊக்குவார்களாக; இசைநுட்பங்கண்டு பயன் கொள்வார்களாக.

அன்பன்,
V. S. கோமதிசங்கர ஐயர்,
இசைத்துறைத்தலைவர்,
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.



மகா வைத்தியநாத சிவன்

தோற்றம் 26-5-1844 மறைவு 26-1-1893

(வயது 48-8-0)

# மகா வைத்தியநாத சிவனின் ஜாதகம்

## கௌண்டின்ய கோத்திரம்

| | | | |
|---|---|---|---|
| | குரு | சூர் புதன் கேது | செவ் |
| | பாவகம் | | சுக் |
| சனி | | | சந் |
| ல | ராகு | | |

| | | | |
|---|---|---|---|
| குரு | | சூர் புத கேது | செவ் சுக் |
| | இராசி | | சந் |
| சனி | | | |
| ல | ராகு | | |

| | | | |
|---|---|---|---|
| | சூர் | சுக் | |
| குரு சந் சனி | அம்சகம் | | கேது |
| புதன் ராகு | | | ல |
| | செவ் | | |

26—5—1844 இரவு மணி 8-42க்கு குரோதி, வைகாசி, 13 தேதி வெள்ளி சூ-உ-நா 36-45க்கு வளர்மதி சப்தமி 37-45, ஆயில்யம் 54-4, ஹர்ஷ 44-48, கரசை 18-12, தேதி 31, இ-நா 2-50, ஸ்புடம் 9, ஆயில்யம், புருஷகாலம், சுக்கிரஹோரை, லாபம், ராஜசம்மான யோகம் தனுர் லக்னத்தில் சுப ஜனனம்.

ஜன்ம நக்ஷத்திரம் ஆயில்யம் ஆதியந்தம் 58-2. பாதம் 14-30½ மூன்றும் பாதச் செல் 11-42. ஆயில் யம் செல் 40-43க்கு புதன்திசை ௵ 17க்கு கெர்ப்பத் தில் சென்றது போக நின்றது ௵ 5  மீ 0-நாள் 26.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூராடம் | 1ல் | லக் | ரேவதி | 3ல் | குரு |
| ரோகிணி | 1ல் | சூர் | புனர்பூசம் | 2ல் | சுக் |
| ஆயில்யம் | 3ல் | சந் | உத்திராடம் | 3ல் | சனி |
| மிருகசீரிஷம் | 4ல் | செ | கேட்டை | 2ல் | ராகு |
| கார்த்திகை | 2ல் | புத | ரோகிணி | 4ல் | கேது |

உ

# இசையுலகில் மகா வைத்தியநாத சிவன்

(இரண்டாம் பாகம்)

● மகாவைத்தியநாத சிவன் எந்த ஊருக்குக் கச்சேரி செய்யச் சென்றாலும் அந்த ஊரிலே சிவாலயம் உண்டா! என்று விசாரிப்பார். அக்கோயிலில் எழுந்தருளியுள்ள சுவாமியின் பெயர், அம்பிகையின் பெயர் முதலியவைகளைக் கேட்டு அறிவார். சிவன் கோயில் உள்ள ஊரிலிருந்து மகாவைத்தியநாத சிவனைக் கச்சேரி செய்ய அழைக்க வந்தால் யாதொரு தயக்கமுமின்றிக் கச்சேரி செய்ய வருவதாக ஒத்துக்கொண்டு விடுவார். சில ஊர்களில் இராமர் கோயில், கிருஷ்ணன் கோயில், பெருமாள் கோயில், காளி கோயில் மட்டும் இருக்கும். சிலசமயம் அவ்வூர்களுக்கும் கச்சேரி செய்வதை முன்னிட்டுச் செல்ல நேர்ந்துவிடும். அவ்விடங்களுக்குப் போய்த்தீர வேண்டும் என்ற தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் போவார். இல்லையாயின் போகார்.

அவ்வாறு போக நேரிட்ட ஊர்களிலே தாம் வழி படும் சிவபூசைப் பெட்டியிலுள்ள சிவனைக் காலம் தவருது தொழுதேத்தி வணங்குவார். அப்பூசையில் உள்ள சிவனைப் போற்றி ஒரு கீர்த்தனத்தைப்பாடி வணங்குவார். அதன் பின்பு தான் உணவு உட்கொள் ளுவார். எனவே தமக்கு எத்துணைப் பொருள் கிடைத் தாலும், புகழ் வந்தாலும் சிவனை வழிபடும் கடமையை மட்டும் அவருடைய ஆயுள் வரை காலந்தவருது செய்து வந்தார். ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் எவ்வாறு சிவனிடத்தில் இடையருப் பற்று கொண்டு விளங்கினுர்களோ, அவ்வாறே இவரும் விளங்கினுர்.

● மாயூரம் வீணை வைத்தியநாத ஐயர் என்பவர் மகாவைத்தியநாத சிவனுடைய பல மாணவர்களில் ஒருவர். அவர் வீணை வாசிப்பதில் ஈடு இணையற்றவர். அவருடைய சாரீரம் நன்ருக இருக்கும். எனவே இன்புறப் பாடுவார். வாயினுற் பாடிக் கச்சேரியும் செய் திருக்கிருர். வீணையைத் தலைமையாகக் கொண்டு வீணைக் கச்சேரி செய்யும்போது அதற்குத் துணையாகப் பாட்டையும் சிறிது பயன்படுத்துவார். பாட்டைத் தலைமையாகக் கொண்டு பாட்டுக் கச்சேரி செய்யும் போது அதற்குத் துணையாக வீணையைச் சிறிது பக்க வாத்தியம் போல அமைத்துக் கொள்வார். எனவே அவர் பாட்டிலும் வீணையிலும் சிறந்த இசைப்புலவராக விளங்கினுர். பாட்டிலும் வீணைக் கருவியிலும் திறம் உடைய இவரிடம் மகாவைத்தியநாத சிவன் பெருத்த அளவு அன்புடையவராக இருந்தார்.

நாமக்கல் நரசிம்ம ஐயங்கார் என்பவர் அக்காலத்திலே ஒரு சிறந்த இசைப்புலவர். பல்லவி பாடுவதில் மிகவும் திறமுடையவர். அவர் சுமார் 1840 - ஆம் ஆண்டிலிருந்து 1926-ஆம் ஆண்டுவரை எண்பத்தாறு வயது வாழ்ந்தார். மகாவைத்தியநாத சிவன், பட்டினம் சுப்பிரமணிய ஐயர் ஆகிய அவர்களை விட இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கும் மூத்தவர். அவருடைய சாரீரம் மிக இனிமையாக இருக்கும். அக்காலத்தில் இசைப் புலவர்களுக் கெல்லாம் அவரிடத்தும், அவருடைய இசையிடத்தும் தனி மதிப்பிருந்தது. அவர் பல்லவி பாடுவதில் சிறந்து விளங்கினதால் பல்லவி நரசிம்ம ஐயங்கார் என்றழைக்கப்பட்டார். அவர் நல்ல பேரும் புகழும் பெற்று வந்த காலத்தில் நாமக்கல் நரசிம்ம ஐயங்காரிடம் வெறுப்பும் பொருமையும் அடைந்த சிலர் கூடி அவரை அவமதிப்புச் செய்தல் வேண்டுமென்றெண்ணி மாயூரம் வீணைவைத்தியநாத ஐயரிடம் அவரைப் பற்றித் தரக்குறைவாகப் பேசியும் வீணைவைத்தியநாத ஐயரைச் சிறிது உயர்த்திப் பேசியும் வந்தார்கள். அதுபோலவே நரசிம்ம ஐயங்காருக்கு வேண்டிய சிலர் வீணைவைத்தியநாத ஐயரைத் தரக்குறைவாகப் பேசியும் நரசிம்ம ஐயங்காரைச் சிறிது தூக்கி வைத்துப் பேசியும் வந்தார்கள். இச்செய்திகளால் வீணைவைத்தியநாத ஐயருக்கும் நாமக்கல் நரசிம்ம ஐயங்காருக்கும் ஒருவர்க்கொருவர் சிறிது மனத்தாங்கல் ஏற்பட்டது.

ஒரு சமயம் மகாவைத்தியநாதசிவன், மாயூரம் வீணைவைத்தியநாத ஐயர், நாமக்கல் நரசிம்ம ஐயங்

கார் ஆகியோர் சென்னைக்கு வர நேர்ந்தது. அப்போது பட்டினம் சுப்பிரமணிய ஐயர் சென்னையிலே வசித்து வந்தார். நரசிம்ம ஐயங்காரிடமும் வீணை வைத்திய நாத ஐயரிடமும் பொருமையுற்ற சிலர் அத்தருணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ஒரு நாள் நடுவர்கள் முன்பு அவ்விருவரும் பாட வேண்டுமென்று ஏற்பாடு செய்தனர். முதலில் வீணை வைத்தியநாத ஐயர் ஒரு பல்லவியைப் பாட வேண்டுமென்றும் அப்பல்லவியைப் பல்லவி பாடுவதிற் சிறந்த நரசிம்ம ஐயங்கார் அதனை ஏற்றுத் தாமும் பாட வேண்டுமென்றும் அவ்வாறு பாடவில்லையாயின் அவர் இசைக்கலைத்திறனில் தகுதியற்றவராகக் கருதப்படுவார் என்றும் தெரிவித்தனர். அதுபோலவே நரசிம்ம ஐயங்கார் ஒரு பல்லவியைப் பாடுதல் வேண்டுமென்றும் அப்பல்லவியை மாயூரம் வீணை வைத்தியநாத ஐயர் அதனைத் தாம் ஏற்றுப் பாடுதல் வேண்டுமென்றும் உறுதியாக்கினர். இருவரும் அவ்வாறு பாடிவிட்டால் இசையில் செம்மையான தகுதி பெற்றவர்களென்றும், இருவரும் பாடச் சக்தியற்றிருந்தால் சிறப்பான தகுதியில்லாதவரென்றும், ஒருவர் பாட மற்றொருவர் பாட இயலாமலிருந்தால் பாட இயலாதவர் இசையில் சிறிதும் திறமில்லாதவராகக்கருதப்படுவர் என்றும் கூறினர். அதை அவ்விரு இசைமேதைகளும் அங்கு உள்ள அனைவரும் அறிய ஒத்துக்கொண்டனர்.

இவ்வாறு முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு சிலர் பட்டினம் சுப்பிரமணிய ஐயரிடம் சென்று நடுவராக இருந்து தீர்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்

கொண்டார்கள். பட்டினம் சுப்பிரமணிய ஐயருக்கு அதில் சிறிதும் விருப்பமில்லை. ஆயினும் பெரிய வித்துவான்களை மக்களெல்லோரும் தரக்குறைவாக அவமதித்தல் கூடாதே யென்று நினைத்தார். அந்த இசைப் போட்டி நிகழ்ச்சியைப் பாடக்கூடிய அவ்விரு வரும், மற்றும் அங்கு கூடியுள்ள மக்களும் சிறப்பாக எண்ணும்படி ஏற்படுத்திவிடல் வேண்டுமென்றெண்ணித் தாம் நடுவராக இருத்தற்கு ஒப்புக் கொண்டார். இந்த இசைப் போட்டி நிகழ்ச்சி சென்னை மைலாப்பூரிலுள்ள மாதவப் பெருமாள் கோயிலிலே நடந்தது. பட்டினம் சுப்பிரமணிய ஐயர் நடுவராக அமர்ந்தார். வீணை வைத்தியநாத ஐயரும் நாமக்கல் நரசிம்ம ஐயங்காரும் இசைப் போட்டியைத் தொடங்கினர்.

மகாவைத்தியநாத சிவன் தஞ்சை சகாராம் சாகேப் அவர்களுடைய அவையிலே ஒரு சமயம் ★ **"லட்சுமீசம்"** என்ற தாளத்திலே ஆனந்த பயிரவி இராகத்தில் ஒரு பல்லவி பாடி அவையோர்கள் வியக்கும்படி செய்தார். அப்பல்லவியைப் பாடுங்காலத்து அவருடைய மாணவராக விளங்கிவந்த மாயூரம் வீணை வைத்தியநாத ஐயரும் கூட இருந்தார். எனவே அப் பல்லவியை வீணை வைத்தியநாத ஐயரும் வியந்து அதனை அப்படியே ஒருவாறு உணர்ந்து பயிற்சி செய்து வைத்திருந்தார். வீணை வைத்தியநாத ஐயர் **"லட்சுமீசம்"** என்ற தாளத்தில் **"சம்போ உமாபதே பாஹிமாம், விச்வேச்வர விரூபாக்ஷ மாம்பாஹி"**

---

★ அப்பல்லவியின் முறைகள் இதன் பின் அவருடைய நிகழ்ச்சியில் குறிக்கப் பெற்றுள்ளது. அங்குக்காண்க.

என்று மகாவைத்தியநாதசிவன் ஆனந்த பயிரவி இராகத்தில் பாடிய அப்பல்லவியைக் கல்யாணி இராகத்திலே மாற்றி அமைத்துக் கொண்டு முதலில் பாடினர். அத்தாளத்தையும் அப்பல்லவியையும் பட்டினம் சுப்பிரமணிய ஐயர் அதற்கு முன் கேட்டவரல்லர். மகாவைத்தியநாதசிவன் அத்தாளத்தைக் கையாண்டு பாடியது என்றும் அவருக்குத் தெரியாது.

பட்டினம் சுப்பிரமணிய ஐயர் நடுவராதலால் வீணை வைத்தியநாதரை நோக்கி, பல்லவி பாடுதற்குச் சில இலக்கண முறைகளுண்டு. அவ்விலக்கண முறைகள் வழுவிப் பாடுதல் கூடாது. இத்தாளம் பல்லவி பாடுதற்குரிய தாளமன்று. ஒரு போட்டியில் ஒவ்வொருவரின் திறமைகளை அறிதற்கு இதுபோன்ற மயக்கம் தரும் செயல்களைச் செய்தால் அதனை ஒத்துக் கொள்ள இயலாது. ஆதி தாளத்திலே அநாகத இடத்திலே (முக்காலிடம்) தாம் ஒரு பல்லவியைப் பாடுதலே முறை. அதிலே தமது திறங்களைக் காட்டிப் பாடல் வேண்டும். அதனை ஏற்று போட்டியில் பங்கு கொண்ட மற்றவரும் பாடுதல் வேண்டும். அவ்வாறு செய்தால் தான் உரிய முறையில் தீர்ப்பளிப்பதற்கு இயலும். இவ்வாறு கேள்விப்படாத தாமே பயின்று வைத்திருப்பதைப் பாடுவது ஒரு சிறப்பல்ல என்று நான் கருதுகிறேன் என்ருர்.

போட்டிக்கு நடுவர் இவ்வாறு கூறி வரும்போது வீணை வைத்தியநாத ஐயருக்கு வேண்டிய சிலர் உடனே பரபரப்படைந்து மகாவைத்தியநாத சிவன் தங்கி இருந்த இடத்திற்குச் சென்று வீணை

வைத்தியநாத ஐயருக்கும் நாமக்கல் நரசிம்ம ஐயங்காருக்கும் நடக்கும் போட்டி பற்றியும், அதற்குப் பட்டினம் சுப்பிரமணிய ஐயர் நடுவராக இருப்பதையும், வீணை வைத்தியநாத ஐயர் பாடிய "லட்சுமீசம்" என்ற தாளம் லட்சணயுக்தமில்லை என்று பட்டினம் சுப்பிரமணியர் கூறி நிகழ்ச்சி நிரலை நடத்தவொட்டாமல் செய்ததையும் கூறினர்கள். வித்துவான்கள் அவமதிப்புறலாகாது எனவே தாங்கள் அங்கு வந்து இசையின் உண்மைக் கூறுபாடுகளை அறிவித்தல் வேண்டும் என்று கூறி அவரை அழைத்து வந்து விட்டார்கள்.

மகாவைத்தியநாத சிவன் மாதவப் பெருமாள் கோயிலின் கோபுர வாயிலைக் கடந்து உள்ளே வருவதைப் பட்டினம் சுப்பிரமணிய ஐயர் கண்டு விட்டார். உடனே தம் இருக்கையை விட்டெழுந்து பெரியவர் வருகிறுர், அவரிடம் கேட்டால் இசை இலக்கணம் பற்றிய ஐயம் தீர்ந்துவிடும் என்று கூறினர். மகாவைத்தியநாத சிவனைப் பட்டினம் சுப்பிரமணிய ஐயரின் பக்கலிலேயே அவையினர் அமர்த்தி விட்டனர். எனவே பட்டினம் சுப்பிரமணிய ஐயர் நாமக்கல் நரசிம்ம ஐயங்கார் சார்பிலும், மகாவைத்தியநாத சிவன் மாயூரம் வீணை வைத்தியநாத ஐயர் சார்பிலும் இருந்து நிகழ்ச்சி நடப்பது போல அமைந்துவிட்டது. அவரவர் ஒவ்வொரு கட்சியிலும் இருக்கும் தக்கது தகாதது ஆகியவற்றைக் கூறுதல் போல ஏற்பட்டு விட்டது. பட்டினம் சுப்பிரமணிய ஐயர் "லட்சுமீசம்" என்ற தாளமானது பல்லவிக்குரிய தாளமில்லை என்பது என் கருத்து. அதன் இலக்கண வகைகளையும் அதில்

பல்லவி எடுத்துப் பாடலாமா, என்பதையும் தாங்கள் கூறல் வேண்டும் என்று மகாவைத்தியநாத சிவனைக் கேட்டார்.

மகாவைத்தியநாத சிவன் இசையுலகிலே இராகம் எத்துணைச் சிறப்புடையதோ அது எத்துணை விரிவுடையதாக இருக்கின்றதோ அதுபோலத் தாளமும் சிறந்ததாகவும் விரிவுடையதாகவும் இருக்கின்றது. இராகங்களை நாம் புதிது புதிதாக விரிவுபடுத்தி அறிவது போலத் தாளங்களை அறிந்தோமில்லை. தாளங்கள் சப்த (ஏழு) தாளமென்றும், துவாதச (பன்னிரண்டு) தாளமென்றும், ஷோடச (பதினாறு) தாளமென்றும், முப்பத்தைந்து தாளமென்றும், எழுபத்திரண்டு தாளமென்றும், எழுபத்தைந்து தாளமென்றும், நூற்றெட்டுத் தாளமென்றும், தேவாருகதமான சச்சபுட, சாசபுட முதலிய பஞ்சதாளமென்றும், அங்க தாளமென்றும், மாத்திராக் காலத் தாளமென்றும், யதிதாளமென்றும், கண தாளமென்றும் இருக்கின்றன. இன்னும் திருப்புகழில் சந்தங்களமைந்த தாளமென்றும் உண்டு. அவை கணக்கிலடங்காதன. எனவே இத்தாளங்களை இசைப் புலவர்கள் கையாண்டு வரும்போது கேட்போருக்கு அதில் சுவைக் குறைவு ஏற்படலாகாது. சுவையுள்ளதாகத் திறம் மிக்கதாகப் பாடப்படின் எந்தத் தாளத்தையும் கையாளலாம். இதுவரை நாம் கையாளவில்லையே என்பதற்காக அது இலக்கணப் பொருத்தமில்லை என்று கூறுவது முறையில்லை. இன்னும் இத்தாளங்களைச் சிறுகச் சிறுகவாவது திறம் பட எடுத்துக் கையாளுதலை முன்னிட்டு முன்னோர்களால் இத்தாள விபரங்கள் கூறப்பெற்றுள்ளன. அவற்றை நூலில்

எழுதி அழகு பார்ப்பதற்கன்று. எனவே அம்மாதிரி யான புதுத் தாளத்திலே பல்லவி பாடுவதில் யாதொரு குற்றமுமில்லை என்றார். மகாவைத்தியநாத சிவன் அவ்வாறு எடுத்துக் கூறியதும் பட்டினம் சுப்பிரமணிய ஐயர் உவகையுடன் அதை ஏற்றுக்கொண்டார்.

போட்டி தொடங்கியது. வீணை வைத்தியநாத ஐயர் "லட்சுமீசம்" என்ற தாளத்திலமைந்த பல்லவியைப் பாடி நிரவல் செய்தார். சுமார் இருபது அல்லது இருபத்தைந்து நிமிடங்கள் இசைத்தார். பின்பு அதை நாமக்கல் நரசிம்ம ஐயங்கார் எடுத்துப் பாடி நிரவல் செய்ய வேண்டும். அவர் பாடுதற்கு முயன்றார். பல இன்னல்களுக்கு ஆளாகி மயக்கமுற்றார். எனவே அப் பல்லவியை அவரால் பாட இயலவில்லை என்று தீர்மானம் செய்தனர். வீணை வைத்தியநாத ஐயர் எடுத்துத் தந்த பல்லவியை நாமக்கல் நரசிம்ம ஐயங்காரால் பாட இயலவில்லை என்பது உறுதியாயிற்று. ஆனால் நரசிம்ம ஐயங்கார் எடுத்துத் தரும் பல்லவியை வீணை வைத்தியநாத ஐயர் பாடுதல் வேண்டும். அப்பொழுது தான் அவரது புலமையின் திறம் நன்றாக அறிதற்கு இயலுமென்று பட்டினம் சுப்பிரமணிய ஐயர் கூறினார். யாவரும் அதற்கு உடன்பட்டனர். உடனே நரசிம்ம ஐயங்கார் ஓர் பல்லவியை உருவாக்கிப் பாடினார். அது மூன்று திச்ரகதியும் ஒரு ரூபக தாளமும் அமைந்த பதினைந்து மாத்திரைகள் கொண்டது. பயிரவி இராகத்திலே பல்லவியைப் பாடினார். பல்லவிக்கு உரியதாகக் கையாண்ட சொற்களாவன, "**திருமால் மருகன் - அருள் செய்திடும் பரமன்**" என்பதாம்.

அதனுடைய சுரக்குறிப்பு வருமாறு:-

இராகம்: பயிரவி; தாளம்: த்ரயத்வயம்; 15 மாத்திரைக் கால அளவு.

" தகிட - தகிட - தகிட - தக - தக - தின "
திச்ரகதி திச்ரலகு, ரூபகம்

தகிட தகிட தகிட தக தக தின
; , - ப ரி நி , த ப - ம ப த நி ச் நி
. . தி ரு மா . . ல் ம ரு க ன் . .

தகிட தகிட தகிட தக தக தின
ச்சா , - த நி ச் - , ரிச் - நிரி - ச்நி த ப || நிதம
. . அ ருள் செ ய் தி டும் ப ர ம ன் . . . . .

அப்பல்லவியை வெகு நன்ருக விரித்துப் பாடி நிரவல் செய்தார். அவருடைய சாரீரம் சிறிது சன்னமாகவும் இழையோடியது போலவும் இருக்கும். இவ்வாறு தாளம் போட்டுக் கொண்டு அந்த இழையோடிய சாரீரத்திலே பயிரவி இராகமும் அமைதிபெற்று வரும் போது அதிலே யாவருடைய மனமும் ஈடுபட்டுவிட்டது. அவர் பயிரவி இராகத்தை வெகு நன்ருகப் பாடுவார். அவருடைய பயிரவி இராகத்திலே மகாவைத்தியநாத சிவனும் உளங்களித்தார் என்பது அவருடைய தலையசைப்பினுல் தெரிந்தது. அவர் இருபது அல்லது இருபத்தைந்து நிமிடத்திற்குக் குறையாமல் இந்தச்சிறு பல்லவியை வித்தாரமாகப் பாடியது வியப்புக்கு உரியதேயாகும். அவர் பாடி முடித்ததும் வீணை வைத்திய

நாத ஐயர் அதை ஏற்றுப் பாட வேண்டிய தருணம் வந்தது. வீணை வைத்தியநாத ஐயர் சிறந்த இசைப் புலவர். இத்தாளம் அவருக்கு எளிமையேயாயினும் ஏதோ அந்தச் சூழலில் அவையோரின் நடுவிலே சிறிது மனம் தளர்ந்து விட்டார். நரசிம்ம ஐயங்காரின் அழகிய இசை ஒலியிலும் பல்லவியைப் பாடி வந்த ஆற்றலிலும் மெய்மறந்து விட்டதே தளர்ச்சிக்குக் காரணம். பல்லவியைச் சிறிது பாடினர். ஆயினும் இரண்டொரு ஆவர்த்தனம் சென்று தாளம் மாறிவிடும். தாளத்தில் கவனம் செலுத்தினல் நிரவல் செய்வதில் சிரமம் தோன்றும். அவ்வாறு தட்டுத் தடுமாறியே பாடினர். பாடுவதில் மிகுந்த களைப்புற்ருர். எனவே நரசிம்ம ஐயங்கார் எடுத்துத் தந்த பல்லவியை வீணை வைத்தியநாத ஐயராலும் பாட இயலவில்லை என்று தீர்மானமாயிற்று. எனவே அவ்விருவரும் இசையில் தத்தம் செயலில் திறமைசாலிகள் என்று மதிக்கப் பெற்றனர்.

அவ்வாறு பாடி முடித்ததும் மகாவைத்தியநாத சிவன் நாமக்கல் நரசிம்ம ஐயங்காரை நோக்கித் தாங்கள் பெரியவர். தங்களுக்கு நான் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. ஆயினும் இசையை ஆனந்தமயமாக்கி மனம் ஒன்றும்படிச் செய்தல் வேண்டும். இவ்வாருன வாதப் போர்களில் ஈடுபட்டு அதைத் தவருன வழிகளுக்குப் பயன்படுத்தக் கூடாது. இவ்வாறு செய்வதில் என்ன பயன்? இனித் தாங்களும் தங்களைச் சேர்ந்த புலவர்களும் போட்டி மனப்பான்மையை விடுதல் வேண்டும். அப்படிப் போட்டியில் ஈடுபட விரும்பி

னுலும் வீடுகளிலே இசைப்புலவர்கள் மட்டும் கூடியுள்ள இடத்திலே ஒருவருக்கொருவர் அத்திறமைகளின் நயங்களைக் காணுதல் வேண்டும். பொது இடங்களிலும் பொது மக்கள் முன்னிலையிலும் இவ்வாறு செய்வது நமக்கும் இசைக்கும் பெருமை தராது என்று கூறினர். நாமக்கல் நரசிம்ம ஐயங்கார் இரண்டொரு வயது மூத்தவராயினும் மகா வைத்தியநாத சிவனின் சொல்லை அருள் வாக்காகக் கருதி அதை மனத்தூய்மையோடு ஏற்றுக் கொண்டார். அதுபோலவே பட்டினம் சுப்பிரமணிய ஐயர் வீணை வைத்தியநாத ஐயர் மற்றும் அங்குக் குழுமியிருந்த அனைவரும் அவ் அறிவுரையைப் பாராட்டினர். அது முதல் மக்களனைவரும் அப்போட்டி நிகழ்ச்சியை மறந்து அவ் இருபெரும் இசைப்புலவர்களிடம் பெரிதும் அன்பு செலுத்துவராயினர்.

● ஒரு சமயம் மகாவைத்தியநாத சிவன் புதுக்கோட்டை அரசவையில் இசைக் கச்சேரி செய்து கொண்டிருந்தார். அப்போது அச்சமத்தானத்தில் ஆஸ்தான வித்வான்களாக விளங்கிய வீணை சுப்புக்குட்டி ஐயர், வீணை சுப்பையர் முதலானவர்கள், தஞ்சை சகாராம் சாகேப் அவையில் பாடி அரங்கேற்றிய எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகமாலிகையைக் கேட்க வேண்டும் என்று விரும்பினர். அவர் முறைப்படி கீர்த்தனம், இராகம், தானம், பல்லவி, நிரவல், சுரம் ஆகியவைகளை யாவரும் வியக்கும்படிப் பாடி முடித்திருந்தார். எழுபத்திரண்டு மேள இராகமாலிகையை முழுவதும் பாட அதிக நேரமாகும் ஆதலால் அதைச் சுருக்கமாகப் பாடக் கருதி

ஆதி தாளம் ஒன்பது ஆவர்த்தனத்துக்குள் அழகுறப் பாடித் தம் திறத்தைக் காட்டினர். ஆதிதாளம் என்பது எட்டட்சரம் உடைத்து. இது சதுச்ரஜாதி திருபுடை தாளமாகும். ஒவ்வொரு அட்சரத்திற்கும் ஒரு மேள கர்த்தா இராகம் அமைந்து வரும். ஒரு ஆவர்த்தன மாகிய எட்டட்சரத்துள் கனகாங்கி என்ற இராகமுதல், தோடி என்ற இராகம் வரை எட்டு மேளகர்த்தா இரா கங்கள் வருவது போலக் கற்பனை செய்தார். அவ்வாறு ஒன்பது ஆவர்த்தனத்துள் ($9 \times 8 = 72$) எழுபத்தி ரண்டு மேளகர்த்தா இராகங்களும் அடங்கும்படியாக வியக்கத்தக்க செயலைச் செய்தார். ஓர் அட்சரத்துள் ஒரு மேளகர்த்தா இராகம் அடங்குவதற்காக ஓர் அட் சரத்திற்குப் பதினறு கலை வருமாறு தாளத்தை அமைத் துக் கொண்டார். இந்த மேள இராகமாலிகையிலே இராகத்தின் பெயர் மட்டுமே பொருளமைதியுடன் வரப்பெற்று அந்த இராகத்தைப் புலப்படுத்திற்று. மகா வைத்தியநாத சிவனுக்கு நல்ல சாரீரச் சிறப்பும், இசைக்கு இன்றியமையாததான இராக தாள இலக்க ணப் பயிற்சியும் நன்ருக இருந்தன. பயிற்சிக்குத் தக்க அறிவும், அறிவிற்குத் தக்க நல்ல கேள்வியும், கேள் விக்குத் தக்க உயர்தரக் கற்பனையும் வெகு சிறப்பாகப் பெற்றிருந்தார். கற்பனைக்குத் தகுந்தபடி மூன்று ஸ்தா யிகளிலும் அதன் சுரத்தானங்களிலும் தங்கு தடை யின்றிச் சஞ்சாரம் செய்து செயலாற்றும் சக்தி படைத் திருந்தார். இசையில் எல்லாவிதத்தானும் சுதந்தர மும், சாதுரியமும், மாதுரியமும் பிறவிக் கொடையாய்ப் பெற்றிருந்ததால் அனைவரும் வியப்புறும்படி ஆற்றெ ழுக்காய்ப்பாடும் திறம் பெற்றிருந்தார். அவருடைய

இசையையும் எழுபத்திரண்டு மேள இராகமாலிகையை யும் கேட்ட அரசரும் புலவர்களும் பெருமகிழ்வும் வியப் புங் கொண்டு மனநெகிழ்ந்து புகழ்ந்து கூறினர். அரசர் உரிய பரிசில்கள் செய்து களிப்புற்ருர்.

● மகாவைத்தியநாத சிவனுக்கு எட்டு வயது. அப் பொழுது தான் குடியாலம் வாசுதேவ ஐயங்கார் வீட் டில் நடந்த புதுமனை புகுவிழாவிலே பல இசை வல் லுநர்கள் முன், முதன் முதலாகப் பாடி யாவராலும் கொண்டாடப் பெற்ருர். அப்பெருமையோடு வையை வந்து சேர்ந்தார். இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து இரட்டைப் பல்லவி சிவராமய்யர் வையைச் சேரிக்கு வந்தார். தம்முடைய நண்பரான பஞ்சநத ஐயரென்ற துரைசாமி ஐயரைக் கண்டு அளவளாவி மகிழ்ந்தார். துரைசாமி ஐயர் தன் மகன் வைத்திய நாதன் வாசுதேவ ஐயங்கார் வீட்டில் பாடிப் பரிசில் பெற்ற நிகழ்ச்சியை இரட்டைப் பல்லவி சிவராம ஐயரி டம் கூறிக்கொண்டிருந்தார். அம்மகிழ்ச்சிச் செய்தி யைச் சிவராம ஐயர் உவந்து கேட்டுக் கொண்டிருந் தார். அச்சமயத்திலே சிறு பிள்ளையாகிய வைத்திய நாதன் அவ்விருவரும் அமர்ந்து உரையாடிக் கொண் டிருந்த இடம் வந்து தம் தகப்பனுரையும் சிவராம ஐய ரையும் வணங்கினுர். சிவராம ஐயர் வைத்தியநாத னைப் பார்த்துப் புன்சிரிப்புக் கொண்டு ஆசி வழங்கினுர்.

சிவராம ஐயர் வைத்தியநாதனை அங்குத் தம் அரு கில் அமரச் செய்து விளையாட்டுத் தோன்ற ஒரு பல்ல வியை அமைத்துப் பாடினுர். அப்பல்லவியை வைத்தி

யநாதனை நோக்கி, ‘‘எங்கே! இப்பல்லவியை நீயும் பாடிப்பார் அது வருகின்றதா! என்று பார்ப்போம்’’ என்று கூறினர். அவர் பாடியது சாவேரி இராகம். அதன் எழுத்துக்கள் **“சங்கரசிவ சிவசங்கர பாஹி மாம், சரணம்சிவ சிவசரணம் ஈசபதே’’** என்பதாகும். இத்தாளமானது ‘தக தக தக’ என்ற அளவுடைய திச்ரலகு, பின்பு ‘தகிட தகிட’ என்ற அளவுடைய திச்ரகதி, அதன் பின்பு ‘தகிட தகதிமி’ என்ற அளவுடைய மிச்ர சாய்ப்பு. இதனை இரு தடவைப் பாடிக் கேட்டதும் வைத்தியநாதன் மிகவும் அநாயாசமாகப் பாடினர். இரட்டைப் பல்லவி சிவராம ஐயர் மூக்கில் விரல் வைத்து வியந்து தன் நண்பர் துரைசாமி ஐயரை நோக்கி ‘‘துரைசாமி! வைத்தியநாதன் நலமாக வாழ வேண்டும். அறிவுக் கூர்மை மிக்கவன். எல்லா சம்பத்துக்களையும் அவனடைய வேண்டும். சர்வேசுவரனுடைய கிருபை அவனுக்குப் பரிபூரணமாக உண்டு’’ என்று புகழ்ந்து வாழ்த்தினர். அப்பல்லவியின் சுரக் குறிப்பு வருமாறு:-

இராகம்: சாவேரி. தாளம்: திச்ரலகு, இரண்டு திச்ரகதி, மிச்ர சாய்ப்பு. 19 மாத்திரைகள்.

தக தக தக தகிட தகிட
சா ரீ மா மா பா பா | பா பா மா - மா த ப தா |
ச ங் க ர சி வ சி வ சங் . க . ர

தகிட தகதிமி
பா ; மா = பா தா ச்ா ;
பா . ஹி . மா ம்

தக தக தக தகிட தகிட
ச்ா ச்ா ச்நி தா தப தா | பா மா பா – தா ச்ா ;
ச ர ணம் . சி . வ சி வ ச ர ணம்

தகிட தகதிமி
ச்நி தா மா = த த ப ம க ரி சா ||
ஈ . . . ச . . . ப . தே

அச் சிறுவயதிலே எடுத்த எடுப்பிலேயே தட்டுத் தடங்கலின்றி அவர் பாடியதைக் கேட்டதும் இரட்டைப் பல்லவி சிவராம ஐயரும் தகப்பனுர் துரைசாமி ஐயரும் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லேயில்லே.

● இராமசாமி சிவன் பெரிய புராணக் கீர்த்தனத்தைச் செய்து முடித்தார். அந்நூலில் விநாயகர் துதி, சுப்பிரமணியர் துதி, முதலிய செய்யும்போது குரு வணக்கம் செய்ய வேண்டியதாக இருந்தது. இராமசாமி சிவனேயும் மகாவைத்தியநாத சிவனேயும் இரட்டைப் புலவர் என்று இராமநாதபுரம் அரசர் முத்துராமலிங்கத்தேவர் அவர்கள் கூறியுள்ளார்கள். அதற்கிணங்க அவ்விருவரும் சேர்ந்தே பெரியபுராணத்துக் குருவணக்கக் கீர்த்தனத்தைச் செய்தனர். இராமசாமி சிவன் கீர்த்தனம், கண்ணி, விருத்தம் ஆகிய எது செய்தாலும் அதை இயற்றியதும் அவர் தம்பியாகிய மகாவைத்தியநாத சிவனிடம் சொல்லிக் காட்டுவார். தம்பியாருக்கு அதில் ஏதேனும் புதுக் கருத்துத் தோன்றுமாகில் கூறுவார். அது பொருத்தமானது என இராமசாமி சிவனுக்குத் தோன்றுமானுல் அதைத் தாம் இயற்

றிய செய்யுட் பகுதியில் திருத்திச் சேர்த்துக் கொள்ளு வார். இதுதான் வழக்கம்.

இஃது இவ்வாறிருக்க பெரியபுராணத்துக் குரு வணக்கத்தை மட்டும் இருவரும் சேர்ந்தே செய்தனர். அவ்வாறு சேர்ந்து இயற்றியதில் ஒரு சிறப்பும் உண்டு. தம்பியாராகிய மகாவைத்தியநாத சிவன் குருவணக் கத்தை தொடங்கினர். தமையனுராகிய இராமசாமி சிவன் அதனை முடித்து வைத்தார். பல்லவி அனுபல்ல வியாகிய நான்கடிகளும், இரண்டாவது சரணத்தின் நான்கடிகளும் மகாவைத்தியநாத சிவன் இயற்றி யவை. முதலாவது சரணத்தின் நான்கடிகளும், மூன் ருவது சரணத்தின் நான்கடிகளும் இராமசாமி சிவன் இயற்றியவை.

இரட்டைப் புலவர்களாகிய மகாவைத்தியநாத சிவனும் இராமசாமி சிவனும் சேர்ந்து இயற்றிய பெரிய புராணத்துக் குருவணக்கப் பாடல் வருமாறு :-

* புன்னுகவராளி - மிச்ர சாய்ப்பு

மகா : பல்லவி

சுந்தர குருவை நிரந்தரம் பணிந்து நான்
தொந்தம கன்றேனே. (சுந்தர)

---

★ பெரிய புராணக் கீர்த்தனங்களை சுரப்படுத்தி வெளிவரும் நூலில் இக்கீர்த்தனம் சுரத்துடன் குறிக்கப்பெறும்.

அனுபல்லவி

பந்த மோட்சமெனுஞ் சிந்தனை தவிர்ந்த வி
டந்தனி லென்றுமி ருந்திட வருள் செய்த
(சுந்தர)

இராம: ச. 1.

அவித்தையி னுற்பனமாம் செகப் பிராந்தி
யனைத்துமே சொற்பனமாம்
அவத்தை யென்றறிந்து சிவத்தைக் காண
வாய்ந்த; அல்லும் பகலுமற்ற நல்ல ஞானக்
கண்ணீந்த (சுந்தர)

மகா: 2.

சுழுத்தியி லொளியாமல் இருந்ததைச்
சோதித்துத் தெளியாமல்
இழுக்காகச் சீவேச ரெனவேருய் நோக்கிய
என்னையும் அருளாலே தன்மயமாக்கிய
(சுந்தர)

இராம:- 3

எப்போது நாம் பிரமம் ஆவோமென
எண்ணுவதே பிரமம்
இப்போதினுஞ் சென்ற அப்போதினும்
நண்ணும்
எப்போதினும் பிரமம் யாமென்றறியப்
பண்ணும் (சுந்தர)

● பட்டினம் சுப்பிரமணிய ஐயர் தம் சீடரான பூச்சி சீனிவாச ஐயங்காரிடம் மகாவைத்தியநாத சிவனுடைய இசைத்திறங்களையும் சாரீர சம்பத்தையும் அவர்

லட்சுமீசம் போன்ற அபூர்வ தாளங்களிலே பாடியுள்ள பல்லவிகளையும் எடுத்து விளக்கி மகிழ்வதுண்டு. பூச்சி சீனிவாச ஐயங்கார் நல்ல ஞான வலுவைப் பெற்ற நாள் முதல் பல முறைகள் மகாவைத்தியநாத சிவனுடைய இசை நிகழ்ச்சிகளைச் செவி குளிர மனம் நிறைவுறக் கேட்டதுண்டு. அவருடைய இசைத் திறனைக் கண்ட பூச்சி சீனிவாச ஐயங்கார் லட்சுமீசம் என்ற தாளத்தைத் தாம் மனத்திற் கொண்டு அதில் ஒரு தில்லானா இயற்றினார். அது வருமாறு:-

இராகம்:- காப்பி. ஆரோ:- சா-ரிமபநீச்ா

தாளம்:- லட்சுமீசம் அவ:- ச்நிதநிபமகரிசநீசா

மேளம்:- 22. அங்கம்:- 0 U 0 1 1 1 8.

ப = தாராதி$_4$ பானன த$_8$ ச$_5$ ர த$_4$ தனய
ஸரஸ நின்னு நம்மி ஸ்ரீநாமஸ்மித முக$_2$ ||
ஸ்ரீத$_4$ர ஸ்ரீனிவாஸ நன்னு ப்ரோவுமு

ச = தாம் தகிட தகதணம்; தகதிமி ததீமி ததீம் தீம்த
த்ரிகுடு தகதீனு ததிம் கிணதோம்

தாம்த்ருத்ரு தில்லில்லானா த்ருத்ரு நாத்ரு
நாத்ருத்ருத்ரு தோம்த்ருத்ருத்ரு தகததிங்
கிணதொம் ததிம் கிணதொம் திங்கிணதோம்
கிணதோம் நத்தோம் தோம் || தாரா

0 U 0 1

ப = ச்ா ; | ச் நி | ச் நி பா | ம ப ச் நி நீ ப ம க ரி |

தா . ரா . . . தி பா . . . . ன . ன .

1 1

சா ரீ மா பா | நீ மா பா ம ப

த ச ர த த ன ய ஸ .

8

நீ ச்ரா ரீ ச்ம் க்ரி ச்நி ப ம ப நி=

ர ஸ நின்னு. ந ம் . . மி . . .

0 U 0 1

நி ம பா | ச் நி | ச்ரா ரீ | க்ம் க்ரி ச்ரா ச்ரா

ஸ்ரீ . . நா . . ம ஸ்மி . த . மு க

1 1

ச் நி ரி ச் நி த ச் நி நீ | ப த நி ச் நி த பா நி த

ஸ்ரீ . . . த . ர . . ஸ்ரீ . . . ணி . வா . .

8

தா பா கா க ரி ரீ ச ரி ம ப நி ச் ரீ க் ரி |

. ஸ நன்னு . . ப்ரோ . . . வு . மு . .

0 U 0 1

ச = ச்ரா ; | ரி ச் | நி த நி ப | ம ப ச் நீ ப ம க

தா ம் . . . த கி ட த க த ணம் . . .

1 1

ப ம க ரி ச ரி நி ச் | க ச க கா க ச க் |

த க தி மி த தீ . மி த தீம் தீம் த . .

8

ம-நி நி த - ப ம கா ரி ச - ரி ம ப ந்ி ச் ரி ॥
. த்ரி கு டு த க தீ . னு த தி ங் கி ண தோம்

0 U 0 1

ச் நி ப நி | ச் ரி | ம் க்ா ரி | ச் ரி நி ச்ப நிமப
தா ம் த்ருத்ரு தில்லில் . லா ஞு த்ருத்ருநாத்ரு. . . .

1 1

ரி ம ப நி ச் ரி க் ரி | ச் ரி ம் க் க் ரி ச் நி |
நாத்ருத்ருத்ரு தொம்த்ருத்ருத்ரு . . த க த திங் கி ண

8

ப - க் ரி ச் நி ப - ப ரி ச் ரி
தொம் த திங் கி ண தொம் திங் கி ண தொம்
ச் நி ப ம ப நி ॥
கி ண தோம் நத் தோம் தோம்

மகாவைத்தியநாத சிவன் லட்சுமீச தாளத்தைக் கையாண்ட முறைக்கும் அத்தாளத்தின் அங்கங்கள் வருமுறைக்கும், பூச்சி சீனிவாச ஐயங்கார் லட்சுமீசத் தாளத்தைக் கையாண்ட முறைக்கும் அத்தாள அங் கங்கள் வருமுறைக்கும் எத்துணையோ வேறுபாடுகள் உள்ளன. மகாவைத்தியநாத சிவன் லட்சுமீசம் என்ற தாளத்தை இரண்டு லகு, இரண்டு திருதம், ஒரு அனு திருதம், ஒரு புலுதம், ஆகிய (1100U§) அங்கங்க ளோடு தாளமிட்டார். பூச்சி சீனிவாச ஐயங்கார் ஒரு

திருதம், ஒரு அனுதிருதம், ஒரு திருதம், மூன்று லகு, ஒரு குரு ஆகிய (0U01118) அங்கங்களை உபயோகித்துத் தில்லானு இயற்றியுள்ளார். பூச்சி ஐயங்காரும் * நானும் (பல்லவி சுப்பையா பாகவதர்) சம வயதினர். நான் 1859-ல் பிறந்தேன். அவர் 1860-ல் பிறந்தார். எனவே அவரை எனக்கு நன்ருகத் தெரிவதோடு நெருங்கிய பழக்கமும் உண்டு. இத்தில்லானுவை அவர் வாயிலாகவே நான் கேட்க நேர்ந்தது. அவர் தாளமிடும் முறையையும் அறிந்தேன். அவரிடம் என் குருநாதராகிய மகாவைத்தியநாத சிவன் இத்தாளத்தைக் கையாண்ட முறையிலிருந்து தாம் தாளமிடுவது பிறழ்ந்து காணப்படுகின்றதே அதற்கு என்ன காரணம் என்று கேட்டேன். அதற்கு அவர் கூறியதாவது, ‘‘மகாவைத்தியநாத சிவன் இட்டுவரும் முறைதான் லட்சண யுக்தமாகும் என்றும், அவ்வாறு தாளமிட்டுக் கொண்டு பாடுவது எல்லோருக்கும் எளிதன்று ஆகையால் கையில் தாளம் இடுவதற்கும் அத்தாளத்தில் அமைந்த உருப்படி எளிமைப்படுவதற்கும் வேண்டி முதலில் கண்டசாய்ப்பு ஆகிய ஒரு திருதம் ஒரு அனுதிருதம் மற்றுமொரு திருதத்தையும், புலுதாங்கத்தைக் கையாளுவது கடினமாகையால் அதன் பன்னிரண்டு அட்சரங்களை ஒருலகுவாகவும், ஒரு குருவாகவும் மாற்றி எளிமைப்படுத்தினேன். எனவே ஒரு திருதம், ஒரு அனுதிருதம், ஒரு திருதம், மூன்று லகு, ஒரு குரு என்று அமைத்து வரிசை செய்து கொண்டேன். எனவே ஐந்து அட்சரமாகிய ஒரு

---

★ இங்கு நான் என்ற சொல் என் தந்தையார் எழுதிய குறிப்புப் படியே அமைக்கப்படுகிறது.

கண்டசாய்ப்பும் அதைத் தொடர்ந்து நான்கட்சரங் களுடைய மூன்று லகுவும், எட்டு அட்சரமாகிய ஒரு குருவும் அமைத்து எளிமையாக்கினேன். இது பாடு தற்கு எளிமையாக இருக்கிறது'' என்றுர்.

பூச்சி ஐயங்கார் லட்சுமீச தாள அங்கங்களை மாற் றியும் அங்காதிகளை முன்னும் பின்னும் இட்டுப் பாடி யும் வந்தாலும் அத்தாளத்திற்குரிய இருபத்தைந்து அட்சரங்களில் மாற்றமேது மில்லை. மகாவைத்திய நாத சிவன் லட்சுமீச தாளத்தைக் கையாண்ட அங்க அட்சரங்கள், "1—1—0—0—U—8" லகு, லகு, திருதம், திருதம், அனுதிருதம், புலுதம், "4-4-2-2-1-12" ஆக இருபத்தைந்து அட்சர காலங்கள். இம் முறைப்படி தாளத்தைக் கையிலிட்டு வந்தால் அதன் சிரம சாத்தியக் கூறுகள் யாவை! என்பது புலனுகும்.

பூச்சிசீனிவாச ஐயங்கார் லட்சுமீச தாளத்தைக் கையாண்ட அங்க அட்சரங்கள். "0-U-0-1-1-1-8" திருதம், அனுத்ருதம், திருதம், லகு, லகு, லகு, குரு "2-1-2-4-4-4-8" ஆக இருபத்தைந்து அட்சர காலங்கள். இதன் அங்கங்களெல்லாம் மாறி இருத்த லைக் காண்க.

● பாண்டிச்சேரியிலிருந்து சென்னைக்குச் செல்லும் வழியிலே மரக்காணம் என்ருேர் ஊர் உண்டு. உப்பளங்கள் நிறைந்த அவ்வூரில் முகமதியர்களே மிகுதி; அவ்வூரிலே சைவ மரபைச் சேர்ந்த முதலியா ரொருவர் இருந்தார். அவர் பெரும் செல்வர். சிவநேச முடையவர். தமிழில் நல்ல அறிவுத்திறம் பெற்றவர்.

இசையிலே மிக்க ஈடுபாடு உடையவர். ஏழைக்கிரங்கும் மனம் படைத்தவர். எத்துணையோ சிறந்த அறக் கொடைகள் வழங்கியவர். அச்செல்வரை ஊர் மக்கள் எல்லோரும் சேர்ந்து பாராட்ட விரும்பினர்கள். அதற்காக ஒரு பெரும் விழா நடத்தினர்கள். அவ் விழாவை அவ்வூரில் தலைசிறந்த ஒரு முகமதியச் செல் வரே முன்னின்று சிறப்புற நடத்தினர்.

அவ்விழாவிலே மகாவைத்தியநாத சிவனின் இசைச் கச்சேரிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மகாவைத்தியநாத சிவனின் இசை நிகழ்ச்சிகளில் அவரின் மந்திரோபதேச குருவாகிய சுந்தர சுவாமி கள் பெரும்பாலும் கூடவிருப்பது வழக்கம். வழக்கம் போல மரக்காணத்தில் நடந்த கச்சேரிக்கும் அவர் வந்திருந்தார். முதலியாருடைய விழாவை முன் னின்று நடத்திவந்த அந்த மரக்காயராகிய செல்வர் மகாவைத்தியநாத சிவனும் இராமசாமி சிவனும் கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளிடம் பயபக்தி கொண்டு பணிந்து அவர் கூறுவதைக் கேட்டு நடந்து வருதலைக் கவனித்தார்.

மரக்காயர் தம் நண்பர் சிலரிடம் ''மகாவைத்திய நாத சிவனும் இராமசாமி சிவனும் இசையில் நற்றிறம் வாய்ந்த மேதைகள், தமிழை நன்கு கற்ற புலவர்கள். அச்சந்நியாசி ஒரு கோவணாண்டி; சோறுதின்னி, அவரிடம் என்ன யோக்கியதை இருக்கிறது என் றெண்ணி அவ்விருவரும் பணிந்து நடக்கிருர்களோ! தெரியவில்லை'' என்று சிறிது ஏளனமாகக் கூறினர்.

இவ்வேளனப் பேச்சைச் சுந்தரசுவாமிகள் தம் சக்தியால் உணர்ந்துவிட்டார்கள். அம் மரக்காய ருக்கு நல்ல புத்தி வரச்செய்தல் வேண்டும் என்று எண்ணினர்கள். மரக்காயர் செயலால் ஏனைய உண்மை அன்பர்களுக்கும் பெரியோர்களிடம் மரி யாதைக் குறைவு ஏற்பட்டுவிடல் கூடாதென்றும் எண்ணி அவரை அழைத்தனர். மரக்காயர் சற்று உதாசீனமாகச் "சாமியாருக்கு என்ன வேண்டும்" என்று கேட்டார். கோடக நல்லூர் சுந்தர சுவாமி கள் சற்று மிடுக்குடன் அவ்விழாவிற்குத் தாமே தலைவர் என்ற தோற்றம் உண்டாவது போலப் பாவனை செய்து "வெளியூரிலிருந்து வந்துள்ள சைவ சமயிகள் யாவருக்கும் உணவருந்தச் சமையல் தயா ராகிவிட்டதா ; மற்றும் முகமதியர்களாகிய உங்களுக் கும் அசைவ சமயிகளுக்கும் உணவருந்தச் சமையல் தயாராகிவிட்டனவா! மணி ஒன்ருகப் போகின்றதே" என்ருர். மரக்காயர் என்ன! இவர் ஒரு கோவணாண்டி, தம்மைப்பார்த்து அதிகாரக் குரலில் வினுவுகின்ருரே என்ற அலட்சிய முறையில் "எங்களுக்கு உணவு தயா ராகிவிட்டது, தங்களைப் போன்ற சுத்த சமயிகளுக்குச் சமையல் தயாராகிக் கொண்டிருக்கிறது. இன்னும் சிறிது நேரமாகும்," என்ருர்.

உடனே கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் மரக் காயரைப் பார்த்து "எனக்கு மிகுந்த பசியாக இருக் கிறது. நீர் உடனே சமையல் செய்யும் இடத்திற் குப்போய் சோறும், இறைச்சியும் ஒரு தாம்பாளத்தில் வைத்து அதனை மூடி எடுத்து வாரும்? நான் உடனே

உணவு அருந்தல் வேண்டும்'' என்ருர். மரக்காயரும் இச்சாமியாரைக் கேலி செய்ய நல்ல வாய்ப்பு நமக்குக் கிட்டிவிட்டதென்று எண்ணி, சரசரவென்று வேகமாக மாமிசாதிச் சமையல் நடக்கும் இடத்திற்குப் போனுர்; ஒரு பெரிய தாம்பாளத்தை எடுத்தார்; அதில் அரிசிச் சோற்றை நடுவிலே வைத்து, சுற்றிலும் மாமிச வகைகளை வெந்ததும், வேகாததுமாய்ப் பக்குவமாகாத நிலையில் எடுத்து வைத்தார்; ஒரு துண்டை இரண்டாக மடித்து அத்தாம்பாளத்தில் உள்ளவை வெளியே தெரியாதபடி மூடினுர்; தாமே எடுத்து வந்து கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் முன்னுல் வைத்தார்.

மகாவைத்தியநாத சிவனும் இராமசாமி சிவனும் ''அவர் அதிவர்ணுச்ரமிதான். எங்கு வேண்டுமானுலும் சாப்பிடலாம். எதை வேண்டுமானுலும் சாப்பிடலாம். அவருக்குத் தோஷமில்லை. ஆனுல் ஒரு புதிய ஊரில் பல சைவர்களும் சிவசமயிகளும் சூழ்ந்திருக்கும் இடத்தில் பெரிய மனிதர்களெல்லோரும் தப்பெண்ணங்கொள்ளும்படி நடக்கிருர்களே'' என்று வருந்தினர். மனம் கூசினர். சுந்தரசுவாமிகள் உடனே குவளையிலுள்ள தண்ணீரைக் கையில்விட்டு மரக்காயர் கொண்டுவந்த தாம்பாளத்தின்மேல் தெளித்தார். மரக்காயரைப் பார்த்து ''ஏன் நிற்கிறீர் இலையைப் போடும் எனக்குப் பசி அதிகமா இருக்கிறது'', என்ருர். மரக்காயரும் இலையைப் போட்டார். போட்டுவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றிருந்தார். சுந்தர சுவாமிகள் ''ஏன் நிற்கிறீர், தாம்பாளத்தில் இருக்கும் துணியை நீக்கி விட்டு உணவை உமது கையாலேயே எடுத்து இலையில் போடும்'' என்ருர்.

அவ்வாறு சுந்தர சுவாமிகள் கூறியதும் மரக்காயர் சிறிதும் தாமதியாமல் தாம்பாளத்தின்மேல் போர்த்தி இருந்த துணியை விலக்கினர். அவ்வாறு செய்தலை அங்குள்ளோர் யாவரும் கவனித்து வந்தனர். மரக்காயர் துணியை நீக்கியதும் பெருவியப்புக்கு ஆளாகி நின்று விட்டார். இறைச்சித் துண்டங்கள் இனிய கனிகளாக மாறியிருந்தன. உடனே சுந்தர சுவாமிகள் மரக்காயரைப்பார்த்து, "பசிக்கு மாமிசாதி பதார்த்தங்களைக் கொண்டுவரச் சொன்னல் பழவர்க்கங்களைக் கொண்டு வந்திருக்கிறீரே" என்று கேட்டார்.

மரக்காயருக்கு ஒன்றுமே புரியவில்லை. சுந்தர சுவாமிகளின் முன்னலே ஒரு துண்டை விரித்தார். மண்டியிட்டு உட்கார்ந்தார். பாத்தியா ஓத ஆரம்பித்து முடித்தார். பல முறைகள் இருகைகளாலும் தம் தலைமேலே சலாம் வைத்து வணங்கினர். எழுந்தார். கை கட்டினர். உடல் நடுங்கினர். "தங்களுடைய சக்தி தெரியாமல் ஏதோ எண்ணிப் பேசி விட்டேன், என்னை மன்னிக்க வேண்டும். என்னைக் காப்பாற்ற வேண்டும். எங்களைப்போன்ற கல்வி அறிவு இல்லாதவர்களுக்குத் தங்கள் போன்ற பெரியோர்களின் பெருமை என்ன தெரியும். ஏதோ தகாதபடி நடந்துகொண்டேன். பெரும் தவறு செய்து விட்டேன். பொறுப்பதுதான் தங்கள் போன்ற பெரியோர்களுக்கு அழகு. மன்னிக்க வேண்டும்" என்று மிகவும் இரங்கிக் கேட்டுக் கொண்டார். சுந்தர சுவாமிகள் மரக்காயரிடம் "எந்தப் பெரியவர்களையும் இனி அம்மாதிரி

எண்ணல் வேண்டாம். தவருன எண்ணத்தால் இப் பிறவியில் மட்டுமின்றி மறு பிறவியிலும் பாபம் தொடர்ந்து வரும். அதோடு நல்லெண்ணத்தோடு நிற்கும் நன்னெறியாளருக்கும் இத்தகைய செயலால் பெரியோரிடத்தில் வெறுப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. அதனுல் ஏற்படும் பாபத்தையும் ஏற்க நேரிடும். நீர் சத்திய சந்தராய் மனம் மொழி மெய் ஆகிய திரிகரண சுத்தராய் இருக்க வேண்டும் என்பதே எனது ஆவல்'' என்று கூறினுர்.

மகாவைத்தியநாத சிவனும் இராமசாமி சிவனும் சுந்தர சுவாமிகளுடன் பல ஆண்டுகள் பழகி இருந் தும் இது போன்றதொரு செயலைப் பார்த்ததேயில்லை. இன்றுதான் இதுபோன்ற ஓர் அற்புத நிகழ்ச்சியைக் கண்டார்கள்; வியந்தார்கள். இன்னும் என்னென்ன சித்திகள் அவர்களிடம் உள்ளனவோ! என்று எண்ணி ஞர்கள். அவர்களிடம் முன்னிலும் அதிகமான பய பக்தி விசுவாசத்துடனும் அடக்கத்துடனும் விளங்கி ஞர்கள். அன்று இரவு மரக்காணத்தில் அமைத்த கொட்டகையிலே சுந்தர சுவாமிகள் வீற்றிருக்க மகா வைத்தியநாத சிவனின் இன்னிசை விருந்து நடந்தது. அவ்விழாவிலே எல்லாம் சிறந்திருப்பினும் யாவற்றி லும் மதிக்கத்தக்கதாக அவருடைய இன்னிசை விருந்து ஒன்றே மகுடமாக அமைந்தது. அவ்வாறு மேலோங்கி நின்ற அவ்விசையின் சிறப்பை விழாத் தலைவராகிய சைவ முதலியார் மிகவும் போற்றி மகிழ்ந் தார்.

மரக்காயர் பாண்டிச்சேரியிலிருந்து விலைமதிக்கத் தக்க தம் இரட்டை மாடுகள் பூட்டிய பெட்டி வண்டியில் அவர்களை அழைத்து வந்தது போல கச்சேரி நடந்த மறுநாள் காலை நான்கு மணியளவில் அவ்வண்டியிலேயே அவர்களைப் பாண்டிச்சேரிவரை கொண்டு விடவும் ஏற்பாடு செய்து பல மரியாதைகளும் செய்தார்கள்.

● திருநெல்வேலியில் வேதாந்தப் பயிற்சியில் மிக்கவராகிய சிதம்பரம் பிள்ளையின் பஜனை மடத்திலேயே கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள் பெரும்பாலாகத் தங்கி வந்தார்கள். மனோன்மணீயம் என்ற நாடக நூலை இயற்றிய திருவனந்தபுரம் சுந்தரம் பிள்ளைக்கு அவர் ஹைஸ்கூலிலும் கல்லூரியிலும் படிக்கும் தருணத்திலேயே அவருக்கு ஞான குருவாக சுந்தரசுவாமிகள் அமர்ந்து விட்டார். சுந்தரம்பிள்ளையவர்கள் 1877 ஆம் ஆண்டிலே திருநெல்வேலி ஆங்கில உயர் நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்து பணி புரிந்தார். அதுதான் இன்று இந்துக் கல்லூரியாக உருவாகியுள்ளது. அதற்கும் அவரே காரணமாவார். அப்போது அவருக்கு இருபத்து இரண்டு அல்லது இருபத்து மூன்று வயதிருக்கும். அவர் திருநெல்வேலியிலே பணிபுரிய நேர்ந்துவிட்டபடியால் அந்நாட்களை வீணாக்காமல் அவரும் அவருக்கு வேண்டிய இன்னும் பல அன்பர்களையும் சேர்த்து அனைவரும் கோடக நல்லூர் சுந்தர சுவாமிகளிடம் வேதாந்த அறிவைப் பயிலுவாராயினர். அப்பாடம் தொடர்ந்து பல நாட்கள் நடக்கும். பிறகு சுந்தர சுவாமிகள் வெளியூர்

செல்ல நேரிடும். பின்பு ஒன்று அல்லது இரண்டு மாதம் சென்று மறுபடி பாடம் தொடங்கும். இவ்வாறே வேதாந்த பாடம் அவர்களுக்கு நடந்து வந்தது. அவர்களனைவரும் நல்லபடிப்பறிவு உள்ளவர்களாதலால் இப்பாடங்கள் தெளிவாகி ஞானம் பெற்றனர்.

ஒரு சமயம் சுந்தர சுவாமிகள் வையைச் சேரிக்கு வந்தார்கள். மகா வைத்தியநாத சிவன் இராமசாமி சிவன் ஆகியோரிடத்தில் நான் ஒரு குறிப்பிட்ட நாள் முதல் தொடர்ந்து வேதாந்த பாடம் சொல்ல எண்ணியுள்ளேன் என்றார். அதன்படி சிவன் சகோதரர்கள் வேதாந்த பாடத்தில் கருத்து உள்ள பல அன்பர்களிடம் செய்தியைத் தெரிவித்தார்கள். அவர்கள் யாவரும் குறித்த நாளில் ஒன்று சேரத் தயாராக இருந்தார்கள்.

சில தினங்கள் சென்று மகாவைத்தியநாத சிவனின் நெருங்கிய நண்பராகிய திருநெல்வேலி ஐயாசாமிபிள்ளை வையைச்சேரிக்கு வந்து மகாவைத்தியநாத சிவனைச் சந்தித்தார். அவரிடம் பேசிவரும்போது இன்ன நாளிலிருந்து வேதாந்த பாடம் தொடர்ந்து நடத்துவதாகச் சுந்தர சுவாமிகள் கூறிய செய்தியை சிவன் கூறினார். அதற்கு ஐயாசாமி பிள்ளை அங்கு திருநெல்வேலியில் சுந்தரம்பிள்ளை, அவரின் நண்பரான ஒரு வக்கீல், மாவடி சிதம்பரம்பிள்ளை மற்றும் வேதாந்தப்பற்றுள்ள ஏனைய அன்பர்களுக்கும் இதே நாள் தொடங்கிப் பாடம் சொல்வதாகக் கூறியுள்ளார்களே என்று தெரிவித்துவிட்டுத் திருநெல்வேலி

வந்து சேர்ந்தார். சுந்தர சுவாமிகள் வாக்குக் கொடுத்தால் அதன்படி நடப்பார்களே! திருநெல்வேலிக்கும் வையைச் சேரிக்கும் இருநூறு மைலுக்கும் மேல் உள்ளதே. எவ்வாறு இரண்டிடத்திலும் தொடர்ந்து பாடம் கூறுவதாகச் சொன்னார்கள் என்பதை எண்ணி வியந்து கொண்டிருந்தார்.

இஃது இவ்வாறிருக்க, திருநெல்வேலியில் உள்ள ஒரு வக்கீலின் நண்பரொருவர் காசியிலிருந்தார். அவர் அந்த வக்கீலுக்குக் கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் இந்த நாளிலிருந்து தொடர்ந்து எங்களுக்கு வேதாந்த பாடம் கூறுவதாக வாக்குத் தந்துள்ளார்கள். அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து இங்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென்று எழுதியிருந்தார். இவ்வாறு மூன்று இடங்களிலும் பாடம் நடத்த ஒத்துக் கொண்டிருக்கும் செய்தி எல்லா நண்பர்களுக்கும் தெரிந்து அது பற்றியே யாவரும் பேசி வருவராயினர்.

குறிப்பிட்ட நாளும் வந்தது. மூன்று இடங்களிலும் பல அன்பர்கள் சூழ்ந்திருக்க அவர்களுக்கு வேதாந்த பர்டங்களைத் தொடர்ந்து கூறிவந்தார் சுந்தரசுவாமிகள். மகாவைத்தியநாத சிவன் தாங்கள் பாடங்கேட்கும் செய்தியை ஜயாசாமி பிள்ளைக்கு எழுதினார். காசியிலுள்ள நண்பர் திருநெல்வேலி வக்கீலுக்கு இன்ன நாளிலிருந்து கோடகநல்லூர் சுந்தரசுவாமிகளிடம் நாங்கள் வேதாந்த பாடம் பயிலுகிறோம். தினமும் அவர்கூட மணிகர்ணிகையில்

ஸ்நானம் செய்கிறேம் என்று எழுதினர். அதே நாளில் சுந்தரம்பிள்ளை, வக்கீல் முதலிய பலருக்கும் வேதாந்த பாடம் கற்பித்து வந்தார். இங்கு வியப்புக் குரிய செய்தி என்னவெனில் மூன்று இடத்திலேயுள்ள மாணவர்களுக்கு ஒரேவிதமான வேதாந்த பாடம் நடத்தப் பெற்றதுதான். இச்செயலை மூவிடத்தி லுள்ளோரும் கண்கூடாக அனுபவவாயிலாக அறிந்த உண்மை. மெய்யான நிகழ்ச்சி. அவ்வித அரிய செயல் திறம்படைத்த சித்தபுருஷர் கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள்.

● தஞ்சாவூரிலே பெரிய சபை ஒன்றில் பட்டினம் சுப்பிரமணிய ஐயர் இசைக்கச்சேரி செய்து கொண்டி ருந்தார். ஏராளமான மக்கள் இசையை நுகருவதற் காகக் கூடியிருந்தனர். அந்தச் சபைக்குத் தற்செய லாக மகாவைத்தியநாத சிவன் வர நேரிட்டது. அவர் வருவதறிந்து அங்கு உட்கார்ந்திருந்த மக்கள் அமைதி யாக ஒதுங்கி வழிவிட்டு அவரைப் பட்டினம் சுப்பிர மணிய ஐயர் பக்கலிலே அமருவதற்கு உதவினர். பட்டினம் சுப்பிரமணிய ஐயர் வழக்கம் போல எழுந்து மகாவைத்தியநாத சிவனை வணங்கிவிட்டுப் பின்பு உட்கார்ந்து பாடலானுர்.

அக்கச்சேரிக்கு மகாவைத்தியநாத சிவன் வந் திருந்தபடியால் அவர் மதிக்கும்படியாகப் பாடுதற்கு எண்ணினுர். ஒரு புதுத் தாளத்திலே பல்லவி பாடி அவர் மகிழும்படிச் செய்தல் வேண்டுமென்று அவரு டைய உள்ளம் தூண்டிற்று. அக்காலத்திலே பழகத்தி லில்லாத ஒரு தாளத்தை உருவாக்கினுர். அத்தாள

மானது ஒரு திருதம், ஒரு சதுச்ரஜாதி லகு, ஒரு அனுதிருதமும், மற்ருெரு திருதமும் கூடிய தாள மாகும். அந்தாளம் ஒன்பது அட்சரமுடையது. ஒன்பது அட்சரமுடைய தாளத்தை வேறு பலவித மாகப் போடலாமெனினும் அவர் மேலே கூறியபடி புதுமையாகவே அமைத்துக் கொண்டார். இத் தாளம் பதினெட்டு மாத்திரைக் காலமாக போடப் பெற்றது.

அவர் அன்று பல்லவி பாடுவதற்குச் சங்கரா பரண இராகத்தை எடுத்து ஆலாபனைசெய்தார். அவருடைய சாரீரம் கனமும் கம்பீரமும் நிறைந்தது ஆகையால் வேகடை, காம்போதி, சங்கராபரணம் முதலிய இராகங்கள் அவர் குரலிலே மிக எழிலுடன் விளங்கும். அன்று அவர்பாடிய சங்கராபரண இரா கத்திலே அத்துணை மக்களும் கட்டுண்டிருந்தார் கள். மகாவைத்தியநாத சிவனுடைய மனத்தை யும் அது கவர்ந்தது. அதை நன்ருக வித்தரித்து விட்டுத் தானம் பாட ஆரம்பித்தார். யாவரும் மனம் களித்தனர். சக்கரத்தானம் (அதாவது இடைவிடா மல் சுரங்களை ஓர் எல்லை செய்து கொண்டு சுழற்றிச் சுழற்றிப் பாடுதல். இது சவுக்கம் மத்தியமகாலம் துரித காலம் என்றவகையில் வரப்பெறும்). என்ற வகையைப் பாடி மகாவைத்தியநாத சிவனையும் களிப் பித்தார். அவர் பல இடங்களிலே "ஆஹா! பேஷ்!" என்று தம் மகிழ்ச்சியைத் தெரிவித்து வந்தார்.

அவர் தானத்தைப் பாடி விட்டுப் பல்லவி பாடத் தொடங்கினுர். அவர் பல்லவிக்காக எடுத்துக் கொண்ட சொற்களாவன:-

"ஆடின தாண்டவ மஹிம தெலிய தரமா
ஆனந்த மூர்த்தி நீ மகா காளி தோட"
என்பதாகும்.

அதன் சுரக்குறிப்பு வருமாறு:-

இராகம்:- சங்கராபரணம். தாளம்:- லகுஜும்பை
அங்கம்:- 01U0. அட்சரம்:- 9

0 1
கா ; மா பா | ப ப ம க ரீ ரீ - கா மா பா - ப ப
ஆ . டி ன தா . . ண்ட வ ம ஹி ம தெ .

U 0
ம க ம ரி - | கா மா பா ; ||
லி . ய . த ர மா .

0 1
மா பா தா நீ | ச்நி தா பா பா - ம க ம ப ; - ம த
ஆ . னந்த மூ . ர்த் தி நீ ம . கா . . கா .

U 0
ப ம கா - | க ம ப ம க ப ம ரி ||
. . ளி தோ . . . ட . . .

இப்பல்லவியை அவர் பாடும்போது சம எடுப்பிலிருந்தும் பின்பு மூன்றட்சரம் தள்ளி முக்காலிடத்திலிருந்தும் மாறிமாறிப் பாடிவந்தார். அதுபோலவே சுரம் பாடும்போதும் முறை பிறழாமல் பாடினர் மக்களெல்லோரும் கேட்டுக் களிப்பெய்தினர். அன்று நடந்த இசைக் கச்சேரியின் சிறப்பை மகாவைத்திய

நாத சிவன் நன்ருகச் சுவைத்து மகிழ்ந்தார். பட்டினம் சுப்பிரமணிய ஐயர் கச்சேரியை முடித்துவிட்டு மகாவைத்தியநாத சிவன்பால் வந்து வணங்கி அவர் பக்கத்தில் அமர்ந்தார். அன்று பாடிய பல்லவி பற்றியும் அத்தாளம் பற்றியும், நிரவல் சுரம் பாடும் போது சமத்திலும் முக்காலிடமாகிய அநாகத எடுப்பில் முறையாகப் பாடிய தன்மைபற்றியும் மகாவைத்திய நாத சிவன் புகழ்ந்துரைத்தார். பட்டினம் சுப்பிரமணிய ஐயர் மிகவும் அடக்கமாக ''எல்லாம் தங்களுடைய ஆசீர்வாத பலமும் கடவுளின் அனுக்கிரகமுமே காரணம். தாங்கள் பாடியுள்ள எத்துணையோ பல்லவிகளைக் கேட்டிருப்பதால் அவற்றின் அம்சத்திலே ஏதோ ஒன்றைக் கைக்கொண்டு பாடினேனே தவிர வேறில்லை. எனக்கு என்ன சக்தி இருக்கிறது. எல்லாம் அவ்விடத்திலே இருந்து கிடைத்த சிறு பகுதி தான்'' என்று கூறினர்.

மகாவைத்தியநாத சிவன் பட்டினம் சுப்பிரமணிய ஐயரைப் பார்த்து நூற்றுஎட்டுத் தாளத்திலே 'காருதி' தாளம் என்று ஒன்பது அட்சரத்துடன் உண்டு. அது மூன்று திருதமும் ஒரு அனுதிருதமும் மற்றொரு திருதமும் கூடியது. தாம் அதையும் கைக்கொள்ளவில்லை. ஒருகால் இரண்டாவது திருதத்தையும் மூன்ருவது திருதத்தையும் சேர்த்து லகு அங்கமாகக் கைக்கொள்ளப்பட்டதோ என்றெண்ணினேன். இன்னும் லகு, திருதம், அனுதிருதம் ஆகிய அங்கமுடைய லளித தாளம் என்பதும் ஒன்பது அட்சரமுடையதாக நூற்றெட்டுத் தாளத்திலே உண்டு. அவ்வா

றும் தாம் கைக்கொள்ளவில்லை. ஒரு திருதம், ஒரு அனுதிருதம், ஒருதிருதம், ஒரு லகு என்ற அங்க முடைய ஜம்பை என்ற தாளமும் நூற்றெட்டுத் தாளத்திலொன்ருகும், அது ஒன்பதட்சரமுடையது. அதையும் கைக்கொள்ளவில்லை. இன்னும் நூற்றெட் டுத் தாளத்திலொன்ருகிய நிஸ்ஸாரு கம் என்பது இரண்டு லகுவும் ஒரு அனுத்ருதமும் கூடிய அங்க முடையது. அதுவும் ஒன்பதட்சரங்களே யாகும். அதனையுங் கொள்ளவில்லை. முப்பத்தைந்து தாளத் திலே "குல, துஷ்கர, வஸு" ஆகிய தாள அங்க மாகவும் இல்லை. எனவே தாம் கையாண்டது எம் முறைபற்றியது? அதன் கற்பனைத் திறமென்ன? அதற்கு என்ன பெயர்?" என்று கேட்டார்.

பட்டினம் சுப்பிரமணிய ஐயர் மிகப்பணிவுடன் மேலே கூறியபடி அங்கங்களை நான் உபயோகிக்க வில்லை. கண்டசாபுஆகிற 'தக த கிட' என்ற ஜம்பை யில் வரப்பெறும் தக-என்ற திருதத்தை முதலிலும், பின்பு லகுவையும், அதன்பின்பு அனுதிருதம், திருதம், என்ற அங்கத்தையும் கற்பனை செய்தேன். ஜம்பை தாளத்திற்கு அனுதிருதமும் திருதமும் பிரதானம் ஆகையால் அதற்கு முன் உள்ள திருதத்தைப் பிரித் துக்காட்டுவதற்காகத் திருதத்திற்கு அடுத்து லகுவைக் கைக்கொண்டேன். இந்த லகுவானது ஜம்பை தாளத் தின் முக்கிய அங்கமாகிய அனுதிருதம் திருதம் அவற் றையும், ஜம்பையிலுள்ள ஐந்தட்சரங்களிலே முதல் இரண்டட்சர மாகிய திருத அங்கத்தையும் பிரித்துக் காட்டுதற்குக் காரணமானதால் இதை லகு ஜம்பை என்ற ஒரு பெயரையும் கற்பனை செய்து சூட்டினேன்.

இத்தாளமும் புதிது, பாடுதற்கும் எளிது. எனவே தங்களைக் கண்டதும் புதிதாக ஒன்றை உருவாக்க வேண்டுமென்று என் மனம் எண்ணிற்று. அவற்றில் ஏதேனும் பிழையோ! லட்சணக்குறைவோ! கற்பனைத் திறமற்றோ இருந்தால் அதைத் திருத்தி உதவவேணு மென்றார். மகாவைத்தியநாத சிவன் மிக்க மகிழ்ச்சி கொண்டு அதில் யாதொரு பிழையுமில்லை. நற்றிறம் அமைந்த கற்பனை. அதற்குத் தாம் கொடுத்த பெயரும் மிக அழகானது. லகு ஜம்பை என்பது தாள அங்கங் களின் எளிமையையும், பாடுதற்கு எளிமை பொருந்தி யது என்பதையும் விளக்குகின்றது. நல்ல பாட்டு. நன்கு சுவைத்து மகிழ்ந்தேன். என்று போற்றிப் புகழ்ந்து பேசினார். எல்லா மக்களும் அவ்விருவ ருடைய உரையாடலையும் கேட்டு மகிழ்ந்தனர். பின்பு இருவரும் தங்கள் அன்பைத் தெரிவித்துக்கொண்டு தத்தம் இருப்பிடம் சென்றார்கள்.*

● இராமசாமி சிவன் ஏராளமான கீர்த்தனைகள், கண்ணிகள், விருத்தங்கள், வெண்பாக்கள் முத லியவைகளைச் செய்துள்ளார். அவை பலவும் நூல் களாகவே இருக்கின்றன. இன்னும்பல அச்சில் இல்லாமலும் இருக்கின்றன. அவர் பெரியபுராணம் முதலிய செய்யுட்களையும் கீர்த்தனைகளையும் செய்யும் போது ஒவ்வொன்றையும் தம் தம்பியாராகிய மகா வைத்தியநாத சிவனிடம் சொல்லிக்காட்டுவார். அப்போது மகாவைத்தியநாத சிவன் தம் தமைய

---

★ இங்கு கூறப்பெற்ற நிகழ்ச்சியிலிருந்து பட்டினம் சுப்பிரமணிய ஐயர் மகாவைத்தியநாத சிவனுடைய பாட்டை அடிக்கடிக் கேட்டுப் பல அரிய செய்திகளை அறிந்துள்ளார் என்பது புலனாகும். V. S. G.

ஞர் கூறிவருவதைக் கூர்ந்து கவனித்து வருவார். அது சரியென்று பட்டால் வாளா இருப்பார். அல்லது இன்னும் அது சிறந்து விளங்கல் வேண்டுமென்று பட்டால் அச்செய்யுளில் உள்ள முதல் வரியையோ, அல்லது ஒரு சொல்லையோ, அல்லது பாட்டின் தொடக்கத்தையோ, முடிவையோ மாற்றி அது அவ்வாறிருந்தால் நன்ருக இருக்கும்போலத் தோன்றுகிறதே என்று கூறுவார். இராமசாமி சிவனும் அவர் கூறியது மிக அழகாகவும் செய்யுள் சிறப்பாகவும் அமைதலைக்கண்டு அவ்வாறே திருத்தம் செய்து விடுவார்.

சில சமயம் இராமசாமி சிவன் ஒரு கீர்த்தனத்தையோ அல்லது ஒரு விருத்தத்தையோ இயற்றிவிடுவார். அதை அக்கணமே அவையில் பாடவேண்டிய அவசியம் மகாவைத்தியநாத சிவனுக்கு ஏற்பட்டு விடும். அப்போது அப்பாடலின் போக்கில் சில மாற்றம் செய்தலை முன்னிட்டு அதில் சில சொற்களை மாற்றி அமைத்துப் பாடிவிடுவார். அதனைக் கேட்டுக் கொண்டிருக்கும் இராமசாமி சிவன் அதன் சிறப்பைக் கண்டு மகிழ்ந்து உடனே திருத்திக் குறித்துக்கொள்வார். இவ்வாருன செயல்களை அவர்கூட இருந்த நான் அடிக்கடி கண்டிருக்கிறேன்.

எனவே இராமசாமி சிவன் பெரிய புராணம் முதலிய பெரும் நூல்களிலே நூற்றுக்கும் மேற்பட்ட செய்யுட்கள், கீர்த்தனைகள், கண்ணிகள் ஆகிய இசைப்பா வகைகளும், இயற்பா வகைகளும் செய்தி

ருப்பினும் அவை முழுதும் மகாவைத்தியநாத சிவனுடைய பார்வையிலும், திருத்தங்களிலும், அவர் ஒப்புதலுடனும் ஆக்கப்பெற்றது என்றறிதல் வேண்டும். இராமசாமி சிவனைப்போல மகாவைத்தியநாத சிவன் சாகித்தியங்களும், செய்யுட்பாக்களும் இயற்றிவில்லையே என்று பலர் எண்ணக்கூடும். இப்பொழுது நமக்குக் கிடைக்கப்பெறும் இராமசாமி சிவனியற்றிய பாக்களும் செய்யுட்களும் கீர்த்தனங்களும் இராமசாமி சிவனும் மகாவைத்தியநாத சிவனும் சேர்ந்து செய்யப்பட்டனவேயாகும். இசைபற்றிய பல செய்திகளை இராமசாமி சிவன் தம் தம்பியார் மகாவைத்தியநாத சிவனுக்கும், இயல் சம்பந்தமான பல செய்திகளை மகாவைத்தியநாத சிவன் இராமசாமி சிவனுக்கும் எடுத்தோதிக் கலந்து கொள்ளுவார்கள்.

அவரால் இயற்றப்பெற்ற நூலில் மகாவைத்தியநாத சிவன் பெயரில்லாமல் இராமசாமி சிவன் பெயர் மட்டும் காணப்படுகின்றனவே என்று கேட்பாரும் உண்டு. மகாவைத்தியநாத சிவன் தம் தமையனாரிடம் அன்பும் பணிவும் கொண்டவர். அவரை முன்னிட்டு எல்லாக்காரியங்களும் செயல்படல் வேண்டுமென்று எண்ணுபவர். எல்லோருக்கும் முந்தித்தாம் முன்னிற்றல் வேண்டும் என்ற பெருமையை அறவே வெறுப்பவர். முன்னோன் இருக்கத் தாம் அவரடி நின்று வாழ்தல் வேண்டுமென்று வாழ்ந்து காட்டுபவர். எனவே நூலுக்காகத்தாம் பாடுபட்டிருந்தாலும் தமையனார் பெயர் மட்டுமே முன்னிற்றல் வேண்மென்று எண்ணினார். தம்பெயரும் தம் தயைனார் பெயரோடு இருப்

பின் அது பணிவுக்குரிய செயலாகாதென்று எண்ணி ஞர். எனவே தம் பெயர் வேண்டாமென்றே யாவரும் அறியக் கூறினர். அவ்வாறிருந்தாலும் மகாவைத்திய நாதஐயரின் தமையஞராகிய இராமசாமி சிவன் என்று தம் தம்பியையும் சேர்த்தே இராமசாமி சிவன் இணைத் துக்கொள்ளுவார்.

இன்னும் எந்த வகையிலும் இராமசாமி சிவன் உத்தரவு கொடுத்தே அவர் செயல்பட்டு வந்தார். மகாவைத்தியநாதசிவன் வாழ்ந்தகாலம் முழுவதும் அவரை இராமசாமி சிவனே போற்றிப் புகழ்ந்து சிறப் பித்து வந்தார். அதுபோல இராமசாமிசிவனை மகாவைத் தியநாத சிவன் சொற்களால் புகழ்ந்துரைத்தாரில்லை. ஏன்! அவர் தமையனுக்கு அடங்கி பக்தியோடு வாழ்ந் ததே காரணம். அதுபோல ஓர் அண்ணன் தம்பியை எங்கே காண்பது? அக்குடும்பம்தான் எத்துணை சீரியது!

● கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் அதிவர்ணு சிரமம் வகித்த ஒரு துறவியாவார். அவர் வேதாந்த நூல்களிலும் சிவபுராணங்களிலும் மிகவும் தேர்ந்தவர். அவற்றின் நுட்பங்களை அவர்போல் தெளிந்தறிந்தவர் அக்காலத்தில் யாருமில்லை. சூத சம்கிதைச் சொற்ப் பொழிவில் அவரை மிஞ்சியவர் யாருமில்லை. அவர் திருவையாறு முதலிய ஏழு தலங்களிலும், திருமழபாடித் தலத்திலும் ஒரே நாளிலே கும்பாபிடேகம் நடத்துதலை முன்னிட்டு பல சிவநேசச் செல்வர்களிடம் பணம் ஈட்டிவந்தார். எனவே பொருளீட்டுதற் பொருட்டுச் சுந்தர சுவாமிகளும் மகாவைத்தியநாதசிவனும் இராம

சாமி சிவனும் திருநெல்வேலி ஐயாசாமி பிள்ளையும் சேர்ந்து திருவாவடுதுறை ஆதீனத்திற்கு வந்தார்கள்.

அப்போது மேலகரம் சுப்பிரமணியதேசிகர் ஆதீனத் தலைவராக வீற்றிருந்தார். அவருக்குச் சுந்தர சுவாமிகளை ஏற்கனவே நன்கு தெரியும். அவரின் செயல்களும் திறமைகளும் அறிவாற்றலும் மிக்கதிறம் பெற்றவை என்பதை நன்குணர்ந்தவர். மேலே கூறிய நால்வரும் தேசிகரைச் சந்திக்கும் பொருட்டு அவர் களிறங்கி இருந்த இல்லத்திலிருந்து வந்தார்கள். தேசிகர் ஒடுக்கத்தின் வாயிலுக்கு வந்து சுந்தரசுவாமிகளை இன் முகத்துடன் வரவேற்று அன்புப் பெருக்கைக் காட்டி அழைத்துச் சென்று அவரைத்தகுந்த ஆசனத்திலிருத்தித் தாமும் ஆசனத்திலமர்ந்தார். பிறகு யாவரும் சிறிது அளவளாவி மகிழ்ந்தனர். வடமொழி சூத சம்கிதையிலே சுந்தரசுவாமிகள் நிரம்பிய அறிவு பெற்றவர்களாகையால் அதுசம்பந்தமாகப் பல செய்திகளைச் சந்நிதானம் கேட்டறிந்தார்கள்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை வடமொழி சூத சம்கிதையை மொழிபெயர்த்து இயற்றியுள்ளார்கள். அதையும் கோடகநல்லூர்ச் சுந்தரசுவாமிகள் அறிவாராகையால் அதிலிருந்தும் பல நயங்களை எடுத்தோதி மகிழ்வித்தார்கள். அவர்கள் வாக்கிலிருந்து வெளிவந்த அச்செய்திகளெல்லாம் அங்குக் குழுமியிருந்தோரை மகிழ்வுறச்செய்தன. சுந்தரசுவாமிகளையும் மகாவைத்தியநாதசிவனையும் ஒருங்கு பார்த்த போது அங்குள்ள யாவரும் அவர்களைக்கண்டு வியந்து நின்றனர். சுந்தர சுவாமிகளின் முகமானது சிவப்

பிழம்புபோல ஒளிவீசி யாவரையும் வியக்கச் செய்தது. மகாவைத்தியநாதசிவனின் முகம் செக்கச் செவே லென்று சிவசொரூபம் நிறைந்த அருள் முகமாய் ஒளி வீசிற்று. ஆதீனத்தலைவர் விபூதி உருத்திராக்கங் களால் அணிசெய்யப்பெற்று ஓர் அரசர் போல வீற்றி ருந்தார். அங்குள்ளோர் யாவரும் இம் மூவருடைய திருவுருவத்தைப் பார்த்துப் பார்த்து பெருமகிழ்வுற்ற னர். பிறகு கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் தாம் வந்த செய்தி யின் முக்கியத்தைச் சந்நிதானத்திடம் தெரிவித்தார். சந்நிதானம் புன்முறுவல் பூத்தது. "தங்கள் எண்ணம் ஈடேறும்படி தக்க பொருளுதவி செய்கிறேன்" என்பதை அப்புன்முறுவல்தெரிவித்தது. பின்பு சிறிது நேரம் பலசெய்திகள் பற்றிப் பேசி அளவளாவினர். அச்செய்திகளெல்லாம் தமிழ் சம்பந் தமான செய்திகளும், சிவபரமான செய்திகளும் வேதாந்த பரமான செய்திகளுமாகும்.

அச்சமயம் சந்நிதானம் மகாவைத்தியநாத சிவனே நோக்கித் தங்கள் தமையனுரியற்றிய பெரியபுராணத் திலிருந்தும், சூதசம்ஹிதையிற் சிலவும், தேவார திருவாசகங்களும், அவ்விடத்து வாக்கிலிருந்து இசைத் துக் கேட்க விரும்புகிருேமென்ருர். "மகாவைத்திய நாத சிவன் அதற்கென்ன தடையென்று அன்பொழு கக் கூறிவிட்டு அவற்றுள் சிலவற்றை அமுததாரை எனும்படி இசைமழை பொழிந்தார். பாடத் தொடங் கியதும் சுந்தரசுவாமிசுளின் ஒளிப்பிழம்பாகிய அத் திருமுகம் புன்னகை ததும்பி அருள் சுரக்கும் பார்வை யோடு இருந்தது. மகாவைத்தியநாத சிவன் நீண்ட நேரம் பாடினுர். பிடில் மிருதங்கம் இல்லாமல் கேட்

போர் மனம் உருகும்படி அமைந்தது. அவர் பாடும் போது ஒவ்வொரு சொற்களும் உள்ளத்தைத் தொட்டு அதன் முழுப் பொருளையும் உணரச் செய்யும்படி செவ்விதாய் விளங்கிற்று. அவ்விசையானது இவ் வுலகை மறக்கச் செய்தது.

சிவபெருமான் பாணபத்திரனைக் காத்தற்பொருட்டு விறகுத்தலையனாக வந்து ஏமநாதன் தங்கியிருந்த வீட்டுத்திண்ணையிலே இளைப்பாறுவதுபோல இருந்து சாதாரீப் பண்ணைப் பாடுங் காலத்து அண்டபிண்ட சராசரங்களனைத்தும் ஆடாதசையாது செயலற்று இருக்கச் செய்தது. அன்று பக்க வாத்தியங்களேது மின்றி தன்னந் தனியாகப் பாடிய மகாவைத்தியநாத சிவனுடைய பாட்டு அங்குள்ள அனைவரையும் ஆடாமல் அசையாமல் இருக்கச்செய்தது. அதுமட்டுமின்றி அவர்களுடைய ஐம்புலன்களும் அடங்கி ஒடுங்கிப் போமாறு இசைத்தார். யாவரும் மெய்சிலிர்த்தனர்.

சந்நிதானத்தின் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையில்லை. ஏன்! அவருடைய சொந்தமான இசைப்புலவரல்லவா! அவரது சிறப்பும் புகழும் ஆதீனத்தையும் சந்நிதானத்தையும் சாருமன்றோ! திருவாவடுதுறையிலே சந்நிதானத்தின் முன்பு எத்துணையோ இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். ஆயினும் அவை எல்லாவற்றினும் மேலாகச் சுந்தரசுவாமிகளும் சந்நிதானம் அவர்களும் சுற்று முற்றும் தம்பிரான்களும் தமிழ்ப்புலவர்களும் சூழ்ந்திருந்த இடத்திலே அன்று ஏகாங்கியாகத் தம்புராவின்றி, பிடிலின்றி, மிருதங்கமின்றி அவர் வெகுநேரம் இசைத்த அவ்விசையானது வெகு சிறப்பாக அமைந்தது.

அந்த இன்னிசையைக் கேட்ட சந்நிதானம் கும்பாபிடேகத்தை முன்னிட்டுச் சுந்தரசுவாமிகளுக்குத் தாம் அளிக்க எண்ணிய நிதியைக் காட்டிலும் மேலேயே கொடுத்துச் சிறப்பித்தார்கள். கும்பாபிடேகத்திற்காகச் செல்வர் பலர் கொடுத்துச் சிறப்புச் செய்ததைவிடச் சந்நிதானத்தின் கொடை மிகப் பெரியதாகவும் மரியாதைக்குரியதாகவும் இருந்தது. அதனை சுந்தரஸ்வாமிகள் பேருவகையுடன் ஏற்றுக் கொண்டார். பின்பு யாவரும் சந்நிதானத்திடம் விடை பெற்றுக்கொண்டு திருவையாறு புறப்பட்டுச் சென்றனர்.

● ஒரு சமயம் மகாவைத்தியநாத சிவன் திருக்குற்றுலம் வர நேர்ந்தது. அவர் அங்கு வந்திருக்கிற செய்தி திருநெல்வேலி மாவட்டமுதல் திருவனந்தபுரம் வரை எட்டியிருந்தது. அதனால் அவரைக் காண்பதற்காகவும் அவருடைய இசையை நுகருவதற்காகவும் அங்கங்குள்ள இசைப்புலவர்கள் யாவரும் பெருங் கூட்டமாகத் திருக்குற்றுலத்தில் கூடிவிட்டார்கள். மகாவைத்தியநாத சிவன் திருக்குற்றுலநாத சுவாமி சந்நிதியின் முன் உள்ள வெளிமண்டபத்திலே ஒரு நாள் இசையரங்கு நடத்தினர் அதனைக் கேட்டுச் சுவைப்பதை முன்னிட்டு ஏராளமான இசைப் புலவர்கள் பெருங் கூட்டமாகக் கூடி விட்டனர்.

அக்காலத்தில் திருக்குற்றுலத்திற்குப் பெரிய செல்வர்களும், சமீன்தார்களும் மட்டுமே வருவர். சாதாரண மக்கள் கூட்டம் அங்கு நிரம்ப இராது. எளிய மக்கள் அங்குத் தங்கியிருக்கத்தக்க வசதியான இடம் அக்காலத்தில் அங்கு கிடையாது. எனவே

பல சமீன்தார்களும் பல செல்வர்களும், பல இசைப் புலவர்களும், தமிழ்ப் புலவர்களும் நிரம்பிய கூட்டமே அதுவாகும்.

சுவாமி சந்நிதியில் நடந்த இசை நிகழ்ச்சியின் போது ஊற்று மலை சமீன்தார், சேத்தூர் சமீன்தார், சிங்கம்பட்டிச் சமீன்தார், தலைவன் கோட்டைச் சமீன் தார், எட்டையபுரம் அரசர் முதலியவர்களையும், பிச்சு மணி பாகவதர், சாமிபாகவதர், இராமசாமி பாக வதர். ஸ்ரீவைகுண்டம் சுப்பையர், சின்னைய பாக வதர் சாம்பபாகவதர் முதலியவர்களையும் குறிப்பிடல் வேண்டும். சமீன்தார்களும் மற்றும் பல செல்வர் களும் உயரமான கல்தளத்திலே சமுக்காள விரிப்பில் வீற்றிருந்தனர். மகாவைத்தியநாத சிவன் முன்பாக வும் அவரைச் சுற்றியும் ஏராளமான இசையன்பர் கள் நெருக்கமாகவும் ஓர் ஒழுங்காகவும் அமர்ந்தி ருந்தனர்.

மகாவைத்தியநாதசிவன் அச்சந்நிதானத்திலே யாவருடைய மனமும் இளகும்படி இசைமுழக்கம் செய் தார். அவ்வின்ப ஒலியிலே யாவரும் தம்மை மறந் தனர். சுவாமி சந்நிதானத்திலே செல்வர்களும் சமீன் தார்களும் இசையன்பர்களும் சேர்ந்து குழுமியிருப்பது மிகவும் அரிதாகும். அன்று அவ்வாறான ஒரு கூட்டம்.

அப்பொழுது பல இசைப் புலவர்களின் வேண்டு கோளின்படி மகாவைத்திய சிவன் புதிதான ஒரு பல்ல வியைப் பாடினார். அதன் சொற்கள் "சங்கர சிவ சாம்ப பாஹிமாம்-நடராஜ மாம்பாஹி" என்பதாம்.

இப்பல்லவி நாதநாமக்ரியா இராகத்தில் பாடப்பட்டது. இது பஞ்சகதிகள் அமைந்த தாளமாகும். அதாவது "தகதிகதகதகிட" என்பது சங்கீர்ண கதியாகும், அடுத்து "தகிடதகதிமி" என்பது மிச்ர கதியாகும், அதனையடுத்து "தகதகிட" என்பது கண்டகதியாகும், பின்பு "தகதின" என்பது சதுஸ்ர கதியாகும், அதன் பின்பு "தகிட" என்பது திச்ரகதியாகும். இதன் மொத்த மாத்திரை இருபத்தெட்டு. இக்கதியானது "9-7-5-4-3" என்று பெருகிய எண்ணிலிருந்து சிறுத்து வருவதால் கோபுச்சயதியாயிற்று.

இதன் சுர அமைப்பு வருமாறு :—

ரீ ம ம ம ம மா ம — கரிநிசரிகா —
சங்கர சிவசாம் ப பா . . ஹி . மாம்

நி நி ரீ ரி — ப ம க ம—க ரி ச ||
ந டராஜ மாம் . . பா . ஹி

என்று வித்தரித்துப் பாடினர். யாவரும் களித்துப் போற்றினர்கள். அங்குள்ள சமீன்தார்களும் பிரபுக்களும் அவருக்கு வேண்டிய வசதிகளையும் பொருள்களையும் கொடுத்து உபசரித்தபடியால் சில நாட்கள் வரை அங்கிருந்து விட்டுத் தமதூர் திரும்பினர்.

இப்பல்லவியைப் பஞ்சகதித்தாளம் என்று மகா வைத்தியநாதசிவன் கூறினர். சங்கீர்ண கதியை ஒரு திருதம், கண்டசாய்ப்பாகவும், மிச்ர கதியை மூன்றட்சரமடங்கிய ஒரு தட்டும் ஒருதிருதமாகவும், கண்ட கதியை மூன்றுதட்டாலாகிய கண்டசாய்ப்பாகவும்,

சதுஸ்ரகதியை ஒரு திருதமாகவும், திச்ரகதியை இரண்டுதட்டாலாகிய மூன்றட்சரம் வருவது போலும் போடுதல் வேண்டும்.

● யாழ்ப்பாணத்தில் சபாபதி நாவலர் என்றொரு சிறந்த தமிழ்ப்புலவர் இருந்தார். அவர் வேதாகம விதிகளை யெல்லாம் நன்கறிந்தவர். அவரிடம் உள்ள கலைத்திறங் கண்டு யாவரும் சிறிது அஞ்சி நிற்பர். அவர் பல ஆண்டுகள் சிதம்பரத் தலத்தில் இருந்து வந்தார். இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதி அவர்கள் சபாபதி நாவலரை மிகவும் போற்றி வந்தார். அவரைத் தம் ஆஸ்தானப் புலவராகவும் அமர்த்தியிருந்தார். அவரின் கலைத்திறமும் சொல் வன்மையும் அவருடைய மிடுக்கான போக்கும் ஆகியவைகளைக் காண்போர் ஒரு சிம்மத்திடம் எதிர் செல்வது போன்ற எண்ணத்தைக் கொண்டுவிடுவர்.

ஒரு சமயம் இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி அரசர் திருச்செந்தூருச்கு விஜயம் செய்திருந்தார்கள். அவர்களுக்கு முருகப்பெருமானிடம் மிகுந்த பக்தியுண்டு. அங்குப் பல நாட்கள் வரை தங்கி இருந்தார்கள். குமரக்கடவுளைக் காலந்தோறும் சென்று வணங்கி மலர் தூவித் துதித்து வணங்குதலில் பேரின்பம் பெற்றார். அந்த நாட்களுள் ஒரு நாள் திருச்செந்தூர் வசந்த மண்டபத்திலே திரிசுதந்தர முனிவர்களாகிய முக்காணியப் பிராமணர்களும் பரிசு பெற்ற புலவர்களும் அணி அணியாக அமர்ந்திருந்தனர். அங்கு அரசர் கோமானாகிய பாஸ்கர சேதுபதி அவர்கள் அச்சபையில் வீற்றிருந்து அணி செய்தார்கள்.

அச்சபையிலே உயர்திரு சபாபதி நாவலர் பெருமான் யாரும் எதிர்த்து வாதம் செய்ய இயலாதவை யான செய்திகளை சொற்பெருக்காற்றி வந்தார். அவர் பேச்சு அச்செய்திகளைச் நன்கு கற்ருேருங்கூட மறுத்துப்பேச இயலாதனவாக இருந்தது. அவர் 1. வேதம் பவுரேஷய மென்றும், 2. வேதத்தினும் ஆகமம் உயர்ந்ததென்றும், 3. வைதிகரினும் ஆகமிகர் உயர்ந்தவரென்றும், 4. யாகம் பசு புண்ணியம் என்றும், 5. சிவாலய பூசைகளில் வேதமந்திரம் தலை நீட்டவே இடமில்லை என்றும், 6. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்குச் சைவ ஆகம தீட்சை உண்டென்றும் விரித்துறைத்தார். கடல் மடை திறந்து விட்டது போன்ற அப்பிரசங்கத்தைக் கேட்ட எல்லாப் பண்டிதர்களும் வியப்புற்று அமைதியாயினர்.

அப்பிரசங்கத்தில் ஆழ்ந்திருந்த அரசரவர்கள் பெரும் பெரும் புலவர்கலெல்லாம் வாயடைத்துப் பதில் கூற இயலாமல் இருப்பதை உணர்ந்து, மகா வைத்தியநாத சிவனை நோக்கி நாவலர் செய்த உரையில் ஏதேனும் கண்டனம் உண்டேல் தெரிவிக்கலாம் என்று கூறினர்கள். சேதுபதிமன்னர் அவ்வாறு கேட்டுக் கொள்ளவே, மகாவைத்தியநாத சிவன் நாவலர் கூறிய ஒவ்வொன்றையும் மறுத்து தம் கருத்துக்களை விளக்கினுர். அதனை யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அமைந்தது. அவர் மறுப்பு நாவலர் அவர்கள் எடுத்தோதிய அறுவகைக் கட்சிகளையும் எழுவகையின்றிப் பலவகைப் பிரமாணங்களைக் காட்டிக் கண்டனம் செய்தார். அவர் செய்த ஞாயமான கண்டனத்தை

அரசர் முதல் அங்கே குழுமியிருந்த மகாபண்டிதமணி களெல்லாம் கேட்டு அதன் உண்மையறிந்து பேறுவகை யுற்றனர். மகாவைத்தியநாத சிவனின் உள்ளத்திலிருந்துஎழும்பி வரப்பெற்ற தூயதான கருத்து வெள்ளத்தைத் திரிசுந்தர முனிவர் முதலிய அந்தணர்கள் யாவரும் போற்றி மகிழ்ந்தனர். மகாவைத்தியநாத சிவன் இசை மட்டுமின்றித் தமிழறிவு வடமொழியறிவு வேதாகமங்களிலுள்ள நுட்பமான அறிவு ஆகிய அவற்றுள் சிறந்திருத்தலைக் கண்ட அரசர்களும் பண்டிதர்களும் புலவர்களும் வியப்புமெய்க்கூர்ந்தனர். இது விஜயசங்கிரகத்தில் இராமசாமி சிவனாலும் கூறப்பெற்றுள்ளது.

● பாலக்காடு அனந்தராம பாகவதர் சிறந்த இசைப் புலவர். நன்ருகப் பாடும் ஆற்றல் படைத்தவர். அவருடைய குரல் வண்டு ரீங்காரம் செய்வதுபோல இருக்கும். அக்குரலொலியை யாவரும் விரும்பிக் கேட்பார்கள். அவர் எது பாடினாலும் அதனையே மக்கள் கேட்டுச் சுவைப்பர். அவரை அது பாட வேண்டும் இது பாட வேண்டும் என்று மக்கள் கேட்க மாட்டார்கள். அவர் கோயம்புத்தூர் இராகவ ஐயருடைய தலைமைச் சீடர். அனந்தராம பாகவதரிடம் இசை கற்ருேர் பலருண்டு. அவர் ஒரு சமயம் மகாவைத்தியநாத சிவனின் பாட்டைக் கேட்கவேண்டுமென்று விருப்பமுற்றவராக இருந்தார். அந்த அவாவை நிறைவேற்றிக் கொள்ளக் கருதி அவர் வையைச்சேரி என்ற கிராமத்திற்கு வந்தார். அப்போது அவருக்குப் பதினெட்டு வயதுக்குள்ளேயே இருக்கும். இளம் வயதினரும் அழகு மிக்கவருமான அவர் மகாவைத்தியநாத சிவனின் வீடடைந்து திண்ணையில் உட்கார்ந்தார்.

இராமசாமி சிவன் வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தார். திண்ணையில் உட்கார்ந்திருப்பவரைக் கண்டார். யார்! எந்த ஊர்! வந்த செய்தி என்ன! என்று விசாரித்தார். அனந்தராம பாகவதர் தம் பெயர் ஊர் முதலியவைகளைக் கூறி விட்டுக் கோயம் புத்தூர் இராகவ ஐயரவர்களிடம் இசை பயின்றுள்ளேன். தங்கள் இசை மேன்மையைப் புகழ்ந்து என் குருநாதர் அடிக்கடி கூறுவார்கள். அவர்கள் கூறுந் தோறும் தங்களுடைய இசையைக் கேட்கும் பேற்றை நான் பெறுவேனு! என்று ஏங்குவேன். எனவே அந்த ஆசையினுலே கோயம்புத்தூரிலிருந்து புறப்பட்டு வந்திருக்கிறேன். "தங்களுடையவும் தங்கள் தம்பியாருடையவும் அதி அற்புதமான இசையைக் கேட்க அருள் செய்தல் வேண்டும். இச் சிறுவனின் வேட்கையை அருள் கூர்ந்து பூர்த்திசெய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொண்டார்.

அனந்தராம பாகவதராகிய அவ்விளைஞர் கூறிய சொற்களைக் கேட்ட இராமசாமி சிவன் அவரை உள்ளே அழைத்துச் சென்ருர். அவர் குளி, சபம், உணவு முதலியவைகளை மகாவைத்தியநாத சிவனின் வீட்டிலேயே செய்து கொண்டார். அன்று மாலையில் மகாவைத்தியநாத சிவன் வழக்கம் போல தம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து மாலை நான்கு மணியளவில் ஒரு சிவ கதையைச் செய்தார். வழக்கமாக இராமசாமி சிவனே தம்புராவை மீட்டிப் போடுவார். அன்று அவ்வாறு செய்யாமல் அனந்தராம பாகவதரைத் தம்புராவை மீட்டி வரும்படி செய்தார்.

அவர் தம்புராவை மீட்டி வரும் தன்மையிலிருந்து அவருடைய இசை அறிவின் செம்மையை மகாவைத்தியநாதசிவனும் இராமசாமி சிவனும் நன்ருக ஊகித்து அறிந்து கொண்டார்கள்.

சிவகதைமுடிந்ததும் அனந்தராம பாகவதர் எழுந்து இராமசாமி சிவனையும் மகாவைத்தியநாத சிவனையும் தண்டனிட்டு வணங்ஞர். பின்பு எழுந்து நான் கோயம்புத்தூர் இராகவ ஐயரவர்களின் முதலாவது மாணவனுனுலும் தங்களிடம் சிறிது காலமிருந்து இசை பயில ஆசையுடையவனுக இருக்கிறேன். ஏதாவது காரணஞ் சொல்லி என்னை ஒதுக்கி விடாமல் தங்களுடைய மாணவனுக என்னை ஏற்றுக்கொண்டு ஆதரவு தரல் வேண்டுமென்று அடக்கமாகக் கேட்டுக் கொண்டார். அவர் விருப்பப்படி அனந்தராம பாகவதரைத் தம் இசை மாணவனுக ஏற்றுக் கொண்டார்கள். அவர் புதிதாக இசை கற்றுக் கொள்ளாவிடினும் நாடோறும் மகாவைத்தியநாத சிவன் செய்து வரும் சிவகதையையும் அக்கதைக்குரிய பாடல்களை இசைப்பதையும் கேட்டுச் சுவைத்து வந்தார். கதை செய்யும் வகை, வசனங்களைக் கூறும் வகை, உபமான உபமேயங்களை விளக்கும் வகை, பாடும் போது அனுசரிக்கும் முறை ஆகிய இவைகள் அனந்தராமபாகவதரின் மனத்தைக் கவர்ந்தன. இசையிலுள்ள நயங்களை அவ்வப்போது அறிந்து அதைத் தாமும் கைவரப்பெற்ருர்.

மகாவைத்தியநாத சிவனுக்கு அனந்தராம பாகவதரிடமும் அவருடைய பாட்டிலேயும் ஒரு பிரியமிருந்

தது. பல இசைப்புலவர்களின் குரல் வளத்தைவிட மகாவைத்தியநாத சிவனின் குரல்வளம், இசை ஞானம், இசைத்திறம் ஆகியவை மேலான தன்மை யோடு சிறந்து விளங்கி இருப்பினும் அவர் அனந்தராம பாகவதருடைய வண்டு ரீங்காரம் செய்வதுபோலுள்ள குரல் வளத்தில் சிறிது கட்டுண்டு மகிழ்வார். அனந்த ராமபாகவதர் ஓராண்டிற்கும் மேலேயே மகாவைத்திய நாத சிவன் வீட்டில் அவருடைய சீடராக இருந்து தொண்டு செய்து வந்தார். மகாவைத்தியநாத சிவன் சிவபூசை செய்யுங்காலத்து அனந்தராமபாகவதரை இசைக்கச் சொல்லி மகிழ்வார். ஒவ்வொரு நாளும் சிவபூசை முடியு மட்டும் அவர் தம் வண்டினுடைய ரீங்காரத்தொனிவளத்துடன் தம்புராச் சுருதியோடு ஒன்றிக் கீர்த்தனம், இராகம், தானம் ஆகியவற்றைப் பாடுவார். நல்ல ஜீவ் பிடித்த தம்புராவின் ஒலிக்கும் அனந்தராமபாகவதரின் குரல் ஒலிக்கும் பேதம் தெரி யாது. அத்துணை ஒன்றிக் கேட்கும். யாவரும் கேட் டுக் களிப்பார்கள்.

பின்பு இராமசாமி சிவனிடமும் மகாவைத்திய நாத சிவனிடமும் ஆசி பெற்றுக்கொண்டு அவர்களு டைய அருளுக்குரியராகி கோயம்புத்தூர் வந்து சேர்ந் தார். அனந்தராம பாகவதர் சிறந்த இசைப்புலவராக இருந்ததோடு ஹரிகதை செய்வதிலும் சிறந்து விளங்கி ஞர். மகாவைத்தியதாத சிவன் செய்யும் சிவகதை யைக் கேட்டுக்கேட்டுக் கதை செய்வதற்குரிய நல்ல தகுதியையும் அதன் பலவழி துறைகளேயும் செவ்வனே அடைந்தார்: கதை செய்வதில் அவருக்கு நல்ல புகழுண்டு. எனவே அனந்தராம பாகவதரும் மகா

வைத்தியநாத சிவனின் பல மாணவர்களுள் ஒருவ ராவார்.

● விஞ்ஞானமேதை C. V. இராமனை அறியாதா ரில்லை. அவரது திறத்தை நன்கறிந்த மேல் நாட்டார் அவருக்கு நோபிள் பரிசு அளித்து சிறப்புச் செய்தார் கள். அவருடைய வழித்தோன்றலில் ஒருவர் பங்களூ ரில் வசித்து வந்தார். அவர் நல்ல செல்வர். அரசிய லில் பெரிய உத்யோகப்பதவியும் வகித்து வந்தார். அவர் இசையில் நல்ல ஈடுபாடுடையவர். அவர் வீட் டிலே ஒரு சிறு திருமணவிழா நடந்தது. அந்த விழா விலே அவருடைய உற்றார் உறவினர் ஏனைய முக்கிய நண்பர்கள் ஆகிய பலரும் கலந்து கொண்டார்கள். அது மங்களகரமான விழாவாகையால் அதில் ஓர் இசைக் கச்சேரி நடத்த வேண்டுமென்று எண்ணினர். அக்கச்சேரியின் மூலம் விழாவிற்கு வந்திருந்த அன்பர்களையெல்லாம் களிப்பித்தல் வேண்டுமென்றும் எண்ணினர்.

அவருக்குப் பழமாநேரி சாமிநாத ஐயர் என்பவர் நண்பராக இருந்தார். அவருடைய இசையில் அச் செல்வர் ஈடுபட்டிருந்தார். எனவே அவ்விழாவிலே பழமாநேரி சுவாமிநாத ஐயரைக் கச்சேரி செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தார். மகாவைத்தியநாத சிவனுக்கு மாணவர் பலருண்டு. அவர்களில் பழமாநேரி சுவாமி நாத ஐயரும் ஒருவர். அவர் நல்ல வியாபகம் இல்லாதவராயினும் இசைத்திறனை நன்கறிந்தவர். அவருக்குப் பிடில் கருவியிலும் தேர்ச்சியுண்டு. அவர் தனித்துப்பாடும்போது தாமே பிடிலை வாசித்துக்

கொண்டு பாடுவார். அவருடைய பாட்டிற்கு மிருதங் கம் மட்டும் வைத்துக்கொள்வார். தாம் பாடும்போது சில சமயம் பிடிலையும் பாட்டுடன் சேர்ந்து ஒலிப்பது போல வாசிப்பார். அவருக்குச் சாரீரம் சிறிது போதாது. ஆகையால் குரலில் நன்ருகப் பேசாத இடங்களிலே பிடிலில் அதை வாசித்து நிரப்புவார். பாட்டும் பிடிலும் மாறிமாறி ஒலித்துவருவதுபோலச் செய்வார். சுரங்கள் பாடும்போது முதலில் தாம் பாடிக் கொள்வார். பிறகு வேறு கற்பனைத்திறத்துடன் பிடிலில் வாசிப்பார். இவ்வாறு அவர் செய்வதனுல் வேருெரு வர் பக்கவாத்தியமாக கூட இருந்து பிடிலை வாசித்து வருவது போன்ற ஒலித்தோற்றம் ஏற்படும்.

பழமானேரி சாமிநாத ஐயர் தம் வீட்டில் கச்சேரி செய்தலை முன்னிட்டுப் பங்களூருக்குப் புறப்பட்டுச்சென் ருர். அவ்விழாவிற்குத் தக்க செல்வர்களும் தக்க பதவியிலிருந்தோரும் வந்திருந்தனர். அன்று அச் செல்வர் தம் வீட்டிலே விருந்திற்கு ஏற்பாடு செய்திருந் தார். அன்று உச்சி வேளை (மத்தியானம்) சாப்பாட் டிற்கு நல்ல ஏற்பாடுகள் செய்திருந்தார். பழவகை கள், தித்திப்புப் பண்டங்கள், பாயாசவகைகள், சித்தி ரான்ன வகைகள். காய்கறிகளான பலவகைக் கூட்டு கறி வகைகள் ஆகிய இவைகள் சுவைபட செய்யப்பட் டிருந்தன. இவ்வளவு நளபாகமான சாப்பாட்டு வகைகள் அதுகாறும் எங்கும் செய்யப்பட்டதில்லை என்ற அளவிற்கு அத்துணை உயர்தரமாக அமைந்திருந் தன.

அன்று உச்சி வேளையில் யாவரும் உணவருந்த இலைபோட்டுப் பரிமாறப்பட்டது. யாவரும் வரிசையாக இலையின் முன் அமர்ந்தனர். இசை வித்துவானுகிய பழமானேரி சுவாமிநாத ஐயரை அச்செல்வர் அழைத்து வந்தார். முக்கியமாக உட்கார்ந்து கொண்டிருப்பவர்களின் வரிசையிலே அமரச்செய்து உணவு கொள்ளுமாறு செய்தனர். அவ்வாறே சுவாமிநாத ஐயரும் இலையின் முன் உட்கார்ந்தார். இலையில் யாவும் பரிமாறப்பட்டு அன்னமும் பரிமாறி அன்ன சுத்தியாகிய நெய்யையும் பெய்தார்கள். எல்லோரையும் போல் சாமிநாத ஐயரும் கையில் நீரேந்தி அன்னத்திலே தெளித்துப் பிறகு மந்திரங்கள் சொல்லி நீரினல் அன்னத்தை நீர் சுற்றி ஆபோசனம் வாங்கிக்கொண்டார். பின்பு பிராணுய சுவாஹ, அபாநாய சுவாஹ, வியாநாய சுவாஹ, உதானுய சுவாஹ, சமானுய சுவாஹ, பிரஹ்மணே சுவாஹ என்று ஆத்மாவுக்கு மந்திரம் கூறி அன்னத்தை ஆறு முறை சிறுகச் சிறுக எடுத்து விழுங்கினுர். அது முடிந்ததும் இலையில் பரிமாறப்பட்ட ஒவ்வொரு கறிவகையையும் சுவை பார்த்தார்.

பிறகு முறைப்படி பருப்பு அன்னம், சாம்பார் அன்னம், மோர்க்குழம்பு அன்னம், இரச அன்னம் இவைகளை உட்கொண்டார். பின்பு பாயாஸத்தில் சிற்சில வகைகள் செய்யப்பட்டிருந்தன. அவை இலையில் பரிமாறப் பட்டன. யாவரும் சாப்பாட்டைப் போற்றிச் சுவைத்து உண்டு வந்தனர். பழமானேரி சாமிநாத ஐயரும் அதுபோலப் பாயாஸம், பழவர்க்கம், பலகார வகை இவைகளைச் சிறிது சிறிதாக எடுத்து சுவை

யறிந்து உண்டு வரும்போது அவருடைய கண்களிலிருந்து நீர்ப்பெருக்கெடுத்தது. அவர் கண்ணீரை அடிக்கடித் துடைத்துக் கொண்டும் சிறிது உண்பதுமாக இருந்தார். அவரால் ஏனையோர் போல உணவை உட்கொள்ள இயலவில்லை. பக்கத்திலுள்ளவர்களும் எதிரே உள்ளவர்களும் அவருடைய நிலையைக்கண்டு திகைத்தனர். அவ்வாறு அவருடைய கண்களிலிருந்து நீர் வருவதற்குரிய காரணம் எவருக்கும் விளங்கவில்லை. அங்குள்ள யாவரும் அவரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

பழமானேரி சுவாமிநாத ஐயரின் நிலையை விழாத் தலைவராகிய அச்செல்வர் அறிந்தார். உடனே அவர் பால் வந்து "தாங்கள் இவ்வாறு இருப்பதற்குக் காரணமென்ன! தங்கள் உடம்பு சரியில்லையோ! தங்களுக்கு என்ன வேண்டும், தங்கள் நிலையைச் சொன்னால் அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்று கவலையுடையவராகக் கேட்டார். சுவாமிநாத ஐயர் சற்றுத் தம்மைச் சரிசெய்துகொண்டு, எனது உடலுக்கு ஒன்றுமில்லை. இந்த விருந்தில் உள்ள ஒவ்வொரு வகையும் அதிக சுவையுள்ளதாக இருக்கின்றது. ஒன்றை விட ஒன்று சுவையில் சிறப்புற்று விளங்குகின்றன. சாப்பிடுதற்கு வயிற்றில் இடமில்லையாயினும் இவற்றின் சுவையானது மேலும் மேலும் உண்ண வேண்டும் என்ற ஆசையை உண்டுபண்ணுகிறது.

எனவே எனது குருநாதராகிய "மகாவைத்தியநாத சிவன் இத்துணை சுவையுள்ள உணவுப் பொருள்களை உண்டவரேயில்லை. அவருடைய ஆயுட்காலத்

தில் ஒரு நாளேனும் இவ்வாறுன உணவை உண்டு சுவைத்தவரே இல்லை. அவர் இத்துணை சிறந்த உணவை உண்டவரில்லையே என்று எண்ணும்போது என்னுடைய நினைவுகளை என்னுல் அடக்கிக்கொள்ள இயலவில்லையே'' என்று தளர்ந்து கூறினுர். அவர் இவ்வாறு கூறியதின் பின்புதான் அங்குள்ள யாவருக்கும் அவருடைய நிலை தெரிந்தது. அவருடைய குருபக்தியை நினைந்து யாவரும் வியந்தனர். மகாவைத்திய நாத சிவன் காலமாகிப் பல ஆண்டுகள் சென்ருலும் அவரிடம் சுவாமிநாத ஐயர் கொண்டிருந்த பக்தியும் குருவின் எண்ணமும் எப்பொழுதும் அவர் மனத்துள் குடி கொண்டிருப்பதையும் கண்டு யாவரும் உருகினர். பின்பு அன்றிரவு அவ்விழாவிலே அவர் கச்சேரி செய்து சிறப்பித்தார்.

● தஞ்சை இரண்டாவது சிவாஜி அரசரின் மாப்பிள்ளை சகாராம் சாகேப் அவர்கள் மகாவைத்தியநாத சிவனைப் பலகாலும் ஆதரித்தவர். அவர் தம் அவையிலே மகாவைத்தியநாத சிவனை அடிக்கடி வரவழைத்து அவருடைய இசையைக் கேட்டு மகிழ்வதுண்டு. அவ்வரண்மனையிலே எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களையும் புலப்படுத்திய பழமையான செய்யுள் ஒன்றிருந்தது. அதற்கு இசையமைப்புக்கள் (வர்ண மெட்டுக்கள்) அமைத்து அதனைப்பாடிப் பரப்புதல் வேண்டுமென்று பல இசைப்புலவர்கள் மூலமாக முயற்சித்தார். அவ்வாறு முயற்சித்ததில் பட்டினம் சுப்பிரமணிய ஐயரும் நாமக்கல் நரசிம்ம ஐயங்காரும் உட்பட்டவர்களென்பர். யாராலும் இயலவில்லை என்

பதையறிந்த சகாராம் சாகேப் அவர்கள் மகாவைத் தியநாத சிவனைக் கேட்டுக் கொண்டார். அவருடைய விருப்பத்தை அறிந்து ஏற்றுக் கொண்ட மகாவைத்தியநாதசிவன் அந்தப் பழைய செய்யுளுக்கு எழுபத்திரண்டு மேளகர்த்தாவிலும் இசையமைப்பைச் செய்தார். அவ்வெழுபத்திரண்டு மேளகர்த்தா இராக மாலிகையை ஒருவாரத்துக்குள் மெட்டமைத்தார். அதனைச் சகாராம் சாகேப் அவையில், சமத்தான வித்துவான் வீணை ஆதிமூர்த்தி ஐயர் தலைமையில் பாடி அரங்கேற்றினர். அவ்வரங்கேற்றம் நடக்கும்போது இசை மேதைகள் மிகப்பலர் அங்கு வீற்றிருந்தனர்.

மகாவைத்தியநாத சிவனின் குரல் வளத்தில் அந்த எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்களும் தங்க நகையில் மெருகேற்றியது போலப் பளப்பளத்தன. முதல் மேளகர்த்தாவாகிய "கனகாங்கி" என்று தொடங்கி "ரஸிகப்ரியா" இராகம் வரை தொடர்ந்து இராக மாலிகையாகப் பாடினர். ஒவ்வொரு இராகத்திற்கும் சிட்டை சுரம் அப்பொழுது பாடப்படவில்லை. இந்த எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகத்தையும் சங்கிலித் தொடர் போல இடைவிடாமல் அதி அற்புதமாகப் பாடப் பட்டதைக் கேட்ட சகாராம் சாகேப் அவர்களும் ஏனைய இசைப் புலவர்களும் மட்டில்லாத மகிழ்ச்சியை அடைந்தனர். சுவை குன்றுமல் யாவரும் வியந்து பேற்றும்படிப் பாடிய அவருக்கு இரண்டாயிரத்து ஐந்நூற்றென்று (2501) ரூபாய்களைச் சகாராம் சகேப் அவர்கள் அன்புக் கொடையாக நல்கி மரியாதை செய்தனர். அத்துணை பெருந் தொகையை

அவரின் திறம் அறிந்து அளித்துப் போற்றியது நினைவு கூரத்தக்கது.

தஞ்சை அரண்மனையிலிருந்த பழைமையான அச்செய்யுளை எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகத்திலே பாடிச் சகாராம் சகேப் அவையிலே அரங்கேற்றம் செய்த பின்பு மகாவைத்தியநாத சிவனின் மனம் சிறிது வருத்தமுற்றது. ஏனெனின் அச்செய்யுள் 'நரஸ்துதி'யாக இருந்ததுதான் காரணம். பாடுங் காலத்துச் சூழ்நிலையில் இதைப் பாடும் அவசியம் ஏற்பட்டுவிட்டது. அதனைப்பாட மறுத்தற்கு இயலாத ஒரு கட்டம். எனவே அவர்கள் உடனே திருவையாறு வந்து அங்கு கோயில் கொண்டெழுந்தருளியுள்ள "பிரணதார்த்திஹரர்" சுவாமியைக் குறித்து எழுபத்திரண்டு மேளகர்த்தாவையும் பாடி சுவாமி சந்நிதானத்திலே அரங்கேற்றம் செய்தார். இந்த எழுபத்திரண்டு மேளகர்த்தாவை ஆரம்பம் செய்யும் போது முதலில் "பிரணதார்த்திஹர" என்று ஸ்ரீராகம் ஆதிதாளத்திலே சொற்கட்டுடன் ஆரம்பம் செய்து முறையே ஆறு ஆறு இராகமாகப் பாடப்பட்டது.

எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்கள் பன்னிரண்டு சக்கரமாகப் பிரிக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு சக்கரமும் ஆறு இராகங்களைக் கொண்டவை. எனவே ஒரு சக்கரத்திலுள்ள ஆறு இராகத்தையும் பாடிவிட்டுப் பின்பு முதலாவதாக உள்ள "பிரணதார்த்திஹர" என்ற ஸ்ரீ ராகத்தைப் பாடிமுடித்தல் வேண்டும். இந்த எழுபத்திரண்டு இராகங்களுக்கும் இராமசாமி சிவனால் சிட்டை சுரம் அமைக்கப்பெற்றுள்ளது. முதல் மேள

இராகத்தைப் பாடியதும் இரண்டாவது இராகத்தின் சுர அமைப்பைக் கூறி அதைத் தொடர்ந்து இரண்டாவது இராகமும் அதுபோலவே எல்லா இராகத்தின் தொடர்ச்சியும் தொடர்ந்து வருவதுபோல அச்சிட்டைச் சுரங்கள் அமைந்துள்ளன. இந்த எழுபத்திரண்டு மேள இராகமாலிகை மகாவைத்தியநாத சிவனுடைய இரண்டாவது குமாரரான விசுவநாத ஐயரால் முதன் முதல் அச்சிடப்பெற்றது. அந்நூல் தெலுங்கு லிபியில் உள்ளது. அதில் ஆனைஐயா கீர்த்தனையும் இராமசாமி சிவன் கீர்த்தனைகளையும் சுரமின்றிச் சாகித்தியம் மட்டும் உள்ளதாகவும் வெளியிட்டுள்ளார். அக்காலம் அந்நூல் வாங்குவோர் இல்லாது மிஞ்சி இருந்த படியால் மகாவைத்தியநாத சிவனின் கடைசி மாணவராகிய திருவையாறு T.S. சபேச ஐயர் சிறிது பொருள் உதவி செய்து அந்நூலின் அச்சுப்பிரதிகள் முழுவதையும் தாம் வாங்கிக் கொண்டார். அவர் பணம் கொடுத்துப் பெற்றுக் கொண்டமையால் அது அவருக்கு உரிமையாயிற்று. எனவே அந்நூலின் முதல் பக்கத்திலே தம் பெயரை அமைத்துக் கொண்டார் அந்நூல் T. S. சபேசய்யர் வெளியிட்டதாகவே எல்லோரும் கருத இடமுண்டாயிற்று. அதுவே மகாவைத்தியநாத சிவனுல் பாடப்பெற்ற வழக்கிலுள்ள எழுபத்திரண்டு மேள இராகமாலிகைகளாகும்.

● மகாவைத்தியநாத சிவன் வேங்கடகிரி சமத்தானத்திற்குப் பதினேரு முறை சென்றிருக்கிருர். வேகடகிரி அரசரை 'வீணை அரசர்' என்று கூறுவார்கள். யாழ் வாசிப்பதிலும் இசை இலக்கணத்திலும் சிறந்த

வர். அவர் சங்கீத சம்பந்தமானவற்றைப் பேசிப் பார்த்தே புலவரின் தராதரங்களை அறியும் ஆற்றல் பெற்றவர். வடமொழியில் நல்ல புலமையும் பற்றும் உண்டு. அவ்வீணை அரசர் மகாவைத்தியநாத சிவனிடம் "தாங்கள் என் சமத்தானத்திற்கு என்னுடைய அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருத்தல் வேண்டாம். எப்பொழுது வேண்டுமானாலும் எதிர்பாராதும் கூடத் தாங்கள் வருகை தரலாம். சென்னைக்கு எச்சமயங்களிலெல்லாம் வருகிறீர்களோ அச்சமயங்களை யெல்லாம் என் சமத்தானத்திற்கு வரப் பயன் படுத்துதல் வேண்டும். தாங்கள் வருந்தருணத்தில் தற்செயலாக நான் இங்குஇல்லாமற் போய்விடின் அதற்காக யோசித்தல் வேண்டாம். தங்களுக்குரிய மரியாதைகள், வரவேற்புகள், பணிவிடைகள் முதலியயாவும் தங்களைத் தேடி வந்து செம்மையாகத் தானே நடக்கும். நான் கூறுதலைத் தங்கள் உடன் பிறந்தவர் கூறுதலைப்போல எண்ணி மனமுவந்து ஏற்று அவ்வாறே செய்து என்னை மகிழ்வித்தல் வேண்டும்" என்று அன்புடன் கூறினர். மகாவைத்தியநாதசிவன் 'வீணை அரசர்" அழைப்பின் பேரிலும், அழைப்பில்லாமலும் பலமுறை சென்றிருக்கிறார்கள். அரசர் கூறியதிலிருந்து சென்னை செல்லும் போதெல்லாம் வேங்கடகிரிக்கும் சென்று வருவார். சிறப்பான மரியாதை நடக்கும்.

● வேங்கடகிரி வீணையரசர் வடநூல் இசை இலக்கணங்களை நன்ருக அறிந்தவர். ஒரு சமயம் மகாவைத்தியநாத சிவன் அவ்வீணை அரசரின் அவையில் இசை நிகழ்ச்சி செய்ய ஏற்பாடாகி இருந்தது.

கச்சேரிக்கு அமருதற்கு முன்பு அரசரோடு சிறிது நேரம் அளவளாவிக் கொண்டிருந்தார். அப்போது வீணையரசர் மகாவைத்தியநாத சிவனிடம் இன்று கச்சேரியிலே 33 அட்சர கால அளவிலே ஒரு பல்லவி பாடல் வேண்டும். அப்பல்லவியின் தாளமானது அங்க அடையாளமாகப் போடுதல் கூடாது. இன்னும் அத்தாளத்தின் மாத்திரைகள் கோபுச்ச யதியில் அமைந்திருத்தல் வேண்டும். எனவே 33 அட்சரமும் தாளாங்கமின்றி மாத்திராக் காலத்திலேயே இட்டுப் பாடுதல் வேண்டும். அவ்வாருன அதனைக் கேட்க விருப்பம் உள்ளவனுக இருக்கிறேனென்ருர்.

மகாவைத்தியநாத சிவன் கச்சேரி செய்யும் முறைப்படிப் பாடிவிட்டு ஆரபி இராகத்தை வித்தாரம் செய்து பாடித் தானத்தை உள்ளம் சிலிர்க்கப் பாடி முடித்துப் பின்பு எட்டுமாத்திரை, ஏழுமாத்திரை, ஆறு மாத்திரை, ஐந்து மாத்திரை, நான்கு மாத்திரை, மூன்று மாத்திரை என்று தாள மாத்திரை முப்பத்து மூன்றையும் [1]கோபுச்சயதியாக்கி அத்தாளத்தில் ஒரு யல்லவியைப் பாடினுர். அது வருமாறு :-

> ''சம்போ ஸபாபதே பாஹிமாம்
> ஸாம்பசிவ குஞ்சிதபத மாம்பாஹி''

இராகம்: ஆரபி. தாளம்: கோபுச்சயதி.
33 மாத்திரைக்காலம்

---

1 கோபுச்சம்-பசுவின் வால். அது அடிபெருத்து நுனி சிறுத்து வரும்.

தகதரிகிட தக (8); தகிட தரிகிட (7); தகதரிகிட (6);
தகதகிட (5); தரிகிட (4); தகிட (3).

தா ; பா ;—ப ம ப தா பா — த ப ம க ரி ச
ச ம்போ. ஸ . . பா . ப .தே. . .

ரி ப ம க ரி — ரி ம ப ம — பா , ||
பா . . . . ஹி . . . மா ம்

ம க ரீ ப ம ப பா—த ப ம பா தா—ச் நி த ரி ச்ா—
ஸா . ம் பு . . சி . . . வ . கு ஞ் சி . த

த ப ம க ரி — சா த ச — ரி ம ப ||
ப . த . . மா . ம் பா . ஹி

இவ்வாறு பாடி நன்ருக நிரவல் செய்து சுரத்தைக் கற்பனை தோன்ற வித்தரித்து, வீணை அரசரையும் அங்குள்ள அரச குடும்பத்தாரனைவரையும் ஏனைய அவையோர்களையும் மெய்மறக்கச் செய்தார். இவ்வாறு தாளத்தை முறைப்படுத்திப் போடுவதும் பாடுவதும் இயலாததொன்று என்று வீணை அரசர் அறிந்தவரன்ருே! வெங்கடகிரி சமத்தானத்திலே உயர்ந்த சன்மானம் நூற்றுஎட்டு ரூபாயாகும். அரசர் அவருக்கு ஐந்து மடங்கு சன்மானமாக 540 ரூபாயும், ஏனைய அரச மரியாதைகளும் செய்து பெருமைப்படுத்தினர். இத்தாளத்தை இக்காலத்தோர் போட்டுப் பார்ப்பரேல் அதன் அருமைப்பாடு தெரியும்.

● மகாவைத்தியநாத சிவன் சென்னையில் தாம் தங்கியிருந்த வீட்டில் பல்லவி சேஷய்யர் போன்ற

பல இசை வித்துவான்களின் எண்ணத்தைப் பூர்த்தி செய்தலை முன்னிட்டு சிம்மனந்தனத் தாளத்தில் ஒரு பல்லவியைப் பாடினுர். அவ்வாறு பாடி விட்டுத் தம தூருக்கு வந்து சேர்ந்தார். வந்த சில நாட்களிலே அவருடைய உடல் நலம் குன்றிப் படுத்த படுக்கையாகிவிட்டார். அவருடைய நண்பர்களும் உறவினர்களும் இவ்வியாதி ஏவல் சூனியம் ஆகியவற்ருல் ஏற்பட்டுவிட்டது என்றும் அதன் தொந்தரவால் அவர் அவதியுறுகிருர் என்றும் எண்ணினர். இவ்வெண்ணம் தலைதூக்கவும், மகாவைத்தியநாத சிவன் காலத்து அவருக்குச் சமமாக உள்ள பல இசைப் புலவர்களிடமெல்லாம் சந்தேகம் உண்டாக இட மேற்பட்டது.

அக்காலத்தில் ஏவல் சூனியம் மாந்திரிகம் என்ற பெயரால் அடிக்கடி ஒருவரையொருவர் சந்தேகித்தல் சர்வசாதாரணமாக நடைபெறும் ஒரு செயல். இச் சந்தேகம் மகாவைத்தியநாத சிவனுடைய உறவினர்களுக்கு ஏற்படவும், அவர்கள் கணபதி அக்கிரகாரத்திலே வாழ்ந்துவந்தவரும், மந்திர தந்திர சாத்திரங்களிலே வல்லுநரும், எல்லாச்சித்திகளையும் கைவரப் பெற்றவரும் ஆகிய பிரம்மச்சாரி சாஸ்திரி என்ற பெயருடைய சாஸ்திரியார் ஒருவரிடம் சென்று 'ரட்சாபந்தனம்' செய்து கொண்டார். இரட்சாபந்தனம் செய்து கொண்ட சிலகாலம் சென்று வியாதி சிறுகச் சிறுகக் குணங்கண்டது. வியாதி பூரணமாகக் குணங்கண்டதும் பின்பு உடல் தேறி நலமுற்ருர். அதன்பிறகு முன் போலப் பல இசை நிகழ்ச்சிகளுக்கும் சென்று வந்தார்.

● மகாவைத்தியநாத சிவன் நடராஜ மூர்த்தியிடம் அளவு கடந்த பக்திப் பெருக்கும் ஈடுபாடும் உடைய வர். அவர் தமது பிறந்த ஊராகிய வையைச் சேரி யில் நடராஜா கோயில் கட்டி அதில் நடராஜமூர்த்தி விக்கிரகத்தையும், சிவகாம சுந்தரி அம்பாள் விக் கிரகத்தையும் பிரதிட்டை செய்தல் வேண்டும் என்று பல ஆண்டுகளாக எண்ணி வந்தார். அவருடைய உள்ளக் கிடக்கையைத் திருவாவடுதுறை ஆதீனகர்த் தராகிய மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் அவர் கூறுமலே ஒருவாறு ஊகித்து அறிந்திருந்தார்கள். அவ்விருப்பத்தை விரைவாக நிறை வேற்றித் தரல் வேண்டுமென்றும் எண்ணி இருந்தார்கள். தமது எண்ணம் பூர்த்தியாதல் வேண்டுமென்ற கவலை மகா வைத்தியநாத சிவனுக்கும் இருந்தது. எனவே அவ் விருவரும் அதற்குரிய காலத்தை நோக்கி இருந்தனர்.

● திருவாவடுதுறை ஆதீன கர்த்தாவாகிய மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் திருவாவடுதுறையில் லட்சத்தோப்பு அதாவது ஒரு லட்சம் தென்னங்கன் றுகளையும் மற்றும் வேறு, பலன் தரத்தக்கதான பல மரங்களையும் பயிர் செய்து நல்லதொரு தோப்பை உண்டாக்குதல் வேண்டு மென்றெண்ணினர்கள். அதற்காக அங்குள்ள ஒரு நாணல் காட்டை அழித்து வெட்டித் திருத்தினர்கள். அவ்வாறு செய்து வரும் போது அதில் செம்பு, பித்தளை, வெண்கலம் முதலிய ஐந்து லோகம் கலந்ததாகிய பெரிதும் சிறிதுமாகிய பற்பல விக்கிரகங்கள் கிடைத்தன. அவற்றுள் ஒரு விக்கிரகம் பஞ்ச லோகத்தாலான நடராஜ விக்கிரக மாக இருந்தது.

ஆதீனகர்த்தா அவர்கள் ஒரு தபதியை வரவழைத்து அந்த விக்கிரகம் நல்ல அமைதியில் சிற்ப இலக்கணக் குறைவின்றி, பின்னம் ஏதுமில்லாமல் குற்றமற்றதாக இருக்கின்றதா என்று பார்க்கச் செய்தார்கள். தபதி அவ்விக்கிரகத்தை நன்ருக ஆராய்ந்து அதில் எவ்விதக் குற்றமுமில்லை என்று கூறினர். அதைக் கேட்டதும் சந்நிதானத்திற்கு மகாவைத்திய நாத சிவனுடைய நினைவு வந்தது. வையைச்சேரிக் கிராமத்திலிருந்த மகாவைத்தியநாத சிவனை வரவழைத்தார்கள். நடராஜா விக்கிரகம் கிடைத்த வரலாற்றைக் கூறினர்கள். இவ்விக்கிரகத்தில் எவ்விதக் குற்றங் குறையுமில்லை யென்பதைத் தபதியின் மூலம் அறிந்து விட்டோம் என்பதை விளக்கினர்கள்.

பின்பு ஒரு நன்ஞளிலே அந்த நடராஜ விக்கிரகத்தை மகாவைத்தியநாத சிவனுக்குக் கொடையாக நல்கினர்கள். இனித் "தாங்கள் தங்களூரிலே நடராஜர் கோயில் எழுப்பி நிறுவனம் செய்து இந்த நடராஜா மூர்த்தத்தைப் பிரதிட்டை செய்து உங்களுடைய உள்ளக்கிடக்கையைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்" என்று கூறினர்கள். மகாவைத்தியநாத சிவன் நமது மனத்துள் இருந்த இவ்வெண்ணத்தை அந்த நடராஜப்பெருமானே அருள்பாலித்துச் சந்நிதானத்தின் மூலம் துணை செய்து அருளினர் என்றெண்ணினர். அவ்விக்கிரகத்தைப் பயபக்தியுடன் மகிழ்ச்சி பொங்கப்பெற்றுக்கொண்டு தமது ஊராகிய வையைச் சேரிக்கு வந்து சேர்ந்தார்.

● திருவாவடுதுறை ஆதினகர்த்தரால் தமக்குக் கிடைத்த நடராஜா விக்கிரகத்தைப் பிரதிட்டித்தல் வேண்டும் என்று எண்ணிய மகாவைத்தியநாத சிவன் இம்மூர்த்தத்தின் உருவ அமைப்பிற்கு ஏற்றாற்போல சிவகாமசுந்தரி அம்மையாரின் உருவச் சிலையொன்று வேண்டுமே என்று கவலையுற்றார். அதைத் தக்கவர்களிடம் கூறி நல்ல தபதியின் மூலம் வார்ப்படம் செய்தல் வேண்டுமென்று எண்ணி இருந்தார். அப்பொழுது பங்குனி சித்திரை மாதத்து அருங்கோடையாக இருந்தது.

அகத்தீசுரர் கோயில் சந்நிதானத்திலேயுள்ள கிணற்றிலே சுவாமிக்கு அபிடேகம் செய்தற்குக் கூடத்தண்ணீர் எடுக்க இயலாமல் கிணறு வற்றி வறண்டிருந்தது. இதை அறிந்த மகாவைத்தியநாத சிவன் அக்கிணற்றைத் தூருஅள்ளித் தண்ணீர் ஊறுவதற்காகச் சிறிது ஆழப்படுத்த எண்ணினார். அக்கிணற்றைத் தோண்டச்செய்தார். அவ்வாறு தோண்டும் போது அதனுள்ளிருந்து ஒரு விக்கிரகம் கிடைத்தது. அவ்விக்கிரகத்தைச் சோதித்துப் பார்த்ததில் அது சிவகாமசுந்தரி அம்பாளின் விக்கிரகமாக இருந்தது. அதோடு தாம் திருவாவடுதுறையிலிருந்து கொண்டு வந்த நடராஜா விக்கிரகத்திற்கு ஏற்றாற் போல அளவெடுத்துச் செய்யச் சொல்லியது போன்று தகுந்த அளவு உடையதாக அம்பாளின் விக்கிரகம் அமைந்திருந்தது. அதனைக் கண்டு சிவபெருமானின் திருவருளை நினைந்து போற்றித் துதித்தார். அவ்விரண்டு விக்கிரகங்களும் யாதொரு குற்றங் குறையுமின்றி

நல்ல எழிலுடன் அமைந்திருந்த படியால் அவ்விரண்டு மூர்த்தங்களையும் பிரதிட்டை செய்தற்குரிய ஏற்பாட்டைச் செய்யத் தொடங்கினர்.

● மகாவைத்தியநாத சிவன் அவர்கள் தமது சொந்த ஊராகிய வையைச் சேரி கிராமத்திலே உள்ள மிகப் பழமையான சிவன் கோயிலாகிய அகத்தீசுரர் சுவாமி கோயிலின் பிரகாரத்து மதிற்சுவரையடுத்து நடராஜர் சிவகாமசுந்தரி மூர்த்தங்களை நிலைநிறுத்தக்கூடிய சிறு கோயிலொன்றைக் கட்டினர். அச்சிறு கோயிலில் நடராஜப் பெருமானையும், சிவகாம சுந்தரி அம்பாளையும் ஒரு நன்னாளிலே பிரதிட்டை செய்து வேதமந்திரங்கள் ஓதிக் கும்பாபிடேகம் செய்து அர்ச்சனைகள் முதலியன முறைப்படிச் செய்தார்.

பின்பு இம்மூர்த்தங்களுக்கு நித்திய பூசை நைவேத்தியம் முதலிய வகைகளுக்குச் சிறிது நிலமும் எழுதி வைத்து வெகு சிறப்பாகக் கும்பாபிடேகம், இசைக் கச்சேரி, கதாப்பிரசங்கம், புராண இதிகாசச் சொற்பொழிவுகள், வேதபாராயணங்கள், நாதசுரக் கச்சேரிகள் முதலியவைகளைப் பதினொரு தினங்கள் விழாவாகக் கொண்டாடிக் கோலாகலமாக நடத்தினர். இவ்விழாவிற்கு அக்கிராம மக்கள் மட்டுமின்றிப் பக்கத்துக் கிராமங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் கூட்டங் கூட்டமாக வந்து கடவுளை வணங்கி அருள் பெற்றனர்.

அவ்வாறு வரும் திரளான மக்கள் எல்லோரும் பசிப்பிணி நீங்கி இருத்தற்குத் தமது வீட்டிலே அமர்ந்து உண்ண ஏற்பாடு செய்தார்கள். மேலும்

வந்த கூட்டம் கோயில் பிரகாரத்திலே அமர்ந்து உண்பதற்கும், அவ்வாறு அமர்ந்து உண்பதற்கு இயலாத ஏனைய மக்களுக்குச் சாம்பார் சாதம் தயிர்ச் சாதம் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்தார். இவ்வாறு யாவருடைய பசிப்பிணியையும் தீர்த்துக் கடவுளின் அருளுக்கு எல்லோரும் ஆளாகும்படிச் செய்தார்.

● மகாவைத்தியநாத சிவன் புதுக்கோட்டை அரசரின் விருப்பப்படி அச் சமத்தானத்திற்கு அடிக்கடி சென்று வந்தார். அரச அவையிலே இசை நிகழ்ச்சிகள் செய்து அங்குள்ள இசைப் புலவர்களையும் சுவைஞர்களையும் அரசர் இராமசந்திரத் தொண்டைமான் அவர்களையும் களிப்பித்து வந்தார். ஒரு சமயம் அவரை நூதனமான தாளத்திலே ஒரு பல்லவி பாடல் வேண்டும் என்று புதுக்கோட்டைச் சமத்தானத்து ஆதீன வித்துவான்களும் வீணை ஆதிப்பையருடைய பரம்பரையினருமான வீணை சுப்புக்குட்டி ஐயர், வீணை சுப்பையர் ஆகியோர் விரும்பிக் கேட்டுக் கொண்டார்கள். அன்று அந்த அரச அவையிலே பல இசைப் புலவர்கள் கூட்டம் பெருகி இருந்தது. அவ்வாறு முக்கியம் வாய்ந்த வீணைப் புலவர்கள் கேட்டுக் கொண்டதும் நூற்று எட்டுத் (108) தாளத்தில் ஒன்ருகிய ''கஜஜம்பை'' (இதைச் சேகர ஜம்பை என்றுங் கூறுவர்.) என்ற தாளத்திலே ஒரு பல்லவியைச் சங்கராபரண இராகத்திலே அமைத்துப்பாடினர். அப் பல்லவியின் சொற்களாவன:-

''சம்போ சிவஸாம்ப பாஹிமாம், ஸாம்பவிபோ நடனப்ரபோ மாம்பாஹி'' என்பதாம். கஜஜம்பை என்ற

தாளமானது ஒரு குரு [8] ஒரு திருதம் [0] ஒரு அனுதிருதம் [U] ஒரு திருதம் [0] ஆகிய அங்கங்களுடையது. மொத்தம் பதிமூன்றட்சரங்கள். இந்தப் பதிமூன்றட்சரங்களையும் மாத்திராக்கால அளவிலேயே போடல் வேண்டும். அதாவது "தகதக-தக தக" என்பது குருவாகிய எட்டட்சர மாத்திராக்காலமாகும். "தக-த-கிட" என்பது திருதம் அனுதிருதம் திருதம் ஆகிய ஐந்து அட்சர மாத்திராக்காலமாகும். எனவே (8+5=13) இவ்விரண்டும் சேர்ந்து பதின்மூன்று அட்சர மாத்திராக்காலம் ஆயிற்று. பல்லவியின் சுர அமைப்பு வருமாறு:— இராகம்: சங்கராபரணம். தாளம்: கஜஜம்பை அல்லது சேகர ஜம்பை. மாத்திராக்கால அட்சரம் 13. அங்கங்கள் 8 0 U 0

| 8 | | | | 0 | | U | | 0 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கா | ; | ரீ | ; | - | ச | ச | - | ச - , ச | \| |
| ச | ம் | போ | . | | சி | வ | | ஸா ம் ப | |

| 8 | | | | | 0 | | U | | 0 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கரி | சா | ச | த | நீ - | சா | - | , | - | ; \|\| |
| பா | . | . | . | ஹி | மா | | . | | ம் |

| 8 | | | | | 0 | | U | | 0 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கா | ; | மா | ப | ம - | பா | - | க | - | ரிக \| |
| ஸா | ம் | ப | வி | . | போ | | ந | | டன |

| 8 | | | | | 0 | | U | | 0 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மா | த | ப | ம | பகரி - | சா | - | ச | - | , ரி \|\| |
| ப்ர | போ | . | மா | . . ம் | பா | | . | | . ஹி |

இப்பல்லவியை நன்ருக நிரவல் செய்து கற்பனைச் சுரங்கள் பாடி யாவரும் வியக்குமாறு கானம் செய் தார்கள். வீணை சுப்புக்குட்டி ஐயரும் வீணை சுப்பை யரும் இளைஞரான மகாவைத்தியநாதசிவனைப் புகழ்ந்து கொண்டாடி மகிழ்ந்தார்கள். மனமார ஆசி வழங் கினுர்கள். அரசரவர்களின் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லை யில்லை. இசையில் நல்ல சுவைஞரான அரசரவர்கள் சிறப்பான சன்மானத்தை அவருக்கு வழங்கினுர்கள்.

● திருவாவடுதுறை ஆதீனகர்த்தாவாகிய மேல கரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் திருவாவடு துறை யிலிருந்து கல்லிடைக்குறிச்சி மடத்திற்கும், கல்லிடைக் குறிச்சியிலிருந்து திருவாவடுதுறை மடத்திற்கும் அடிக்கடி போய்வருதல் உண்டு. அவ்வாறு போகும் போதும் வரும்போதும் சிலசமயங்களிலே சந்நிதானம் அவர்களுடைய விருப்பத்திற்கிணங்க மகாவைத்திய நாதசிவனும், அவருடைய தமையனுர் இராமசாமி சிவனும் சந்நிதானத்தின் கூடவே செல்வதுண்டு. சந்நிதானம் அவர்கள் பல அன்பர்களின் விருப்பத் திற்கு இணங்கப் பலஊர்களிலும் தங்கிச் செல்வார்கள். அன்பர்கள் சந்நிதானத்திற்குப் பாதபூசை முதலிய உபசாரங்களைச் சிறப்பாகச் செய்து மகிழ்வார்கள். சந்நிதானத்திற்குச் சிறப்புக்கள் எராளமாக நடக்கும். ஆங்காங்கு மகாவைத்தியநாத சிவனுடைய இசை விருந்து அல்லது சிவகதாப் பிரசங்கங்கள் நடக்கும். அந்நிகழ்ச்சிகளால் சந்நிதானமவர்களையும் அங்குள்ள ஏனைய அன்பர்களையும் மகிழ்விப்பார். இன்னும் சிலகாலம் தங்க நேருமாயின் இராமசாமிசிவனுடைய

தமிழ் இலக்கிய இலக்கண சமய ஆராய்ச்சிச் சொற் பொழிவுகளும் வித்தாரமாக நடக்கும். அவ்வாறு நடக்கும் சிறப்பு விழாவிலே மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் தமக்குக் கிடைக்கப்பெற்ற பரிசில் களான சால்வை, பொற்காப்பு, பொற்சங்கிலிகள், வைரக்கடுக்கன்கள், கல்பதித்த மோதிரங்கள், உருத்திராக்கச் சரங்கள், வேறு பலப்பல சன்மானப் பொருள்கள் ஆகியவற்றை மகாவைத்தியநாத சிவனுக்கும், அவரது தமையனுர் இராமசாமி சிவனுக் கும் ஏராளமாக வழங்குவார்கள். பெரிதும் தங்கத்தில் கோர்த்த ஐந்து சரங்களுடன் கூடிய சிறு உருத்தி ராக்க மாலைகள் மகாவைத்தியநாத சிவனுக்கும் இராமசாமி சிவனுக்கும் ஏராளமாகக் கிடைத்தன. இச் சரங்களைத் தாங்கள் அணிந்து கொள்வதோடு மீத மாக உள்ள ஐந்து சரங்களடங்கிய உருத்திராக்க மாலைகளைத் தாங்கள் செல்லும் தலங்களிலுள்ள நடராஜ மூர்த்திக்கு அணியச் செய்து மகிழ்வார்கள். தமதூரில் கட்டப்பெற்ற நடராஜர் சிவகாமசுந்தரி ஆகிய மூர்த் தங்களுக்கு இச்சரங்கள் பல வழங்கியுள்ளார்கள்.

● மகா வைத்தியநாத சிவன் தாம் இசையரங்கும் சிவகதைப் பிரசங்கமும் செய்து வருங்காலத்து அதன் பயனுக அவருக்கு வரப்பெறும் சன்மானப் பொரு ளாகிய பட்டு அங்கவத்திரம், பட்டுச்சால்வை, பட்டுப் பீதாம்பரம் ஆகிய உயர்தர ஆடைகளையும், மோதிரம், கைச்சங்கிலி, கழுத்துச் சங்கலி, பொற்காப்பு ஆகிய உயர்தரப் பொன்னுபரங்களையும், நவரத்னுபரணங் களையும், உருத்திராக்க மணிகளாலான மாலைகளையும்,

வைரம், வைடூரியம், கோமேதகம், பவழம், புட்ப விராகம் ஆகிய கல்லிழைத்த நகைகளையும் அவ்வாருன பல பொருள்களையும் ஆசையுற்றுத்தாம் பயன் படுத்தாமல் தம்மால் பிரதிட்டை செய்யப்பெற்ற நடராஜ மூர்த்திக்கும், சிவகாமசுந்தரி அம்பிகைக்கும் அணிவித்துத் தம் கண்குளிரக் கண்டு மகிழ்ச்சியுற்றுப் பூரித்துப் போவார். ஒவ்வொரு சமயத்திலும் அவ்வப் போது கிடைக்கும் ஆடையாபரணங்களை அம்மூர்த் தங்களுக்கு அணிவித்து ஒரு விழாப்போல வெகுசிறப் பாகக் கொண்டாடி வந்தார்.

● அவருடைய அபாரமான பேரையும் புகழையும் மைசூர் அரசர் சாமராஜஉடையார் கேள்வியுற்று மூன்று முறைகள் தம்முடைய அரச அவைக்கு அவரை விரும்பி வரவழைத்துள்ளார். அவருடைய தெவிட் டாத இன்னிசையமுதைப் பன்முறையும் கேட்டுக் களித்துள்ளார். ஒவ்வொரு முறையும் அவரைப் பல மாதங்கள் பல நாட்கள் தங்கும்படி செய்தார். பலப் பல சன்மானங்களை யாவரும் கண்டு வியந்து போற் றும்படி அளித்து பாராட்டி உள்ளார். அவருடைய இசையில் அரசருக்கு அளவிட இயலாத விருப்பம் உண்டு. அவர் பெற்ற அரச மரியாதையும் சன் மானங்கள் போல அவருக்கு முன்னும் பின்னும் எவ ரும் அத்துணையான சிறப்புச் சன்மானங்களைப் பெற வில்லை. ஒருசமயம் திவான் சர். கே. சேஷாத்திரி ஐயர் வீட்டில் நடந்த ஒரு பெரியவிருந்திலே மகா வைத்தியநாத சிவனுடைய இன்னிசை நடந்தது. அவ்விருந்தில் முக்கியமாக இருந்த பிரிட்டிஷ்

ரெஸிடெண்டு கர்லெஸ்டுதுரை அவருடைய இசை யில் மிகவும் ஈடுபட்டு புகழ்ந்து மகிழ்ந்தார். அத் துரை அவர் பாடுவதைப் பார்த்து திறந்தவாய் மூடாமல் வியப்புடன் கேட்டிருந்தார். அதுபோல ஒரு குரலை (VOICE) நான் இதுவரைக் கேட்டதில்லை. இந்தக் குரல் இதயத்தைத் தொட்டுச் சரீரத்தையும் ஆட்டுகின்றது. வெகு அழகு என்று புகழ்ந்துரைத் தார்.

● மகா வைத்தியநாத சிவனவர்கள் மைசூர் சென்ற அக்காலங்களிலே அச்சமஸ்தானத்து வீணை வித்து வான்களாகிய வீணை சேஷண்ணு, வீணை சுப்பண்ணு, வீணை சாமண்ணு என்ற சாமாச்சார் ஆகிய இசை மேதைகள் அவர்களைத் தங்கள் இல்லங்களுக்கு அழைத்துச்சென்று அளவிலாத மரியாதைகள் செய்து அவர்களது இசையின்பத்தை நுகர்ந்து மகிழ்ந்து அரச மரியாதைகளினும் சிறந்த வித்துவத் மரியாதை களைச் செய்து சிறப்பளித்துள்ளார்கள். 'கற்ருரைக் கற்ருரே காமுறுவர்' என்ற கருத்துப்படி இசைக்கலை யில் மகா மேதையாகியவரும், இமயத்துக்கு ஒப்பாகிய வருமான மகா வைத்தியநாத சிவனின் இசைத்திற மையை அக் கலையிற் சிறந்த வேறு இசைமேதைகள் மதித்துச் சன்மானித்துப் போற்றுவதைவிட வேறு மேலான சம்பத்து என்ன இருக்கிறது? அக்காலத்து இசைப்புலவர்கள் பெரும்பாலோரும் புலமையில் அழுக்காறு கொள்பவர்களில்லை. ஆதலால் போற்றிப் புகழ்ந்து கொண்டாடினர்கள்.

● பல சமயங்களில் மகாவைத்தியநாத சிவன் வீணை சேஷண்ணு வீட்டிலும், வீணை சுப்பண்ணு வீட்டிலும் இசை நிகழ்ச்சிகள் செய்யும்போது பக்கவாத்திய மாகப்பிடில் இல்லாமல், சேஷண்ணுவும் சுப்பண்ணு வும் வீணையைப் பக்கவாத்தியமாக வாசித்திருக்கிருர் கள். அவர்களுடைய வீணைவாசிப்பிலும் மீட்டுச் சாதி யிலும் இசையின் செய்திறங்களிலும் மகாவைத்திய நாதசிவன் மகிழ்ந்து அவர்களைப் போற்றிப் புகழ்ந் துள்ளார். இராகம் தானம் வாசிக்கும் வகையில் சேஷண்ணுவும், பல்லவி சுரம் வாசிக்கும் வகையில் சுப்பண்ணுவும் சிறந்தவரென்று கூறுவார். அவர்களு டைய வீணை வாசிப்பு மீட்டுச் சாதிகளின் அமைப்பால் மேலோங்கி நிற்பன என்பார். ஆனல் திருவனந்த புரம் வீணைக்கல்யாண கிருட்டின பாகவதருடைய ஒருகை வாசிப்பைத் தான் அடிக்கடி புகழ்ந்து கூறு வார். எல்லாவகையானும் சிறப்பு அம்சம் பெற்றது அவருடைய வீணை வாசிப்பு என்பார்.

● மகாவைத்தியநாத சிவன் ஒரு சமயம் மைசூர் சமத்தானத்திற்குச் சென்றிருந்த போது அரச அவை யிலே ஆஸ்தான வித்துவாஞக விளங்கி வந்த பக்ஷி வீணை சுப்பண்ணு வீட்டிலே ஒரு இசைக் கச்சேரி செய்தார். அவருடைய இசைவிருந்தைக் கேட்டு மகிழ்தற்பொருட்டுப் பல இசை வல்லுநர்கள் வந் திருந்தார்கள். மகாவைத்தியநாதசிவன் அதி அற்புத மான குரல்வளத்தால் யாவரையும் மெய்ம்மறக்கச் செய்யும்படி பாடிக்கொண்டிருந்தார். அன்று இசை நிகழ்ச்சியிலே பல்லவி பாடுவதற்காக அவர் பயிரவி

இராகத்தை சாங்கோபாங்கமாக இசைத்து ஆலாபனம் செய்து கொண்டிருந்தார். அப்போது வீணை சாமண்ணு என்பவர் மகா வைத்தியநாத சிவனிடம் நூற்றெட்டுத் தாளத்தில் ஒன்ருகிய **விலோஹிதம்** என்ற தாளத்திலே ஒரு பல்லவியைத் தாங்கள் பாடிக் கேட்க விரும்புகிரோம் என்று திடீரென்று கூறினர். மகாவைத்தியநாத சிவன் அவர் சொல்லைச் செவியில் வாங்கிக்கொண்டு பயிரவி இராகக்தைப்பாடி அதில் தானத்தைப் பாடி முடித்தார். பின்பு சாமண்ணுவைப் பார்த்து விலோஹிதம் என்ற தாளத்தின் அங்க ஜாதிகள் யாவை என்று கேட்டார். சாமண்ணு அவர்கள் அத்தாளமானது ஒருலகு (1) ஒருகுரு (8) இரண்டு திருதங்கள் (0) (0) ஒருபுலுதம் (8) ஆகிய அங்கங்களுடையது. இருபத்தெட்டு மாத்திராக் காலங்கள் கொண்ட அட்சரமாகும் என்ருர். உடனே மகா வைத்தியநாத சிவன் அதிலொரு பல்லவியைத் தயக்கமின்றியும் வெகுநாட்கள் பழகியது போல எளிமை தோன்றப் பாடினுர்கள். அதன் சாகித்திய சொற்கள் வருமாறு:- பயிரவி, விலோகிதம். 28 அட்சரம். சம எடுப்பு. ''ஹரஹர சங்கர சிவ பாஹிமாம், கருணுனந்த ஜலநிதே ஓம்'' என்பதாகும். இதன் சுரக் குறிப்பு வருமாறு :— + சதுஸ்ருதிதைவதக்குறி.

| 1 | 8 | 0 | 0 |
|---|---|---|---|
| ரீ ச் நி – தா பா மா ; | – தா – பா – | | |
| ஹ ர . | ஹ ர ச ங் க ர | | |

8

பநிதபதமபா , த்நி த்நீ ||

சி . வ . . . பா . . . . . ஹி

1 8 0 0

ச்ா ; – ரீ ச்ா நீ ; – த் நி – ச்ரி –

மா ம் க ரு ணா . ன ந் த .

8

க்ா ரீ ச் நி ச் ரி ச் நி த ப ||

ஜ ல நி . தே . ஓ . . . ம்

அவ்வாறு அப்பல்லவியை அவையோர் களிக்கும்படிப் பாடி முடித்தார். அங்குள்ள இசைப்புலவர்களெல்லாரும் 'அற்புதம், அற்புதம்' என்று கொண்டாடினார்கள். வியப்பே வடிவாய் அமர்ந்திருந்தார்கள். வீணை சேஷண்ணா, சுப்பண்ணா, சாமண்ணா, ஆகியவர்கள் இசைமேதைகள், வைணிக விற்பனர்கள். அப்பல்லவியை அநாயாஸமாக வெகுவித்தாரஞ் செய்து பாடிய மகாவைத்தியநாதசிவனின் இசைத் திறத்தையும் இசையாற்றலையுங் கண்டு புளகிதம் கொண்டு மெய்மறந்து வியந்து இருந்தார்கள்.

● ஒரு சமயம் திரிச்சிராப்பள்ளியிலே இசைக் கச்சேரி செய்தலை முன்னிட்டு மகா வைத்தியநாத

சிவனும் இராமசாமி சிவனும் சென்றிருந்தார்கள். அப்பொழுது அவ்விருவரும் பதினைந்து நாட்களுக்கும் மேலேயே அங்குத் தங்கவேண்டியதாக இருந்தது. அப்பொழுது அங்குப்பலப்பல பெரும் தமிழ்ப்புலவர் களின் கூட்டம் ஒன்று நடந்தது. அக்கூட்டத்திலே இராமசிவனும் மகாவைத்தியநாத சிவனும் கலந்து கொள்ள நேர்ந்தது. அக்கூட்டத்திலே சபாபதி நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை, மாம்பழக்கவிச் சிங்க நாவலர், தியாகராஜ செட்டியார், ஈழத்து சங்கர பண்டிதர், தொழுவூர் வேலாயுதமுதலியார், பேரறிஞர் கந்தசாமி முதலியார் முதலிய பெரும் புலவர்களோடு இன்னும் பல புலவர் மணிகளும் வீற்றிருந்தனர். அவர் களனைவரும் தமிழின் புதைபொருளாகிய பல நுட்பங் களையும் எடுத்தோதிப் பிரசங்கம் செய்து வந்தனர்.

அவர்கள் போல ஒருநாள் மகா வைத்தியநாத சிவனும் பேச வேண்டும் என்று பலரும் கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் விருப்பத்திற்கு இணங்க மகாவைத்தியநாத சிவன் சிவபுராண மகிமை பற்றி யும் சிவநேசர்களின் சிறப்புப்பற்றியும் ஒரு சொற் பொழிவாற்றினார். இடையிடையே சிறிது இசையும் கலந்திருந்தபடியால் பெரும்புலவர்கள் மட்டுமின்றி பொதுமக்களும் மகிழ்ந்து உள்ளுணர்ச்சி கொண்டு விளங்கினர்.

அங்கு வீற்றிருந்த புலவர்மணிகளெல்லாம் அவ ரது வாக்குநயத்தையும், அதிநுட்பமான பகுதிகள் எல்லாம் எளிதிற் புலனாவது போல எடுத்துக் கூறும்

வல்லமையையும் கண்டு ஞானசம்பந்தப் பிள்ளையார் இவ்வாறே இருந்திருப்பார் போலும்! அவர் பரமசிவ னருளால் ஞானப்பாலுண்டு அப்பேற்றால் கிடைக்கப் பெற்ற அருள் வாக்கின் மகிமையால் உலகில் சிவநேசத் தையும் சிவபக்தியையும் பரப்பினர். அதுபோல இக் காலம் அவரது அவதாரமாகவே மகா வைத்தியநாத சிவனும் தோன்றி சிவநேசத்தைப் பரப்புகிறார்போலும் என்றெண்ணிப் பேசிக்கொண்டனர்.

இன்னும் சிலபுலவர்கள் அப்பர் சுவாமிகளுடைய வாக்கானது முதிர்ந்த அனுபவமுடையதாகும். அவ ருடைய ஆயுள் முழுவதும் சிவத்தொண்டிற்கே பயன் பட்டது. அவர்போல முதிர்ந்த அனுபவ ஞானத்தை வேறு எவரும் பெற்றிலர். இன்று இவர்களுடைய சொற்பொழிவைக் கேட்கும்போதும் இவருடைய சிவாபிமானத்தை நினைக்கும்போதும் அப்பர்சுவாமி கள் இவ்வாறே கலைத்திறம் உடையவராக இருந் திருப்பார் போலும் என்றெண்ணினர்; மேலும் அவர் நல்ல வயது முதிர்ந்த பின்பு பெற்ற அனுபவ ஞானத்தை இவர் இந்த இளம் வயதிலேயே பெற்று விட்டார். இவர் அப்பரின் அவதாரம் போலும் என்றும் எண்ணினர்.

வேறு சிலர் சுந்தரமூர்த்தி நாயனார் ஓர் அரசராக இருந்தும் அவ்வப்போது சிவபெருமானால் தடுத்து ஆட்கொண்டார். அதனால் அவரடைந்த சிவப் பேற்றை எடுத்துச்சொல்லுதல் அரிதினும் அரிது. இக் கலியில் சுந்தரமூர்த்தி சுவாமிகளே மறு அவதார

மாக அவதரித்து அரச இலக்கணம் ஆகிய சிவத் தேஜஸை எழிலுறப் பெற்று, சிவபெருமானின் கிருபை யைப் பூரணமாக அடைந்து மகாவைத்தியநாத சிவன் உருவத்தில் தோன்றி உள்ளார் போலும். அந்த அருள் பெருக்கினுலேயே இவர்களுடைய வாக்கானது இத்துணை சிறப்பாக மிளிர்கின்றதே தவிர வேறல்ல என்று எண்ணினர்.

மற்றும் சிலர் இவ்விளவயதிலேயே மாணிக்க வாசகசுவாமிகளுடைய பரிபூரணமான ஞான அனுபூதியைப் பெற்றுவிட்டார். மாணிக்கவாசகப் பெருமான் சிவப்பேறு பெற்று அனுபவ ஞானியாகவே விளங்கினுர். அதுபோலவே இவ்விளைஞராகிய மகா வைத்தியநாத சிவனும் சிவப்பேறு பெற்ற புண்ணியரே யாவார். மாணிக்கவாசக சுவாமிகளின் ஞான வாக்குப் போல இவருடைய வாக்கும் அருள் சுரந்து உள்ள தென்று எண்ணி மனம் கனிந்தனர்.

எனவே மகாவைத்தியநாத சிவனுடைய சிவ புராணப்பிரசங்கத்தின் வாசாமகோசரமாகிய வாக்கின் அத்தன்மையைக் கேட்டுணர்ந்த புலவர்மணிக ளெல்லாரும் ஞானசம்பந்தப் பிள்ளையாரையும், அப்பர் சுவாமிகளையும், சுந்தரமூர்த்தி நாயனுரையும், மாணிக்கவாசகப் பெருமானையும் தம்தம் நினைவிற்குக் கொண்டுவந்ததென்ருல் அன்னுரின் பேச்சு வன்மை பற்றியும் நுண்ணிய அறிவுத்திறன் பற்றியும் எவ்வாறு தான் எடுத்துக் கூறுவது !.

● ஒருசமயம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஊற்றுமலைச் சமீனுக்கு இசைக் கச்சேரி செய்தலை முன்னிட்டு மகாவைத்தியநாதசிவன் சென்றிருந்தார். அப்போது இருதயாலய மருதப்பத்தேவர் சமீந்தாராக இருந்தார். அச்சமீன்தாருக்கு அப்போது இருபத்தொன்பது அல்லது முப்பது வயதிருக்கும். தமிழ் மொழியிலும் இசையிலும் நல்ல அறிவு பெற்றவர். அவருடைய அவையிலே நல்லதமிழ்ப் புலவர்களும் இசைப்புலவர்களும் இருந்தனர். மகா வைத்தியநாத சிவன் இசை நிகழ்ச்சிக்காலத்துத் திருநெல்வேலி மாவட்டத்தின் பல இடங்களினின்றும் இசைப்புலவர்கள் கூட்டமாக வந்திருந்தனர். அன்று நூதனமான ஒருபல்லவியை மகாவைத்தியநாத சிவன் பாடினார்'

அது வருமாறு :—

இராகம்:- பூர்வீகல்யாணி, தாளம்:- டமருகயதி.
27-மாத்திராக் காலம்.

"சம்போ நடராஜ பாஹிமாம்,
காமேச்வர சித்ஸபேச மாம்பாஹி"

ரி சா = சா ரி த | ச ச = ரி ச ரி |
ச ம் போ . . ந ட ரா . .

க ரி க | மா = க ம ரி | க ம பா = பா , ||
ஜ . . பா . . . . ஹி . மா . ம்

பா , = பாமக | ரிம = கமா | கரிக |
கா . மே . . ச்வர . சித் ஸ . .

ரிச = ரிசா | த ரிசா = சா ரி ||
பே . . ச மா . ம் பா ஹி

முதல் ஆவர்த்தனத்தின் சுரமானது முடிவிலிருந்து திரும்பவருவது போன்று இதன் இரண்டாவது ஆவர்த் தனம் அமைந்த கற்பனே மிகச்சிறப்பாகும். இப்பல்லவி ''விகடகவி'' என்றதுபோல முதலிலிருந்து படித்தாலும் கடைசியிலிருந்து படித்தாலும் வருவதுபோலவே எல்லாக்கற்பனே நிரல்களும் இருந்தன. இவ்வபூர்வ மான திறத்தினே ஒவ்வொரு இசைப்புலவரும் ஊன்றிக் கவனித்தல் வேண்டும். இத்திறத்தின் அழகைக் கண்டு யாவரும் போற்றிவியந்தனர். இதனே டமருகத் தாளமென்று மகாவைத்தியநாதசிவன் கூறுவார்.

● மகாவைத்தியநாத சிவனவர்கள் காலம் சென்ற பின் அவரது தமையனுராகிய இராமசாமி சிவனவர் களால் இயற்றப்பெற்ற மகாவைத்தியநாத சிவனின் 'விஜயசங்கிரஹம்' என்ற இரங்கற்பா நூலொன்று எனக்கு (பல்லவி சுப்பையா பாகவதர்) அனுப்பப் பெற்றது. அந்நூலில் மகாவைத்தியநாத சிவனவர் களேப் பற்றிய உண்மைச் செய்திகள் சுருக்கமாகத் தரப்பெற்றிருக்கின்றன. அந்நூலிலே கல்லிடைக் குறிச்சி மடத்திலே மேலகரம் சுப்பிரமணிய தேசிக ரவர்கள் முன்னிலேயில் குருபூசை விழாவில் பெரிய வைத்தியநாத ஐயரும் மகாவைத்தியநாத சிவனும்

சேர்ந்து பாடுந்தருணத்தில் பெரிய வைத்தியநாத ஐயர் நாட்டை இராகத்திலுள்ள ஷட்சுருதிரிஷப சுரத்தையும், ஷட்சுருதிதைவத சுரத்தையும் அறியமாட்டாதவராய் இருந்தாரென்றும், மகாவைத்தியநாதசிவனவர்களின் இசையிலே மிகவும் பொருமையடைந்தாரென்றும், நாட்டையிலுள்ள ஷட்சுருதி ரிஷப தைவதங்களைச் சுரமாகப்பாடிக்காட்டினுல் ஒருக்கால் பாடக்கூடுமென்று நடுவராக இருந்த வீணை சின்னையா பாகவதர் கூற "வாதப்போரேற்றவருக்குச் சபைநடுவே சிக்ஷை சொல்லி வைப்பது முறையல்ல" வென்று மகாவைத்தியநாத சிவனவர்கள் கூறினுரென்றும் எழுதப் பெற்றிருப்பது அத்துணைப் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை.

● மகாவைத்தியநாத சிவன் தமிழிலும் முதியவர்களிடம் பணிவும் அன்பும் அடக்கமும் கொண்டவர். அவர் சிறுவயதிலிருந்தே இப்பழக்கத்தைக் கைக்கொண்டு விட்டார். அவர் இயற்கையாகவே யாவர் மனதும் புண்படாத நிலையில் மென்மையாகப் பேசுவதே வழக்கம். அவர் பெரிய வைத்தியநாத ஐயரை அவ்வாறு பேசியிருக்க இயலுமா? பேசியிருக்க மாட்டார், பேசவுமில்லை. தம்முடைய ஞானபலத்திற்குச் சமதையாகவோ, அல்லது சற்றுக் குறைந்த திறனுடைய எந்த வித்துவான்களானுலும் சரி, தம்மை விட அவர்கள் சிறந்தவர்கள், வித்தியா தேவதையை உபாசிப்பவர்கள் என்று தம்மிலும் மேலானவர்களாக எண்ணுவதே அவருடைய இயல்பு. எனவே இசைக்கலையின் திறம் நிரம்பப்பெற்றிருந்த பெரியவைத்திய

நாத ஐயரை மகாவைத்தியநாதசிவன் தரக் குறைவாகப் பேசியே இருக்கமாட்டார். பன்னிரண்டு வயதிற்குள்ளாக இசைஞானம், தமிழ்மொழிஞானம், வடமொழிஞானம், வேதாந்த அறிவு, சாஸ்திர ஆராய்ச்சி அறிவு, சிவஞான அறிவு ஆகிய திறங்கள் கடவுளின் அருளால் கிடைக்கப்பெற்ற அருளாளரிடத்திலே தரக்குறைவான சொல் உண்டாகுமேல் அவர்கள் இத்துணை சிறப்புற வழியேது?

● அக்காலம் நாட்டை என்பது மாயாமாளவ கௌளை இராகத்தின் சுரத்தானமாகிய "ச க ம ப நிச் - ச்நி ப ம க ச" என்பதேயாகும். இதை இக்காலத்தோர் கம்பீர நாட்டை என்பர். எழுபத்திரண்டு மேளகர்த்தா ஏற்பட்ட பின்பே பழைய காலத்து நாட்டை மாறிப்போய் ஷட்சுருதிரிஷப தைவதம் வரப்பெற்றது. மேளகர்த்தா வருவதற்கு முன்பு நாட்டையின் தானத்தில் கம்பீர நாட்டையே வழங்கி வந்தது. இந்தக் கம்பீர நாட்டையைப் பாடுங்காலத்து காந்தார சுரமானது ஷட்ஜசுரத்துடன் ஒன்றும் போதும், நிஷாதமானது பஞ்சம சுரத்துடன் ஒன்றும் போதும் தன் தானத்திலிருந்து நழவிச் சற்று குறைந்த சுருதியில் ஒலித்து இயல்பாகவே அழகு பெறும். உண்மையில் அத்தானம் காந்தார நிஷாதமேயாயினும் அதனை இக்காலத்தோர் ஷட்சுருதி ரிஷபதைவத மென்று கூறுகின்றனர்.

● எழுபத்திரண்டு மேளகர்த்தா முறை வந்த பிறகு சுத்தகாந்தாரம், ஷட்சுருதிரிஷபம், சுத்தநிஷாதம்,

ஷட்சுருதிதைவதம் என இந்நான்கு பெயர்கள் ஏற்பட்டன. இந்நான்கு சுரத்தானங்களும் வேறு தனித்த ஒலியல்ல. சதுச்சுருதி ரிஷபமே சுத்தகாந்தாரமென்றும், சாதாரணகாந்தாரமே ஷட்சுருதிரிஷபமென்றும், சதுச்சுருதிதைவதமே சுத்தநிஷாதமென்றும், கைசிகி நிஷாதமே ஷட்சுருதிதைவதமென்றும் புதிதாக நான்கு பெயர்களைப் பெற்றன. இந்த எழுபத்திரண்டு மேளகர்த்தா முறைகள் தீக்ஷிதர் வம்சத்தின் முன்னோர்களால் இயற்றப்பெற்றன. அக்காலம் இம்முறைகளை அறிந்தோரில்லை. மகாவைத்திய நாதசிவன் சிறுவயதிலேயே இசைநூலராய்ச்சியையும் அறிந்தவர். ஆதலால் அவரைத் தவிர வேறு எவருக்கும் இந்த எழுபத்திரண்டு மேளகர்த்தா முறைகள் பற்றிய செய்திகள் எதுவும் தெரியாது. அம்முறைகளெல்லாம் அக்காலத்திய வித்துவான்களுக்குப் பழக்கத்திலில்லை. எனவே இந்நான்கு பெயர்களும் சுரத்தானங்களும் பெரியவைத்தியநாத ஐயர் அறியாதிருந்தது ஒரு குறையில்லை. அவர் இதனை அறியாமலிருந்தார் என்று கூறுவதில் பொருளில்லை. இது தெரியாததால் அவருடைய பெரும் புலமை மறைந்துவிடவுமில்லை. என்காலத்தில் இருந்த பல இசைப்புலவர்களும் நாட்டைக்குரிய புதுப்பெயரான ஷட்சுருதிரிஷபதைவதங்களை உச்சரிப்பதற்கும் இயக்குவதற்கும் பெருமுயற்சிகள் செய்து வருவார்கள். நாட்டையை நானும் ஷட்சுருதி ரிஷபதைவத எண்ணமின்றி அதன் சுவைகுன்றாது பாடுவதே வழக்கம்.

● மகாவைத்தியநாத சிவன் பெரியவைத்தியநாத ஐயருடன் பாடும்போது சக்கரவாக இராகமும் புதிதாக

வெளிவந்த "சுகுணமுலே செப்பு சொண்டி" என்ற கீர்த்தனமும் பாடினர். அதுவும் மேளகர்த்தா இராக மாதலால் அக்காலத்தில் அது வழக்கிலில்லை. அக்காலம் 'சௌராட்டிரீ' இராகமே பெருவழக்காகும். அதனின்று சிறிதே வேறு பேதப்பட்ட இதனைக் கேட்டு, பெரிய வைத்தியநாத ஐயர் சின்னவைத்தியநாத ஐயர் என்ற மத்தகஜங்கள் மூக்கின்மேல் விரல்வைத்து வியந்து ஆஹா! பேஷ் என்று கூறி இசை நயமாக வரும் இடங்களில் உற்சாகப் படுத்தியுள்ளார்கள். எனவே அவர்கள் பொருமையுடையவர்களே இல்லை. கோபமுற்றவர்களுமில்லை.

● மகாவைத்தியநாதசிவனும், பெரிய வைத்தியநாத ஐயர், சின்ன வைத்தியநாத ஐயர் ஆகிய அவர்களும் போட்டிக்கச்சேரி செய்தவர்களன்று. பெரியவைத்திய நாத ஐயரும் சின்ன வைத்தியநாத ஐயரும் குருபூசை விழாவில் சின்னப்பட்டம் வகித்து வந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்களின் ஆதரவில் பாடிவரும் போது அப்பாட்டின் உயர்தரத்தில் மகிழ்வுற்ற சந்நிதானம் அவர்கள் வையை வைத்தியநாத ஐயருக்கு நல்ல புகழ் ஏற்படுத்துதல் வேண்டுமென்றெண்ணி பெரியவைத்தியநாத ஐயரிடம் இச்சிறு பிள்ளையாகிய வையை வைத்தியும் தங்களுடன் பாடல் வேண்டு மென்று விரும்புகிறேமென்று கச்சேரி நடந்து வரும் போதே கூறினர்கள். பெரிய வைத்தியநாத ஐயர் ஏதும் மறுத்துக்கூருமல் தமது பக்கலில் வையை வைத்தியநாத ஐயரை இருத்திக்கொண்டு, அவரை ஊக்கி உற்சாகப்படுத்திப் பாடச்செய்தார்கள். இது

வாதப்போராகா தென்று அறிதல் வேண்டும். அப் பேர்ப்பட்ட நல்ல மனம் படைத்த அவர்கள் பொருமை யடைந்திருக்க இயலாதென்றறிதல் வேண் டும். அவர்கள் பிறரது கலையிலே அழுக்காறு அற்ற வர்களாவார்கள்.

● பெரிய வைத்தியநாத ஐயரும் சின்ன வைத்திய நாத ஐயரும் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்க ளால் நன்குமதித்துப் போற்றப்பட்டவர்கள். அவர்க ளிடம் அளவில்லா அன்பு பூண்டவர்கள். அவர்களது இசையில் நல்ல ஈடுபாடுண்டு. தமது அவையிலே தம்மால் மதித்துப் பாராட்டப் பெற்ற பெரியவைத்திய நாதஐயரைப் பதினைந்து வயது நிரம்பாத இளைய வித்துவனான வையை வைத்தியநாத சிவன் 'வித்துவத் கௌரவ' மின்றி அவமதித்தார்களாயின் பெரியபதவியும் சிறந்த புலமையும் அடைந்த சந் நிதானம் மகிழ்ச்சியடைந்திருக்க இயலுமா? தவிர வீணை சின்னையாபாகவதரை நடுவராக வைக்கவு மில்லை. வழக்கம்போல எல்லா இசைஞர்களும் அங்குக் குழுமி விழாவிலே கலந்து கொண்டார்கள். இந்த இசை நிகழ்ச்சியிலே யாவரும் மகிழ்ச்சியடைந்தார்களே தவிர வேறன்று. அக்காலத்திலுள்ள எல்லா இசைப்புலவர் களினும் இளைஞரான வையை வைத்தியநாத சிவன் சிறந்து விளங்கினார் என்ற உண்மையை இக்காலத் தோர் அறிதல் வேண்டுமென்ற எண்ணங்கொண்டே அவ்வாறு விஜயசங்கிரகத்தில் எழுதப்பெற்றது என்று உணர்தல் வேண்டும்.

● பெரிய வைத்தியநாத ஐயர் தமிழறிவில் அத்துணை சிறந்த புலவரில்லை. அவருக்கு உலக அறிவிற்குத்தக்க தமிழ்ஞானமே உண்டு. ஆனல் இசையில் நல்ல திறமுடையவர். அவருடைய சாரீரத்திலிருந்து வரும்கம்பீரமான இசையொலியிலே யாவரும் கட்டுண்டு விடுவர். மகாவைத்தியநாதசிவன் இசையில் நற்றிறம் பெற்றிருந்ததோடு தமிழறிவிலும் சிறந்த புலவராக விளங்கினர். மேலும் வடமொழிப் புலமையிலும் ஆழ்ந்த அறிவுபெற்றிருந்தார். அம்மூன்றிலும் அவர் நற்றிறம் பெற்றிருந்தமையால் அக்காலத்து இசைப்புலவர்கள் யாவரினும் சிறப்பான பேரும் புகழும் பெற்று விளங்கினர்.

திருவாவடுதுறை ஆதீனத்துச் சின்னப்பட்டம் மேலகரம் சுப்பிரமணியதேசிகர் அத்துணை மேதையாக விளங்கிய அவ்விளைஞரான வையை வைத்தியநாத சிவனுக்கு தாமே ஒரு பட்டப்பெயரைக் கொடுத்து விடாமல் பெரியவைத்தியநாத ஐயரின் சம்மதத்தைக் கேட்டுக் கொடுத்தார்கள். அவ்வாறு கேட்டுக் கொடுப்பானேன் என்று ஐயமெழுகின்றது. தவிரவும் கலையறிவுத்திறத்தில் சிறந்த பலர் அங்கு வீற்றிருந்தும் அவர்கள் வாயிலாகக் கேட்டறியாமல், ஏனைய கலையில் அத்துணைச் சிறந்த புலவரல்லாத பெரிய வைத்தியநாத ஐயரைப் பெரிதாக மதித்துச் சந்நிதானம் கேட்டதின் கருத்தென்ன என்ற ஐயமும் தீரல் வேண்டியதொன்று.

அக்காலம் பெரியவைத்தியநாத ஐயருடைய இசையில் யாவரும் மிக்க பற்றுடையவர்களாக இருந்

தனர். மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் இசையில் நல்லபற்றும், அதன் சுவையை நன்கு அறிபவராதலாலும் பெரியவைத்தியநாத ஐயருடைய இசையில் எவருக்கும் இல்லாத ஈடுபாடுடையவர் களாக இருந்தார்கள். வையை வைத்தியநாத சிவனுக்கு நல்ல புகழை உண்டாக்குதல் வேண்டு மென்றும் அவரை உலகமக்களெல்லாரும் விரும்பும் படி ஆளாக்கி விடல் வேண்டுமென்றும் சந்நிதானம் எண்ணிற்று. அவ்வெண்ணம் பெரியவைத்தியநாத ஐயர் குருபூசை தினத்தில் பாடிக்கொண்டிருந்த சமயத்தில் எழுந்ததாகும்.

பெரியவைத்தியநாத ஐயரைவிட சிறந்த இசை மேதைகள் அக்காலத்தில் யாருமில்லை ஆகையால் அவருடன் இளைஞரான வையை வைத்தியநாத சிவனைப் பாடச்செய்தால் நல்ல புகழ் உண்டாகும் என்று சந்நிதானம் எண்ணிற்று.

இசையிற் சிறந்த மேதையாகிய பெரியவைத்திய நாத ஐயருடன் இளைஞராகிய வையை வைத்தியநாத சிவனைப்பாடச் செய்தால் பெரிய புலவரோடு இளைய வித்துவானென வையைவைத்தியநாத சிவன் பாட இயலாமற் பின்வாங்கினாலும் இளைஞரான அவர் பெரும்புலவருடன் அஞ்சாமல் பாடுகிறேனென்று முன்வந்தாரே. அதே அவருடைய வித்தைக்கு ஒரு திறமாகும் என்ற புகழும் அவருக்கு வரும்படியான வாய்ப்பும் ஏற்படுமென்றும் சந்நிதானம் அவர்கள் உள்ளூர எண்ணினார்கள்.

அப்பொழுதே சந்நிதானம் வையை வைத்திய நாதசிவனிடம் நீரும் பெரியவைத்தியநாத ஐயரோடு பாடுகிறீரா என்று கேட்க இளம்வயதுடைய அவர் துடிப்புமிக்கவராய் மகிழ்ச்சியுடன் பாட ஒப்புக்கொண் டார். நீர் இளைஞராயிற்றே என்று சந்நிதானம் கேட் டதும், சந்நிதானத்தின் ஐயத்தை நீக்குதற் பொருட் டுத் தமிழறிவுப்புலமை பெற்றிருந்த வையைவைத் தியநாதசிவன் ''மானிநேர்விழி''என்ற ஞான சம்பந் தப் பிள்ளையாரின் தேவாரப்பாடலைக் கூறி அவ்வை யத்தை நீக்கினார். அத்துடன் எனக்கும் பாடுதற்கு ஆசையுண்டாகிறதென்றும் கூறினார். அவருடைய துணிவைக் கண்டு சந்நிதானம் மகிழ்ச்சியடைந்தார் கள்.

எனவே பெரியவைத்தியநாத ஐயரோடு வையை வைத்தியநாத சிவனை வாதப்போர் செய்தற்கு ஏற் படுத்திய நிகழ்ச்சியில்லை என்பதை இங்கு அறிதல் வேண்டும். இசையில் மகா மேதையாக விளங்கிய பெரியவைத்தியநாத ஐயரோடு சேர்ந்து பாடிய அவ் விளைஞருக்கு பேரும் புகழும் நிலைத்தல் வேண்டும் மென்று எண்ணிய சந்நிதானம் இவ்விளைஞருக்கு என்ன சிறப்புப் பட்டம் கொடுக்கலாமென்று பெரிய வைத்தியநாத ஐயரிடம் கேட்டார்கள். அதாவது ஒரு இசைக்கலைஞருக்கு அவரினும் சிறந்த மற்றொரு மேதாவிலாசம் பொருந்திய இசைக்கலைஞர் வாயி லாகவே ஒரு பட்டம் கொடுத்தல் சிறப்பாகும் என் றெண்ணியே சந்நிதானம் அவ்வாறு அவரைக் கேட் டார்கள் என்று அறிதல் நலம்.

சந்நிதானம் தாமாகவே அவருக்கு ஒரு பட்டத்தை வழங்குவதற்குத் தெரியாமலில்லே. சந்நிதானம் அவர்கள் மிகுந்த அறிவாற்றலுள்ளவர்கள். ஆதலால் எதுஎது எக்காலத்தில் எப்படிச் செய்தல் வேண்டுமோ அவ்வாறு செய்யும் திறமையும் புத்திக் கூர்மையும் உள்ளவர்கள். எனவே இளேஞரும் இசை மேதையும் ஆகிய வையைவைத்தியநாத சிவனுக்கு அவரினும் சிறந்த ஓர் இசை மேதையும் வயதில் மூத்தவரும் ஆகிய பெரியவைத்தியநாத ஐயருடைய திருவாக்கால் ஒரு பட்டப்பெயர் வந்தால் சிறக்கும் என்று எண்ணிஞர்கள். அவ்வெண்ணம் முற்றும் நிறைவாகிச் சந்நிதானம் பெரிதும் மகிழும்படி பெரியவைத்தியநாத ஐயர் உள்ளத்திலே "மகா" என்ற ஓர் அழகிய சொல் உருவானது சிவபெருமானது அருளல்லாது வேறன்று. பெரியவைத்தியநாத ஐயர் இளேஞராகிய வையை வைத்தியநாத சிவனுக்கு "மகாவைத்தியநாத ஐயர்." என்ற உன்னதமான பட்டப் பெயர் சிறக்கும் எனக்கூறியதும் எல்லோருடைய மனமும் குளிர்ந்தது. அப்பட்டப் பெயர் எத்துணே சிறப்பென்பதை யாவரும் அறிக.

● அக்காலத்திலே உள்ள சிறந்த புலவர்களின் திறங்களே இருந்த இடம் தெரியாமற் செய்யும் சக்தி மகாவைத்தியநாதசிவனிடம் இயற்கையாக அமைந்திருந்தது. அவர் பாட ஆரம்பித்துவிட்டால் அவருடைய குரல்வளம் ஒன்றே எல்லாவித்துவான்கள் பாட்டையும் பாடிய சுவடுதெரியாமல் அமுக்கிவிடும். அந்த நிலேயினே இராமசாமிசிவன் பயன்படுத்திக்

கொண்டு அவ்வாறு விஜய சங்கிரகத்தில் கூறியுள்ளாரே தவிர வேறில்லை என்று அறிதல் வேண்டும்.

● பெரிய வைத்தியநாத ஐயர் இயற்கையாகவே இசையில் நற்றிறம் பெற்றவர். பெரிய சாரீரத்தில் தெளிந்த இசையொலி நலத்தைப் பெற்றவர். [இக்காலம் பாடுவோருக்குமுன் மைக்கு வைத்தும் சாரீரம் தெளிவாகக் கேட்கப் படுவதில்லை. அவர் மைக்கு இல்லாமல் திறந்த வெளியிலே-தெருவிலே இரண்டாயிரம் மூவாயிரம் மக்களும் கேட்டு மகிழும் படி கானம் செய்வார்களாம். V. S. G. ] அவர் ஒத்துச் சுருதியை வைத்துக் கொண்டு மூன்று தாயிகள் வரை அநாயாஸமாகப் பாடும் ஆற்றலுள்ளவர். பரமசிவன் அக்கினி ரூபமாக நிற்கும் காலை அவனது அடியும் நுனியும் அறிதற்கியலாதிருந்தது போல அவரின் சாரீரமானது அனுமந்தரத்தாயி பஞ்சம சுரத்திற்குக் கீழும், அதி தாரத்தாயிபஞ்சம சுரத்திற்கு மேலும் பேசும். அவருக்கு எத்துணைத் தாயி நிலைவரை பேசும் என்று கண்டு கொள்ள இயலாது. எந்தத் தாயி நிலையில் நின்று பாடினாலும் அவரது தொண்டை பிசிரு இல்லாமல் வெகு தெளிவாக இருக்கும். பல இடங்களில் மிருதங்கம் இல்லாமல் ஒத்து சுருதியும் தவலையும் வைத்துக் கொண்டு எல்லா மக்களும் வியக்கும்படி பாடியுள்ளார். அவர் பாட ஆரம்பித்தால் தொலைவில் உள்ள மக்கள் தமது வேலைகளை மறந்துவிட்டுத் தம்பித்து நின்று அவ்விசையைச் செவி மடுத்துக் கேட்டுக் கொண்டு நிற்பர். சில சமயம் நாதசுரம் வாசிப்

போர் கூட இருந்து சுவாமி புறப்பாட்டின் போது நாத சுரத்துடன் சேர்ந்து பாடுதல் உண்டு. அவர் பாடி விட்டால் நாத சுரம் இருந்த இடம் தெரியாது. நாத சுரத்தில் மல்லாரியை இசைத்து வாசிக்கும் போது அவரும் அகார ஊங்காரத்துடன் மல்லாரியை இசைத்துப் பாடுவார். நாதசுரம் வாசிப்போருக்கு மேலே என்ன வாசிப்பது என்று திகைப்பு ஏற்பட்டு வாசிப்பதற்கு ஓடாது.

● பெரிய வைத்தியநாத ஐயர் சின்ன வைத்தியநாத ஐயர் போன்ற பெரும் இசைப் புலவர்கள் அக்காலத்திலில்லை. அக்காலத்திலுள்ள வீணை சின்னையா பாகவதர், ஸ்ரீ வைகுண்டம் சுப்பையர், பிச்சுமணி பாகவதர், வெள்ளங்குழிசாமி பாகவதர், பரமேசுர பாகவதர், வில்லடி மகாதேவபாகவதர், இரட்டைப் பல்லவி சிவராமய்யர், பிட்சாண்டார் கோயில் சுப்பராயர், அந்தனூர் சுப்பையர், வீணை வைத்தியநாத ஐயர், வீணைகல்யாண கிருஷ்ணபாகவதர், சரபசாஸ்திரிகள், பிடில் வெங்கோபராவ், பட்டினம் சுப்பிரமணிய ஐயர், மகாவைத்தியநாத சிவனுடைய தகப்பனுரான துரைசாமி ஐயர் போன்ற இசை மேதைகளெல்லாரும் அக்காலம் அவ்விருவர் இசைத் திறனையும் வியந்து போற்றிக் கொண்டாடி மெய் மறந்து இருக்கிருர்கள். அரசர்கள், பிரபுக்கள், மடாதிபதிகள் முதலிய யாவரும் அவரிடம் அன்பும் ஆதரவும் உடையவர்களாக இருந்திருக்கிருர்கள். அவர் தமது இசையைப் பொருள் கொடுத்து கேட்க வாய்ப்பில்லாத பொது மக்களும் கேட்டு மகிழ்தல் வேண்டுமென்

றெண்ணி நினைத்த இடத்தில் பாடி மகிழ்விக்கும் அருங்குணம் படைத்தவர். அவருடைய மேன்மை பற்றித் தனியாக ஒரு நூலே எழுதலாம். அத்துணைச் சிறப்பு அவருக்கு உண்டு.

● பெரிய வைத்தியநாத ஐயரும் சின்ன வைத்திய நாத ஐயரும் இசையில் மத்தகஜங்களென்று இராம சாமி சிவனர்கள் விஜய சங்கிரகத்திலே கூறியுள்ளார். இளைஞராகிய வையை வைத்தியநாத சிவன் அவ்விருவ ரோடு சேர்ந்து பாடும் போது அவர்களிருவரும் இளைஞ ராகிய வையை வைத்தியநாத சிவனின் இசையை வியந்துமூக்கின் மேல் விரல் வைத்து திகைத்துப் பரவ சமானுர்களென்றும் கூறியுள்ளார். அவ்விருவரும் எங்க ளால் இது போல் பாட இயலாது என்று தம் உள்ளத் தைத்திறந்து உண்மையை உள்ளது உள்ளபடி சந்நிதா னத்திடம் கூறியுள்ளார்கள். அவ்வாறு திறந்த உள்ளம் படைத்த அவ்விருவரும் மகாவைத்தியநாத சிவன் இசையில் பொருமை கோபம் உடையவர்களாக இருக்க வில்லை. தவிர "மகா" என்ற சிறப்புப் பட்டத்தை அவ் வித்துவானுக்கு இடலாம் என்று பெரிய வைத்தியநாத ஐயர் மடாதிபதிகளிடம் கூறினுர். அவர் கூறிய அச் சொல்லையே அசரீரியாக வந்தது என்று இராமசாமி சிவன் குறித்தார் எனலாம். அவ்வுண்மைகள் எனக்கு நன்கு தெரியுமாதலால் இங்கு எடுத்துக் கூற வேண் டியதாயிற்று. ஆனல் அக்காலத்தில் அவர்களுடைய திறத்தை மேவி அவ்விருவருக்கும் ஒப்பாகவும் மேலா கவும் பாடியவர் இளைஞரான மகாவைத்தியநாத சிவன் ஒருவரேயாகும். இது உண்மை.

● இராமசாமி சிவனுக்குத் தமது மனைவி தமது குழந்தை குட்டிகள் முதலியவர்களிடம் உள்ள அபிமானத்தை விட மிகச் சிறந்த அன்பையும் அபிமானத்தையும் தமது தம்பியார்பால் வைத்திருந்தார். தமது உயிரையே தம்பியார்பால் வைத்திருந்தார். அவ்விருவரின் உடல்கள் வெவ்வேறே ஒழிய உயிர் ஒன்றுதான் என்பது அவர்களின் ஒவ்வொரு செயல்களின்று அறியலாம். உயிருக்குயிரான தம்பியார் திடீரென மறைந்ததும் தாளமுடியாத அதிக துக்கத்தினால் தம் பூர்ண மான கலைகளை மறந்து, தம் நிலைகள் மறந்து, தம் மன மொழி மெய்யாகிய கரணங்களெல்லாம் மறந்து அவ்வாறெல்லாம் எழுதி விட்டார் என்றெண்ணுக. அந் நிலையிலே அவர்களெழுதியது மிகை போலப்படும். அவருடன் நெருங்கிப் பழகியோருக்கு ஏன் அவ்வாறு எழுதினார் என்ற உண்மை புலனாகும். அறியாதோருக்கு இது விபரீதமாகவே படும். தம்பியாரின் மறைவுக்குப்பின்பும் அவருடைய புகழ் வெகுகாலம் ஓங்கி நிற்றல் வேண்டும் என்ற ஆசை மிகுதியாலே எதனையும் எண்ணாமல் அவ்வாறெல்லாம் எழுதி விட்டார்.

● பெரிவைத்தியநாத ஐயரும் சின்னவைத்தியநாத ஐயரும் மகாவைத்தியநாதசிவனிடம் பாடத் தெரியாமல் இருக்கவில்லை. மூத்தோராகிய அவ்விருவரையும் மகாவைத்தியநாதசிவன் தரக்குறைவான இழி சொல்லால் பேசிவிடவில்லை. உண்மையிலேயே அவ்விருவரும் மகாவைத்தியநாதசிவனை ஊக்கப்படுத்திப் பெருமை சேர்த்தார்கள். இசையின் நயத்தைக்கண்டு மகிழ்ந்தார்கள். சாரீரவளத்தில் பரவசமானார்கள்.

சந்நிதானம் ''தங்களுடன் இச்சிறு பிள்ளையாகிய வையை வைத்தியநாத சிவனும் சேர்ந்து பாடல் வேண்டுமென்று விரும்புகிறேம்'' என்று கூறியதும் தம் நண்பர் துரைசாமியின் குமாரரான அச்சிறுவன் நன்ருகப் பாட வேண்டுமே என்று கவலே கொண் டார்கள். அச்சிறுவன் பாடப்பாட அவ்விருவரும் ''ஆஹா, பேஷ், நன்றுநன்று'' எனக்கூறி உற்சாகப் படுத்தி அவ்விசையைப் பெரிதும் மெச்சிப்பேசி அவையி லுள்ளார் மகிழ்ந்து கொண்டாடச் செய்தார்கள். இசையின் நற்பகுதி வருமிடத்தில் தம்முடைய மகிழ்ச் சிக் குறிகளைப் புலப்படுத்திஞர்கள். எங்களிருவரையும் விட பல்வகையிலும் வெகு சிறப்பாகப் பாடுகிரு ரென்று சந்நிதானத்திடம் உளமார வாய்விட்டு அன்பு கனிந்த உள்ளத்தூய்மையுடன் கூறிஞர்கள். இதுவே உண்மைச் செய்தி.

● மகாவைத்தியநாதசிவன் இராமநாதபுரம் சென்றி ருந்தபோது அரச அவையில் சிறந்த இசைப்புலவர் களாக விளங்கிவந்த குன்னக்குடி கிருஷ்ணையரும், பட்டினம் சுப்பிரமணிய ஐயரும் மகாவைத்தியநாத சிவனுடன் சேர்ந்து பாடிவரும்போது அவ்விருவரும் தொடர்ந்து பாட இயலாமல் திறமற்று வாளாவிருந்தார் கள் என்றும், அவ்விருவரையும் பாட இயலாமற் செய்த மகாவைத்தியநாத சிவனுடைய திறத்தைப் பாஸ்கர சேதுபதி அரசர் புகழ்ந்து சித்தமகிழ்ந்தா ரென்றும் விசய சங்கிரஹத்தில் காண்பதும் அத் துணைப் பொருத்தமில்லை. அவ்விருவரும் நற்றிறம் பெற்ற இசைமேதைகள். அவர்கள் எத்துணை முயன் ருலும் கடவுளின் திருவருளால் அமையப்பெற்ற மகா

வைத்தியநாத சிவனுடைய கௌள சாரீரத்திற்கு முன் அவர்களுடைய சாரீரம் எடுபடாது என்பது உண்மைதான். அதனை அவர்களும் நன்கறிந்தவர்கள் தாம். ஆனால் மகாவைத்தியநாதசிவனே போற்றும் படியான இசையாற்றல் அவ்விருவரிடமும் உண்டு. இவ்வாறு இராமசாமிசிவன் எழுதியது தம் தம்பியாரின் உண்மையான மேலாம் திறத்தை வருங்காலச் சந்ததியார்கள் அறிதற்கு எடுத்துக்கூறியதேயன்றி அவர்களைக் குறைத்துக் கூறுவதற்கன்று.

● பட்டினம் சுப்பிரமணிய ஐயரும் குன்னக்குடி கிருஷ்ணையரும் சிறந்த இசைப்புலவர்கள். அவர்களின் இசைத்திறங்கள் பலவகையிலும் சிறப்புடைத்து. இராமநாதபுரம் அரசர் முத்துராமலிங்கத் தேவர் தாம் பட்டத்திற்கு வந்ததும் குன்னக்குடி கிருஷ்ணையரையும் பின் சில ஆண்டுகளில் பட்டினம் சுப்பிரமணிய ஐயரையும் ஆஸ்தான வித்துவான்களாக்கினர். அவ்விருவர்பாலும் அரசரவர்களுக்கு அளவுகடந்த அன்பும் ஆதரவும் மரியாதையும் உண்டு. பட்டினம் சுப்பிரமணிய ஐயருக்கு கட்டையான சாரீரம். கனமானதொனி, அவர்கள் செய்திருக்கும் தானவர்ணங்களின் நடை, கீர்த்தனங்ளின் அமைப்பு, ஆகியவை அவர்களுடைய இசைத் திறமையை எடுத்து விளக்கப் போதுமானவை. குன்னக்குடி கிருஷ்ணையரவர்கள் அக்காலப் பண்டித பாமர மக்களால் பெரிதும் மதிக்கப் பெற்றவர். அவர்கள் செய்துள்ள தில்லானா, கீர்த்தனை ஆகிய இசையமைப்பினின்று அவர்களது இசைத்திறமை

செவ்வனே விளங்கும். அவ்விருவரும் மகாவைத்திய நாதசிவனவர்களுடன் சேர்ந்து பாடியதில்லை. அவர்கள் மகாவைத்தியநாதசிவனின் குரல்வளம் பற்றியும் இசைஞானத்திறம் பற்றியும் நன்கறிந்து மட்டற்ற மகிழ்ச்சியுற்றனர். அவ்விருவர்பால் அளவுகடந்த மதிப்பை மகாவைத்தியநாதசிவனும் வைத்திருந்தார்.

● இராமநாதபுரம் சமத்தானாதிபதியாகிய 'ரசிகசிகாமணி ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட ராஜகெம்பீர ராஜகோலாகல ராஜபரமேச்வர பாண்டிய மண்டல சோழமண்டல பிரதிஷ்டாபக ஸ்ரீமத் ஹிரண்யகர்ப யாஜி ரவிகுல ராஜா' முத்து விஜயரகுநாத பாஸ்கரஸேதுபதி மகாராஜா அவர்கள் திருக்கல்யாண விழாவில் மகாவைத்தியநாத சிவனவர்களை வரவழைத்து இராமலிங்க விலாசத்தில் திருமணப் பெருவிழாவிற்கு வந்திருந்த உறவினர்களும், பெரியோர்களும் உள்ள அவையிலே முதல் நாள் இசைக் கச்சேரியும், மற்றுமொருநாள் கண்ணப்ப சுவாமிகளின் திவ்விய சரித்திரமும் நடத்தினார்கள். பாஸ்கர சேதுபதியவர்கள் சிறுவயது முதலே இசையறிவும் தமிழறிவும் நிரம்பப்பெற்று புலவர்கள் வரிசையில் மேலாம் சிறப்புடையவராகவும், சமத்தானாதிபதியாகவும், கொடைவள்ளலாகவும், மன்னுயிரைத் தன்னுயிராக எண்ணிக்காத்துச் செங்கோல் நடாத்தி எல்லா மக்களாலும் கொண்டாடப்பட்டவர்களாகத் திகழ்ந்தார்கள். *

---

* விசயசங்கிரகத்திலும் காண்க

● பாலவனத்தம் சமீன்தாராகிய பாண்டித்துரைத் தேவரவர்களுக்கு இருபத்திரண்டு அல்லது இருபத்தி மூன்ருவது வயது நடந்து கொண்டிருந்தது. அவர் இசையைச் செம்மையுற வளர்த்த வள்ளலாவார். தமிழறிவோடு இசையறிவிலும் நல்ல திறமுடையவ ராயிருந்தார். இசையில் வரும் திட்பநுட்பங்களை அறிந்து மகிழ்பவர்.

அவர் ஒரு சமயம் இசைப் புலவர்கள் பலரை ஒன்று சேர்த்து ஓர் அவை நிறுவி இசையிலுள்ள நுட்பங்களை யெல்லாம் ஆராய்ந்து உலகோர் அறியும் படிச் செய்தல் வேண்டுமென்று எண்ணினர். அதன் படி (1888 ஆம் ஆண்டாக இருக்கலாம்) பல இசைப் புலவர்களையும் வர வழைத்து ஒரு இசையரங்கம் நடத்தி விழாவாகச் சிறக்கச் செய்தார். இதுவே முதன் முதலாகக் கூட்டிய ஓர் இசை அவையாகும். அந்த இசை விழாவானது ஏழு நாட்கள் தொடர்ந்து நடந்தது.

அந்த அவை பொலிவுற்று விளங்கும் வகையில் எழுபத்திரண்டு வயதுள்ள குன்னக்குடி கிருஷ்ணையர், நாற்பத்தாறு வயதுள்ள நெய்க்காரப் பட்டிப் பல்லவி சேஷய்யர், நாற்பத்து நான்கு வயதுள்ள மகாவைத் தியநாத சிவன், நாற்பத்து மூன்று வயதுள்ள பட்டி னம் சுப்பிரமணிய ஐயர், மற்றும் புல்லாங்குழல் சரப சாஸ்திரிகள், பிடில் நாராயணசாமி ஐயர், பிடில் வெங்கோபராவ், திருக்கோடிக் காவல் பிடில் கிருஷ் ணையர், மாயூரம் வீணை வைத்தியநாத ஐயர், மிரு

தங்கம் நாராயணசாமியப்பா, மிருதங்கம் சாமா்ரா, மிருதங்கம் துக்காராம், கடம் நராயணசாமி ஐயர் ஆகிய இசை மகாமேதைகள் அமர்ந்திருந்தார்கள். இன்னும் பல இசைப் புலவர்களும் நாதசுர வித்து வான்களும் கூடிக் குழுமியிருந்தனர்.

அந்த இசை விழாவிலே பாண்டித்துரைத் தேவர் வீற்றிருக்க இசை பற்றிய செய்திகளை வித்துவான் கள் ஒருவருக்கொருவர் உரையாடி வந்தார்கள். இசை பற்றிய நுட்பமான பல செய்திகளையும் ஒருவருக் கொருவர் அறிந்து வியத்தற்கு அவ்விழாவானது ஒரு வாய்ப்பளித்தது. ஒவ்வொரு நாளும் இசைப் புலவ ரின் இசை நிகழ்ச்சி நடந்து வந்தது. பாண்டித் துரைத் தேவரின் கருத்துக்கிணங்க அந்த அவை யிலே ஒவ்வொரு வித்துவானும் புதிதான ஒரு தாளத் திலே பல்லவி அமைத்து நிரவல் சுரம் பாடி வந்தார்கள்.

முதல்நாள் குன்னக்குடி கிருஷ்ணையர்பாடினர். அவர் காப்பி இராகத்தை ஆலாபித்து தானம் பாடியபிறகு ‘‘ **மால் மருகரிங்கே வருவாரடி மாமேரு பாண்டித் துரைசாமி உய்ய** ’’ என்ற ஒரு பல்லவிக்குரிய சொற்களைக் கைக்கொண்டார். அவர் வயதில் மூத்தவர் முதியவர். இசையில் நற்றிறம் வாய்ந்தவர். இராமநாதபுரத்துச் சமத்தானத்துத் தலைமைபெற்ற ஆதீனவித்துவான். அவர் தம் கற்பனை யில் பதினெரு அட்சரமடங்கிய ஒரு தாளத்தை உரு வாக்கிக் கொண்டார். அத்தாளத்தைத் திச்ரசாய்ப்பும் கண்ட சாய்ப்பும் வருவதுபோல அமைத்துக்கொண்

டார். திச்ரசாய்ப்பு என்பது (ரூபகம்) ஆறுமாத்திரைக் கால அளவும், கண்டசாய்ப்பு என்பது (சம்பை) ஐந்து மாத்திரைக்கால அளவும், கொண்டதாகையால் (6+5=11) பதினெரு அட்சரகால மாத்திரைத்தாள மாயிற்று. இதனை "தகதகதக–தகதகிட" என்ற அளவு வருவது போலத் தாளமிட்டுப் பல்லவி பாடினர். அப்பல்லவி வருமாறு :—

இராகம்:—காப்பி. தாளம்:—ஏகாதசம். திச்ரசாய்ப்பும் கண்ட சாய்ப்பும் கொண்ட (6+5=11) பதினெரட்சரம். இது மாத்திராக்காலத் தாளம். சமஎடுப்பு.

தக தக தக    தக தகிட

பா = , ம க ம | க ரி = ரி நி̇ ச ||
மா ல் ம ரு க ரி ங் கே . .

நி̇ ச = , ரி ம ரி ம | பா = ; , ||
வ ரு . வா . . ர டி . .

ச்ா = , ச் நி த நி பா | ப ம = நி ப ப ||
மா . மே . . . ரு பா ண் டி . த்

ம க = மா நி ப | ரி ம க ரி = ச நி̇ ச ||
து ரை சா . மி உ ய் . . . . ய

மேலே குறிப்பிட்ட இப்பல்லவியை வித்தாரமாக்கி நிரவல் சுரம் ஆகியவற்றைச் சிறக்கப்பாடி அவையோர் களைக் களிப்பித்தார். அது காறும் எந்த இசைப் புலவரும் காப்பி இராகத்திலே பல்லவி பாடியதில்லை.

குன்னக்குடி கிருஷ்ணையர் இத்தாளத்தை **ஏகாதசம்** என்று கூறினர். அவர் காபி இராகத்திலே "ததர தானி தனதிரனு" என்று ஒரு தில்லானுச் செய்துள் ளார். அதன் சரணமாக இப்பல்லவியின் "மால்மரு கரிங்கே வருவாரடி" என்ற அடியைக் கைக்கொண் டுள்ளார்.

● இரண்டாம் நாள் விழாவிலே பட்டினம் சுப்பிர மணியஐயருடைய இசை நிகழ்ச்சி நடந்தது. அவரு டைய இசையிலே அக்காலத்து இசைப் புலவர்கள் எல்லோருக்கும் தனி மதிப்புண்டு. பாண்டித்துரைத் தேவருக்கு அவரிடத்தில் பெரும் மதிப்பும் அவருடைய இசையில் நல்ல ஈடுபாடும் உண்டு. அவரிடத்தில் அலாதியான அன்புடையவராய் இருந்தார். அன்று பட்டினம் சுப்பிரமணிய ஐயர் பல்லவிக்குரிய இராக மாக வேகடை இராகத்தை எடுத்துக் கையாண்டார். எல்லா இராகத்தினும் வேகடை இராகம் அவருடைய சொந்த சொத்து. அத்துணை அழகாய்ப் பாடுவார். அவருக்கு வேகடை பட்டினம் சுப்பிரமணிய ஐயர் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. அவர் தனக்குக் கைவந்த அந்த வேகடை இராகத்தை நன்ருகப் பாடிப் பின்பு அதில் தானத்தைப் பாடி வித்தரித்தார். அவர் தன்னுடைய கனமான சாரீரத்தில் ஹும் காரத் தொனியுடன் பாடிய அத்தானமானது யாவருடைய உள்ளத்திலும் பாய்ந்து அவர்கள் உடலை ஆட்டிற்று.

அவ்வாறு தானம் பாடும் போதே பல்லவி பாடு தற்குரிய "**ஆடுசுன்னுரே கனக சபலோ, ஆனந்த**

**மூர்த்தி பக்துலகு நடனம்"** என்ற சொற்களை அமைத்துக் கொண்டார். இதை அவர் நடை முறையில் இருக்கும் **மிச்ர ஜாதி ஜம்பை தாளத்திலேயே** அமைத்தார். இது பத்து அட்சரங் கொண்டதும் முப்பத்தைந்து தாளத்தில் ஒன்ருகிய சாதாரணத் தாளமேயாகும். இது யாவருக்கும் எளிமையானதேயாகும். ஆனால் அவர் இத்தாளத்தைக் கையாண்ட முறையே அற்புதமானது. எவருடைய மனத்துக்கும் எட்டாததாயிருந்தது. அதாவது மிச்ர சாதி ஜம்பை என்பது ஒரு அடியும் அதைத் தொடர்ந்து ஆறு விரல்கள் எண்ணியும் போடுதல் வேண்டும். இது ஏழட்சரகாலமாகிறபடியால் மிச்ரஜாதிலகு என்ற அங்கத்தைப் பெற்றது. பின்பு ஒரு தட்டாலாகிய அனுதிருதத்தையும், அதன் பின்பு ஒரு தட்டும் ஒரு வீச்சுமாகிய ஒரு திருதத்தையும் போடல் வேண்டும். அனுதிருதமும் திருதமும் சேர்ந்து மூன்றட்சரகாலமாயிற்று. எனவே (7+3=10) பத்து அட்சரமும் ஒரு ஆவர்த்தனமாகும். இதை இவ்வாறு இரு முறை போட்டால் பல்லவி முழுதும் முடியும். இம்முறையிலே முதற் பல்லவிச் சுற்றுக்குத் தாளமிட்டார். முதற் சுற்றுத் தாளம் இரண்டாவர்த்தனம் கொண்ட 20 அட்சர அளவுடையது.

இப்பல்லவியை இரண்டாம் சுற்றுப் பாடும் போது கையிலிட்டு வரும் தாளத்தைப் பேதப்படுத்தினர். அதாவது தாளத்தைக் கண்டலகு வாக்கினர். கண்டலகு என்பது ஒரு அடியும் அதைத் தொடர்ந்து எண்ணும் நான்கு விரல்களுமாகும். இந்த கண்டலகு

வாகிற ஐந்து அட்சரத்தை நான்கு முறை போட்டால் பல்லவியின் இரண்டாம் சுற்று முற்றுப் பெறும். இவ்வாறு போடுதல் யாவருக்கும் எளிமையானதே யாகும். இதில் சிறந்த திறம் ஒன்றுமில்லை. மேலே கூறிய இருவகையும் யாவருக்கும் சாதாரணமாகவே தோன்றும்.

இப்பல்லவியை மூன்றும் சுற்றுக அவர் பாடும் போது கையிலிட்டு வந்த அந்தத் தாளத்தை வேறு வகையாக மாற்றினர். அதாவது ஒரு தட்டும் அதைத் தொடர்ந்து எண்ணும் மூன்று விரலும் ஆக நான்கட்சரம் கொண்ட ஒரு லகு ஆயிற்று. பின்பு ஒரு தட்டும் இரண்டு விரல் எண்ணிக்கையும் ஆக மூன்றட்சரத்தை இருமுறை போட்டார். ஆகவே $(4+3+3=10)$ பத்தட்சரமாயிற்று. திச்ரலகுவை திச்ரசாய்ப்பாக அதாவது ரூபகதாளமாக இட்டுக்கொண்டார். இந்தப் பத்தட்சரத்தையும் இரு முறை தாளமிடும் போது 20 அட்சர காலத்தில் அப்பல்லவி முற்றும் முடியும்.

இப்பல்லவியை நான்காம் சுற்றுக அவர் பாடி வரும்போது தாளத்தை மற்றுமோர் பேதம் செய்து வகைப்படுத்தினர். அதாவது ஒருதட்டும் அதைத் தொடர்ந்து நான்குவிரல்களும் எண்ணல் வேண்டும். இதுகண்ட ஜாதி லகுவாகிய ஐந்து அட்சரத்தைக் குறிக்கும். இந்தத்தாள அட்சரம் ஒவ்வொன்றும் திச்ரகதியாக அமைதல் வேண்டும். அப்போது $(5\times3=15)$ பதினைந்து மாத்திரைக்காலமாகும். பின்பு கண்டசாய்ப்பாக ஒருமுறை போடுதல் வேண்டும். அப்போது $(15+5=20)$ இருபது மாத்திராக்காலமா

கும். இது பத்தட்சரமாகும். இவ்வாறு இருமுறை போட்டால் பல்லவியின் முழு அமைப்பும் முடிவுறும். எனவே இப்பல்லவி பாடும் முறையை அவர் கையாளும்போது தாளத்தை நான்கு விதமான கிரியைகளால் முறைப்படுத்தி இட்டுவந்தார். பல்லவி வருமாறு:—

இராகம்:—வேகடை. தாளம்:—மிச்சிரஜம்பை. நான்கு வகைநடை. ஒரு ஆவர்த்தனம் இருபது மாத்திராக் காலம். பல்லவி இரு ஆவர்த்தனமுடைத்து. சம எடுப்பு.

I முதற்சுற்று. மிச்ரஜாதி ஜம்பை. இருமுறை தாளமிடுதல் வேண்டும்.

கா ரீ கா மா - ப த நீ த ப ம ப -
ஆ . . டு சு ன் . ணு . . .

ரீ ; க ம த ப பா ரீ சா | கா க ரி | கா ம ப தா பா ||
ரே . . . . . . . . . க ன . க ச . ப லோ

ச்ா ; ச் க் ரி ச் நீ ச்ா - தா பா ச்ா ; ச்ா ; - நீ ; |
ஆ . . . ன ந் . த மூ . ர்த் . தி . ப க்

தா பா | ச்ா , ப க ரி சா ||
து ல கு . ந ட . னம்

II இரண்டாம் சுற்று. கண்டலகு. நான்கு முறை தாளமிடுதல் வேண்டும்.

கா ரீ கா மா - ப த ரி ச் நீ த ப ரீ ; |
ஆ . . டு சு ன் . . ணு . . ரே .

க ம <u>த ப பா</u> ரீ சா கா க ரி கா ம ப தா பா ||
. . . . . . . . க ன . க ச . ப லோ

ம ப த ப ச்ா ரி ச் நி ச் த ப–ம ப த ப ச்ா ; |
ஆ . . . . ன ந் . . த . மூ . . . ர்த் .

ச்ா ; – ரி ச் நி ச் த ப ச்ா ச்ா , ப க ரி சா ||
தி . ப க் . . து . ல கு . ந ட . னம்

மூன்ரும் சுற்று. ஒரு சதுஸ்ரலகு. இரண்டு திச்ரலகு. இருமுறை தாளமிடுதல் வேண்டும்.

கா க ரி கா – ம ப த ப ச்ா – ச் நி த ப |
ஆ . . . டு . . . சுன் ஞ . . .

ரீ ; = க ம <u>த ப பா</u> ரீ சா |
ரே . . . . . . . . .

கா க ரி = கா ம ப த ப ச்ா ||
க ன . க ச . ப . லோ

<u>க்ா , ம்</u> ரி ச் ரி ச் நி ச் த ப ச்ா - க ம ப த |
ஆ . . . . ன ந் . . . . . த மூ . . .

நி நி த ப = ச்ா ; ரி ச் நி ச் |
. . . ர்த் தி . ப . . க்

த ப ச்ா = ச்ா , ப க ரி சா ||
து . ல கு . ந ட . னம்

IV நான்காம் சுற்று. ஒரு கண்ட லகு (திச்ரகதி) ஒரு கண்ட சாய்ப்பு. இருமுறை தாளமிடுதல் வேண்டும்.

கா க ரி கா - மா ப த நீ - த ப ம ப ரீ -
ஆ . . . டு சு ன் . ணு . . . ரே

; க ம த ப பா - ரீ சா கா | க ரி கா = ம ப தா பா ||
. . . . . . . . . க ன . க ச . ப லோ

ம ப த ப ச்ா - க்ம் ரீ ச்ா - ரிச் நிச் த ப -
ஆ . . . . ன ந் . த மூ . . . . .

ரீ சா ;- க ம பா தா | பா ச்ா = , ப க ரி சா ||
ர்த் தி . ப . க் து ல கு . ந ட . னம்

மேலே குறிப்பிட்டபடி அப்பல்லவியை நான்கு சுற்றுக்கும் நான்கு வகையான தாள நடையை ஏற் படுத்திக் கொண்டு, லயம் தவருமல், மாத்திரக்காலம் தவருமல் தாளமிட்டு வெகுவித்தாரமாக நிரவல் செய்து அப்பல்லவியைப்பாடிச் சுரமும் பாடினுர். அவை யோரின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை; குன்னக்குடி கிருஷ்ணயர், மகாவைத்தியநாத சிவன், பல்லவி சேஷய்யர் உள்ளிட்ட பல புலவர்களும் தலையசைத்து மெய்மறந்து அவ்வருஞ் செயலைப்பாராட்டினர். அங்குள்ள சுவைஞர்கள் யாவரும் அவருடைய செய்

திறத்தில் மயங்கிப் புகழ்ந்து கொண்டாடினுர்கள். பாண்டித்துரைத்தேவர் அவர் அவ்வாறு அமைத்துக் கொண்ட தாளநுட்பத்திறங்கண்டு மிகவும் பெருமைப் பட்டார்.

● மூன்ரும் நாள் இசை விழாவிலே நெய்க்காரப் பட்டி பல்லவி சேஷய்யரின் இசை நிகழ்ச்சி நடை பெற்றது. அவர் பல்லவி பாடுவதில் வெகு சமர்த்தர். அதன் காரணமாகவே அவர் பெயருக்கு முன்னுல் பல்லவி என்ற அடையைச் சேர்த்துப் பல்லவி சேஷய் யரென்று அழைக்கப் பெற்ருர். அக்காலத்தில் அவரி டம் எல்லா இசைப் புலவர்களுக்கும் ஒரு பயமுண்டு. தாளத்தைப் புதிது புதிதாக உருவாக்கும் திறம் அவருக்கு உண்டு. அப்படி உருவாக்கும் தாளகதி யினைப் பிறர் எளிதில் போட இயலாது. அத்துணை நெறடாகவும் கெட்டியாகவும் வகுப்பார். ஒரு தாள அட்சரத்துள் அடங்கும் நடைபேதம் கதிபேதம் அவை களில் அற்புதம் தோன்றப்பாடும் ஆற்றல் உள்ளவர். அவர் சாதாரணமாக ஒரு பல்லவி பாடினுலும் அதன் உள்அமைப்பைப் பிறர் வெகு நாட்கள் பயின்ற பிறகே அதன் நுட்பம் அறிந்து தாளம் போட்டு இசைக்க இயலும். அவரிடும் தாளம் ஒவ்வொன்றிலும் ஒரு நயம் உள்ளூடு அமைந்திருக்கும். அவரிடத்தில் அனைத்து வித்துவான்களும் மதிப்பு வைத்திருந்தனர்.

சேஷய்யர் அன்றை நாள் நிகழ்த்திய இசை நிகழ்ச்சியில் பல்லவி பாடுதற்குத் தோடி இராகத்தை எடுத்துக் கொண்டு மிகவும் வித்தாரம் செய்து பாடி ஞர். அதில் தானத்தைப் பாடிச் சிறக்கச் செய்தார்.

அவர் ஏற்கனவேயுள்ள ஒரு சுலோகத்தின் சில அடி களைக் கைக்கொண்டு பல்லவிக்கு உரிய சொற்களாக எடுத்துக் கொண்டார். அதாவது **"ஸ்ரீக்ருஷ்ண ரத்னம் ஸுரஸேவ்யரத்னம் பஜாமஹே யாதவ வம்ச ரத்னம்"** என்பதே அச்சொற்களாகும். இப்பல்லவியைத் தாமே புதிதாகக் கற்பனை செய்த **கலிநடம்** என்ற ஒரு தாளத்தில் பாடினர். அத்தாளத்தின் பெயர் கேள்விப்படாததொன்று. இத்தாளம் முப்பத்தொரு அட்சரம் வருமாறு அமைத்துக் கொண்டார். முப்பத்து ஓரட்சரம் கொண்ட தாளமும் கலிநடம் என்ற பெயரும் முப்பத்தைந்து தாளப் பட்டியலிலும், நூற்றெட்டுத் தாளப் பட்டியலிலும் காணப்பெறவில்லை. ஆனல் 'கலி' என்ற எழுத்தைக் கடபயாதி கணக்கு முறைப்படி கணக்கிட்டால் க-என்ற எழுத்து 1-என்றஎண்ணையும், லி – என்ற எழுத்து 3- என்ற எண்ணையும் குறிப்பிடும். இந்த இரண்டு எண்களையும் சேர்த்துப்பார்த்தோமானல் பதின்மூன்று (13) என்ற நெம்பர் கிடைக்கும். இந்த நெம்பரை கடபயாதிக் கணக்குப்படி மாற்றி அமைத்தால் முப்பத்தொன்று (31) என்ற நெம்பராக மாறிநிற்கும். இந்தத்தாளம் முப்பத்தொரு அட்சர காலமாகக் கற்பனை செயதாராகையால் இந்த முப்பத்தொன்று என்ற நெம்பரை பெயரினுலும் அறிந்து கொள்ளவே **''கலிநடம்''** என்று இத்தாளத்திற்கு கற்பனைப் பெயர் அமைத்தார் என்று அறியக்கிடக்கின்றது.

கலிநடம் என்ற முப்பத்தொரு அட்சரகாலதாளமானது ஒரு அடியும் அதைத்தொடர்ந்து நான்கு

விரல் எண்ணிக்கையும் சேர்ந்து ''கண்டஜாதிலகு'' வாக வந்ததை ஒருமுறையும்; ஒரு அடியும் அதைத் தொடர்ந்து இரண்டுவிரல் எண்ணிக்கையும் சேர்ந்து வந்த ''திச்ரஜாதிலகு''வாக ஒரு முறையும்; மறுபடியும் ''கண்டஜாதிலகுவாக ஒருமுறையும்; 'திச்ரஜாதிலகு'வாக ஒருமுறையும்; மற்றும் ஒருமுறை ''கண்டஜாதிலகுவாகவும்; பின்பு ஒரு அடியும் அதைத்தொடர்ந்து ஆறுவிரல் எண்ணிக்கையும் சேர்ந்து வந்த ஏழு அட்சரமாகிய ''மிச்ரஜாதிலகு'' வாக ஒருமுறையும்; 'திச்ரஜாதிலகு'வாக ஒருமுறையும் வரிசை பெற்று முறையாக போடுதல் வேண்டும். அதாவது ''5+3+5+3+5+7+3=31 முப்பத்தொரு அட்சரங்கள் வரும். இதில் கண்டஜாதிலகு மூன்று முறையும், திச்சிரஜாதிலகு மூன்று முறையும், மிச்ரஜாதிலகு ஒரு முறையும் வந்து இத்தாளவட்டத்தைப் பூர்த்தி செய்யும். திச்ரஜாதிலகுவை ரூபகதாளமாக இட்டு வந்தார்.

பல்லவியின் சுரக்குறிப்பு வருமாறு:—

இராகம்:—தோடி. தாளம்:—கலிநடம்.

5+3+5+3+5+7+3 = 31 அட்சரங்கொண்டவை. அபூர்வமான கற்பனைத்தாள அமைப்பு. சம எடுப்பு.

பா ; . ; ; - பா தா ப ம கா - மா ; |
ஸ்ரீ . . . . க்ரு . . . . ஷ் ண .

ப த ப த = பா ; ; ; ||
ர . . த் ன ம் . .

பா கா மா ; – பா , த நீ தா - தா ; |
ஸ்ய . ர . ஸே . . . . வ் ய .

மா பா = ப ம கா கா ; ||
ர . . . த் ன ம்

மா கா மா ; ; - ப த பா ; ; ; ||
ப் . ஜா . . ம . ஹே . . .

பா , நி த ப மா – பா ; பா ;–
யா . . . . . த . வா .

மா , த ப ம கா – மா ; |
வ ம் . . . . ச .

பா தா = நீ பா தா மா |||
ர . த் ன ம் .

இப்பல்லவியை அவர் வெகு நேரம் பல விசித்திர வேலைப் பாடுகளுடன் வித்தாரம் செய்து பாடினார். மகாவைத்தியநாத சிவன் உள்ளிட்ட எல்லா இசைப் புலவர்களும் கைதட்டித் தலையசைத்து ஆரவாரம் செய்து வியந்து புகழ்ந்து கொண்டாடினார்கள். பாண்டித்துரைத் தேவர் ஒவ்வொரு நாள் இசை நிகழ்ச்சி

யையும் கேட்டுச் சுவைத்து மகிழ்ந்து வந்தார். அத்துடன் அந்நிகழ்ச்சிகளைத் தாமே அவையில் பாடி வருவதான ஒரு எண்ணத்தை அடைந்தவராக விளங்கினார்.

● நான்காம் நாள் நடந்த இசைவிழாவிலே இசையில் இமயச் சிகரம் என்று மதிக்கப்பெற்ற மகா வைத்தியநாத சிவன் அமுதகானம் செய்தார். அவருடைய இசையைப் பற்றி எடுத்துக் கூறவேண்டியதில்லை. அவருடைய குரல்வளத்தின் மகிமையால் எத்துணை சாதாரணமாகப் பாடினாலும் இசையிலுள்ள எல்லாச் செயல்களும் மனமொழி மெய்களுக்கும் அப்பாலாய்நின்று ரஸவத்தாய் விளங்கும். அவருடைய சாரீர வளத்திலும், இசைச் செயலாற்றலின் நுட்பத் தன்மையிலும் எல்லாவித்துவான்களுக்கும் மிகுந்த ஈடுபாடுண்டு. அன்று நடைபெற்ற கச்சேரியில் அவர் இசை சம்பந்தமாகச் செய்ய இருக்கும் இசைத் திறத்தினை அறிதற்காக எல்லோரும் சுறுசுறுப்பாகவும் ஆர்வத்தோடும் வீற்றிருந்தார்கள்.

மகாவைத்தியநாதசிவன் அன்று பல்லவி பாடுதற்குரியதாக காம்போதி இராகத்தை எடுத்துக் கொண்டார். அதை வெகுவித்தாரம் செய்து அவையோர்கள் ஆஹா 'ஓஹோ' என ஒலியெழுப்பி மகிழ்ச்சி மீதூரச் செய்தார். அதுபோன்ற காம்போதி இதுவரை எவரும் கேட்டதில்லை என்று கூறத்தக்கதாக இருந்தது. அவர் பாட ஆரம்பிக்கும் போதே யாவரும் மெய்மறந்தனர். அவரது குரல்நயம் அங்குள்ளோர் அனைவரையும்

ஆட்கொண்டுவிட்டது. அவர் பாடும்போதே பல்லவிக் குரியதான **''ப்ரபோ நடனப்ரபோ ஆனந்த நடனப்ரபோ கனகசபா நடராஜப்ரபோ மாம்பாஹி''** என்ற சொற்களை அமைத்து உருவாக்கினுர்.

இந்தப் பல்லவியின் அமைப்பைச் சற்றுக் கவனித்தல் வேண்டும். 'கொண்டு கூட்டி' என்று சொல்லுகிருர்களே அவ்வாறு இது அமைந்து நயம் பெறுகிறது. முதலில் 'ப்ரபோ என்றும் அதனை ஆதாரமாகக் கொண்டு அதற்குமுன்னுல் 'நடன' என்ற சொல்லைக் கூட்டியும், அதற்கு முன் 'ஆனந்த' என்ற சொல்லைக் கூட்டியும், ப்ரபோ என்பதற்கு முன் 'கனகசபா நடராஜ' என்று கூட்டியும், கடைசியாக 'மாம்பாஹி' என்று அமைத்தநயம் அறியற்பாலது. அவர் காம்போதி இராகத்தைச் சிறக்கப்பாடி அதில் தானத்தை வெகு விரிவாய் பாடினுர். தானத்தின் இறுதியில் தொடர்ந்து நிறுத்தலில்லாமல் சுழன்று சுழன்று வருவதுபோலச் சக்கர தானத்தை பாடினுர். அவையோர் யாவரும் ஆட்டுரல் குழவி போல உடம்பைச் சுற்றிய படியே இருந்தனர். பிறகு பல்லவி பாடுதற்கு நூற்று எட்டுத் தாளத்திலொன்ருகிய **''பார்வதீலோசனம்''** என்ற தாளத்தை எடுத்துக் கொண்டார்.

**'பார்வதீலோசனம்'** என்ற தாளமானது அறுபத்து நான்கு அட்சரங்கொண்டவை. அதனுடைய அங்க அடையாளங்கள் வருமாறு:

## "0 0 1 1 0 0 — 8 1 1 8 — 1 1 8 1 1"

பார்வதீலோசனம் என்ற தாளத்திலே நான்கு திரு தங்களும், எட்டுலகுக்களும் மூன்று குருக்களும் ஆகிய அங்கங்கள் அமைந்துள்ளன. இந்த அங்கங்கள் அமைதி பெற்று வரும் வகைகளைச் சற்று ஊன்றிக் கவனித்தல் வேண்டும். இவ்வங்கங்கள் மூன்று பகுப் பாகப் பிரிக்கப்பெற்றுள்ளன. முதற்பகுதியில் இரண்டு திருத அங்கங்களும், பின்பு இரண்டு லகு அங்கங் களும், அதன் பின்பு இரண்டு திருதங்களும் முறை யாக வருகின்றன. எனவே முன்னும் பின்னும் இரண்டு இரண்டு திருத அங்கங்களும் இடையிலே இரண்டு லகு அங்கமும் பெற்று மிருதங்கயதியை அடைந்து வருதல் கவனத்திற்குரியது. இரண்டாம் பகுதியில் முதலில் ஒரு குரு அங்கமும், பின்பு இரண்டு லகு அங்க மும் அதன் பின்பு ஒரு குரு அங்கமும் முறை பெற்று வருகின்றது. எனவே முன்னும் பின்னும் ஒவ்வொரு குரு அங்கமும் இடையிலே இரண்டு லகு அங்கமும் பெற்று டமருகயதியை அடைந்து வருதல் கவனத்திற் குரியது. மூன்றும் பகுதியில் முதலில் இரண்டு லகு அங்கங்களும் பின்பு ஒரு குரு அங்கமும் அதன் பின்பு இரண்டு லகு அங்கங்களும் முறைபட்டு வருகின்றன. எனவே முன்னும் பின்னும் இரண்டு இரண்டு லகு அங் கங்களும் நடுவே ஒரு குரு அங்கமும் வந்து மிருதங்க யதியை விளக்குகின்றது.

இவ்வாறு இத்தாளத்தின் அங்கங்களை மூன்று கூரு கப்பிரித்துப் பார்க்காவிடில் அதன் அங்க அமைப்பின்

நுட்ப இலக்கணம் அறிதற்கு இயலாதனவாக இருக்கும். இந்த அங்கங்கள் எல்லாம் முறைபடும் போது இது ஸர்ப்பயதியாக அமைதிபெறும். இத்தாளத்தின் அட்சரங்களை அங்க அடையாளப்படி எண்ணிப் போடுதல் வேண்டும். ஒவ்வொரு அட்சரத்திற்கும் இரண்டு மாத்திரைகள் வீதம் அறுபத்து நான்கு அட்சரங்களுக்கும் நூற்று இறுபத்தெட்டு மாத்திராக்காலங்களாக இத்தாளம் அமைந்து வரப்பெறும். திருதம் என்ற அங்கம் நான்கு மாத்திரைக் கால அளவையும், லகு என்ற அங்கம் எட்டு மாத்திரைக் கால அளவையும், குரு என்ற அங்கம் பதினாறு மாத்திரைக் கால அளவையும் பெற்று வரல் வேண்டும். குரு என்ற அங்கம் நிசப்த கிரியை யாதலால் அதைச் சின் முத்திரை கொண்டு இடப் புறமும் வலப் புறமும் (8+8=16) பதினாறு மாத்திரைக் காலம் வருவதுபோல இடல் வேண்டும். இத்தாளத்தை முறைப்படுத்தி கையில் இட்டுக்கொண்டு மகாவைத்தியநாத சிவன் பாடிய பல்லவியின் சுரக் குறிப்பு வருமாறு:

இராகம்: காம்போதி. தாளம்: பார்வதீலோசனம். 64 அட்சரம்.

அங்கங்கள்

**001100 - 8118 - 11811** - சம எடுப்பு

| **0** | | | **0** | | | **1** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச் | ப | தா | - | ச்ா | ; | - | தா | ரீ | ச் நி தா |
| ப்ர | . | . | போ | . | | ந | ட | ன | . . |

1 0 0

பா ம க ப த ச் த - ச்ா ; - ச்ா ;

ப்ர . . . . . . . போ . . . .

8 1

பா தா ச்ா ; ச்ா நீ தா பா-பா ம க ப த ச் த

ஆ . . . ன ந் . த ந ட . ன . ப்ர .

1 8

ச்ா ; ச்ா ; - பா தா ச்ா ரீ ம் க் க் ரி ச்ா ;

போ . . . க ன க ச பா . . . . .

1 1

ச் த ரீ ச்ா நி த - பா ; மா கா

ந . ட ரா . . . . ஜ .

8

ப த ச்ா ப த ச்ா ச் நி தா நி த பா-

ப்ர . . . . . போ . . . . .

1 1

ம க ரி ச ச ரி க ம - ப த ச்ா ம க ப த ||

மா . . . . . . . ம் பா . . . . ஹி .

மகாவைத்தியநாத சிவன் மேலே குறிப்பிட்ட அப் பல்லவியை வெகு வித்தாரம் செய்து நிரவல் சுரம் பாடி யாவரையும் மகிழ்வித்தார். இப்பல்லவியை இரண் டாங் காலம் மூன்ரும் காலம் பாடிய திறத்தைக் கண்டு அங்குள்ள இசைப் புலவர்களெல்லோரும் மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தனர். அவரது குரல் வளம் எளிமை பெற்று அநாயாஸமாக வரும் ஆற்றலிலும் அப்பல்லவி யின் தாளத்தை யாவரும் புரிந்துகொள்ளும் படி கையி லிட்டு வந்த எளிமையையும் கண்ட இசைப் புலவர் யாவரும் நாம் இவ்வாருன திறம் பெற்ருேமில்லையே என்று ஏங்கினர். பல்லவி சேஷஐயரும், பட்டினம் சுப்பிரமணிய ஐயரும், குன்னக்குடிக் கிருஷ்ணையரும் ஆகிய புலவர்மணிகளிடமிருந்து வெளிப்பட்ட **'ஆஹா'** காரத்திற்கு ஓரளவேயில்லை. எல்லாவற்றிற்கும் மகு டம் வைத்த மாதிரி அந்த இசை நிகழ்ச்சி விளங்கிற்று.

மகாவைத்தியநாத சிவனுடைய இன்னிசை வெள் ளத்திலே தம் மனத்தைப் பறிகொடுத்துப் பாண்டித் துரைத் தேவர் அமர்ந்திருந்தார். வெகு நேரம் வரை அவர் பாடியிருந்தும் அங்குள்ளோர் அனைவரும் இன் னும் சிறிது நேரம் பாட மாட்டார்களா என்று சாத கப் பட்சி போல எதிர் நோக்கி இருந்தார்கள். மகா வைத்தியநாத சிவன் பாடி முடித்ததும் அவரும், குன்னக்குடி கிருஷ்ணையர், பட்டினம் சுப்பிரமணிய ஐயர், பல்லவி சேஷஐயர் ஆகிய நால்வரிடமும் பாண் டித்துரைத் தேவர் அவர்கள் அளவளாவித் தம் மகிழ்ச்சியை அறிவித்தார்கள். மேலும் அந்நால்வருக்

கும் கைகளுக்கு வீர சங்சலி இட்டார்கள். வீர சங்கலி பொன்னுலாகியது.

குன்னக்குடிக் கிருஷ்ணையருக்கு இட்ட வீரசங்கிலியின் முகப்பிலே வைரக்கல் ஒளிவீச பதிக்கப் பெற்றிருந்தது. பட்டினம் சுப்பிரமணிய ஐயருக்கு இட்ட வீர சங்கிலியின் முகப்பிலே இருட்டில் தீபச்சுடர் தோன்றுவது போன்றதொரு மாணிக்கக்கல் பதிக்கப்பெற்றிருந்தது. பல்லவி சேஷுஐயருக்கு இட்ட வீரசங்கிலியின் முகப்பிலே நல்ல ஒளிவீசும் நீலக்கல் பதிக்கப்பெற்றிருந்தது. மகாவைத்தியநாதசிவனுக்கு இட்ட வீர சங்கிலியின் முகப்பிலே தகதகாயமான ஒளிதரும் மரகதக் கல் பதிக்கப் பெற்றிருந்தது. அவ்வாறுன வீரசங்கிலியின் முகப்பிலே வெவ்வேறுன இரத்தினக் கல் பதித்திருந்ததை நோக்கும்போது அவ்வித்துவான்களுடைய இசைத்திறத்தின் தராதரத்தினைப் பாண்டித்துரைதேவர் நன்கறிந்து பாராட்டியது போல அவ்வீர சங்கிலிகள் அளிக்கப் பெற்றனவோ என்று எண்ணும்படி இருந்தது.

● ஐந்தாம் நாள் இசைவிழாவிலே மாயூரம் வீணை வைத்தியநாத ஐயருடைய வீணைக்கச்சேரியும், ஆரும் நாள் இசைவிழாவன்று சரபசாஸ்திரிகளுடைய புல்லாங்குழல் கச்சேரியும், ஏழாம் நாள் இசைவிழாவில் நாதசுரக்கச்சேரியும் நடந்து சிறப்புற்றது. அவர்களும் தக்க பரிசில்களும் சன்மானங்களும் அடைந்தார்கள். இவ்விசை விழா போன்று அதுவரை எங்கும் எவராலும் நடத்தப் பெற்றதில்லை

என்ற சிறப்புத் தோன்றப் பாண்டித்துரைத் தேவரவர்கள் நடத்திப் பெருமையடைந்தார்கள். அதன்பின்பு பாண்டித்துரைத் தேவரவர்கள் தமக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நான்கு அல்லது ஐந்து இசைப் புலவர்களை அவ்வப்போது வரவழைத்து இசை நிகழ்ச்சிகள் ஏற்படுத்தியும், இசை பற்றிய ஆராய்ச்சியினை அவர்களைக் கொண்டு செய்வித்தும் வந்தார்கள். பாண்டித்துரைத் தேவரவர்கள் இசைக்கு அத்துணைச் சிறப்புக் கொடுத்து அக்கலையைப் பல இசைக் கலைஞர்களைக் கொண்டு ஆராய்ந்து வளர்த்து வந்ததுடன், அக்காலத்து முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் ஆகிய மூன்று தமிழ்ச் சங்கமும் தமிழ் மொழிக் கலையைத் திறம்பட வளர்த்து வந்தது போல 1901 ஆம் ஆண்டில் மதுரையிலே நான்காவது தமிழ்ச் சங்கம் ஒன்றைத் தோற்றுவித்துத் தமிழ்க் கலையை வளர்த்தார்கள். அக்காலம் கலைகளை வளர்த்த வள்ளல் போல பாண்டித்துரைத் தேவரும் கலை வளர்த்த செம்மல் என்ற புகழைப் பெற்றூர். அவர் தாம் வாழ்ந்த 1911 ஆம் ஆண்டுவரை நம் நாட்டுக் கலை வளர்ச்சிக்கே பாடு பட்டுச் சிறந்தார்.

● மகாவைத்தியநாத சிவன் மைசூர் சமத்தானம் சென்றிருந்த அக்காலை தீட்சிதர் அவர்களியற்றிய 'ஸ்ரீ சுப்பிரமண்யாயநமஸ்தே' என்ற காம்போதி இராகக்கீர்த்தனை, 'மீனுக்ஷிமேமுதம்தேஹி' என்ற பூர்வீகல்யாணி இராகக் கீர்த்தனை ஆகிய இவ்விரண்டையும் மைசூர் அரண்மனையிலே இசைத்தட்டுப்

பதிவு செய்து இருக்கிருர்கள் என்பர். இதுபற்றிச் சிலசமயங்களிலே மகாவைத்தியநாத சிவன் தமது வீட்டிலே அளவளாவும்போது 'நான் வாய் திறந்து பாடாமலிருக்கும்போதே ஒரு இயந்திரத்தின் மூலம் எனது பாட்டை நானே கேட்டிருக்கிறேன்! இது ஒரு அதிசயந்தான் என்று வியந்து அடிக்கடி கூறு வார்கள்.

● மகாவைத்தியநாதசிவன் மைசூரைச் சேர்ந்த சிருங்கேரி சென்று அம்மடத்தின் சாரதா பீடத்தில் ஆசாரிய சுவாமிகளாக (லோகதுரு) எழுந்தருளிய சச்சிதானந்த சிவாபிநவ ஸ்ரீ நரசிம்மபாரதி சுவாமி களைச்சந்தித்தார்கள். சந்நிதானத்திலே கானம் செய்வதற்கு ஆசாரிய சுவாமிகள் கட்டளையிட்டருளி யதும் அக்கணமே நாகசுராவளி இராகத்திலே 'ஸ்ரீ சங்கரகுருவரம் சிந்தயாமிபவஹரம்' என்ற சம்ஸ்கிருத கீர்த்தனமொன்றை இயற்றிப்பாடி ஆசா ரிய மூர்த்தியைத் துதிசெய்தார்கள். இந்நிகழ்ச்சி யும் சிவகதையும் செய்து ஆசாரியாளுடைய அனுக் கிரகத்துக்கு ஆளானுர்கள். அவர்கள் பன்முறையும் சிருங்கேரிமடத்திற்குச் சென்று இசைநிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்கள்.

● அவர்கள் இரண்டுமுறை நவராத்திரிக்காலங் களில் சிருங்கேரி சென்று பூசாகாலங்களில் இசை நிகழ்ச்சிகளும் ஏனையகாலங்களில் சிவகதைப் பிரசங் கங்களும் செய்திருக்கிருர்கள். அவற்றைச் செவி மடுத்த ஆசாரிய சுவாமிகள் அவருடைய சிவபக்தி

யின் சிறப்பையும், வடமொழி தென்மொழிகளில் அவர்க்குள்ள அறிவையும், இசையின்பத்தையும், சிவகதையை வாசாமகோசரமாய்ச் செய்யும் முதிர்வையும் உணர்ந்து மகிழ்ந்தார்கள். மகாவைத்திய நாதசிவனை ஆசாரியசுவாமிகள் நல்வாழ்த்துக் கூறும் முகமாக:—

“மஹா தே₃வம் மஹா வைத்₃யம் த்வம்பாலய க்ருபாலய, ஶைலிநஸ்தே ஸத₃ாபேக்ஷ்ய: கூ₃ல்பாயு வேத₃ பார:”

என்ற சம்ஸ்கிருத சுலோகத்தைக் கூறி ஆசி செய்து வீர கண்டை கட்டிய தோடாக்களும் மற்றும் பல வகைச் சன்மானங்களும் செய்து போற்றினார்கள். சில சமயங்களிலே அவருடைய இசை வளத்தின் இனிமையிலும் சிவபக்திப் பெருக்கெடுத் தோடும் வண்ணம் செய்யப் பெறும் சிவ கதையிலும் ஆசாரிய சுவாமிகள் அவர்கள் தம்மை மறந்து அப்படியே நிட்டையிலிருந்து விடுவார்கள். அந் நிட்டையிலிருந்து விடுபடப் பல மணி நேரங்களாகும். உலகத்திற்கெல்லாம் லோககுருவாகவும் சகல கலைகளின் பாரங்கதராகவும் சாரதா பீடாதிபதியாகவும் உள்ள ஸச்சிதானந்த சிவாபிநவ நரசிம்ம பாரதி சுவாமிகளையே மெய் மறக்க வைத்த அவருடைய இசை பற்றியும் சிவ கதைப் பிரசங்க மகிமை பற்றியும் புகழுதற்குரிய நாவைப் படைத்தவர் எவரும் உண்டோ! அவருடைய புலமை பெரும் சக்தி வாய்ந்ததாகும். இந் நிகழ்ச்சி 1880 முதல் 1885க்குள் நடை பெற்றதாகும்.

● மகாவைத்தியநாத சிவனும் அவரது தமையனு ராகிய இராமசாமிசிவனும் தம்முடன் வேற்று மனிதர்கள் இருக்கும் காலம், கச்சேரிகளில் தமக்கு அருகில் பலர் சூழந்துள்ள சமயம், ஓர் அரசதர்பார், சமீன்தார்கள், பெருஞ்செல்வர்கள் ஆகியோருடன் இருக்கும் நேரம், அப்பெரிய மனிதர்களோடு நடந்து கொள்ளும் வகை, இசைநிகழ்ச்சியில் செய்ய வேண்டியவகை, அரசர், பெரியோர் முதலியவர்களிடம் பேசவேண்டிய முறை ஆகியவைகளைத் தாங்களிருவர் மட்டும் ஒருவருக்கொருவர் கலந்து பேசிக்கொள்ளுவதற்குத் தனியான ஒரு குறிப்புமொழியின் மூலம் பேசிக் கலந்து கொள்ளுவார்கள். அக் குறிப்பு மொழி இன்னதென்று யாருக்கும் விளங்காது. நான் (பல்லவி சுப்பையா பாகவதர்) அவர்களிடம் ஏழாண்டுகள் இசை மாணவனுக இருந்து அவர்களின் முழு அன்பையும் பெற்றபோது தாங்களிருவரும் பேசிக் கொள்ளுவது என்ன பாஷை என்று கேட்டதற்கு அவர்கள் இதனைப் பாண்டவ பாஷை யென்று சொல்வதுண்டு. விராட நகரத்திலே பாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் செய்த காலத்துத் தமக்குள் வழங்கி வந்ததைப்போன்றதாகுமென்று கூறி அதனை எனக்கும் உணர்த்தினர்கள். இந்தக் குறிப்புமொழியை ராதாமங்கல பாஷையென்றும் கூறுவர். இந்தக் குறிப்பு மொழியானது வட மொழி எழுத்துக்களுக்கும், தமிழ் மொழி எழுத்துக்களுக்கும் பொருந்தி வருவதாகும்.

● மகாவைத்தியநாத சிவனவர்களும் இராமசாமி சிவனவர்களும் பேசி வந்த அக் குறிப்பு மொழிக்கு ஒரு

சுலோகமுண்டு. அதன் அமைதியிலேயே அக் குறிப்பு மொழி பேசப் படல் வேண்டும். அச்சுலோகம் வருமாறு:

"அ கோ க கோ ஙகச் சைவ, சடோ ஞணே
2 3 4

தபோ நம: || யஶோ, ரஷோ லஸச் சைவ, வஹ க்ஷள: இதிகிரமாத் ||" இச்சுலோகத்தின் முறைப்படி அ-வர்க்கத்திற்கு முதலாவது க-வர்க்கமும், இரண்டாவது க-வர்க்கத்திற்கு மூன்ருவது க-வர்க்கமும், ங-வர்க்கத்திற்கு நான்காவது க-வர்க்கமும்; இது போல நான்கு ச-வர்க்கத்திற்கு நான்கு ட-வர்க்கமும், ஞ-வர்க்கத்திற்கு ண-வர்க்கமும், நான்கு த-வர்க்கத்திற்கு நான்கு ப-வர்க்கமும்; ந-வர்க்கத்திற்கு ம-வர்க்கமும்; ய-வர்க்கத்திற்குக் கிரந்த எழுத்திலுள்ள ச (ஶ)-வர்க்கமும்; ர-வர்க்கத்
5

திற்கு ஷ வர்க்கமும்; ல-வர்க்கத்திற்கு ஸ-வர்க்கமும் வ-வர்க்கத்திற்கு ஹ-வர்க்கமும்; க்ஷ-வர்க்கத்திற்கு ள-வர்க்கமும் வருவதுபோல எழுத்துக்களை மாற்றி மாற்றிப் பேசுதல் வேண்டும். இதனைத் தமிழ் மொழியில் கூறும்போது "அ-க, ங-ழ, ச-ட, ஞ-ண, த-ப, ந-ம, ய-ஶ (இது மட்டும் கிரந்த எழுத்து), ர-ஷ, ல-ஸ, வ-ஹ, க்ஷ-ள" இந்த வர்க்கங்கள் பிறகாரம் தமிழிலும் பேசிக்கொள்ளுவர். தமிழிலுள்ள ற-ன என்ற இரண்டும் பேசும்போது ர-ந என்ற எழுத்தினுலே உச்சரிக்கப்பெறும். இவற்றுள் 'ஷ-ஸ-ஹ-க்ஷ' என்பவை தமிழுடன் பழக்கத்தில் உள்ளமையால் இவ்வெழுத்துக்களை அப்படியே கைக் கொள்ளப்பெற்றன. பொதுவாகக் 'கடவுள்' என்பது

‘அசஹ்ருக்ஷ’ என்றும், ‘பெரியவர்’ என்பது ‘தெஷிஂஹஷ்’ என்றும், ‘நல்லவர்’ என்பது ‘மஸ்ஸஹஷ்’ என்றும், ‘தேவீ’ என்பது ‘பேஹீ’ என்றும், ‘புன்னகை’ என்பது ‘தும்மஜ’ என்றும் குறிப்பு மொழியில் பேசுதல் வேண்டும். சிவன் சகோதரர்கள் இதனை இவ்வாறு மாறி மாறி வரும் வர்க்கப் பிரயோகங்களை வெகுவேகமாக உச்சரித்துப் பேசிக் கொள்வார்கள். பெரிய பெரிய செய்திகளையெல்லாம் வேறொருவருக்குப் புலனாகா வண்ணம் அறிந்து கலந்து விடுவார்கள். இக்குறிப்பு மொழியின் முறைகளையறிந்து பயின்று வந்தாலும் எளிமையாகவும் வேகமாகவும் பேசுதல் என்பது இயலாததாகும்.

● மகாவைத்தியநாத சிவனவர்களின் காலத்தில் உள்ள இசையன்பர்களனைவரும் மூன்று இசைக் கலைஞர்களின் இசையையே பெரிதும் மதித்து உயர்வாகப் போற்றிக் கூறுவர். அவ்வாறு கூறுவோருள் முதலாவது பிக்ஷாண்டார் கோயில் சுப்பராயர், இரண்டாவது அந்தனூர் சுப்பையர், மூன்றுவது மகாவைத்தியநாத சிவன். இம்மூவருடைய இசையும் ஒவ்வொரு வகையிற் சிறப்புற்று விளங்கின என்பர். யாருடைய இசையை அவர்கள் கேட்டாலும் இம்மூவருடைய இசையே அவர்களது மனதில் நின்று அவர்களைப்பற்றி உடனே பாராட்டிப் புகழ்வது வழக்கம். வேறெவர் பாடினும் அவ்விசையிலுள்ள நயம் இம்மூவருள் எவரேனும் ஒருவரின் செய்திறத்தின் செயற்பாடுகளே போல அவர்கள் மனத்தின் முன் நிற்கும்.

● பிட்சாண்டார் கோயில் சுப்பராயரவர்களின் இசையைக் கேட்டவர்கள் கச்சேரி நடந்தவிடத்திலிருந்து தம் வீடு வரை வந்து திண்ணையில் உட்கார, அவரது மனைவியர் வந்து உண்ணுவதற்கு அழைத்தும் எழுந்து செல்ல இயலாமல் ஐம்புலன்களும் அடங்கி ஒடுங்கி உன்மத்தர்கள் போலாகிவிடுவராம்.

● அந்தனூர் சுப்பையரின் இசையைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது தமது பக்கத்திலிருப்பவர்கள், அல்லது புதிதாக அங்கு வருவோர் போவோர் ஆகிய அவர்களின் முகங்கள் செயல்கள் ஒன்றும் புலனாகாது. தங்களது சுய உணர்ச்சி வரும்வரை அவரது இசை காதில் ஒலித்துக் கொண்டிருக்கும்.

● மகாவைத்தியநாதசிவனுடைய இசையைக் கேட்டுக் குழுமியிருக்கும் மக்களனைவரும் அவருடைய தோற்றத்தைக் கண்டவுடனேயே மௌனிகளாகி விடுவர். அவர்களுடைய சரீரமெல்லாம் தண்ணென்ற ஒரு குளுமை உணர்ச்சி மெல்லப் பரவிவரும். மகாவைத்திய நாதசிவன் தம்புராச் சுருதியோடு தமது குரலை இணைத்துச் 'சங்கரா' என்று கூறி இசைப்பார். அவர் அவ்வாறு இசைக்கும் அத்தருணத்திலேயே அனைவரும் தம்மை மறந்து விடுவார்கள். மகாவைத்திய நாத சிவனுடைய வேகமான நுண்ணிசையானது மக்களுடைய செவிப்புலனுக்கும் அத்தருணத்திலேயே கேட்போர் மனத்திலே பதிவுற்று உள்ளத்தைத் தொட்டுவிடும். 'நல்லபாம்பு மகுடியின் நாதத்தைக் கேட்டதும் படம் விரித்தாடி நின்று பிறகுதம் தலையைக்

கீழே போட்டு விடுவதுபோல' யாவரும் அவரது இசை யிலே மயக்குற்று விடுவர். அவர்கள் பாடிமுடிக்கும் வரை அவர்களுக்கு உலகமே சுழல்வது போன்ற பிரமை தட்டிவிடும். மக்கள் அனைவரும் என்ன ரயில் வேகம், என்ன சாரீரம், என்ன துரிதம், என்ன குளுமை, என்ன இசைத்தெளிவு என்று எக்காலமும் தமது மனத்துக்குள்ளே அவ்விசையைப் பற்றிச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்து கொண்டிருப்பர். அவர்களது அடுத்த இசை நிகழ்ச்சியைத் தாங்கள் கேட்கும் வரை இடையில் பலநாட்களானாலும் பலமாதங்களானாலும் அவ்விசையின் வேகமான ஓட்டமும், அதன் தெளி வும், அதன் அழகமைந்த திறமும் மக்களனைவரையும் உணர்ச்சிக்கு உள்ளாக்கி ஏனையகாலங்களிலும் அவர் கள் இசைப்பது போலவே எண்ணிக் கண்களை மூடி அதனைச் சுவைக்கச் செய்யும் ஆற்றலுடையதாகி விடும். அவருடைய இசை மக்களின் மனத்தைவிட்டு என்றும் விலகாத தொன்று.

● அவர் எத்துணையோ தக்க இடங்களிலெல்லாம் இசை நிகழ்ச்சிகள் செய்து அங்கங்கே அவர்களால் செய்யப் பெற்ற மரியாதைகளின் வரிசைகளை எல்லாம் எழுதுவது இயலாதது ஆகும். ஏதோ சிலவற்றையே குறிப்பிட இயலும். அவ்வாறே இங்கு குறிக்கவும் பெற்றது. அவர் நிறையச் சம்பாதித்து அச்செல்வங் களைச் சேகரித்துத் தாம் ஒரு இலட்சாதிபதி ஆகிவிட வில்லை. அக்காலத்தில் அவர் பொருளைச் சேகரித்துத் தாமே வைத்திருப்பதாயின் எச் செலவுகளும் நீங்கச் சாதாரணமாகக் கணக்கிட்டாலும் நான்கு அல்லது

ஐந்து லட்சரூபாய் சொத்துக்கள் இருக்கும். (அது இக்காலத்தின் மதிப்பிற்கு பதினைந்து அல்லது இருபது லட்ச ரூபாய் சொத்தாகும்.V.S.G.) அவ்வாருன பிரபுத் துவத்தைத் தாம் எளிதாக அடைந்திருக்கலாம். ஆயினும் தங்களுக்கு ஓர் அளவு சீவன உபாயத்திற்கு மட்டும் சிறிது வைத்துக்கொண்டு ஏனைய பொருள் களைத் தர்மகாரியங்களுக்காகவே கொடுத்து உள்ளனர் நல்ல மனம், நல்ல சிந்தனை, பரோபகார குணம் ஆகியவை நிரம்பப் பெற்றவர்கள்.

● மகாவைத்தியநாதசிவன் செய்துள்ள தர்மங்களா வன:- தமது சொந்த ஊராகிய வையைச் சேரியி லுள்ள புராதனமான சிவத்தலமாகிய அகத்தீசுரர் கோயிலின் பிரகாரத்து மதிற்சுவரையடுத்து ஒரு சிறு கோயிலெடுத்து அதில் நடராஜா விக்கிரகத்தையும், சிவகாமசுந்தரி அம்பாளின் விக்கிரகத்தையும் பிரதிட்டை செய்து கும்பாபிடேகம் முதலியன செய்து நித்தியப்படி நடக்கவேண்டிய அபிஷேகம் தீபாராதனை நைவேத்தியங்களுக்காகச் சிறிது நிலம் எழுதி வைத்து அத்தர்மத்தால் சிவபுண்ணியத்தைச் சம்பாதித் துள்ளார்.

● மிகவும் ஏழ்மையான பல பிராமணக் குடும்பங் களில் ஏழு வயது முதல் ஒன்பது வயது வரை உள்ள பையன்களுக்குத் தமது சொந்தச் செலவிலேயே உப நயனக்(பூணூல்) கல்லியாணம் செய்து வைத்துள்ளார். அவருடைய பதினாறு வயது முதல் நாற்பத்து ஏழு வயது வரையிலுள்ள இடைக்காலமாகிய முப்பத்தி ரண்டு ஆண்டுகளிலே எழுபத்தாறு சிறுபையன்

களுக்கு உபநயனத்தைத் தமது சொந்தச் செலவி லேயே நடத்தியுள்ளார். அக்காலத்தில் ஒரு பூணூல் கல்யாணத்திற்கு நூற்றிஐம்பது முதல் முந்நூறு ரூபாய் வரை செலவாகும். வைதீகம், சாப்பாடு ஆகிய எல்லாவகைகளுக்கும் சேர்த்தே செலவாகும்.

● ஏழைக் குடும்பங்கள் பலவற்றில் கன்னிப் பெண் களுக்குக் கல்யாணம் செய்ய இயலாமல் தவிப்பார்கள். அப்பேர்ப்பட்ட பல குடும்பங்கள் மகாவைத்தியநாத சிவனை அண்டி நிலைமையைக் கூறுவார்கள். அக்காலத் தில் பெண்களுக்கு ஏழுமுதல் பன்னிரண்டு வயதிற்குள் ளாகக் கல்யாணம் செய்தல் வேண்டும். எத்துணை ஏழையாக இருந்தாலும் மேலே குறிப்பிட்ட வயதிற்குள் ளாகத் தம் பெண்களைக் கலியாணம் செய்து கொடுக்கா விடில் அவர்களைத் தீண்டத் தகாதவர்களாகக் கருதி அவர்கள் வீட்டிலே நடக்கும் நல்லது, பொல்லாதது ஆகிய எந்த விசேடத்திற்கும் செல்ல மாட்டார்கள். அவர்களை மிருகத்தினும் கேவலமாக மதித்து அவமதிப் பார்கள். அது அக்காலத்தில் நடந்து வந்த செயல். அவ்வாறு கல்யாணம் செய்தற்குப் பொருளில்லாமல் மகாவைத்தியநாத சிவனை யாசித்து வருபவர்களுக்கு, கல்யாணம் செய்பவர்களிடம் என்ன தொகை இருக் கின்றதோ அதுபோக, பாக்கியுள்ள கல்யாணச் செலவு களையெல்லாம் அவர்களே கொடுத்துக் கல்யாணத் தைக் காலந்தவருது நடத்தி உதவியுள்ளார். நூற்றுக் கணக்கான கல்யாணங்களை ஏற்று உதவி செய்து கன்னியாதானப் பலன்களைப் பெற்றுள்ளார். சில கல் யாணங்களின் முழு பொறுப்புக்களையும் ஏற்று நடத்தி

யது உண்டு. இதுபோன்ற தர்ம காரியங்களுக்கு உத வும்போது அவர்கள் வீட்டிலுள்ள தாயார் தமையனுர் மனைவி அண்ணி ஆகிய எவரும் எதுவும் கூறமாட்டார் கள். இந்தத் தர்ம காரியங்களுக்கு அவர்களும் விருப்ப முள்ளவர்களாகவே இருப்பார்கள்.

● இன்னும் பண்டாரம் பரதேசி போன்ருேருக்கு நாள்தோறும் சோறு இடுதலும், வழிப்போக்கர்களுக்கு அவர்களது களைப்பு நீங்கக் குளித்தல், பூசை செய்தல், அன்னமிடல், களைப்பு நீங்க இருக்க இடமளித்தல் முத லிய அளவிட்டுச் சொல்ல முடியாத தர்மங்களைப் புரிந் துள்ளார். சந்நியாசிகள், யதிகள் முதலியவர்களுக்குப் பிட்சையளித்தும் போற்றுவார். அவர்களுடைய ஆசி கள் சிவன் சகோதரர்களுக்கு நிரம்ப உண்டு. அவரு டைய அருஞ்செயல் என்னவெனில் தம்மிடம் பயில வரும் எந்தமாணவனும் வெளியிடம் போய் உண்ணுதல் கூடாது. தமது வீட்டிலேயே உணவருந்துதல் வேண் டும். மாணவர்களும் அவர்கள் வீட்டை விட்டு வெளி யிற் செல்ல விரும்பமாட்டார்கள்.

● அவர் தம்மிடம் பயிலவரும் மாணவர்களிடம் மிக்க அன்புடன் இருப்பார். மாணவர்களைக் குற்றேவல் செய்யச் சொல்லுதல் அவருக்கு அறவே பிடிக்காது. மாணவர்கள் தமக்குத் தாமே செய்யும் வேலையைத் தடுக்கமாட்டார். புத்திசாலி மாணவனுயினும், புத்தி யிற் சற்று மந்த கதி உடைய மாணவனுயினும் அவர் களனைவரிடமும் வெறுப்பின்றி ஒரே தன்மையதான அன்பு கொண்டே விளங்குவார். அவர் மாணவனைத் தனியாக அமர்த்திப் பாடம் சொல்லுவதில்லை. ஆனுல்

ஒவ்வொரு மாணவனும் இசைப்பகுதியில் எந்தெந்த நிலையிலே அறிவு வளர்ச்சியைப் பெற்றிருக்கிருனென்பதை மட்டிலும் தெரிந்து வைத்திருப்பார். ஏதேனும் சில இசை நயங்களை இசை மாணவனுக்கு உணர்த்துதல் வேண்டுமென்று கருதினுல் தமக்கு ஓய்வு உள்ள நேரத்திலே அம்மாணவனை அழைத்துத் தனக்கு அப்பாடம் மறந்ததுபோலப் பாவித்து, அது எப்படி, உனக்கு ஞாபகம் வருகிறதா என்று கேட்டு, பின்பு நினைவு வந்தவர்போல அதை மெல்லினமாக இசைத்து அம்மாணவன் மனத்தில் பதிவு ஏற்படும் படிச் செய்து விடுவார். இத்திறம் வேறு எந்த இசை வித்துவான்களிடமும் அமைந்ததில்லை. அம்மா திரியான முறையை எனக்குச் * சற்றுக் கூடுதலாகவே பயிற்றுவித்து இசையின் திட்ப நுட்பப் பகுதிகளைச் செவ்வனே உணர்த்தியுள்ளார். அடுத்தபடியாக உமையாள்புரம் சுவாமிநாத ஐயரும், பழமாநகரி சுவாமிநாத ஐயரும் அத்திறனை அடைந்துள்ளார்கள்.

● மகாவைத்தியநாத சிவனிடம் படிக்கவரும் இசை மாணவர்களுக்கு அவரது தமையனுராகிய இராமசாமி சிவனவர்களே பாடம் சொல்லுதல் வழக்கம். அவர் மாணவர்களைத் தம் தம்பியாருக்குத் தெரியாவண்ணம் நிரம்பக் குற்றேவல் செய்யும்படித் தூண்டுவார். இசை கற்க வரும் மாணவர்கள் இசை கற்கும்போதும், அதனைச் சிந்தனை செய்யும்போதுமன்றி ஏனைய நேரங்களில்

---

* முதல் இசைமாணவன் வாசுதேவ நல்லூர் பல்லவி சுப்பையா பாகவதர்.

வேலை ஏதுமின்றிச் சோம்பி உட்காருதல் கூடாதென்பது அவருடைய கருத்தாகும். ஒவ்வொரு மாணவனுக்கும் தகுந்தாற்போல எப்படியோ ஒரு வேலையைச் செய்ய வாய்ப்பேற்படுத்திவிடுவார். மாணவர்களுக்குத் தாம் கற்பிக்கும் இசைப்பாடம் வரவில்லையாயின் கோபமுடையவர் போலக் காண்பித்துக் கொள்வார். பொதுவாக இராமசாமி சிவன் மாணவர்களுக்குச் செலவிடும் நேரங்களிலெல்லாம் தமிழ் மொழியிலுள்ள நுட்பங்களமைந்த பகுதிகளைச் சிந்தனை செய்வதற்கில்லையே என்ற கவலையுள்ளவராக விளங்குவார். ஆனல் இசை மாணவர்களின் பாடங்களிலே யாதொரு குறையும் வைக்க மாட்டார். அவர் சமையல் வேலை முதற்கொண்டு வீட்டிலுள்ள எல்லா வேலைகளும் சரிவர நிகழ்கின்றதா என்றும், மாணவர்கள் எந்தெந்தக் காலங்களில் என்னென்ன செய்கிருர்களென்றும், அவர்களின் எண்ணக் கூறுகள் எப்படி உள்ளன என்றும், தமது வீட்டிலுள்ள பெண்கள் எப்படி நடக்கிருர்கள், என்னென்ன பேசிக்கொள்கிருர்கள் என்றும், அவர்களுக்குத் தெரிந்தும், தெரியாமலும் செய்திகளை அறிந்துகொண்டே இருப்பார். அவர்களுடைய செயலில் ஏதேனும் விபரீதம் உண்டாகும் போல் தோன்றினல் அவற்றை உடனே எடுத்துக் கூறி அதைத் திருத்தி நன்முறையில் செயல்பட வைத்துவிடுவார்.

● மகாவைத்தியநாத சிவன் தமது தாயாரின் சொல்லையும், தமது தமையனுராகிய இராமசாமி சிவனுடைய சொல்லையும் அது சரியாயினும் அல்லது சரியில்லையாயினும் அதனைச் சிறிதும் தட்டமாட்டார். எதிர்பேசவும்

மாட்டார். அதுபோல மகாவைத்தியநாத சிவனுடைய தாயாரும் அவரது தமையனரும் மகாவைத்தியநாத சிவன் ஒரு செய்தியைக் கூறிவிட்டால் அதை உடனே ஏற்றுக்கொண்டு விடுவார்கள். அது சரி என்ருே, சரியில்லை என்ருே வாதம் செய்ய மாட்டார்கள். அவருடைய விருப்பம்போல் நடந்துகொள்வார்கள். அம்முறைகளைக்கண்டவர்கள் யார், யாருக்கு அடங்கி நடக்கிருர்கள் என்று அறிதற்கியலாமல் வியப்புக்குள்ளாவர். அத்துணை ஒற்றுமை அக்குடும்பத்திலுள்ள ஆண், பெண்பாலரிடம் உண்டு.

● தஞ்சை இரண்டாவது சிவாஜி அரசரின் மாப்பிள்ளையாகிய சகாராம் சாகேப் அவர்கள் மகாவைத்தியநாத சிவனிடம் சிறிதுகாலம் இசைகற்றுக்கொண்டார். இசையில் ஓர் அளவு தெளிந்த அறிவு உண்டு. எனவே அவருடைய காலத்தில் அடிக்கடி தஞ்சைக்கு வருமாறு மகாவைத்தியநாதசிவனை அழைப்பதுண்டு. ஒரு சமயம் சகாராம் சாகேப் அவையிலே ஆத்தான வித்துவாஞகிய வீணை ஆதிமூர்த்திஐயர் முதலிய தகுந்த இசைப்புலவர்கள் கூடிக்குழுமி இருந்தார்கள். அக்குழுவிலே மகாவைத்தியநாதசிவன் பாடிக்கொண்டிருந்தார். அக்கச்சேரி நிகழ்ச்சியிலே மகாவைத்தியநாதசிவனுடைய மாணவருள் ஒருவராகிய மாயூரம் வீணை வைத்தியநாதஐயரும் கூட இருந்தார்.

அக்காலத்துள்ள வித்துவான்கள் சிலர் மகாவைத்தியநாதசிவன் மேல் பொருமையுற்றவர்களாய் இருந்தார்கள். ஆனல் அப்பொருமையை வெளிக்காட்டிக்

கொள்ளாமலிருந்தனர். அவருள் சிலர் நூற்று எட்டுத் தாளத்துள் ஒன்ருகிய **'லக்ஷ்மீசம்'** என்ற தாளத்தில் ஒரு பல்லவி பாடும்படி ஏற்பாடு செய்தால் நலமென்று தங்கள் நண்பரான வீணை ஆதிமூர்த்தி ஐயரிடம் கூறினுர்கள். அச்செய்தி சகாராம் சாகேப் அவர்களுக்கும்எட்டியது. உடனே சகாராம் சாகேப் அதை மகாவைத்தியநாத சிவனுக்குத் தெரிவித்தார்கள்.

மகாவைத்தியநாத சிவன் அன்று பல்லவிபாடுதற்காக ஆனந்த பயிரவி இராகத்தை நன்கு ஆலாபித்தார். எல்லா வித்தவான்களும் அந்த இராகத்தைக் கேட்டுச் செயலிழந்து இருந்தார்கள். அவர்கள் பல்லவிக்காக அமைத்துக் கொண்ட சொற்களாவன:—

**''சம்போ உமாபதே பாஹிமாம், விச்வேச்வர விரூபாக்ஷ மாம்பாஹி''** என்பதாம். அவர்கள் ஆனந்த பயிரவி இராகத்தையும் தானத்தையும் வித்தாரமாக ஆலாபனம் செய்து இப்பல்லவியை **லக்ஷ்மீசம்** என்ற தாளத்திலே பாட ஆரம்பித்தார்கள்.

லக்ஷ்மீசம் என்ற தாளமானது இரண்டுலகு, இரண்டுதிருதம், ஒரு அனுதிருதம், ஒருபுலுதம் ஆக இருபத்தைந்து அட்சரங் கொண்டது. ஒவ்வொரு அட்சரமும் நான்கு மாத்திரைகள் வீதம் ($25\times4=100$) நூறு மாத்திரைக்காலமாக இத்தாளம் நடைபெறும்.

பல்லவி வருமாறு:—

இராகம் :- ஆனந்தபயிரவி. தாளம் :- லக்ஷ்மீசம்.

அங்கம்:- 1100ᑌ8. இருபத்தைந்து அட்சரகாலம்.

1

பா ; பா ; மா மா ; கா |
ச ம் போ . உ மா . ப

1

ரீ ; கா மா பா மா பா ; |
தே . பா . . ஹி மா ம்

O O U

பா ; ச்ா ; | நீ தா பா பா | ; ; |
வி ச் வே . ச்வ ர வி ரூ . .

8

மா தா பா மா கா ரீ கா மா
பா . . . . . க்ஷ .

பா , க ம த ப ம கா ரீ சா ;
மா . . . . . . . . . ம்

க ரீ நி சா ; நீ சா கா மா ||
பா. . . . . . . . ஹி

மேலே கூறியபடி பல்லவியை வெகு சுத்தமாகத் தாளத்தில் குறையேதுமில்லாமல் சகல வித்வான்களும் மகிழும்படியாகவும் வியக்கும்படியாகவும் சிறக்கப் பாடினர். பொருமையுற்ற வித்வான்கள் மட்டும் இப்பல்லவி

யையும் தாளத்தையும் மகாவைத்தியநாத சிவன் திறம் படப் பாடிச்செயல்பட இயலாமல் அவதிப்படுவார் என்ற வீண் மமதை கொண்டிருந்தனர். இத்தாளத்தில் பாட வேண்டுமென்று வெகு சாமர்த்தியமாய் ஏற்பாடு செய்து விட்டதை எண்ணி மகிழ்ந்தனர். அவர் பல்லவி பாடும்போது இத்தாளத்தைப் போடுவதில் மமதையும் பொருமையுங் கொண்ட சிலர் தாமும் தாளமிட்டு வந்தனர். ஆனால் அவர்கள் கையில் தாளம் நிற்காமல் போகவே தட்டுத் தடுமாறினர். ஏமாந்தனர்.

மகாவைத்தியநாத சிவனவர்களோ எவ்வித ஐயப் பாட்டிற்கும் இடமின்றி மிக எளிமையாகத் தாளத்தை யிட்டுப்பாடி வந்தார். அங்குள்ள வித்துவான்களில் பொருமை பிடித்தவர் யார் என்பதை அவரவர்கள் தாளமிட்டு வந்ததிலிருந்து அறியக்கூடியதாக இருந் தது. சகாராம் சாகேப் அவர்கள் மகாவைத்தியநாத சிவன் இசைத்திறத்தின் ஆற்றலைக்கண்டு அக்கணமே அவையோர் கண்டு வியக்கும்படி தகுந்த சிறப்பான சன்மானத்தைச் செய்தார்கள். யாவரும் அவரைக் கொண்டாடினுர்கள். அவர் எத்துணைக் கடினமான தாளங்களையும் எளிமையாக்கிப்போடும் திறமுடை யவர். அவருடைய இசைச் செயலெல்லாம் நல்ல அமைதிகொண்ட விளக்கத்துடனேயே இருக்கும்.

● 1888 ஆம் ஆண்டு சர்வசித்து ஆண்டு மார்கழி மாதம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் பரி பூர்ணமடைந்தார்கள். அவர்களையடுத்துத் திருவாவடு துறை ஆதீனத்துப் பதினேழாம் பட்டத்துத் தலை

வராக ஸ்ரீஅம்பலவாண தேசிகரவர்கள் வீற்றிருந்தார்கள். அவர்கள் எல்லாக் கலைஞர்களையும் பரிபாலிக்கும் சிறப்பைப் பெற்றிருந்தார்கள். சகல வித்தைகளையும் சுவைக்கும் குண நலன்களைப் பெற்றிருந்தார்கள். கல்லிடைக்குறிச்சி வேதாந்த பாகவதரின் தகப்பனுரான முத்து சாஸ்திரிகளிடம் சம்ஸ்க்ருத பாடத்தை நன்கு கற்றவர்கள். அம்பலவாண தேசிகரவர்கள் வடமொழியை நன்கு உணர்ந்திருந்தார்கள். தென்மொழியில் சிறந்த பயிற்சியுண்டு. இசையில் நல்ல திறமும் ஞானமும் உண்டு. புலவர்களின் தரம் அறிந்து பொருளீந்து சிறப்புச் செய்வதில் அவர்கள் போல் எவரும் இலர். மகாவைத்தியநாத சிவனை அடிக்கடி வரவழைத்து இசை நிகழ்ச்சிகளையும், சிவ கதாப் பிரசங்கங்களையும் கேட்டுக் கேட்டு இன்புற்று மகிழ்வார்கள்.

ஒரு சமயம் மகாவைத்தியநாத சிவனவர்கள் சந்நிதானத்தின் முன்பு இசை விருந்து படைத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது சந்நிதானம் அவர்கள் மகாவைத்தியநாத சிவனை நோக்கிச் சிம்மநந்தனத் தாளத்திலே தாங்கள் பாடும் கல்யாணி இராகத் தில்லானுவைக் கானடா இராகத்திலே பாடிக் கேட்க விரும்புகிரேும். தங்கள் விருப்பம் என்று கூறினுர்கள். சந்நிதானத்திற்கு எல்லா இராகங்களையும் விட கானடா, சகானு, காம்போதி, யதுகுலகாம்போதி, கேதாரகவுளை, சுருட்டி, மோகனம், புன்னுகவராளி, தன்யாசி நாதநாமக்கிரியை, சாவேரி, வசந்தம், ஆனந்தபயிரவி, முகாரி, உசேனி, பயிரவி, காப்பி,

சங்கராபரணம், தோடி, அடாணு, நீலாம்பரி, ஆரபி, பிலகரி, வேகடை, கல்யாணி, பந்துவராளி. பூர்வீ கல்யாணி ஆகிய இந்த இராகங்களிலே அதிக விருப்ப முண்டு. ஏனைய இராகங்களிலும் விருப்பு உண்டு ஆயினும் இந்த இருபத்தேழும் முதல் தரமாக அவர் கள் தேர்ந்தெடுத்தவை.

சந்நிதானம் அவ்வாறு கூறியதைக் கேட்ட மகா வைத்தியநாத சிவன் அது காறும் கல்யாணி இரகத் லேயே பாடி வந்த அந்தச் சிம்மநந்தனத் தாளத் தில்லானுவைக் கானடா இராகத்திலே அமைத்துப் பாடினுர். வேறு இராகத்திலே அமைத்துக் கொண்ட தில் அவர் தயக்கம் தாமதம் ஏதுமின்றி பாடிச் சந்நி தானத்தையும் மற்றுமுள்ள சுவைஞர்களையும் மகிழ் வித்தார். அது முதல் அத்தில்லாஞு கானடா இரா கத்திலும் பாடப்பட்டு வருகின்றது. சுரக் குறிப்பு வருமாறு:-

இராகம்: கானடா. தாளம்: சிம்மநந்தனம்.
128. அட்சரங்கள்.

“கௌரீ நாயக சித்சபாநாயகா
கமலாகாந்தனுத நாயக
காலகால சூலகர கங்காதர
புரஹர கஜசர்மாம்பர
கால கண்டேச சுந்தர மந்திர
காயக கேசர பூஸுர
நரவரஸ்துத கிரி கார்முக கால
கனகஸபா நடராஜ மாமவ”

குறிப்பு: கல்யாணியில் பாடிய தில்லானுவில் ''கன சுபதாயக'' என்று முதல் வரியில் காணப் பெறுகின்றது. இங்கு ''சித்சபாநாயக'' என்று வரப் பெறு கின்றது. சொற்கட்டுக்கள் கல்யாணித் தில்லானு வில் உள்ளபடியே.

I

8 8

கா ; ரீ ரீ சா சா சா ;-நீ சா தா நீ சா ; சா ;-

தீ ம் த ர தி ர ணு . த ன தி ர ணு . . .-

1 8

நீ சா ரீ ரீ-கா ; கா மா ரீ ரீ சா சா பா ; நிசரிப-

த ன தி ர ணு . த ன த ன தி ர ணு . . . . .

1 8 0 0

கா மா ரீ சா—பா ; ; ; நீ சா ரீ ;-கா ;—கா ;—

உ த னி த ன ம் . . த ன ன ம் தி ன் ணு .

8 8

கா மா ரீ சா நீ சா ரீ பா-கா ; ; க ம ரீ ; சா ;-

திர் திர் த னி த னம் . த ன ம் . . . தா. . .

1

சா ; சா ;-கா மா தா ; நீ ரீ ச்ா நீ பா ; ; ;-

தி த் தா ம் தி ர ணு . த ன தி ர ணு . . .

1

மா பா மா நீ —

தா . ன தொம்

1/8

தா நீ பா தா மா ப த பா மா கா ; ரீ சா -

. . தி ரு த ன . தி ர ணு . தி ர

8

கா மா தா ; நி ச்ா நி ப ம கா -

தி த் லா ம் தி . த் லா . ம்

1 1

ச ச ச ச ச ச ச்ா - ச் ச்ா ச் ச் ச் ச் ச் -

த த னி உ த னி தித் தி லா ன தி ரு தி ரு

+

நி ரி ச ரி நீ ரி ரி ச் ச் நி ச் பா ;

தில் லீல் லாணு ஜொம் த ரி கி ட த க ஜே .

ம நி த நி பா த த ப ப ம ப கா ;

தில் லில் லா ணு ஜொம் த ரி கி ட த க ஜே .

நி ப க க கா ம ம ரி ரி ச ச ‖

தில் லில் லா ணு ஜொம் த ரி கி ட த க

II

8

கா ; ரீ ; சா ; சா சா –
கௌ . ரீ . நா . ய க

8 1

+ +
நீ சா தா தா நீ சா சா சா – நீ சா ரீ ; –
சித் ஸ பா . நா . ய க க ம லா .

8

ரீ ; ரீ சா ரீ ரீ பா பா கா மா ரீ சா –
கா ந் த னு த நா . ய க . . .

1 8

கா ; ; மா – தா ; ; மா தா ; ; நீ –
கா . . ல கா . . ல சூ . . ல

0 0 8

பா மா – பா ; – கா ; கா மா ரீ ரீ சா சா –
க ர க ங் கா . த ர பு ர ஹ ர

8 1

நீ சா தா நீ சா ; சா சா – கா ; ; மா –
க ஜ ச ர் மா ம் ப ர கா . . ல

8

தா மா தா ; தா பா தா நீ பா மா பா பா –
க ண் டே . ச சுந் த ர ம ந் தி ர

1

கா மா நீ தா –
கா . . ய

8

பா மா கா ; கா மா ரீ ரீ சா ; சா சா –
க . . . கே . ச ர பூ . ஸு ர

8 1

சா சா சா சா ச்ா ச்ா ச்ா ச்ா – நீ ரீ ச்ா ரீ –
ந ர வ ர ஸ்து த கி ரி கார் மு க

1

ரி ச்ா நி பா பா–நீ ச்ா ரீ க் ரி ச் நி பா பா பா –
கா . . . ல க ன க ஸ . பா . . ந ட

\+

மா பா ச் நி நீ பா கா க ம ரீ சா ||
ரா . . . . ஜ மா . . ம வ

III

**8**

பா ; கா மா தா நீ ச்ா ; —
தீ ம் த ர தி ர ஞ .

**8**

நீ ச்ா ரீ ச்ா பா ; ; ; —
த ன தி ர ஞ . . .

**1**

பா மா நீ தா —
த ன தி ர

**8̍**

ப ம க ம ரீ சா சா நீ ரீ ரீ சா ; ; ;—
ஞ . . . த ன த ன தி ர ஞ . . .

**1** **8**

மா பா மா கா — மா ; தா மா தா ; நீ ;—
உ த னி த ன ம் த ன ன ம் . .

**0** **0**

ச்ா ; — ச்ா ; —
தி ன் ஞ .

8

க்ா ம்ா ரீ ச்ா நீ ச்ா ; ரி ப் —
திர் திர் த னி த ன ம் த .

8

க்ா ; ; க் ம் ரீ ; ச்ா ; —
ன ம் . . . தா . . .

1

நீ ச்ா ரீ ; —
தி த் தா ம்

8

ச்ா நீ ரீ ச்ா நீ ச்ா ரீ ச்ா பா ; ; ; —
ர ணு . த ன தி ர ணு . . .

1

மா பா பா ச் நி —
தா . ன தொ ம்

8

நீ பா மா பா மா பா கா கா மா ; ரீ சா —
. . தி ரு த ன தி ர ணு . தி ர

8

கா மா தா ; நீ ச்ா ரீ ; —
தி த் ளா ம் த்ளா ம் த்ளா ம்

**1**

க் க் க் க் ம் ரி ரீ —
த த னி உ த னி தி த்

**1**

ச் ச்ா ச் ச் ச் ச் ச்
தி லா ன தி ரு தி ரு

+

நி ரி ச் ரி ச்ா ச் ச் ச் ச் ச் ச் ச்ா ;
தில்லில்லானு ஜொம் த ரி கி ட த க ஜே .

நி ச் ரி ச் நீ ப ப ப ப ப ப பா ;
தில்லில்லானு ஜொ ம் த ரி கி ட த ம ஜெ .

க க க க மா ரி ரி ரி ரி ச ச ||
தில்லில்லானு ஜொம் த ரி கி ட த க

"ரீ ; சா ; சா ; சா சா —
கெள . ரீ . நா . ய க

\+ + +
நீ சா தா தா தா நி ச நி ரீ , || சா"
சி த்ஸ பா . . நா . . ய . க

மேலே கூறியபடி சிம்மநந்தனத்தாள தில்லா ணுவை உடனடியாகக் கானடாவில் அமைத்துப்

பாடிய அவருடைய வல்லமையைச் சந்நிதானம் போற்றிப் புகழ்ந்து கொண்டாடி சிறப்பான பரிசுப் பொருள்களைத் தந்து மகிழ்ந்தார்கள். இது போன்ற இசைத் திறத்தை யாரும் செய்ததில்லை.

● திருவாவடுதுறை ஆதீனகர்த்தாவாகிய ஸ்ரீஅம்பலவாண தேசிகரவர்கள் இசையில் அதிக ஈடுபாடு உடையவர்கள். இசைப் பயிற்சி நன்கு அமைந்தவர்கள். தம்மிடம் வரும் இசைப் புலவர்களிடம் இசை சம்பந்தமாகப் பல செய்திகளைப் பற்றிக் கேட்பார்கள். அவர்களுடைய கேள்விகளுக்கு யாரும் உள்ளபடி விடை கூறுதல் என்பது சற்றுக் கடினமாகும். அவர்கள் கேட்கும் இசை நுட்பங்கள் யாவும் நியாயமானதாகவே இருக்கும். வித்தையில் திறமையுள்ளவர் என்றறிந்தால் அவர்களைப் போலப் பொருளீந்த வள்ளல் ஒருவரும் இல்லை என்பதைத் துணிந்து கூறலாம்.

இசை சம்பந்தமாக மகாவைத்தியநாத சிவனிடம் பல முறையும் அவர்கள் அளவளாவி அதன் நுட்பமான அமைதிகளை எல்லாம் நன்கறிந்து சுவைத்து மகிழ்ந்துள்ளார்கள். இசையுனுட் பொதிந்துள்ள நுட்பங்களை மகாவைத்தியநாத சிவன் வாயிலாகவே முழுமையாகத் தெரிந்து கொண்டார்கள் என்று கூறல் வேண்டும். அவருடைய இசையாற்றல், இசை இலக்கண நுட்பம் சமயமறிந்து இசையை வெளிப்படுத்தும் வல்லமை ஆகிய சிறப்புக்களை அறிந்து ஸ்ரீஅம்பலவாண தேசிகரவர்கள் அவருக்கு ஈந்த பொருள்களுக்கு ஓர் அளவில்லை. மகாவைத்தியநாத சிவன்

1892 ஆம் ஆண்டு ஆவணி மாதம் உடல் சுகவீன மாய் நோயுற்று இருந்த காலேயும், 1893-ஆம் ஆண்டு தை மாதம் சிவபதம் அடைந்த பின்பும், அவருடைய தமையனர் இராமசாமி சிவனுக்கு ஏராளமான பொன்னும் பொருளும் கொடுத்து ஆதரித்து வந்துள் ளார்கள். பழமையை நினைந்து கொடுத்துதவும் பண் பாளர் அவர்களன்றிவேறு யாருளார்? சந்நிதானத்தை போஜனென்றும், கர்ணனென்றும் புகழாத புலவர் களேயில்லே.

● பாஸ்கர சேதுபதி அவர்கள் மகாவைத்தியநாத சிவனுடைய இசையில் அதிக ஈடுபாடுடையவராக இருந்தார். ஒரு சமயம் மகாவைத்தியநாத சிவனேயும் இராமசாமி சிவனேயும் வரவழைத்து பெரிய புராணக் கீர்த்தனேகள் முழுவதையும் கானம்செய்யச் சொல்லிக் களித்தார். அதனேக் கதாப்பிர சங்கம் செய்யும் படி ஏற்பாடு செய்து அந்த மதுரமான பக்தி வெள்ளத்தில் மூழ்கி மனங்கனிந்தார். அவருடைய வாசமகோசர மான பிரசங்கத்தை கேட்ட மன்னரவர்கள் தக்க சன்மானம் செய்து சிறப்பித்தார்கள். பெரிய புராணப் பிரசங்கத்திலே பாஸ்கர சேதுபதி மன்னர் அள விலாத மகிழ்ச்சி கொண்டு அவரிடம் ஏற்கனவே உள்ள அன்பையும் மரியாதையும் விடப் பன் மடங்கு அன்பு கொண்டு விளங்கினுர்கள்.

● [மகாவைத்தியநாதசிவன் அபூர்வமான ஒருயதித் தாளத்தில் தோடியிலே ஒருபல்லவி பாடியுள்ளார். அப்பல்லவி எச்சமயத்தில் எந்த இடத்தில் யாரு டைய முன்னிலேயில் பாடப்பெற்றது என்பதை

அறிய இயலவில்லை. ஏனெனில் அப்பல்லவிக் குறிப்பிற்கு மேலுள்ள குறிப்புப் பகுதிகள் ஒடிந்து நொறுங்கிவிட்டபடியால் அதனை அறிதற்கியலாமல் போயிற்று. ஆயினும் அப்பல்லவி, அதன் சொற்கள், அதன்யதிகள் யாவும் உருப்பெற்றிருகிறபடியால் அதை மட்டும் கீழே குறிக்கப்பெறுகிறது. VSG] அப்பல்லவியின் சொற்கள்.

**''சம்போ தாண்டவேச பாஹிமாம்,**
**பரமேச்வர பார்வதீச மாம்பாஹி''**

என்பன.

இப்பல்லவியின் தாளமானது மூன்றுகண்ட கதியும், மூன்றுதிச்ரகதியும், மூன்றுகண்டகதியும் உடையவை. மொத்தம் முப்பத்தொன்பது மாத்திரைகள் உள்ளது. இதை டமருகயதி என்று கூற இயலவில்லை. ஏனெனில் மூன்றுகண்டகதிசமமாகவும், பின்பு மூன்றுதிச்ரகதிசமமாகவும், அதன்பின்பு மூன்றுகண்டகதிசமமாகவும் வரப்பெறுவதால் இது சமடமருகயாதி எனப்படும். டமருகயதி என்பது முன்னும் பின்னும் பெருகியும் நடுசிறித்தும் கதிகள் அமைந்து வரப்பெறும். இப்பல்லவி வருமாறு:—

இராகம்— தோடி. தாளம்:- ஸமடமருகம்.
39மாத்திராயதி.

பா ப த ம - பா ; , – த ப ம ப ம |
சம் . . . போ . . தா . . . . ண்

கா , – மா , – பா , |
ட . வே . ச .

த ப ம ப ம - கா ம ப ம - பா ; , ||
பா . . . . . . . . . ஹி மா . ம்

த ம த நி ச் - ச்ா தா , - ப த நி த ப |
ப . ர . . மே . . ச்வ . ர . .

தா , - மா , - கா , |
பா ர் வ . தீ .

ச ரி கா ம - ப த நி த ப - நி த ப த ம ||
ஈ . . ச மா . . . ம் பா . . . ஹி

இப்பல்லவியைப் பாடிச்சிறப்பித்தார். பிரபுக்களும் தலைவரும் மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள். யாவரும் சேர்ந்து தக்க மரியாதை செய்தனர்.

● சிறுவயல் சமீன்தாராக முத்து ராமலிங்கத் தேவர் வீற்றிருந்தார். அவர் பாஸ்கர சேதுபதி அரசருக்கு ஒருவகையில் பாட்டனர் முறையினராவார். அவ் வூரை அரண்மனைச்சிறுவயல் என்றே அழைப்பார் கள். ஒரு சமயம் அச்சமீனுக்கு மகாவைத்தியநாத சிவன் இசை நிகழ்ச்சி செய்தலை முன்னிட்டுப் போயி ருந்தார். முத்து இராமலிங்கத் தேவர் சமீன்தாராக இருந்தபடியால் அவருடைய பேட்டிக்காகவும் சன் மானங்களுக்காகவும் இராமநாதபுரம் மாவட்டத்துப் பல கிராமங்களிலிருந்தும் பல இசைப் புலவர்கள் வந்திருந்தார்கள். அங்கு நிறைந்த இசைப் புலவர் கள் கூடியிருந்ததை மகாவைத்தியநாத சிவனும்

கண்டு மகிழ்ந்தார். அவர் கச்சேரி செய்வதற்காக அமர்ந்ததும் சிறுவயல் சமீன்தாராகிய முத்து இராம லிங்கத் தேவர் மகாவைத்தியநாத சிவனை நோக்கி இன்று இங்குள்ள இசைப் புலவர்களெல்லாம் வியக்கும் படியாகவும், இதனைச் சாதிப்பது அரிது என்று கூறுவது போலவும் புதுமையாக ஒரு பல்லவி பாடல் வேண்டும். எல்லோரும் அத்திறத்தினைக் கண்டு போற்றுதல் வேண்டும். அத்துணைச் சிறப்பான ஒரு பல்லவியைப் பாடிக் களிப்பியுங்கள் என்று கூறினர்.

மகாவைத்தியநாதசிவன் அன்று பல்லவி பாடு தற்காக பிலகரி இராகத்தை ஆலாபனைசெய்தார். அதுகாறும் எந்த இசைப்புலவரும் பிலகரி இராகத் திலே பல்லவி பாடியதில்லை. அந்த இராகத்தை அதுவரையாரும் கேட்டிராத புது முறைகளைக் கையாண்டு அதன் பல இசைநுட்பங்களையும் காண் பித்தார். பிலகரி இராகத்தை ஆலாபனைசெய்யும் போது தநிதா...என்று இடத்தில் நிறுத்தி கைசிகி நிஷாதமே மிகுதியாக வருமாறு செய்து வித்தாரமாக ஆலாபனை செய்து புதுமுறையைத் தோற்றுவித்தார். அந்த இராகத்தின் புது முறையான பிரயோகங்களைக் கேட்டதுமே வித்துவான்களெல்லாரும் மெய் மறந்த னர். அவர் அதன் பிறகு தானத்தை பல வகை யிலும் சிறப்பாகப் பாடினர். அதன் பின்பு பல்லவி பாடலானர். அதன் சொற்களாவன:

‘‘சங்கர சிவசங்கர ஸதானந்த
மங்களதாயக மகாப்ரபோ

ஸாம்ப பரமேச்வர சிவஸ்வரூப
ஸதா மாம்பாஹி’’ என்பதாம்.

இச்சொற்களை அவர் பல்லவியாக அமைத்துப் பாடு தற்காக எடுத்துக்கொண்ட தாளம் **பிரதாபசேகரம்** என்பதாகும். இது நூற்றி எட்டுத் தாளத்தில் ஒன்று. இது ஒரு புலுதமும் ஒரு திருதமும் ஒரு அனுதிருதமும் ஒருதிருதமும் கொண்டது. மொத்தம் பதினேழு அட்சரமுடையது. ஒரு அட்சரத்திற்கு இரண்டுமாதத்திரைகள் வீதம் மொத்தம் முப்பத்து நான்கு மாத்திரை கொண்ட காலமாக வரப்பெறும். இதன் அங்கங்களானவை ‘8OUO’ என்று வருவ தால் (12+2+1+2=17) பதினேழு அட்சரங்களை யுடையனவாயிற்று. இத்தாளத்தில் அவர்பாடியசுரக் குறிப்பு வருமாறு: -

இராகம்: பிலகரி. தாளம்: பிரதாபசேகரம்.

அங்கம்: 8OUO. 17 அட்சரம்.

8

பா ; மா கா ரீ கா பா ; -.
ச ங் க ர சி வ ச ங்

மா கா ரி க சா ; ரீ ; கா - பா ; தா நீ பா ; பா பா |
க ர ஸ . தா . ன ந் த ம ங் க ள தா . ய க

O U O

த ப ம க – ரி க பா | ம க ரி ச | ரீ கா பா ; ||
ம . . . . . . . ஹா . . . . ப்ர போ.

I
8

பா ; தா ச்ா ச்ா ச்ா ச் நி தா –
ஸா . ம் ப ப ர மே . .

பா தா ரீ ச்ா ; ச் ரி ச் நி தா –
ச் வ ர சி வ . ஸ் வ ரூ . .

பா ; ; ; ப த ச் நி த ப தா |
ப . . . ஸ . . . . தா . .

O U O

பா ; ; ; | ப த ச் நி | த ப ம க ரி ச ரி க ||
மா . . ம் பா . . . . . . . . . . . ஹி .

மேலே குறித்த பல்லவியை அவர்கள் நன்ருக நிரவல் செய்து சுரம் பாடினுர்கள். இப் பதினேழு அட்சர தாளத்தை அங்குள்ள பல வித்துவான்களும் போட்டுப் பார்த்தனர். அவர்கள் கையில் தாளம் நிற்கவில்லை தாளம் போடுவதில் தடுமாறினர். ஒரு வகையில் தாளம் அமைந்தால் சொற்கள் பிறழ்ந்தன. சொற்கள் அமைந்தால் தாளம் பிறழ்ந்தன. வித்துவான்கள் அனைவரும் வியந்து புகழ்ந்தார்கள். அத்துணை வித்துவான்களும் மகாவைத்தியநாத சிவனைப் புகழ்ந்து கொண்டாடிய சிறப்பினைக் கண்ட முத்துராமலிங்கத் தேவருக்கு அளவிலா மகிழ்ச்சி. அம்

மகிழ்ச்சியை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் மகாவைத்தியநாத சிவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு மிகுந்த கனிவும் அன்பும் கொண்டு தங்களுடைய இசைத் திறத்தின் அபரிமிதமான வல்லமைகளையும் அதன் செயலாற்றல்களையும் இசையறிவில் ஒன்றுமே அறியாதவனாக உள்ள என்னால் உய்த்துணர்ந்து அறிந்து கொள்ள இயலவில்லை. எனக்கு அத்துணை சிறந்த அறிவுத்திறம் இசையிலில்லை. எல்லோரும் புகழ்வதிலிருந்து தங்களுடைய இசைத் திறம் யாவரினும் சிறந்ததுதான் என்று எண்ணவே என்னால் முடிகிறது. தமிழ்மொழியில் சிறப்புடைய தங்களுக்கு இசையும் அத்துணைச் சிறப்பாகத்தானே இருக்க இயலும். இசைபற்றி எனக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும் தங்களுடைய குரலிலிருந்து வரும் அந்த இன்ப ஒலியானது என்னுடைய உடம்பையெல்லாம் சிலிர்க்கச் செய்தது. எல்லாம் கடவுளின் அருள் என்று கூறி அவருக்கு நல்ல மதிப்பிற்குரிய சன்மானம் செய்து போற்றினர்.

● தஞ்சை இரண்டாவது சிவாஜி அரசரின் மாப்பிள்ளை சகாராம் சாகேப் மகாவைத்தியநாத சிவனிடம் இசை கற்றுணர்ந்த மாணவர் ஆவார். ஏனைய மாணவர்கள் போல அவர் மகாவைத்தியநாத சிவன் இருக்கும் இடம் சென்று இசை கற்றவரன்று. அவர் அடிக்கடி தம் அவைக்கு மகாவைத்தியநாத சிவனை கச்சேரி செய்வதற்கு அழைப்பதுண்டு அக்காலமெல்லாம் அவர் அங்கு பத்து அல்லது பதினைந்து நாட்கள் தங்குவார். அவ்வாறு தங்கும் காலமெல்லாம் சகாராம் சகேப் அவர்களுக்கு மகாவைத்தியநாத சிவன்

அவர்கள் இசைப் பாடம் கற்றுத் தருவதுண்டு. சகாராம் சாகேப் இசையில் நற்றிறம் பெற்று விளங்கினர். அத்துடன் வித்துவான்களுடைய தராதரமறிந்து போற்றுவதிலும் சிறந்திருந்தார். சகாராம் சாகேப் அவர்கட்குப் பொழுது போக வில்லையாயின் உடனே தம் அலுவலரில் ஒருவரை அனுப்பி மகாவைத்தியநாத சிவனை அழைத்து வரச் செய்வார். அன்றே எல்லா இசைப் புலவர்களையும் அமரச் செய்து மகாவைத்திய நாதசிவனை இசைக்கும்படி செய்வார். அக்கச்சேரியில் தம்மை மறந்து சுவைத்து மகிழ்வது மன்னரின் வழக்கமாக இருந்தது. மகாவைத்தியநாத சிவனுடைய இசைக்கச்சேரி அந்தந்த அவையின் அமைப்பிற்கும் சுவைஞர்களுக்கும் தக்கவாறு சிறந்து விளங்கும். மகாவைத்தியநாத சிவனுக்கு முன்கூடியே தெரிவிக்காமல் இசையின் உட்பகுதிகளை அங்குள்ள வித்துவான்களும் சகாராம் சாகேப் அவர்களும் அறிதலை முன்னிட்டு அவரிடம் தங்களுக்குச் சந்தேகமாக உள்ள அவ்விசை நுட்பப் பகுதிகளை இசைக்கும்படி கூறுவார்கள். அவர் யாதொரு தடையுமின்றி அவ்விசைப்பகுதிகளைச் செம்மையுறப்பாடி யாவரையும் களிப்பிற்கு உள்ளாக்குவார். வித்துவான்களெல்லாரும் வியந்து பாராட்டுவார்கள். அவ்விசை நிகழ்ச்சிகளுக்குத் தக்கவாறு சகாராம் சாகேப் சன்மானங்களை வாரிவழங்குவார்.

● இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதி அவர்களுக்குப் பட்டினம் சுப்பிரமணிய ஐயரிடமும் குன்னக்குடி கிருஷ்ணையரவர்களிடமும் அளவுகடந்த அன்பும் மரியாதையும் உண்டு. அரசரவர்களுக்கு நடந்த

திருமண விழாவிலே மகாவைத்தியநாதசிவன் அவர்களின் இசை சிறப்பிடம்பெற்றது. அவ்விசையை நன்கு சுவைத்து உணர்ந்த பாஸ்கர சேதுபதி அவர்களுக்கு பட்டினம் சுப்பிரமணிய ஐயரையும் குன்னக்குடி கிருஷ்ணையரவர்களையும் மகாவைத்திய நாதசிவனவர்களோடு சேர்ந்து பாடச்செய்து அதன் திறத்தைக் கேட்டல் வேண்டும் என்ற அவா ஏற்பட்டது. அரசரவர்கள் தமது திருமணத்தின் மூன்றுவது நாளன்று பட்டினம் சுப்பிரமணிய ஐயர் குன்னக்குடி கிருஷ்ணையர் ஆகிய அவ்விருவரையும் நோக்கித் தாங்களிருவரும் மகாவைத்தியநாத சிவனவர்களுடன் சேர்ந்து பாடலாமோ என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் பாடுவது மனம் மகிழ்ச்சியுறவேயாம். சேர்ந்து பாடினுல் இசையின் சிறந்த அம்சங்களை அறிதற்குப் பதிலாக இசை வித்துவான்கள் பயில்வான்கள் போல எப்படி விளங்குகிருர்கள் என்பதைத்தான் காண இயலும். ஒவ்வொருவரும் இசைத்திறமையிலே வெவ்வேறு அம்சத்தைப் பெற்றுச் சிறந்திருப்பார்கள். அவர்கள் தனித்தனியே பாடினுல் அத்திறமைகள் உள்ளது உள்ளபடி அறிதற்காகும். இசையை அவ்வாறு நுகர்தலே சிறப்பு. அரசரவர்கள் ஆணையிட்டால் சேர்ந்து பாடுகிறேமென்றுர்கள். அரசரவர்கள் நுட்ப புத்தியுடையவர். இசையின் சிறப்பை நன்ருக அறிந்தவர் ஆதலால் அவர்கள் சொல்லின் உண்மையறிந்து அமைதி பெற்றனர்.

● இராமநாதபுரம் பொன்னுசாமிதேவரின் குமாரரும் பாஸ்கரசேதுபதி அரசரவர்களின் தம்பியும் பாலவ

னத்தம் சமீன்தாருமாகிய பாண்டித்துரைத்தேவர் (பாண்டித்துரைசாமித் தேவர்) அவர்களுக்கு மகா வைத்தியநாதசிவனவர்களது பாட்டிலும், பட்டினம் சுப்பிரமணிய ஐயரவர்களது பாட்டிலும் அதிக ஈடுபாடுண்டு. பாண்டித்துரைத்தேவரவர்கள் மகாவைத்தியநாதசிவனவர்கள் பாட்டு திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர்பிடில், நாராயணசாமியப்பா மிருதங்கம் இவற்ருேடு பல இசை நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்ந்ததுண்டு. அதுபோல பட்டினம் சுப்பிரமணிய ஐயரவர்கள் பாட்டு, வெங்கோபராவ் பிடில், சாமாரா மிருதங்கம் ஆகியவற்றுடன் பல இசை நிகழ்ச்சிகளைக் கேட்டு இன்புற்றிருக்கிருர்கள். பாண்டித்துரைத் தேவரவர்கள் பல சமயங்களிலும் திருவையாறு வந்து பட்டினம் சுப்பிரமணிய ஐயரின் இசையைக் கேட்டு நுகர்ந்ததுண்டு. மகாவைத்தியநாதசிவன், இராமசாமி சிவன், பட்டினம் சுப்பிரமணியஐயர், பூச்சி ஸ்ரீனிவாஸ ஐயங்கார், பல்லவிசேஷ ஐயர், பிடில் வெங்கோபராங், பிடில் நாராயணசாமி ஐயர், பிடில் திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர், புல்லாங்குழல் சரபசாஸ்திரிகள், கடம் நாராயனசாமி ஐயர், மிருதங்கம் நாராயணசாமியப்பா, சாமாரா, துர்காராம், வீணை வைத்தியநாத ஐயர் போன்ற இன்னும் பல இசைப்புலவர்களையும் தம்மிடத்திற்கு வரச்செய்து இசைகுறித்துப்பல பேசியும், அதன் இலக்கணக்கூறுகளை அறிந்தும், அதன் அம்சங்களைச் செய்முறைகளினுல் புலப்படுத்தியும் ஒரு மாநாடு போன்று நடத்திவந்தார்கள். அதனுல் இசையன்பர்கள் அனைவர்க்கும் இசையிலுள்ள பல உட்கிடக்கையான நுணுக்கங்கள் புலனுகி வந்தன. அவர்களால்

கூட்டப்பெற்ற இசைவித்துவான்களின் சதசானது ஒரு தேவசபை போல விளங்கும். அதனால் பாண்டித் துரைத்தேவரவர்களுக்கு மகாவைத்தியநாதசிவனவர்களையும் பட்டினம் சுப்பிரமணிய ஐயரவர்களையும் அடிக்கடி சந்திக்க வாய்ப்பிருந்தது போல மகா வைத்தியநாத சிவனவர்களும் பட்டினம் சுப்பிரமணிய ஐயரவர்களும் சந்திப்பதற்குத் தக்க வாய்ப்பாகவும் இருந்தது.

● கோயம்புத்தூர் இராகவ ஐயரவர்கள் திருவனந்தபுரத்து ஆயில்யம் திருநாள் அரசரவையில் சமத்தான வித்துவானாக இருந்தார். அந்த அவையில் மகா வைத்தியநாதசிவனவர்களோடு இராகவ ஐயரவர்கள் எதிர்த்துப் பாடமுடியாமல் பின்வாங்கினார் என்று இராமசாமிசிவனால் எழுதப்பெற்ற விஜயசங்கிரம் என்ற புத்தகத்திலே கூறப்பெற்று இருக்கிறது. இராகவ ஐயரின் பாட்டையும் அவர் செய்த இசைச்செயலையும் கண்ட மகாவைத்தியநாத சிவனவர்கள் இராகவ ஐயரவர்களைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார் என்பது உலகம் அறிந்தது. அவருடைய உயர்ந்த திறமாகிய இசைச்செயல்களை மெச்சித் தங்களுடைய செய்கைகளெல்லாம் இராட்சதச் செய்கைகளாக இருக்கின்றனவே என்று வியந்து மகிழ்ந்துள்ளார்கள். இராகவ ஐயரவர்கள் மகாவைத்தியநாத சிவனோடு சேர்ந்து பாடுதற்கு இயலாம லிருந்திருந்தால் அவர்களுடன் சேர்ந்து அரச அவையிலே அரசருடைய திருமுன்பு ஆறு இசை நிகழ்ச்சிகளைச் செய்திருக்க இயலுமா? திறக்குறைவு உடையவர்களைத் திரும்பத் திரும்பச்

சேர்ந்து பாடும்படி அரசர் ஆணை இடுவார்களா? தமது ஆஸ்தானத்து வித்துவான்கள் இசைத்திறமைக் குறைவு உடையவர்கள் என்பதை இசையறிவிலும் இசைத்திறத்திலும் மேன்மையடைந்த அரசரவர்கள் அச்செயலை ஏற்று மகிழ்ந்திருக்க இயலுமா? மகா வைத்தியநாத சிவனுடைய சாரீர வளம் போல எவருக்கும் இல்லை. ஆனால் இசைஞான பலத்தில் இராகவ ஐயரை இம்மியளவு கூடக் குறைகூற இயலாது. நிறைந்த தகுதியும் திறமும் அவருக்கு உண்டு.

● இராகவ ஐயரவர்கள் இசையில் மிகச்சிறந்த திறம் வாய்ந்தவராயினும் அவருக்குப் பயிரவி இராகம் மட்டும் பாடுதற்குக் கைவரவில்லை. மகாவைத்திய நாதஐயர் ஆயில்யம் அரசரின் அவையில் பயிரவி இராகம் பாடும்போது இராகவ ஐயர் தம்மை மறந்து தம்பித்து இருந்தார். அப்பயிரவி இராகத்தைத்தாம் எவ்விதத்திலும் முயன்று பயின்று பாடுதல் வேண்டு மென்று எண்ணினர். மகாவைத்தியநாத சிவன் திருவனந்தபுரத்திலே தங்கிஇருந்த நாளெல்லாம் அவர் களைப் பயிரவி இராகத்தை இசைக்கச் செய்து தாம் அதன் திட்ப நுட்பப் பகுதிகளை அறிந்து செயல்பட முயற்சித்தார். அவ்வாறு பல நாட்கள் முயற் சித்தும் அந்த இராகம் அவருக்குக் கைகூடிவர வில்லை. இக் கூற்றினையறிந்த இராமசாமி சிவன், கோயம்புத்தூர் இராகவ ஐயர் தம்

முடைய தம்பியாருடன் பாடத்தெரியாமல் இருந்தார் என்று எழுதுவதற்கு ஒரு வாய்ப்பாகிவிட்டது.*

● விஜயசங்கிரகத்திலே மேலே கண்ட வித்துவான் களைப் பற்றி இராமசாமி சிவன் அவ்வாறு எழுதியது குறித்துப் பல வித்துவான்களும் வருந்திவிட்டார்கள். அதனுல் பட்டினம் சுப்பிரமணிய ஐயருக்கும் மாயூரம் வீணை வைத்தியநாத ஐயருக்கும் வாதம் வளர்ந்தது விசய சங்கிரகக் கண்டனம் என்றும், கண்டன மண்டனமென்றும் நூல்கள் எழுதி ஒருவர்க்கொருவர் தாக்கிக் கொண்டார்கள். இராமசாமிசிவன் கெட்ட எண்ணத்துடன் அவ்வாறு எழுதவில்லையாயினும் ஏனையோருக்கு அது ஒவ்வாத முறையாகவே மனத் திற் பட்டது. அவ்வாறு எழுதி விட்டதால் அதை மறுத்து பட்டினம் சுப்பிரமணிய ஐயருக்கு வேண்டிய சிலர் மனம் வருந்தி ஒரு கண்டனம் எழுதி விட்டார் கள். அக்கண்டனம் பட்டினம்சுப்பிரமணிய ஐயர் தூண்டுதல் இல்லையாயினும் அவருடைய தூண்டுதலே காரணம் என்று மகாவைத்தியநாத சிவனிடம் அபிமானமுள்ளோர் எண்ணிவிட்டனர். அதைக் கண்டதும் மகாவைத்தியநாத சிவனுடைய சீடரும் நண்பருமாகிய மாயூரம் வீணை வைத்தியநாத ஐயர்

---

* ''**இசைக்கலை வல்லுநர்கள்**'' என்ற புத்தகத்தி லே மகாவைத்தியநாதசிவன் ஆயில்யம் திருநாள் அரசரின் விருப்பிற்கிணங்க பயிரவி இராகம் பாடிய கட்டுரை தனி யாக வெளியிடப்பெற்றுள்ளது. விபரங்கள் அங்குக் காண்க.

கண்டனத்திற்கு மண்டனமென்று தகாதபடியெழுதி ஒரு மறுப்பு நூல் வெளியிட்டார். மகாவைத்தியநாத சிவனுகிய எனது குருநாதர் உயிரோடு இருந்தால் இச்செயலைக்கண்டு மனம் பதறி இருப்பார். இவ்வாறு எழுதியதற்கு மன்னிப்பே தரமாட்டார். மகாவைத்திய நாத சிவனுக்கும் பட்டினம் சுப்பிரமணிய ஐயருக்கும் மனவேறுபாடுகளில்லை. எல்லாம்சீடர்களால் வந்த வினை.

● நான் திருவாவடுதுறை ஆதீனகர்த்தாவாகிய மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் ஆசியால் மகாவைத்தியநாத சிவனிடம் இசை மாணுக்கனுகச் சேர்ந்தாலும் எனக்கு இசைப் பாடங்கள் கற்றுக் கொடுத்து பூரணத் தேர்ச்சியடையச் செய்தது இராம சாமி சிவனேயாவார். எனவே அவர் என் குருநாதர். உச்சிஷ்ட கணபதி உபாசனையின் பலத்தால் எதனை யும் சாதிக்கத் தக்க வல்லமையுள்ளவர். சிவ பக்தியில் சிறந்தவர். பெரிய கவித்துவச் சக்தி பெற்றவர். நினைத்தவுடனே பாடும் ஆற்றல் வாய்ந்தவர். அதி நுட்ப புத்தியுடையவர். ஒரு விடயத்தை ஒரு முறை கேட்டவுடனேயே அதனைத் திரும்பச் சொல்லும் திற முடைய ஏகசந்தக்கிராஹி, முகபாவத்திலிருந்து ஒவ் வொருவருடைய உள்ளக் கிடக்கையை எளிதாகக் கண்டு கொள்ளும் இயல்பு உடையவர். அப்பேர்ப் பட்ட பெருமையுள்ள அவர் இவ்வாறு எழுதிவிட்டா ரென்ருல் யாவருக்கும் வருத்தம் உண்டாவது இயல்பு தான். அவர்களுடன் நெருங்கிப் பழகியிருந்த நான் முதலாவதாக அப்புத்தகத்தைப் படித்ததும் சிறிது அச்சமுற்று நடுங்கினேன். என் மனம் கூட சிறிது

தரக் குறைவாக எண்ணி விட்டது. பின்பு அவ் வெண்ணம் ஏற்பட்டதற்கு மிகவும் வருந்தினேன். இந் நிகழ்ச்சிகளும் இது போன்ற பல நிகழ்ச்சிகளும் அவர் மூலமும், மகாவைத்தியநாத சிவனுடைய குடும்பத்தி னர் மூலமும் இன்னும் பல இடங்களிலுள்ள வயது முதிர்ந்தவர்களுடைய வாயிலாகவும் அவர் பற்றிய பல செய்திகளை நன்றாகக் கேட்டறிந்திருக்கிறேன். எனவே தம் தம்பியிடம் தாம் வைத்திருந்த பெரும் அன்பைத் தம்பியாரிடமுள்ள அதிகமான பாசத்தை அவர் மறைந்ததும் அத்துக்கம் தாங்காமல் எல்லாம் மறந்து எழுதிவிட்டார்கள் என்பது தான் உண்மை. என் குருநாதரானபடியால் அவர் கெட்ட எண்ணத் தில் எழுதவில்லையென்றெண்ணி எல்லோரும் மன்னித் தல் வேண்டும். அவருக்கு எத்தோஷமும் சம்பவித் தல் கூடாது.

● பட்டினம் சுப்பிரமணிய ஐயர் கீர்த்தனங்கள், ஜாவளிகள், தில்லானக்கள், தானவர்ணங்கள் முதலி யவை இயற்றும் சாகித்திய கர்த்தாவாகவும், இசை வினிகை செய்யும் வித்துவானகவும், இராமநாதபுரம் அரசவை வித்துவானகவும் இருந்து அரசர், செல்வர், சமீன்தார், இசை அன்பர்கள், இசைப் புலவர்கள் முதலிய பலராலும் போற்றி மதிக்கப் பெற்றவர். பாண்டித் துரைசாமித் தேவர் அவர்களின் வேண்டு கோளினல் இராமநாதபுரம் பூச்சி சீனிவாஸ ஐயங்கார் அவர்களிடம் மாணவராக இருந்து இசை பயின்று பெரும் புகழ் பெற்ருர். இன்னும் மைசூர் வாசுதேவாச் சாரியார், டைகர் வரதாச்சாரியார், M. S. இராமசாமி

ஐயர், காகிநாடா C S. கிருஷ்ணசாமி ஐயர், குரு சாமி ஐயர், சேலம் பாபா & ராதா சகோதரிகள் ஆகியோர் அவரிடம் இசைக் கற்று நல்ல பேரும் புகழும் அடைந்தார்கள்.

● கோயம்புத்தூர் இராகவ ஐயர் பரமேசுர பாகவதரின் முதலாவது மாணவர். அவரது இசை அசாத்தியமான வீர சூர பராக்கிரமமுடையது. இசையின் எல்லாத் திறத்தையும் சாதகபலத்தால் செய்து காட்டும் பெரு வீரர். இராகவ ஐயரிடம் இசை கற்றுப் பெரும் புகழடைந்தவர் பாலக்காடு அனந்தராம பாகவதர். அவரது இசை பற்றி இசை வல்லுநர் யாவரும் வெகுவாகப் புகழ்ந்துரைப்பர். தம்புராவானது நல்ல ஜீவாவுடன் நாதக்கட்டைப் பெற்று ஒலித்து வர அவரது சாரீரம் வண்டின் ரீங்கார சப்தத்துடன் அத்தம்புராச் சுருதியோடு சேர்ந்து ஒலித்து இன்பந்தரும். தம்புராவில் ஒலிக்கும் ஜீவாவுடன் கூடிய நாதத்திற்கும் அவரது தொண்டையிலிருந்து வரும் ரீங்கார ஒலிக்கும் பேதமில்லாமல் ஒன்றி ஒலித்து லீனமாகி விடும். எனவே அவரது பாட்டிலே யாவரும் மெய்மறந்து விடுவர்.

● சிவகங்கை பெரிய வைத்தியநாத ஐயர் சின்ன வைத்தியநாத ஐயர் ஆகிய அவ்விருவரும் அக்காலத்திலே இரண்டு மத்த கஜங்களாக இசைத்துறையிலே விளங்கினர். அவர்கள் பாடிய இடத்திலே வேறு எவருடைய இசையும் எடுபடாது. அவர்கள் பாட்டில் அரசர் முதல் ஆண்டி வரை விருப்புடையவர்களாக

விளங்குவர். திருவனந்தபுரத்திலே இரவு ஒன்றரை மணிக்குப் பூபாள இராகம் பாடி காக்கை கரையும் படிச் செய்தவர். இத்திறத்தை அரசரவர்களே கண் கூடாகக் கண்டு வியந்தார்கள்.*

● பெரியவைத்தியநாத ஐயர் மைசூர் சமஸ்தானத் திற்குச் சென்றிருந்த போது அரசரைப் பார்க்க இயலாதபடி அங்குள்ள ஆஸ்தான வித்துவான்கள் தடை செய்து வந்தார்கள். பெரிய வைத்தியநாத ஐயர் அதனைப் பொறுத்தற்கியலாதவரானார். ஒரு நாள் அரசரவர்கள் சாமுண்டேச்வரி அம்பாளைத் தெரிசனஞ் செய்வதற்காகக் குதிரையில் சவாரிசெய்து வந்து கொண்டிருந்தார். அவ்வாறு வந்து கொண் டிருக்கும் போது, பெரிய வைத்தியநாத ஐயர் சுமார் ஒரு பர்லாங்கு தூரத்திலுள்ள ஒரு குளக்கரையில் ஒரு மரத்தடியிலே இருந்து 'பரசு' என்ற இரா கத்தை வெகு கம்பீரமாக எடுத்துப் பாடிக் கொண் டிருந்தார். அவ்விசை ஒலியைக் கேட்ட அக் குதிரையானது தம்மையும் மீறி கட்டுக்கடங்கா மல் தன் காலடியை வெகு வேகமாகஎடுத்து வைத்து ஓட்டமெடுத்தது. அரசரவர்கள் தம் வலு முழுவதை யும் செலுத்திக் கஷ்டப்பட்டு அக்குதிரையை நிறுத்தி னார்கள். அக்குதிரை தன் காதுகளை இசை வந்த திக்கிலே செலுத்தியது. அது நின்ற இடத்திலேயே தனது கால் அடிகளை வெகு வேகமாக எடுத்து எடுத்து வைத்தது. அரசரவர்கள் அக்குதிரையின் விசித்திர

---

* இது பற்றி ''**இசைக்கலை வல்லுநர்கள்**'' என்ற புத்தகத்தில் தனிக்கட்டுரை ஒன்றுள்ளது. அங்குக்காண்க.

மான செயலை அறிந்து இசைவந்த திக்கிலே தம் பார்வையைச் செலுத்தினார்கள். உடனே தம்முடனின்ற வேலையாள் ஒருவனை அனுப்பி அவரை வரவழைத்து அவருடைய க்ஷேமலாபங்களை விசாரித்தறிந்தார்கள். மறுநாள் அவரைத்தம் அவைக்கு வரச் செய்து இசைக்கும்படிச் செய்து அவருக்கு வேண்டியபடி தோடாக்கள், வீரசங்கிலிகள், பட்டுவத்திரங்கள், பணமுடிப்பு முதலியனவாகிய அரசமரியாதைகளைச் செய்து வழியனுப்பினார்கள். பெரியவைத்தியநாத ஐயருடைய இசைச்செய்கைகளையும், அவருடைய சிறப்பையும் பற்றி எத்துணையோ கூறவேண்டியுள்ளது. அவர் தொடர்பான அத்துணைச்செய்திகள் இருக்கின்றன.

● குன்னக்குடி கிருஷ்ணையர் பெரிய இசைப்புலவர். அவர்கள் கீர்த்தனைகளும் தில்லானக்களும் நிரம்பச் செய்யும் ஆற்றலுள்ளவர். தயக்கமும் தாமதமுமின்றி நிமிடத்திற்குப் பல தில்லானக்களை உருவாக்கும் வல்லமை பெற்றவர். தில்லான என்பது தரன என்று வடநாட்டில் கூறப்பெறும். இந்தத் தரன பாடும் வழக்கம் வடநாட்டிலேதான் அதிகம் உண்டு. நந்தமிழகத்தில் இந்தத் தரன வகையைப் பலர் செய்திருப்பினும் குன்னக்குடி கிருஷ்ணையர் காலத்திலேதான் இசைநிகழ்ச்சியில் அதிகம் கையாளப் பட்டுப் பாடும் நிலைமைக்கு வந்தது. அதற்கு முன்னல் தரன என்பது பரதநாட்டியம் ஆடுவோர் பயன்படுத்தியது. குன்னக்குடிக் கிருஷ்ணையர் நல்ல சங்கீத பரம்பரையில் வந்தவர். அவர் இராமநாதபுரம் சமத்

தானத்தில் ஆஸ்தான வித்துவானுக இருந்தவர். அவரை இராமநாதபுரம் அரசர் முத்துராமலிங்கத்தேவரும், பாஸ்கர ஸேதுபதி அரசரும், அவருடைய தம்பி பாலவனத்தம் சமீன்தார் பாண்டித் துரைத்தேவரவர்களும் பயன்படுத்திக்கொண்டு நன்முறையில் ஆதரித்து வந்தார்கள். மேலே கூறப்பெற்ற இசைவித்துவான்கள் யாவரினும் மகாவைத்தியநாத சிவனவர்கள் குரல்வளத்திலே தனிச்சிறப்புள்ளவர்கள். ஆயினும் மேலே கூறிய இசைப்புலவர்கள் யாவரும் இசை ஞானபலத்தில் சற்றும் குறைந்தவரல்லர். எனவே அக்காலத்து இசைப்புலவர் யாவரிடத்தும் மகாவைத்தியநாத சிவனவர்களுக்குப் பெரும் மதிப்பு உண்டு. அவர்கள் அக்காலத்திய பிற இசைப்புலவர்களைப்பற்றிச் சிறிதும் குறை கூறியதில்லை.

● மகாவைத்தியநாத சிவனவர்கள் ஏழு வயது முதல் பன்னிரண்டு வயதினராகவும், இராமசாமிசிவனவர்கள் ஒன்பது முதல் பதினுன்கு வயதினராகவும் இருந்த அவ்விடைக்காலத்திலே அவ்விருவரையும் சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் அவரது தகப்பனர் பஞ்சநதஐயரென்ற துரைசாமிஐயர் தம்முடன் அவர்களை அழைத்துக்கொண்டுதஞ்சைக்கு அடிக்கடி செல்வதுண்டு. அப்பொழுது தஞ்சைக்கு அண்மையிலுள்ள மானம்பூச் சாவடியில் (மகாநோன்புச்சாவடி) வேங்கடசுப்பையரென்ற சிறந்த இசைமேதையொருவரிருந்தார். அவர் இசை இலக்கிய இலக்கணங்களில் சிறந்த அறிவுடையவர். தியாகராஜசுவாமிகளின் நேர் மாணுக்கராவர். சரபசாஸ்திரிகள் (புல்லாங்

குழல்) வெங்கோபராவ் (பிடில்), தியாகராஜசுவாமிகளின் பேரரான தியாகராஜன், பட்டினம் சுப்பிரமணிய ஐயர் முதலியவர்கள் வேங்கடசுப்பையரின் மாணவர்களாவர். அக்காலத்து இசைப்பெரும் புலவர்களெல்லாம் வேங்கடசுப்பையரவர்களிடம் மிக்க மரியாதையும் அன்பும் பயபக்தி விசுவாசமும் உடையவர்களாக இருந்தனர். பட்டினம் சுப்பிரமணிய ஐயர் சங்கீதப் பரம்பரையைச் சேர்ந்தவர். அவரது குடும்பம் பரதசாத்திரக்கலையில் நிபுணத்துவம் பெற்றிருந்தது. தஞ்சை சரபோஜி மன்னரிடம் ஆஸ்தான வித்துவானாக இருந்த பரதம் பஞ்சநத சாஸ்திரிகளின் குமாரரான பரதம் வைத்தியநாத ஐயருக்கு 1845 ஆம் ஆண்டிலே பட்டினம் சுப்பிரமணிய ஐயர் பிறந்தார். பட்டினம் சுப்பிரமணிய ஐயரின் தாய்மாமனை மெலட்டூர் கணபதி சாஸ்திரிகளிடம் தம் சிறு வயதில் இசையைக்கற்றூர். 'குலவித்தை கல்லாமற் பாகம் பெறும்' என்பதற்கேற்ப பட்டினம் சுப்பிரமணிய ஐயர் தமது ஏழாவது வயதிலேயே ஓரளவு நன்ருகவே பாடுவார். தம் ஏழாவது வயதில் உபநயனக் கல்யாணம் முடிந்ததும், மானம்பூச்சாவடி வேங்கட சுப்பையரை இசையாசானுகப் பெற்ருர். அவர்கள் வீட்டிலேயே தாமொரு குழந்தையாக வளர்ந்தார். தம் பதினுன்கு வயதுவரை ஏழாண்டுகள் தொடர்ந்து இருந்து இசையைக்கற்று நல்ல இசைஞான பலத்தையடைந்தார். பட்டினம் சுப்பிரமணிய ஐயரவர்கள் தம் பதினுருவது வயது முதல் சிறுகச் சிறுக வெளியுலகத்திற்கு வியாபகமானுர். இசையின் திட்பநுட்பங்களைச் செவ்வனே அடையப்பெற்ற அவர் தம் முப்பது

அல்லது முப்பத்திரண்டாவது வயதிலே பேரும் புகழும் அடைந்து இசைமேதையென்று உலகோரால் கொண்டாடப்பெறும் உன்னத இடத்தைப் பெற்ருர். தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனங்கள் நூற்றுக் கணக்காக அவருக்குப் பாடமுண்டு. அதைச் சிறிதும் மாற்ருமல் வெகுசுத்தமாகப் பாடிப்பாடி மெருகேற்றி வைத்திருந்தார். அதன் உதவியால் அவர் ஏராளமான கீர்த்தனைகள், ஜாவளிகள், தில்லானுக்கள், தானவர்ணங்கள் முதலியவைகள் செய்து அபிநவ தியாகப்பிரம்மம் என்று எல்லோராலும் புகழும் பேறு பெற்ருர்.

● வையைச்சேரி பஞ்சநத ஐயரென்ற துரைசாமி ஐயர் தஞ்சைக்குச் செல்லும்போது தம்முடைய இரு குமாரரையும் அழைத்துப்போவார். தம் நண்பரான வேங்கட சுப்பையர் அவர்களது வீட்டிலே சில நாட்கள் தங்குவார்கள். அச்சமயங்களிலே வேங்கட சுப்பையரவர்கள் இசைநுட்பங்கள் பற்றிய பல செய்திகளையும் மகாவைத்தியநாத சிவன் இராமசாமி சிவன் ஆசிய இளைஞருக்கு எடுத்துக் கூறுவார்கள். அதன் திட்பநுட்ப அமைதிகளைச் சிவன் சகோதரரி வருக்கும் இசைத்தும் காட்டுவார்கள். அவ்விருவரும் உடனே அதனை நன்ருக மனப்பதிவு செய்து கொள்ளுவார்கள். அத்துடன் அதனை நன்கு பயின்று கைவரச் செய்து விடுவார்கள். மானம்பூச்சாவடி வேங்கட சுப்பையர் தாம் கூறும் வெகு நுண்ணிய இசை அம்சங்களைச் சிறிதும் குறைவின்றி உடனே இசைத்துக் காட்டும் இரு இளைஞரிடமும் மிகுந்த பரிவும் கருணையும்

கொண்டு விளங்கினர்கள். அவர்களின் கருணையின் சிறப்பினுல், செய்திகளின் உதவியால் அவ்விருவரும் சங்கீத சாத்திரத்தில் மேலாம் சிறப்பைப் பெற ஒரு நல்ல வாய்ப்பைப் பெற்றனர். மகாவைத்தியநாத சிவனவர்கள் ஏனைய மாணவர்கள் போன்று பல ஆண்டுகள் தங்கி மானம்பூச்சாவடி வேங்கட சுப்பைய ரவர்களிடம் இசை கற்றவரல்லர். பல சந்தர்ப்பங் களிலே நாட்கணக்கில் அவர்கள் வீட்டில் தங்கிப் பல அரும் பெரும் இசைச் செய்திகளை அறிந்தார்கள். எனவே மகாவைத்தியநாத சிவன் மானம்பூச்சாவடி வேங்கட சுப்பையரின் மாணவர் என்றும் கூறுவர். மகாவைத்தியநாத சிவனுக்கு எடுத்துக் கூறும் இசை நுணுக்கங்களை அக்காலம் வேங்கட சுப்பையரிடம் இசை பயின்று வந்த மிகவும் இளைஞரான பட்டினம் சுப்பிரமணிய ஐயரும் கூட இருந்தே கேட்பதுண்டு. அக்காலந் தொடங்கியே மகாவைத்தியநாத சிவனும் பட்டினம் சுப்பிரமணிய ஐயரும் ஒருவருக் கொருவர் அன்புடையவராக விளங்கினர்கள்.

● பட்டினம் சுப்பிரமணிய ஐயர் நல்ல சுகி. உடம்பின் போஷாக்கில் அதிக கவனம் செலுத்துவார். அவர் வீட்டிலே தினமும் கல்யாண சாப்பாடு தான் நடக்கும். வடை பாயாஸம் அப்பளாம் இல்லாமல் அவர் வீட் டிலே சமையல் நடக்காது. சுகந்தமான வாசனைகளில் அதிகப் பிரியம் உள்ளவர். புனுகு, ஐவ்வாது, அரகஜா, அத்தர், சந்தனம் முதலிய வாசனைத் திரவியங்கள் எப்பொழுதும் அவர் உடலிலிருந்து மணம் வீசிக் கொண்டேயிருக்கும். ஒவ்வொரு நாளும் வாசனை

வீசும் சந்தனத்தை உடலில் பூசிக் கொண்டு, வாய் சிவக்க வெற்றிலை பாக்கு உபயோகித்து, நல்ல வாசனை யுள்ள புட்பங்களைத் தலையிற் சூட்டிக் கொண்டு அவர் இருக்கும் நிலையைக் கவனித்தால் கல்யாண மாப் பிள்ளை போன்ற காட்சியே அவரிடம் காணப்பெறும். அவர் போன்று உடலின் சுகத்தை அனுபவித்த வித்து வான்கள் அக்காலம் எவருமில்லை. கோயில்களுக்குள் செல்லும் போது சாம்பிராணி, கற்பூரம், புஷ்பம் முதலிய சுகந்தம் வீசுவது போல பட்டினம் சுப்பிர மணிய ஐயர் வீட்டு வாசலில் இருந்து வீட்டினுள் நுழையும் போதே இத்தகைய நறுமணம் வீசும்.

● மகாவைத்தியநாத சிவனவர்கள் இதற்கு நேர் மாறானவர். அவருக்கு அதிக வாசனையே உதவாது. நல்ல சாப்பாடு சாப்பிட்டவரன்று. வற்றற் குழம்பு சாப்பாடுதான் அவர் ஆயுள் முழுதும் நடந்தது. அவருக்கு நன்கு பழுத்த பழங்களின் வாசனைகள், ஊது வத்தி முதலிய புகை தரும் வாசனைகள், அதிக மண முள்ள புஷ்ப வாசனைகள் எதுவும் ஆகாது.

● "இசையில் நற்றிறமமைந்த புலவர்களும், இசை யன்பர்களும் பாராட்டும் வகையிலே மகாவைத்திய நாத சிவன் ஏழு வயது முதலே இசை வினிகை செய்யத் தொடங்கி விட்டார்." பட்டினம் சுப்பிர மணிய ஐயர் தம் பதினாறு வயது முதல் கச்சேரி செய்யத் தொடங்கினார். பதினாறு வயதிற்குள் வையை வைத்தியநாத ஐயருக்கு மகாவைத்தியநாத ஐயர் என்றப்பட்டப் பெயரும், சிறந்த புகழும் தம்மிலும்

மேலாம் சிறப்புடைய இசை வித்துவான்களுடன் சேர்ந்து இசைக்கும் பேராற்றலும், எல்லா வித்துவான்க ளினும் எல்லாவகைத்தானும் இசைச்சிறப்பு மேலோங்கி யுள்ளவரென்று மக்களெல்லாம் அறிந்து கொண்டாடும் படியான சிறப்புப்புகழும் கிடைத்துவிட்டன. பட்டினம் சுப்பிரமணிய ஐயர் தம் பதினாரும் வயதிலிருந்து கச் சேரிகள் செய்யத் தொடங்கித் தமது முப்பத்து இரண் டாம் வயதிலே உச்சக் கட்டத்தை யடைந்து பேரும் புகழும் பெற்றுச் சிறப்பெய்தினர். மகாவைத்திய நாத சிவனுக்கு எந்த இராகமும் எந்தத் தாளமும் எந்தப் பல்லவியும் எளிமை பெற்று அநாயாஸமாகப் பாடும் வல்லமையுண்டு. பட்டினம் சுப்பிரமணிய ஐயர் தோடி கல்யாணி முதலிய கன இராகங்களின் ஆலாபனை போல வேகடை, சுத்தசாவேரி, கமாஸ், பூர்ணசந்திரிகை, கன்னடகௌளை, பலமஞ்சரி, நாட் டைக்குறிஞ்சி, பரசு, செஞ்சுருட்டி, காப்பி, சனரஞ் சனி, கேதாரம், கரஹரப்ரியை, சாளகபைரவி, கதன குதூஹலம், உசேனி, மாஞ்சை, ஆஹரி முதலிய இராகங்களை வெகு நேரம் ஆலாபித்து அழகு செய்து தமது சாதக பலத்தால் எளிமையாக்கிப் பாடுவார். பல்லவி பாடுதற்குக் கனராகம் ஆகிய தோடி, கல் யாணி, காம்போதி, பைரவி, சங்கராபரணம் ஆகிய ஐந்தோடு வேகடை, நாட்டைக் குறிஞ்சி, கரஹ ரப்ரியை ஆகிய இவைகள் விசேட அம்சம் பெறும். அவர் பாடுவது போல வேறு எவரும் அதனைப் பாட இயலாது. அவருடைய கனமான, கம்பீரமான, அழகு பெற்ற அந்தச் சாரீரத்திலே இந்த இராகங்கள் மெருகு பெற்றுக் கேட்பவர்களைப் பரவசப் படுத்தும்.

மகாவைத்தியநாத சிவனுக்கு இந்த இராகங்களைப் பட்டினம் சுப்பிரமணிய ஐயர் பாடித் தாம் கேட்பதில் மிகுந்த விருப்பமுண்டு. அவ்வாறே சில அவை களிலே பாடச் சொல்லிக் கேட்டு, அதனை ஆழ்ந்து கருத்தூன்றிச் சுவைத்துள்ளார்.

● பட்டினம் சுப்பிரமணிய ஐயர் வேகடை இரா கத்தை இசைப்பதில் மிக வல்லுநர். ஆதலால் வேகடை சுப்பிரமணிய ஐயரென்றும் அவர் வழங்கப் பெற்றூர். மைசூர் அரசர் அவையிலே அவர் பாடுங் காலத்து அந்த வேகடை இராகத்தைத் தொடர்ந்து மூன்று நாட்கள் பாடியுள்ளார். முதல் நாளன்று வேகடை இராகம் மட்டும் அதிவித்தாரம் செய்து, அந்த இராகத்திலே யாரும் கையாளப்படாத எத் துணையோ நுட்பமான இசையமைதிகளும், நுண் அமைதிகளும் வருமாறு செய்து அரசரையும், அங் குள்ள அரச குடும்பத்தினரையும், ஏனைய இசைப் புல வர்களையும் இன்பக் கடலிலே ஆழ்த்தினூர். இராகம் மட்டும் சுமார் ஒன்றரை மணி நேரம் ஆலாபிக்கப் பெற்றது.

இரண்டாம் நாள் அந்த வேகடை இராகத்திலே தானம் (இதை மத்தியம காலம் என்பர்) வெகு வித் தாரமாகப் பாடப் பெற்றது. அத்தானம் விளம்பம், மத்தியம காலம் ஆகிய நடைகளில் பாடப் பெற்று, பின்பு அசுவதாட்டி, கஜதாட்டி, அஜதாட்டி, மண்டுக தாட்டி, சர்ப்பதாடி, முதலிய எட்டு தாட்டிகளையும் கொண்டதாய் உச்சக் கட்டத்தை அடைந்தது. அன்று ஒன்றே முக்கால்மணி நேரம் தானம் பாடப்

பெற்றது. அன்று நிகழ்ச்சியில் அவர் பாடிய சக்கர தானம் மிகச் சிறப்புற்றது. அங்குள்ளோர் அனைவரும் அவர் பாடும் தான வகையினைக் கேட்டு வியந்தனர். யாவரும் இவரது இசைத்திறத்திலே கட்டுண்டு இருந்தார்கள்.

மூன்றும் நாள் அந்த வேகடை இராகத்தில் ஒரு பல்லவியைப் பாடினர். அப்பல்லவி வருமாறு: "ராமநாமமே ஜீவனம்-ஓமனஸா" என்பதாகும். அப்பல்லவியின் சுரக்குறிப்பு வருமாறு:—

; - ச நி த ப - சா ; - க ரீ - க ம த ப |
. ரா . ம . நா . மமே ஜீ . வ .

ரீ சா ; - ப ம | ப த நீ த ப - ம ப க ரி ‖ ச ரி
ன ம் . ஓ . . . . . . ம ன ஸா . . .

அப்பல்லவியை ஆதிதாளத்தில் அரையிடத்தில் வெகு நேரம் வித்தரித்துப் பல்வகையான இசை அம்சங்கள் அதில் வருமாறு நிரவல் செய்தார். பின்பு அப் பல்லவிக்குச் சவுக்கக் காலத்திலும் மத்தியம காலத்திலும் சுரம் பாடினர். அச்சுரம் பாடும் தாட்டிகள் அழகு பொருந்தி கேட்போரனைவரும் மகிழும்படி இருந்தது. கடைசியாகப் பஞ்சம சுரத்திலே முடிவு வருவது போல கால் ஆவர்த்தனம், அரை ஆவர்த்தனம், ஓர் ஆவர்த்தனம், இரண்டாவர்த்தனம் என்று சுரத்தைச் சவுக்கமாகவும் மத்தியம காலமாகவும் பாடினர். பின்பு இதன் முறை கொண்டு, இரண்டு, ஒன்று, அரை, கால், ஆகிய ஆவர்த்தனங்களில் சுரங்

களை முறையே குறைத்துப் பாடி வந்து பின்பு பல்லவியை எடுத்துப் பாடி யாவவரையும் வியக்கச் செய்தார். இதற்குச் சுரப் பல்லவி என்று பெயர். இவ்வாறுன சுரப் பல்லவி பாடும் முறை பட்டினம் சுப்பிரமணிய ஐயர் காலத்திலிருந்தே வழங்குவதாயிற்றென்பர். அவரது மூன்றும் நாள் இசை இரண்டு மணி நேரம் நடந்தது. அவர் மூன்று நாளும் இடைவிடாது பாடிய இசை மழையில் திகழ்ந்த வேகடை இராக ஆலாபனத்தையும், தானத்தையும், பல்லவியையும் சுவைத்த அரசர் அந்த ஒரு இராகத்திலேயே செய்யப்பட்ட அதி திட்ப நுட்ப வேலைப்பாடுகளை உணர்ந்து பட்டினம் சுப்பிரமணிய ஐயருக்குப் பொன் காப்பு, வீரசங்கிலி, தோடா முதலியவற்றை மன நிறைவோடு தந்து ஏராளமான பணமும் கொடுத்துச் சன்மானித்தார்கள். பட்டினம் சுப்பிரமணிய ஐயர் 1845 ஆம் ஆண்டில் தோன்றி 1902 ஆம் ஆண்டில் ஜுலை மாதத்திலே தம் ஐம்பத்து எட்டாவது வயதிலே பூவுலக வாழ்வை நீத்தார். அவர் புகழ் எக்காலத்தும் அழியாத சிறப்புடையதாகும்.

● * ஒருவருடம் ஐப்பசி மாதத்தில் வழக்கம் போல் துலாஸ்நானத்திற்காக ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் திரு

---

* ‘‘இங்கு குறிக்கப்பெறும் இரண்டு குறிப்புக்கள் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் எழுதிய மகாவைத்தியநாத ஐயர் என்ற புத்தகத்திலும் உள்ளன. அதில் சில செய்திகள் விடுபட்டுள்ளன. எனவே விடுபட்டுள்ள செய்தியையும் சேர்த்து இங்கு குறிக்கப்பெறுகின்றது. V. S. G.

வாவடுதுறையிலிருந்து மாயூரம் சென்று தெற்கு வீதியிலுள்ள கட்டளை மடத்தில் தங்கியிருந்தார். அங்கே நாள் தோறும் இசைப் புலவர்கள், பெருஞ் செல்வர்கள் முதலியோருடைய வாதப் பிரதிவாதங்கள் இடைவிடாமல் நடந்து கொண்டே இருக்கும். மகாவைத்தியநாத சிவன், இரட்டைப் பல்லவி சிவராமய்யர், கோபாலகிருஷ்ண பாரதியார், திருவாலங் காட்டுத் தியாகராஜ சாஸ்திரிகள் சாத்தனூர் பஞ்சு பாகவதர் முதலிய இசை வித்துவான்கள் அங்கே வந்திருந்தனர்.

மாயூரத்தில் அக்காலத்தில் கோயிற் பாடகராக ஒரு முதிய அந்தணர் இருந்தார். அவர் யாரைப் பார்த்துப் பேசினாலும், "அபயாம்பிகா கடாட்சம் உங்களுக்கு உண்டாக வேண்டும்" என்று சொல்லுவார். (அபயாம்பிகை என்பது அத்தலத்து அம்பிகையின் திருநாமம்). அதனால் அவரை யாவரும் "அபயாம்பிகா கடாட்சம்" என்றே அழைப்பாராயினர். அவருடைய இயல்பு தனிப்பட்டது. அடிக்கடி அவர் மடத்துக்கு வந்து போவார். ஆண்டிற்கு ஒரு முறை ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் அவருக்கு முக்கால் ரூபாய் சன்மானம் செய்வது வழக்கம். அப்படிச் செய்யும் போதெல்லாம், "மகாவைத்திக்குக் கூட ரூபாய் பத்து இருபது கொடுக்கிறீர்களே! நான் மட்டும் தாழ்ந்தவனா! அந்தப் பையன் வரும் போது அவனை என்னோடு பாடும் படிச் செய்தால் என் யோக்கியதை உங்களுக்குத் தெரிய வரும்" என்று சொல்லுவார். சுப்பிர

மணிய தேசிகர் நகைத்துக் கொண்டே" "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லியனுப்புவார்.

முன் குறிப்பிட்ட ஆண்டில் யாவரும் கூடி இருந்த சபையில் 'அபயாம்பிகா கடாட்சம்' தற்செயலாக வந்தார்; வழக்கம் போல் முக்கால் ரூபாய் சன்மானம் பெற்றுக் கொண்டார்; பிறகு தேசிகரை நோக்கி மகாவைத்தியநாத சிவனுடன் சேர்ந்து பாடச் செய்தால் தம்முடைய மதிப்பு விளங்கும் என்று சொன்னார். அவர் அதற்கு முன் மகாவைத்தியநாத சிவனைப் பாராதவராதலின் அவர் அங்கே இருத்தலை அறியவில்லை. சுப்பிரமணிய தேசிகர் புன் சிரிப்போடு "இவர்களே மகாவைத்தியநாத சிவனவர்கள்" என்று கூறிச் சுட்டிக்காட்டினர். அந்தப் பிராமணர் திடுக்கிட்டு எழுந்து போய் விடுவாரென்று அங்குள்ள யாவரும் எண்ணினர். அவர் சிறிதும் அஞ்சாமல், "அப்படியா! நல்லவேளை! இப்பொழுது அகப்பட்டுக் கொண்டாயா! பாடுபார்க்கலாம். நானும் பாடுகிறேன். நான் பாடிக்காட்டுகிறபடி பாடுவாயா!" என்று கேட்டுவிட்டு உடனே "மொட்டைச்சுவர், கட்டைச்சுவர், தட்டைச்சுவர், குட்டைச்சுவர்" என்று தம்வாய்க்கு வந்தவற்றைப் பல்லவியாக எடுத்துப் பாட ஆரம்பித்தார்.

அவருக்குச் சிறிது சாரீரம் போதாது. இசையிற் சிறந்த ஞானமுடையவரும் அன்று- ஆயினும் அந்தப் பல்லவியைச் சமஇடத்திலிருந்து முக்காலிடம் தள்ளி 'மொட்டைச் சுவர் என்றும்; இரண்டாம் விரலாகிய

பவுந்திர விரலின் சமத்திலிருந்து முக்காலிடம் தள்ளிக் 'கட்டைச்சுவர்' என்றும்; முதல் திருதத்தட்டிலிருந்து முக்காலிடம் தள்ளித் 'தட்டைச்சுவர்' என்றும் ; இரண்டாம் திருதத்தட்டிலிருந்து முக்காலிடம் தள்ளிக் குட்டைச்சுவர்' என்றும் பாடினுர். அப்பல்லவியை-ஆதிதாளத்தில் காம்போதி இராகத்தில் ஒரு ஆவர்த் தனத்தை நான்கு கூறு செய்து ஒவ்வொருகால் ஆவர்த்தனமும் முக்காலிடத்தில் பல்லவியின் சொற் கள் அமைந்து வருவது போலப்பாடினுர்.

அக்காலத்தில் பல்லவி என்பது தாளக்கட்டுடன் வருவது போல எந்தச் சொற்களேயும் கூறிப் பொருத் திப் பாடுவதுண்டு. "ஒன்றிரண்டு மூன்றுநாலஞ்சாறு-ஏழுஎட்டு ஒன்பதுபத்து" என்று ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்களேக் கூறிப் பல்லவியாகவும், ':குற் ருலத்துக் குரங்கே மரத்தை விட்டிறங்கே-ஏ" என் பதைப் பல்லவியாகவும், "யாரடா அவன் ரங்கா-அவனே விட்டேனு தொட்டேனு பார் பார்" என் பதைப் பல்லவியாகவும்; "சரிக பாக இச்செனே-சாதா பாக இச்செரா" என்பதை நகைச் சுவைப் பல்லவியாகவும், "மழையும் வெயிலும் கொட்டுது-குழிநண்டு எட்டிப் பாக்குது" என்பதைப் பல்லவியாக வும் பாடுவர். இப்பல்லவிகள் கச்சேரிகளில் இடம்பெரு. வேடிக்கையாகச் சில வித்துவான்கள் சேர்ந்து இருக் கும் நேரத்தில் பொழுது போக்காக இது நடைபெறும். பல்லவிகளில் எத்தனேயோ வேடிக்கை விநோத வகையுமுண்டு.

எனவே அபயாம்பிகாகடாட்சம் காம்போதியில் ஆதிதாளத்தில் முக்காலிடத்தில்

"; , - ம க பா த - ச்சா ,
. . மொ ட் டைச் சு வ ர்

ச்சா பா த | ச்சா , - ரீ ச்சா ச் | ரி நி த -
கட் டைச் சு வ ர் தட் டைச் சு வ . ர்

ச்சா நி த ம || பா ,
குட் டை ச் சு வ ர்

என்று நிரவல் செய்து பாடினுர். அவர் பாடும் போது சாரீரம் பிசிரு தட்டியும், சில இடங்களில் அபசுரம் பேசியும், சில இடம் குளறுபடியாகவும் வந்தது. அவ்வாறு பாடுதலைக் கண்டதும் மகாவைத்தியநாத சிவன் சிரித்தார்; உடனே அந்த முதியவர், "என்ன சிரிக்கிருய்? சிரித்து விட்டால் ஏமாந்து போய் விடுவேனென்று நினைக்கிருயா! நான்கு இடங்களிலும் அநாகத எடுப்பு வருவது போல இதைப் பாடல் வேண்டும். பாடு பார்க்கலாம். பேசாமல் ரூபாயை வாங்கி முடிந்து கொண்டு போக மாத்திரம் தெரியுமா? சால்வை, பட்டு, சோமன் ஜோடு எல்லாம் வாங்கிக்கொள்ளத் தெரியுமா? நான் இல்லாத காலத்தில் வந்து, பண்டாரச் சந்நிதிகளை ஏமாற்றிப் பணம் வாங்குகிருயா? எங்கே இதைப் பல்லவியாக வைத்துப்பாடு பார்க்கலாம்" என்று மகிழ்ச்சியோடு சொல்லிவிட்டு எல்லோருடைய முகத்தையும் பார்த்

தார். உடன் இருந்த யாவரும் கொல்லென்று சிரித்தனர்.

அப்போது அங்கிருந்த தியாகராஜ சாஸ்திரிகள் அந்த முதியவரைப்பார்த்து, "ஓய், இங்கேவாரும். என்ன அவரிடம் போய் உளறுகிறீர். இங்கே வந்து பாடும். நான் பாடிக் காட்டுகிறேன்" என்று சொன்ஞர். அந்தப் பிராமணரும் அப்படியே வந்து அஞ்சாமற் பாடினர். தியாகராஜ சாஸ்திரிகள் அவர் பாடின படி யெல்லாம் பாடிக்காட்டினர்; அவர் அபச்சுரமாகப் பாடும்பொழுதெல்லாம் சாஸ்திரிகளும் அப்படியே பாடினர். இந்த விநோதக் காட்சியினல் சபையிலிருந்தவர்கள் யாவரும் வயிறு குலுங்கச் சிரித்தார்கள். ஒன்றுந் தெரியாத சாதுவாகிய 'அபயாம் பிகாகடாட்சம்' சிறிது நேரம் பாடிவிட்டுத் தம்முடைய பேச்சு அங்கே எடுபடாதென்று எண்ணிப் பேசாமற் போய்விட்டார். (V S G)

● வேங்கடகிரி சமத்தானத்து அரசரவர்கள் சென்னைக்கு வந்திருந்த காலத்து மகாவைத்தியநாத சிவனுடைய இசைத்திறமையைப் பற்றிக் கேள்வியுற்று அவரைப் பார்க்க விரும்பினர். அதற்கிணங்க அவர் வேங்கடகிரி அரசர்பால் சென்றனர். அவ்வரசர் இசை இலக்கிய இலக்கண சாத்திரத்தில் நல்ல பயிற்சி யுள்ளவர்; ஆதலின் மகாவைத்தியநாத சிவனுடன் இசை இலக்கணச் சாத்திரம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அவரும் பல இசைநூற்

பயிற்சியுடையவரா்தலின் அரசர் அவருடைய உரையாடலால் மிக்கக்களிப்படைந்தார்.

வேங்கடகிரி சமஸ்தானத்தில் வித்துவான்களுக்கு உத்தம சம்பாவனையாகக் கொடுக்கும் ரூபாய் நூற்றுஎட்டு ஆகும் (108/-). மகாவைத்தியநாத சிவனுடைய இசை இலக்கண ஞானத்தையும், இலக்கணத்தின் நுண் அமைதியினை எடுத்து விளக்கிய திறனையும் அறிந்து மகிழ்ந்த வேங்கடகிரி அரசரவர்கள் உத்தம சம்மானத்தின் இருமடங்காகிய இருநூற்றுப் பதினாறு (216/-) ரூபாயைக் கொடுத்து வேறு மரியாதைகளையும் செய்தார். மகாவைத்தியநாத சிவனவர்கள் அங்கே இசை வினிகையாவது சிவகதையாவது செய்யவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பின் அரசரவர்கள் மகாவைத்தியநாத சிவனவர்களைத் தமது சமத்தானத்திற்கு வரவழைத்துப் பல நிகழ்ச்சிகளைக் கேட்டு உவந்தார்கள்.

அவரிடம் இசைபற்றிய இலக்கணச் செய்திகளை பலபேசி அதன் நுண் அமைதிகள் யாவற்றையும் அறிந்தார்கள். இந்நிகழ்ச்சியைப் பற்றி தமது நண்பர்களிடையே மகாவைத்தியநாதசிவன் “பாட்டைக் கேட்பாரென்று எண்ணினேன். சங்கீத லட்சணங்களைப் பற்றிப் பேசினாரேயொழியப் பாடவேண்டுமென்று கூறவேயில்லை. வேறொரு இடமாக இருந்தால் கசக்கிப்பிழிந்து விடுவார்கள். யாதொரு சிரமமும் இல்லாமல் உயர்ந்த சன்மானத்தை அவர்களிடம் பெற்றேன். இதுவும் ஓர் அதிர்ஷ்டம்தான்.” என்று அடிக்கடி கூறுவார்.

வேங்கடகிரி அரசர் இசை இலக்கியத்திலும் இலக்கணத்திலும் தேர்ந்தவர். அவ்வரசரின் வம்சாவளிகள் பல தலைமுறையினரும் பாட்டிலும் யாழிலும் சிறந்த அம்சம் பெற்றவர்கள். அதுபோல இவ்வரசரும் வீணை வாசிப்பில் வல்லவர். அவரை வீணை அரசர் என்றே கூறுவர். இசைப்புலவர்கள் நன்கு கற்றறிந்தவர்கள் தாமா! என்பதை இலக்கணச் செய்தியைப் பேசி அதன் அறிவு கொண்டே அவர்களின் தரத்தை ஆராய்வர். இலக்கணவகை எத்துணை சிறந்து விளங்குமோ அத்துணை இசைச் செயலாகிய இலக்கியமும் பக்குவமடைந்திருக்கும் என்பதைக் கண்டுவிடுவர். மகாவைத்தியநாத சிவனின் இசை இலக்கண அறிவு, திறம் பெற்றுச் சிறப்பாக இருந்தமையால் அவர் இசையில் நற்றிறம் வாய்ந்தவர் என்று அறிந்து பாடாதிருக்கும்போது உத்தம சம்பாவனையின் இருமடங்குத் தொகையை அளித்தார்கள். அதன் பிறகு பலமுறை தமது சமஸ்தானத்துக்கு அழைத்து இசை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்து அவ்விசையின் உயர்தரத்தை சுவைத்து மகிழ்ந்தார். V. S. G.

● திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஆழ்வார் குறிச்சிக் குமாரசாமிமுதலியாரவர்கள், சொக்கம்பட்டிச் சமீன்தாராகிய கருணாலய வணங்காப்புலித்தேவரவர்களிடம் மகாவைத்தியநாத சிவனவர்களை அறிமுகப்படுத்தி அச்சமீன்தாரிடம் அனுப்பி வைத்தார். சொக்கம்பட்டி சமீன், இராமநாதபுரம் சமீன், சிங்கம்பட்டி சமீன், ஊர்க்காடு சமீன், ஊற்றுமலைச் சமீன், (வீரகேரளம்புதூர்) அழகாபுரி சமீன், தலைவன்

கோட்டை சமீன், சேத்தூர், சிவகிரி, பாலவனத்தம் முதலிய சமீன்களிலுள்ள சமீன்தார்கள் வீரம் செறிந் தவர்கள். இராமநாதபுரம் சமீன்தாரும் சொக்கம் பட்டி சமீன்தாரும் தமிழ்மொழியில் நல்ல பற்றும் அதனை நன்கு கற்றறிந்த சிறந்த அறிவாற்றலுமுடை யவர்கள். அதுபோலவே வடமொழியில் பற்றுதலும் சிறிது பயிற்சியுமுண்டு. சொக்கம்பட்டி சமீன்தா ரவர்கள் மகாவைத்தியநாத சிவனவர்களின் இசை ஞானச் சிறப்பையும், தமிழறிவின் சிறப்பையும் கண்டு அவ்வாருன வித்தியா வீரருக்கு வீரத்தின் அறிகுறி யான சிறப்புப் பரிசு ஒன்று தருதல் வேண்டுமென்று எண்ணி அவர்களுடைய வலது காலிற்கு வீரகண்டை ஒன்று அணிவித்தார்கள். அதை வீரக்கழல் என்றும் கூறுவர். சமீன்தார் சன்மானித்த வீரக்கழல் காலிற்கு அணிவதாக இருந்தபடியால் அக்கழலை வெள்ளியால் செய்வித்து அவற்றில் எதிரும் புதிருமாக சிங்க உருவ மும் யானை உருவமும் தங்கத்தால் அமைத்து, அதில் நல்ல வேலைப்பாடுகளைச் செய்து, சிங்கம் யானையாகிய அவ்வுருவத்தின் கண்களிலே நல்ல ஒளிவீசும் விலை யுயர்ந்த சிவப்புக் (மாணிக்கம்) கற்களைப்பதித்து மகிழ்ச்சி பொங்க அன்பளிப்பாக ஈந்தனர். அதுமுதல் மகாவைத்தியநாதசிவன் கச்சேரிக்குச் செல்லும் போதெல்லாம் அந்த வீரக்கழலைத் தமது வலது காலில் அணிந்து வந்தார். அந்த வீரகெண்டையை அவர் அணிந்து கொண்டு நடந்து வரும்போது ஜல் ஜல் ஜல் என்று ஒலிக்கும். அந்த வீரக்கழலைக் கச்சேரிக்குச் செல்லும்போதுமட்டும் அணிந்துகொள்

ளுவார். ஏனைய வேளைகளில் அதைக்காலிலிருந்து கழற்றி விடுவார்.

● மகாவைத்தியநாதசிவன் முதல்முறை மைசூர் சமத்தானம் சென்றிருந்தபோது சிருங்கேரிக்குச் சென்றிருந்தார். அங்கு லோககுருவாய் அமர்ந்திருந்த சச்சிதானந்த சிவாபிநவ நரசிம்மபாரதி சுவாமிகளுடைய சந்நிதானம் சென்று இசைவினிகையும் சிவகதா பிரசங்கமும் செய்தார்கள். அவருடைய அதி அற்புதமான இன்னிசையையும், சிவகதா பிரசங்கத்தையும், அவரிடமிருந்து வரும் வாசாம கோசரமான வாக்கு வல்லமையையும் கேட்டு ஆசாரியசுவாமிகள் பரவசரானுர்கள். மகாவைத்தியநாதசிவன் எப்பொழுதும் சாரதா தேவியையும், சாரதாபீடத்தையும், தம்மையும் எண்ணியவராக இருத்தல் வேண்டுமென்றும், அவரிடம் அற்புதமான கலையானது நிரந்தரமாகத் தங்கி இருத்தற்குச் சாரதாதேவியின் அருளும் தமது ஆசியும் நிலைத்திருத்தல் வேண்டுமென்றும் கருதி அவருக்கு வலது கையில் அணிந்து கொள்ளத் தக்கதான வீரகண்டை ஒன்றை ஆசிசெய்து வழங்கினுர்கள். அந்த வீரகண்டை கையில் அணிந்து கொள்ளத்தக்கதாகையால் அது முழுதும் தங்கத்தால் செய்யப்பட்டது. அவற்றிலும் எதிரெதிராக யாளி உருவமும் சரப உருவமும் அழகாகச் சமைக்கப்பெற்று அதன் கண்களிலே விலையுயர்ந்த புஷ்பராகமும், வைரமும் முறையே பதிக்கப்பெற்று இருந்தன. இந்த வீரகண்டையின் உள்ளே ஏழு தடுப்புக்கள் செய்து ஒவ்வொரு தடுப்பிலும், பவழம், முத்து, பொன், கோமே

தகம், புட்பவிராகம், பச்சை, நீலம், மாணிக்கம், வைடூரியம் ஆகிய நவரத்னங்கள் இட்டு இருந்தன. இந்த வீரகண்டை ஆசாரிய சுவாமிகளாகிய மகாசந்நிதானத்தின் அனுகிரஹத்துடன் வந்தபடியால் அது முதல் அவர்கள் எந்த இசை நிகழ்ச்சிகளுக்குச் சென்றுலும் கையில் அந்த வீரகண்டையை அணிந்து செல்வது வழக்கமாயிற்று.

● கோடகநல்லூர்ச் சுந்தரசுவாமிகள் பெரும்பாலும் மகாவைத்தியநாத சிவனுடைய இசைவினிகைகளில் பிரசன்னமாகிவிடுவார்கள். அவர்கள் 1847ஆம் ஆண்டுமுதல் அதாவது மகாவைத்தியநாத சிவனுக்கு நான்காவது வயதுமுதல் 1878 ஆம் ஆண்டுவரை மகாவைத்தியநாத சிவனுடைய வீட்டிற்கு வந்து போகும் வாய்ப்புக்கள் இருந்தன. மகாவைத்தியநாத சிவனுடைய குடும்பத்தாரனைவரும் சுந்தர சுவாமிகளைத் தங்கள் குல குருவாக ஏற்றுப்போற்றி வந்தார்கள். இன்றைக்கும் மகாவைத்தியநாத சிவனுடைய பேரரும், விச்வநாதஐயரின் குமாரருமான சுந்தரராஜன் அவர்கள் வீட்டிலே மகாவைத்தியநாத சிவன் பூசித்துவந்த சிவபூசையும் நடராஜமூர்த்தியின் படமும், சுந்தரசுவாமிகளின் படமும் இருக்கின்றன. அவருடைய பேரர் பூசித்து வருகிருர். சுந்தரசுவாமிகள் முப்பத்திரண்டு ஆண்டுக் காலங்கள் சூதசங்கிதை, சிவபுராணங்கள் ஆகிய சொற்பொழிவுகள் செய்ய வெளியூர்களுக்குச் சென்று அப்பிரசங்கங்கள் முடிவுற்றதும் மகாவைத்தியநாத சிவனுடைய இல்லம் வந்து தங்குவார்கள். அவர்கள் தங்கி இருக்கும் காலமெல்லாம்



மகா வைத்தியநாத சிவன் செய்துவந்த
சிவபூசையை
அவருடைய பேரர் **திரு. சுந்தரராசன்**
செய்துவருகிறார்

வித்துவத் கோலாகல விழாவாகவே அவருடைய இல்லம் விளங்கும்.

● மகாவைத்தியநாத சிவன் மைசூர் அரசர் விரும்பியதற்கு ஏற்ப அச் சமஸ்தானத்திற்குச் சென்றிருந்த போது அரசரவர்கள் அவருடைய இசையைக் கேட்டு இன்புற்று அளவு கடந்த மகிழ்ச்சிப் பெருக்கை அடைந்தார்கள். அப்போது அவருக்கு ஏராளமான வெகுமதிகளை அரச மரியாதைகளுடன் செய்தார்கள். அவ்வாறு செய்த சன்மானங்களில் கையிற் பற்றிக் கொள்ளும் கைத்தடி ஒன்ருகும். அது சந்தன மரத்தால் ஆக்கப் பெற்றது. அதிக நுண்ணிய வேலைப் பாடுகளுடையது. சாணுக்குச் சாண் தங்கப் பூண் கட்டப்பட்டது. பார்வைக்கு அழகு மிகுந்து இருக்கும். பல ஊர்களில் கச்சேரி செய்யச் செல்லும் போது அந்தக் கைத்தடியையும் எடுத்துச் செல்வது வழக்கம். அக்கைத் தடியைப் பூமியில் ஊன்ற மாட்டார். கையிலேயே குறுக்காக அமைந்து சுழன்று கொண்டிருக்கும். கச்சேரி செய்யும் போது தமது முன்னல் அக்கைத் தடியை வைத்திருப்பார்.

● அரசர்களுக்குப் பாது காப்பாளர் இருப்பது போல் மகாவைத்தியநாத சிவனுக்கு மாங்குடி சங்கரன் என்பவர் நல்ல பாது காப்பாளராக இருந்தார். அவர் மகாவைத்தியநாத சிவனுடைய தம்பியாராகிய சிவராம சர்மா என்ற அப்பாசாமி ஐயரின் மைத்துனராவார். சிவனுக்கு நடந்த சிறப்புக்கள் யாவும் அவருக்கு நன்ருகத் தெரியும். அவருடைய பெருமைகளை பற்றியும்

அரசர்கள் பால் கிடைத்த மரியாதைகளைப் பற்றியும் ஆங்காங்கு நடந்த இசை நிகழ்ச்சிகளின் திறங்களையும், சிவகதைகளின் மகிமைகளையும் தாம் நேரிற் கண்டபடி மாங்குடி சங்கரன் என்பவர் கூறி வந்ததால் அவர்களுடைய சந்ததியார்களுக்கு மகாவைத்தியநாத சிவனின் சிறப்பம்சங்கள் நன்கு தெரிய வந்தன.

● மகாவைத்தியநாத சிவனுக்குச் செயற்கை அலங்காரங்கள் எதிலும் விருப்பம் கிடையாது. ஆபரணங்கள் எதுவும் அணிந்து கொள்ளுவதில்லை. அவர் விபூதி தரித்து உருத்திராக்கக் கண்டியைக் கழுத்திலணிந்து, யோக வேட்டி தரித்து, அரையில் மூலகச்சமாக உடையணிந்து, கையில் வீர கண்டையும் காலில் வீர கண்டை என்னும் வீரக்கழலும் அணிந்து கைத்தடியுடன் புறப்படுவார். அப்போது முருகப் பெருமானே தேவர்களைக் காக்கும் பொருட்டு மனித உருக் கொண்டு வேலைக் கையிற்றுங்கிப் புறப்பட்டு உலா வருவது போலத் தோன்றும். அவரும் அவருடைய தமையனும் சேர்ந்து வருவது கண்கொள்ளாக்காட்சியாக விளங்கும்.

● அவருக்குப் பொன்னுல் செய்யப்பெற்ற நகை நட்டுக்களில் விருப்பமில்லையாயினும், லோககுருவாகிய சிருங்கேரி சாரதாபீடத்துச் சங்கராச்சாரிய சுவாமிகளின் கட்டளையை முன்னிட்டு வலக்கையில் வீரகண்டையை அணிந்து கொள்வார். சொக்கம்பட்டிச் சமீன்தாரவர்களின் வேண்டுதலை முன்னிட்டுக் காலில் வீரக்கழலையும் அணிந்து கொள்வார்.

அவ்வலங்காரத்துடன் கச்சேரி செய்யுமிடத்திற்கு அவர் நடந்துவரும்போதே வீரக்கழாலனது ஜல், ஜல் என்று ஒலிக்கும். அவ்வொலியானது கச்சேரி களை கட்டிவிடும் என்ற எண்ணத்தை மக்கள் பால் உண்டாக்கிவிடும். இதைக்கண்டு யாவரும் மகிழ்ச்சியில் மூழ்கிவிடுவர்.

● திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் பட்டுவஸ்திரம் அளிப்பதில் உத்தமமான சன்மானம் பச்சைப் பட்டுப் பீதாம்பரம், அதையடுத்துச் சிவப்புப்பட்டுப் பீதாம்பரம், பிறகு நீலப்பட்டுப் பீதாம்பரம், அதன் பின்பு ஊதாப் பட்டுப் பீதாம்பரம், அதற்குப்பின்பு மஞ்சள்பட்டுப் பீதாம்பரம் என்று ஐந்து வகையான தரங்கள் உண்டு. எல்லாவித அரச மரியாதையாகிய பரிசில்களுடன் ஏனைய பீதாம்பரப் பட்டுக்கள் கிடைத்து விடும். ஆனால் பச்சைப்பட்டுப் பீதாம்பரம் கிடைப்பது மிகவும் அரிது. இதற்குமேல் சிறப்பான கலைஞர் இனி யாருமில்லை என்று மதிக்கப் பெறுபவர்களுக்கே பச்சைப்பட்டுப் பீதாம்பரம் அரசரவர்களால் சன்மானிக்கப்பெறும், சிலசமயங்களில் பல புலவர்களுக்கும் ஒன்று போலச் சன்மானிக்க நேர்ந்துவிடும். அவ்வாறு நேருமாயின் அப்போது வெள்ளைப்பட்டில் பொன்சரிகை நிரம்பிய பீதாம்பரம் அளிக்கப்பெறும். இது அரசாங்கத்தின் அக்காலத்து விதிமுறையாகும். திருவனந்தப்புரத்து அரசரவர்கள் கையினால் பச்சைப் பட்டுப் பீதாம்பரத்தை மகாவைத்தியநாத சிவன் அவர்கள் வெகு சிறப்போடு பெற்றார்கள்.

● சென்னையில் இசைத்திறத்தில் சிறந்தவரும், பல மக்களின் அன்பைப் பெற்றவரும், நல்ல உருவத் தோற்றம் உள்ளவருமான வேணுகோபாலதாசுநாயுடு என்பவர் தம் நண்பர்கள் சிலருடைய சொல்லைத் தட்டுதற்கியலாமல் மகாவைத்தியநாத சிவனை வாதப் போர் செய்ய அழைக்கும்படி நேர்ந்து விட்டது. அவ் வாதப்போரில் வேணுநாயுடு எடுத்துத் தரும் பல்லவி யைப் பாடுதல் வேண்டுமென்ற நிபந்தனையை ஏற்றுக் கொண்டு, சென்னை சாத்தாணித் தெருவிலுள்ள இராமையாபிள்ளை அவர்களுடைய வீட்டிலே மகா வைத்தியநாதசிவன் பாடினுர். அக்கால முறைப்படி பல்லவியானது தோடி, சங்கராபரணம், பைரவி, காம்போதி, கல்யாணி ஆகிய கனராகம் ஒன்றில் பாடு தல் வழக்கம். அம்முறைப்படி பல்லவிக்கு என்ன இராகம் பாடுதல் வேண்டுமென்று வேணுநாயுடுவை மகாவைத்தியநாதசிவன் கேட்டார். வேணுநாயுடு வோ தங்களுடைய விருப்பப்படி ஓர் இராகத்தைப் பாடுங்கள். பிறகு பல்லவியை மட்டும் நான் எடுத்துத் தருகிறேனென்ருர். மகாவைத்தியநாதசிவன் இந்த இசைவாதப்போரிலே நாராயண கௌளை என்ற இராகத்தை வித்தரித்துப் பாடினுர். இந்த இராகத் திலே பல்லவியை உடனே அமைத்துக் கொடுக்க இயலாதென்று அறிந்த வேணுகோபாலதாசுநாயுடு என்பவர் அந்த அவையை விட்டு எழுந்து சென்று விட்டார். அந்தச் சபைக்கு நடுவராக அமர்ந்து தீர்ப்புச் சொல்ல வீற்றிருந்த போட்டக்கிராப் மாசிலா மணி முதலியாரவர்கள் தாங்களே ஒரு பல்லவியைப்

பாடி விடுங்கள் என்று கூற, உடனே மகாவைத்திய நாதசிவன் "சம்போசிவசங்கரவிபோ, சாம்ப சதா சிவஓம்ஹரஹர" என்ற பல்லவியை ஆதிதாளத்தில் முக்காலிடமாகிற அநாகத இடத்தில் நான்குகளைச் சவுக்கத்தில் எடுத்துப்பாடி அந்த அவையிலுள்ள ஆயிரக்கணக்கான மக்களையும், அங்குக்குழுமியிருந்த அநேக இசைப்புலவர்களையும் மெய்ம்மறக்கும்படி பாடிச் சிறப்பித்தார். அந்த அவையிலுள்ளோர் யாவரும் காண மாசிலாமணி முதலியாரவர்களும் ஆயிரத்தொரு ரூபாய்கள் ரொக்கமாகவும், ஆயிரம் ரூபாய்கள் பெறுமானமுள்ள தோடாக்கள், வீரசங்கிலி, நடுவிலே தங்கம் பதிப்பித்த பெரிய வெள்ளித் தாம்பாளம், விலையுயர்ந்த பொன்னுடை முதலியவற்றைப் பரிசு கொடுத்துச் சன்மானித்தார்கள்.*

● மகாவைத்தியநாத சிவன் நோயாகப் படுக்கையிற் படுத்திருக்கும் போது அவருடைய தர்மபத்தினியான காமாட்சியம்மாள் அவருக்கு வேண்டிய தொண்டுகளைப் புரிந்த பிறகு அவருடைய அண்மையிலே கண் கலங்கி நின்று கொண்டிருப்பார். அவ் அம்மையாரது முகக் குறிப்பினால் அவரது உள்ளக் கிடக்கையை அறிந்து கொண்ட மகாவைத்தியநாத சிவன் தமது மனைவியை நோக்கி "காமாட்சி! நான் நோய் வாய்ப்பட்டுக் கிடக்கின்றேனே, உடம்பு தேறுதற்கில்லாமல் இருக்கிறதே' நான் நிறையச் சம்பாதித்துப் பொருள் ஈட்டியுள்ளேனே, இப்பொழுது தம்பி

---

*("இசைக் கலை வல்லுநர்கள்" என்ற புத்தகத்தில் இது தனிக் கட்டுரையாக வெளி வந்துள்ளது.

தமையன் மார்களைக் கூப்பிட்டு இந்த இந்த சொத்துக் களை இன்னின்னார் அடைதல் வேண்டுமென்று பாகம் செய்து விட்டால் நமது குழந்தைகள் சிறிது சௌக்கியமாக இருப்பார்களே என்ற விபரத்தை என்னிடம் கூறுதற்கு இயலாமலிருக்கிறாயா?'' என்று கேட்டார். காமாட்சியம்மாள் திடுகிட்டுத் தம் எண்ணத்தை அறிந்து விட்டார்களென்று நினைத்ததும் கண்களிலிருந்து நீர் பொங்கி வழியத் தேம்பி அழுது விட்டார். அத்தேம்பலுடன் ''ஆம்! அவ்வாறே எண்ணி னேன். என் வாய் விட்டு விபரங்களைத் தங்களிடம் கூற இயலாமல் தவித்தேன். இனி நான் தனியள் ஆகிவிடு வேனோ என்ற பயம் அதிகரித்து உள்ளது. நான் என்ன செய்வேன்'' என்று கூறிக் கதறி விட்டார். உடனே மகாவைத்தியநாத சிவன் தம் மனைவியைச் சமாதானம் செய்து, ''இது பற்றி நீ கவலை கொள்ளாதே. ஈசுவரன் இருக்கிறார். அவருடைய சங்கல்பப் பிரகாரமே எல்லாம் நடக்கும். இங்கு என் பிள்ளைகள், அண்ணன் பிள்ளை கள், தம்பி பிள்ளைகள் என்ற பேதம் எனக்கில்லை. இக்குடும்பத்தினர் யாவரும் எனக்கு ஒன்று தான். உனக்கும் உன் குழந்தைகளுக்கும் யாரும் துரோகம் செய்ய மாட்டார்கள். அதற்கு ஈசுவரன் இடங் கொடுக்க மாட்டார். கவலையுறாதே!. அன்றாடம் சிவத்தியானத்தை விடாமற் செய். உனக்கும் நற்கதி கிடைக்கும். இனி உனக்கு அது தான் தேவை. இனிக் குடும்பக் கவலைக்கு ஆளாகாதே'' என்று பல வாறு எடுத்துக் கூறிச் சமாதானம் செய்தார்.

● மகாவைத்தியநாத சிவனுடைய தகப்பனாராகிய பஞ்சநத ஐயர் என்ற துரை சாமி ஐயருக்குத் திருவை

யாற்றிலுள்ள பிரணதார்த்திஹரர் சுவாமியிடம் எத்துணை பக்தி சிரத்தை இருந்தனவோ, அதை விடப் பன்மடங்கு பக்தி சிரத்தையுடன் மகாவைத்தியநாத சிவனும் இராமசாமி சிவனும் விளங்கினுர்கள். எனவே திருவையாற்றிலே பிரணதார்த்திஹரரை எப்பொழுதும் தரிசித்துக் கொண்டிருத்தல் வேண்டுமென்றெண்ணி முன்னர் குறிப்பிட்டவாறு தர்மசம்வர்த்தனி யம்பிகையின் சந்நிதியிலுள்ள பாவாசாமி அக்கிரகாரத்தெருவில் மேற்குக் கோடியிலே வடக்குச் சாரியிலே தெற்கு நோக்கிய இரண்டு வீடுகளை வாங்கினுர்கள். மகாவைத்தியநாத சிவனவர்களின் நாற்பத்தி மூன்று அல்லது நாற்பத்து நான்காம் வயதளவிலே திருவையாற்று வாசம் தொடங்கி வாழ்ந்து வந்தார்கள்.

● பட்டினம் சுப்பிரமணிய ஐயர் சென்னைப் பட்டினத்திலே பத்து அல்லது பதினைந்து ஆண்டுக் காலம் வசித்து வந்தபடியால் அவர் பட்டினம் சுப்பிரமணிய ஐயர் என்றே வழங்கப்பெற்ருர். அவர் மகாவைத்தியநாத சிவனைவிட ஏறத்தாழ ஆறுமாதங்களுக்குச் சிறியவர். அவர் 1845 ஆம் ஆண்டில் தஞ்சையில் பிறந்தார். அவர் திருவையாற்றைத் தமது வாழ்விடமாகக் கொண்டார். மகாவைத்தியநாத சிவன் திருவையாற்றில் வசித்து வந்த நாளில் அவர் பிரணதார்த்திகரர் சுவாமி சந்நிதானம் சென்று கடவுள் முன்பு நின்று கீர்த்தனம் பாடித் துதிப்பது வழக்கம். அவர் அவ்வாறு செய்து வரும்போது இரவு நேரத்திலே பிரணதார்த்திகரர் சுவாமி

சந்நிதியிலே பட்டினம் சுப்பிரமணிய ஐயர் அவரைச் சந்திப்பதுண்டு. பட்டினம் சுப்பிரமணிய ஐயர் தமது நமஸ்காரத்தை மகாவைத்தியநாத சிவனவர்களுக்குச் செலுத்துவார். மகாவைத்தியநாத சிவன் பட்டினம் சுப்பிரமணிய ஐயரை "க்ஷேமமா! எல்லோரும் நலமா!" என்று சுருக்கமாக அன்புடன் விசாரிப்பார். வேறுபேச்சு இராது. சுவாமி சந்நிதியிலே மகா வைத்தியநாத சிவன் பக்திப்பரவசராக உள்ளக்கனி வுடன் சிவபெருமானைத் துதித்து உருகிப்பாடும் இன் னிசையைப் பட்டினம் சுப்பிரமணிய ஐயர், அவரு டைய பக்கத்தில் நின்றுகொண்டு கேட்டு இன்பப் பரவசமுற்றுக் கண்களிலே ஆனந்த அருவி பெருக மகிழ்வார். அவருடைய இசையில் அலாதியான சிறந்த மதிப்பு உண்டு. ஆவணியவிட்ட நாளன்று புதுப்பூணூல் தரித்துக் கொண்டு தமது இல்லத்தி லிருந்து புறப்பட்டுப் பாவாசாமி அக்கிரகாரம் வந்து மகாவைத்தியநாத சிவனையும் அவருடைய தமைய னரான இராமசாமி சிவனையும் தண்டனிட்டு வணங்கி அவ்விருவருடைய ஆசிகளையும் பெற்று சிவனுக்கு அபிஷேகித்த தீர்த்தம் வாங்கி உட்கொண்டு தலையில் தெளித்துக் கொண்டு, சிவப்பிரசாதமாகிய வில்வ தளத்தைச் சிவனவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு, பின்பு விடை பெற்றுத் தம் இல்லம் வந்து சேர்வார். இச் செயல் ஒவ்வொரு ஆவணி யவிட்ட நாளிலேயும் நடைபெறும்.

● இராமசாமி சிவன் உச்சிஷ்ட கணபதி உபாசனை யிற் சிறந்தவர் ஆதலால் இதனைத் தம் இளம் வயதி லேயே அறிந்த பட்டினம் சுப்பிரமணிய ஐயர் தாமும்

கணபதி மூர்த்தத்திடம் மிகவும் பற்றுதலுடையவராகி விநாயகப் பூசையை முறைப்படி ஏற்றுச் செய்ய லானுர். கணபதி பூசையை நாள் தவருமல் விதிப் படி செய்வார். அவருக்கு நாளாக நாளாக விநாயகப் பெருமானிடத்துத் தணியாத பக்திப் பெருக்கேற் பட்டது. விநாயக சதுர்த்தி நாளன்று அவர் வீட்டில் பூசை வெகு சிறப்பாக நடைபெறும். அவருடைய வீட்டிலேயும் தெருவிலேயும் மக்கள் கூட்டம் பெருகிப் பேராரவாரத்துடன் விளங்கும். அவருடைய வீடு திருவிழாக் கோலம் கொள்ளும். அன்று விநாயக ருக்குச் சிறப்பான அபிடேகமும், அர்ச்சனையும், நைவேத்தியமும், நடைபெறும். விநாயக வழிபாடு முழுவதையும் பட்டினம் சுப்பிரமணிய ஐயர் செய்து முடித்துக் :கொண்டு விநாயகப் பிரசாதமாகிய பழ வகைகள், மோதகங்கள், கொழுக்கட்டை வகைகள் இவைகளைத் தாமே எடுத்துக்கொள்ள, தம் பின்னுல் வெற்றிலை பாக்குச் சந்தனம், பழம், முதலியவைகளைத் தமக்கு வேண்டிய நண்பர்கள் எடுத்துக் கொண்டு நெருங்கிப் புடை சூழப் பாவாசாமி அக்கிரகாரம் வந்து மகாவைத்தியநாத சிவனிடம் வெற்றிலை பாக்குப் பழம் புஷ்பம் சந்தனம் குங்குமம் இவைகளைச் சேர்த்து விட்டு இராமசாமி சிவனையும் மகாவைத்தியநாத சிவனையும் தண்டனிட்டு வணங்குவார். பின்பு அவரு டைய ஆசிகளைப் பெற்றுக் கொண்டு, அவர்கள் கையினுல் கொடுக்கும் சிவ அபிஷேக நீரை வாங்கி உட்கொண்டு தலையிற் றெளித்துக் கொள்வார். பின்பு சிவார்ச்சனை செய்த வில்வ தளத்தை வாங்கிக் கண் களில் ஒற்றிக் கொண்டு தலையிற் சூட்டிக் கொள்வார்.

பட்டினம் சுப்பிரமணிய ஐயர் ஒவ்வொரு ஆவணி அவிட்ட நாளன்றும், ஒவ்வொரு விநாயகச் சதுர்த்தி நாளன்றும் தவருமல் அவருடைய வீடடைந்து நமஸ்காரம் செய்து அவருடைய நல்லாசிகளைப் பெற்றுப் பிரசாதங்களை அவர் கையினுல் வாங்கிக் கொண்டு பிறகு தம் இல்லம் வருதலே வழக்கமாக வைத்துக் கொண்டார். அவ்வழக்கம் மகாவைத்தியநாத சிவன் திருவையாற்றிலே வாழ்ந்த நாள் முழுவதும், அதாவது 1893 ஆம் ஆண்டு வரை சுமார் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் வரை நடைபெற்று வந்தது.

● மகாவைத்தியநாத சிவனிடம் இசை பயின்று வந்த மாணவர்களும், பட்டினம் சுப்பிரமணிய ஐயரிடம் இசை பயின்று வந்த மாணவர்களும் காவிரிக் கரை, வயல் வெளி, கல்யாண மண்டபம் போன்ற பொது இடங்களில் சந்தித்துக் கொள்வார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் எங்கள் குருவே மேல், அவர்களை எவராலும் வெல்ல இயலாது, அவர்களுடைய இசைத் திறம் போல வேறு எவரும் பெற்றிலர் என்று கூறி ஒருவருக்கொருவர் வாக்கு வாதம் செய்வர். ஆனல் மாண்வர்களுடைய மோதல் மகாவைத்தியநாத சிவன், பட்டினம் சுப்பிரமணிய ஐயர் ஆகிய அவர்கள் செவி வரைக்கும் எட்டாது.

மகாவைத்தியநாத சிவனிடம் இசைபயில வரும் மாணவர்களை இராமசாமி சிவன் ஏனைய இசை வித்துவான்களின் இசை நிகழ்ச்சிகளைக் கேட்கக் கூடாதென்று கண்டிப்பாகக் கூறி விடுவார். அது போலவே

பட்டினம் சுப்பிரமணிய ஐயரும் செய்து விடுவார். அவ்வாறு செய்வது பொருமையாலன்று. இசை மாணவன் இசை கற்கும் காலத்து இசையிலுள்ள நயங்களை நிதானமாகவே அறிதல் இயலும். படிக்கும் காலத்து வேறொரு இசை முறையைக் கேட்டால் அதில் நாட்டமாகி தாம் கற்றுக் கொண்டதையும் செயற் படுத்த இயலாமல், கேட்கப் பெற்ற இசைப் பகுதியும் கைவரப் பெற இயலாமல் மயக்குற்று முன்னேருது போய் விடுவர். அதனுல் மாணவன் ஓரளவு நற்றிறம் வாய்ந்த பின்னரே பிற இசைகளைக் கேட்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களிடமிருந்து வரப்பெறும் இசையாற்றல்களை அறிந்து தமதாக்கிக் கொள்ள இயலும் என்று கூறுவார்கள். இவ்வுண்மை யறியாதோர் பொருமையால் பிறருடைய இசையைக் கேட்க வொட்டாமல் தடுக்கின்ருர்கள் என்பர். அது அறியாக் கூற்ருகும்.

● இராமநாதபுரம் சமத்தானத்திற்கு மகாவைத்திய நாத சிவனும் இராமசாமி சிவனும் சென்று வருங் காலத்துச் சில சமயங்களிலே பட்டினம் சுப்பிரமணிய ஐயரின் இசை நிகழ்ச்சிகளையும் குன்னக்குடி கிருஷ்ணயரின் இசை நிகழ்ச்சிகளையும் கேட்க நேர்தலுண்டு. அச்சமயங்களில் அவ்விருவரின் இசையையும் பன்முறை கேட்டு மகிழ்ந்துள்ளார். பட்டினம் சுப்பிரமணிய ஐயர் கச்சேரி செய்ய அமரும் முன்பு சிவன் சகோதரர்கள் அச்சபையில் இருந்தால் அவ்விருவரையும் வணங்கி விட்டுத்தான் கச்சேரி செய்ய அமருவார். சிலசமயம் பட்டினம் சுப்பிரமணிய ஐயர் இசை

நிகழ்ச்சியைச் செய்து கொண்டிருப்பார். இடையில் மகாவைத்தியநாத சிவன் கச்சேரி நடக்கும் இடத்திற்கு வர நேரும். மகாவைத்தியநாத சிவனுடைய வரவைக் கண்டதும், பட்டினம் சுப்பிரமணிய ஐயர் தம் இருக்கையிலிருந்து எழுந்து இருகைகளையும் கூப்பி அஞ்சலி செய்வார். மகாவைத்தியநாத சிவன் தமது முகத்தில் புன்னகை தவழ இருகைகளாலும் அமருங்கள் என்ற குறிப்பை உணர்த்துவார். அதன் பிறகு தான் அவர் அமர்ந்து கச்சேரியைத் தொடர்வார்.

● பட்டினம் சுப்பிரமணிய ஐயரின் சாரீரம் மிகவும் கனமும் கம்பீரமும் ஹுூம்காரமும் உடையது. அவர் ஆதார ஷட்ஜ (குரல்) சுரத்தில் நின்று சுருதியுடன் தமது சாரீரத்தைச் சேர்க்கும் போது பூமியெல்லாம் அதிரும். அவர் பாடும்போது மகாவைத்தியநாத சிவன் அப்பாட்டின் நயமான அழகு மிகுந்த சிற்சில பகுதிகளைத் தாம் ஆமோதித்து வரும் தகுதியால் அவருடைய இசையானது என்றும் அமையாத அத்துணைச் சிறப்பைப் பெற்று விடும். பட்டினம் சுப்பிரமணிய ஐயர் இசை நிகழ்ச்சி நடக்குமிடத்தில் மகாவைத்தியநாத சிவன் இருக்க நேர்ந்து விட்டால் ஒவ்வொரு இராகத்தையும் பாடுதற்கு முன்பு மகாவைத்தியநாத சிவனிடம் கேட்டுக் கேட்டு அவர் குறிப்பிடும் இராகங்களைப் பாடி இசைப்பார். குறிப்பாக வேகடை, கமாஸ், கேதாரம், நாட்டைக்குறிஞ்சி, சகானு, பூர்ணசந்திரிகை, ஜனரஞ்சனி, பூர்வீகல்யாணி, பரசு, பிலகரி, கதனகுதூகலம், கன்னட

கவுளே, சாளகபயிரவி ஆகிய இவற்றையும் இவை போன்ற இன்னும் பல இராகங்களேயும் பாடச் செய்து கேட்டு மகிழ்வதுண்டு. இந்த இராகங்கள் பட்டினம் சுப்பிரமணிய ஐயருக்கு எளிமையாகவும் எழிலாகவும் அமைந்து சிறப்புறும். அவ்விருவரும் ஒரே ஊரிலே இருந்தாலும் இக்காலத்திய இசைப் புலவர்கள் போல எப்போதும் எதையேனும் பேசிக் காலங்கழிப்பது போலன்றி நலம் விசாரித்து விட்டு தத்தம் வீட்டிலேயே இருந்து வருவார்கள். பட்டினம் சுப்பிரமணிய ஐயரும் மகாவைத்தியநாத சிவனும் ஒருவருக்கொருவர் அன்புப் பெருக்குடையவர்கள்.

● குன்னக்குடி கிருஷ்ணேயர் இயற்றும் தில்லாணுவில் மகாவைத்தியநாத சிவனுக்குத் தனிப்பட்ட ஈடுபாடு உண்டு. கிருஷ்ணேயர் முன் கூட்டியே தில்லாணுவை இயற்றி அதனைத் தனியாகப் பாடம்செய்து பிறகு அவையிற் பாடுவது வழக்கமில்லே. உட்கார்ந்த இடத்திலேயே, அவையிற் பாடுந்தருணத்திலேயே ஜதிக்கோர்வை, சொற்கட்டு, அதற்குரிய சாகித்தியப் பகுதி, தாளக்கட்டு ஆகியவைகள் சிறிதும் குற்றமின்றித் தில்லாணுவாக உருவாகிவிடும். அவருடைய தில்லாணுவானது கீர்த்தனேகள் போன்று வெவ்வேறு சொற்கட்டுகளுடன், பற்பல வர்ணமெட்டு (சுர அமைப்பு) பேதங்களுடன், பல்லவி அனுபல்லவி சரணம் என்ற முறையில் அமைந்து இன்பந்தரும். அருள்பெற்ற ஒரு கவிஞர் எடுத்த எடுப்பிலேயே நூற்றுக்கணக்கான கவிகளேச் செய்து களிப்பதுபோல அவர் தில்லாணுவை எடுத்த எடுப்பிலேயே பலப்பல

புதிதாகச் செய்துவிடுவார். ஒருநாள் இராமநாதபுரம் அரசரவர்கள், மகாவைத்தியநாதசிவன், இராமசாமி சிவன், பட்டினம் சுப்பிரமணியஐயர், நாராயணசாமி யப்பா, பிடில் நாராயணசாமிஐயர், திருக்கோடிக் காவல் கிருஷ்ணையர், மாயூரம் வீணை வைத்தியநாத ஐயர், கடம் நாராயணசாமிஐயர் முதலியோர் வீற்றி ருந்த அவையிலே குன்னக்குடி கிருஷ்ணையரும் கூட அமர்ந்திருந்தார். அப்பொழுது ஏனைய வித்துவான் களனைவருக்கும் குன்னக்குடி கிருஷ்ணையரின் அபார மான இசையாற்றலை அறிவித்தல் வேண்டுமென்று எண்ணிய அரசரவர்கள் குன்னக்குடி கிருஷ்ணையரிடம் காப்பி, பரசு, கானடா, வசந்தா, உசேனி, கேதாரம், பேஹாக், மோகனம், பிலகரி, மந்தாரி, பந்துவராளி, ஆகிரி, கமாஸ், அமீர்கல்யாண், யமுனகல்யாண், வடநாட்டுஹிந்தோள் ஆகிய இப்பதினறு இராகங் களையும் கூறி இவற்றில் தில்லானு இயற்றி இப்பொ ழுதே பாடுதல் வேண்டுமென்ருர்கள். அவ்வளவுதான் உடனே கடல்மடை திறந்து விட்ட மாதிரி எண்பது நிமிட நேரத்தில் இந்தப்பதினறு இராகத்திலும் தில்லா னுவை அக்கணமே பாடி முடித்தார். அவற்றில் சிலவே வழக்கத்திலுள்ளன. அதன் சொற்கட்டு, பாடல் வளம், தில்லானுவின் துரித மத்தியம கால நடைகள் ஆகிய இவைகளைக்கேட்ட பல இசைப்புலவர்களும் வியந்து பாராட்டினுர்கள். அவரிடத்தில் மகாவைத்தியநாத சிவனுக்கு நல்ல மதிப்பு உண்டு.

● மகாவைத்தியநாத சிவனுக்கும் இராமசாமி சிவனுக்கும் தம்முடைய தகப்பனுர் பஞ்சநத

ஐயரென்ற துரைசாமிஐயர் போலவே சப்தத்தான உற்சவத்திலே பிரணதார்த்திஹரர் சுவாமி கூடப் புறப்பட்டு ஏழுதலங்களுக்கும் சென்று வருவார்கள். சப்தத்தானமென்பது:— 1. திருவையாறு, 2. திருப்பழனம், 3. திருச்சோற்றுத்துறை, 4. திருவேதிகுடி, 5. திருக்கண்டியூர், 6. திருப்பூந்துருத்தி, 7. திருநெய்த்தானம் (தில்லஸ்தானம்) என்பன. சில சமயங்களிலே சுவாமி பின்னல் பாடிச் செல்வதுண்டு. சில இடங்களில் தங்கித் தமது சிவபூசை ஜபதபம் ஆகியவற்றை முடித்துக் கொண்டு சுவாமி கூடச் செல்லுவார்கள். தில்லஸ்தானத்திலே பிரணதார்த்திஹரர் சுவாமி எழுந்தருளி இருக்கும் போது மாலை வேளையில் காவிரி ஆற்று மணலிலே அமர்ந்து மகாவைத்தியநாத சிவனவர்கள் கானமுத வெள்ளம் ஆருக ஓடும்படிப்பாடுவார்கள். மகாவைத்தியநாத சிவனவர்களைச் சுற்றி ஆயிரக் கணக்கான மக்கள் சூழ அமர்ந்திருந்து அவ்விசையமுதைப் பருகி மகிழ்வார்கள்.

● மகாவைத்தியநாத சிவனின் புத்திக் கூர்மையை பற்றிப் புகழாத புலவர்கள் அக்காலத்தில் இலர். இலக்கிய நூல்களிலேயுள்ள அரும் பெரும் செய்தி பற்றிப் பெரும் புலவர்களெல்லோரும் கூடிக் கலந்து ஆராய்ந்து வருவார்கள். எவ்வளவு ஆராய்ந்தாலும் சில இடங்கள் அவர்களுக்குப் புலனுகாமற் கலங்குவர். அதனை மகாவைத்தியநாத சிவன் விரித்துப் பேசாது சுருக்கமாகக் கூறி ஒன்றிரண்டு சொற்களால் எடுத்து விளக்கி விடுவார். அச்சுருக்கமான சொற்கள் மிகப் பெரும் தத்துவங்களை அப்பெரும் புலவர்களுக்கு விளக்கி அப்புலவர்களின் ஐயத்தைத் தீர்க்க வல்லன.

● மகாவைத்தியநாத சிவன் உடல் நலம் குன்றிப் படுத்த படுக்கையாக இருக்கிறர் என்று கேள்வியுற்ற பாஸ்கர சேதுபதியவர்கள் இராமசாமி சிவனை வரவழைத்துத் தம்பியாரின் உடல் நிலைமைப் பற்றிப் பரிவோடு விசாரித்து அவர்களுக்குப் பணத்தட்டு இருத்தல் கூடாதென்றெண்ணி எப்பொழும் கொடுக்கும் சன்மானத்தைக் காட்டிலும் பன்மடங்கு கொடுத்து உதவி வந்தார்கள். அத்துடன் இராமசாமி சிவனிடம் "தங்களுக்கு எவ்வெப்போது எது தேவையோ அ,தனைத் தாராளமாக என்னிடம் கேளுங்கள். அதன்படி நான் தங்களுக்கு உதவுகிறேன். மகாவித்துவான்களான தாங்களெல்லாம் எவ்வித இன்னலுக்கும் ஆட்படக்கூடாது. பொருள் பற்றிக் கவலையுறுதீர்கள். என்னிடம் உள்ள பொக்கிஷம் தங்களுடையதேயாகும். தம்பி அவர்களின் உடல் நலனை நன்ருகக் கவனியுங்கள்" என்று கூறிப் பல சமயங்களில் தக்க தருணத்தில் கவலைக் கிடமில்லாதபடி பொருளுதவியைச் செய்து வந்தார்கள். இந்நன்றியை அவருடைய குடும்பம் என்றும் நினைத்து வந்தது.

● முதன் முதல் மகாவைத்தியநாத சிவன் வையைச் சேரியில் உடல் நலமின்றி உணவும் செல்லாமல் ஆறு மாதங்கள் வரை நோயுற்றுப் படுக்கையிலேயே கிடந்தார். எழுந்திருக்கவோ பேசவோ கைகால்களை அசைக்கவோ இயலாத நிலையில் இருந்தார். அவருடைய ஒன்றுமியலாத நிலையை அறிந்த திருவாவடுதுறை ஆதீனகர்த்தாவாகிய அம்பலவாண தேசிகரவர்கள் அவருடைய குடும்பத்திற்கு ஆகும் செலவிற்

கான தொகையைத் தவருமல் கொடுத்தனுப்பி உதவி வந்தார்கள். அது போல் அவருக்கு வேண்டிய மற்றும் பலகனதனவான்களும் அவ்வாறே செய்து உதவினர். இவ்வுதவிகளை அவர்கள் வாழ்நாள் முழுதும் மறக்காமல் தம் நன்றியை அவர்களுக்கு அடிக்கடி தெரிவித்து வந்தார்கள்.

● மகாவைத்தியநாத சிவன் மூன்ரும் முறையாக மைசூர் சமத்தானத்திற்குப் போய் வந்த சில மாதங்களில் நோயுற்றுப் படுத்த படுக்கையானுர். நந்தன வருடம் ஆவணி மாதம் ஒன்பாம் தேதியில் அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. அப்பொழுது அவருக்கு நாற்பத் தொன்பதாவது வயது நடந்து கொண்டிருந்தது. அப்பொழுதும் அவர் ஸ்நானம், பூசை, ஜபம், தபம் முதலியவை செய்வதில் தவறுவதில்லை. முடியாத தருணத்தில் துணியை வெந்நீரில் நனைத்துப் பிழிந்து உடலைச் சுத்தி செய்து கொண்டு தம் தமையனுர் இராமசாமி சிவன் சிவ பூசை செய்வதைப் பார்த்துக்கொண்டிருப்பார். பூசை முடிந்ததும் கடைசியில் தாம் ஒரு வில்வ தளத்தை எடுத்துச் சிவனை அர்ச்சித்துத் துதித்துத் தியானிப்பார். அதன் பிறகுதான் மருந்தும் பிறவும் உட்கொள்வார்.

● மகாவைத்தியநாத சிவன் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டுத் தன் நினைவு இல்லாமல் இருந்தார். எத்துணையோ மருத்துவர்கள் அவருக்குத் தக்க மருந்துகளை உபயோகித்தும் பயனில்லை என்ற நிலைமையில் இரண்டு நாட்கள் இருந்தார். இச் செய்தியை அறிந்த

ஊர் மக்களெல்லாம் மனம் நொந்து துக்கத்தில் தோய்ந்தவர்களானுர்கள். ஒரு நாள் (அதாவது மகா வைத்தியநாத சிவனுடைய சீவன் பிரியும் நாள்) பிரணதார்த்திஹரர் சுவாமி கோயிலில் உச்சிக் காலத் தீபாராதனைக்காக மணியடித்தது. அம்மணியின் ஓசையானது ஒலிக்கும் போது மகாவைத்தியநாத சிவனுக்குச் சிறிது சுய நினைவு வந்தது. அந்தருணத் திலே கோயிலில் அடிக்கும் மணியின் ஒலி அவருடைய செவியிற் பட்டது. அப்பொழுது அவர் படுக்கையி லிருந்தவாறே இருகைகளையும் எவ்வாறோ எடுத்துத் தனது தலைக்கு மேலே தூக்கி ஒன்றித்துக் கூப்பி வணங்கித் துதி செய்தார். வீட்டிலுள்ளோர் அனை வரும் சற்று நிம்மதி அடைந்து அவரை வைத்தகண் மாருமல் நோக்கியபடி இருந்தார்கள். சுயபிரக்ஞை வந்தபடியால் அவருடைய உயிருக்கு இனி ஆபத் தில்லை என்று எண்ணினர். ஆனல் அது போக்குத் தெளிவு என்று உணர்ந்திலர்.

● திருவையாற்றிலே பிரணதார்த்திஹரர் சுவாமி சந்நிதானத்திலே உச்சிக் காலத் தீபாராதனை தரிச னத்திற்காகப் பல மறையோர்களும் ஏனைய பல சிவ பக்திச் செல்வந்தர்களும் வந்திருந்தனர். சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட அன்பர்கள் குழுமி இருந்தனர். அக்கோயிலிலுள்ள **தர்ம சம்வர்த்தனியம்மன்** சந்நி தானத்திற்கு யாவரும் வந்து கொண்டிருந்தனர். அப்பொழுது மகாவைத்தியநாத சிவன் ஒரு சிறு கழியை ஊன்றிக் கொண்டு அங்கு நின்று அம்பாளைத் தரிசனஞ் செய்வதை அனைவருங் கண்டனர். கண்

கொட்டாமல் கண்டு வியந்தனர். நேற்றும் இன்று காலையும் மகாவைத்தியநாத சிவன் மிக வருந்திச் சுயநினைவு அற்று மிகவும் அவதிப் பட்டனரே! வைத்தியர்கள் எல்லோரும் இனிப் பயனில்லை என்று கூறிக் கைவிட்டு விட்டனரே! இப்பொழுது எழுந்து வரும்படி அவரது உடல்நிலை எவ்வாறு குணம் அடைந்தது. வியப்பாக இருக்கின்றதே! என்று அங்குள்ள ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர். மகாவைத்தியநாத சிவன் தரிசனம் செய்துவிட்டுப் போமளவும் யாவரும் ஒதுங்கி நின்று அவரையே வைத்த கண் வாங்காது பார்த்திருந்தனர். மகாவைத்தியநாத சிவன் மிகவும் தள்ளாடிக் கொண்டு சுவாமியையும் அம்பாளையும் சுப்பிரமணிய சுவாமியையும் நிதானமாகத் தெரிசித்து வந்தபடியாலும் அன்று தை வெள்ளிக்கிழமையாகையால் சகஸ்ரநாமம், அஷ்டோத்திரம் முதலிய அர்ச்சனைகள் நிரம்ப இருந்தமையாலும், அன்று மாவிளக்குப் பிரார்த்தனையுள்ளோர் மாவிளக்கு ஏற்றினமையாலும் உச்சிக் காலத் தீபாராதனை நடக்க மத்தியானம் ஒன்றரை மணியாயிற்று. ஏனைய நாட்களில் பன்னிரண்டு மணிக்கே உச்சிக் காலத் தீபாராதனை முடிந்து நடைசாற்றப் பெறும்.

● மகாவைத்தியநாத சிவன் தர்ம சம்வர்த்தனியம்மன் தரிசனத்தை முடித்துக் கொண்டு தளர்ந்து தட்டுத் தடுமாறிக் கழியை ஊன்றிக் கொண்டு நடந்து அம்பாளைப் பிரதட்சிணமாக வந்து பிறகு சுப்பிரமணிய சுவாமி சந்நிதானம் வந்து தரிசித்தார். அவ்வாறு தரிசித்ததும் உடன் மறைந்து விட்டார். அங்கு கூடி

யிருந்த மக்களெல்லோரும் இப்பொழுது இங்கு நின்ருரே அதற்குள் எங்கு சென்ருர் எப்படி மறைந்தார். என்று வியப்புள்ளவர்களாகி அங்கு மிங்கும் படபடப்பும் பரபரப்புங் கொண்டு விரைந்து சென்று பார்த்தார்கள். அவர் தங்களுடைய கண்களுக்குப் புலப்படாமையால் அனைவரும் ஆங்காங்குக் கூடி நின்று அவரைப் பற்றி வியந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

● கோயிலிலே மக்களெல்லோரும் தரிசனத்தை முடித்துக் கொண்டு சிலர் சிலர் சேர்ந்து மகாவைத்தியநாத சிவன் சுவாமி தரிசனம் செய்ததையும் உடனே எவர் கண்களிலும் படாமல் மறைந்ததுமான அற்புதச் செய்திகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்க, மகாவைத்தியநாத சிவன் சுப்பிரமணிய சுவாமியைத் தரிசித்து மறைந்த அக்கணத்திலேயே மகாவைத்திய நாத சிவனுடைய வீட்டிலே சிவனுடைய ஆத்துமா சிவசாயுச்சியப் பதவியை அடைந்தது. அவருடைய ஆத்துமா பிரிந்த துக்கக் குரல் அலறுவது கேட்டு எல்லா மக்களும் துக்கத்திலாழ்ந்தார்கள்.

● மகாவைத்தியநாத சிவன் ஆத்துமா பிரியுந் தருணத்து அவர் நல்ல பிரஞ்ஞையுடனேயே இருந்தார். நந்தன வருடம், தைமாதம், பதினுரும் தேதி, சுக்கிலபட்சம், சுக்கிரவாரம், தசமிதிதி, பகல் ஒன்றரை மணிக்குச் சிவாலயத்தில் உச்சிக் காலத் தீபாராதனை நடக்கும் சமயத்தில், எவ்வாறே தமது முழுச் சக்தியையும் உபயோகித்து, சிவபெருமான் மகிமையை வாய் விட்டுக் கூறி, மூன்று முறைகள் சிவ

நாமத்தை உரத்து கர்ஜ்ஜனை செய்து, சிரத்தில் கை கூப்பி வைத்து அஞ்சலித்து உள்ள அத்தருணத்தி லேயே அவருடைய சீவன் பிரிந்து சிவ பதவியை அடைந்து சிவப்பேறு பெற்ருர்.

● மகாவைத்தியநாத சிவன் சீவன் பிரியுங் காலத்து அவர் தள்ளாடி கோயிலில் நின்று அறம் வளர்த்த நாயகியம்மன் சுப்பிரமணிய சுவாமி முதலிய தெய்வங் களை வணங்கித் திடீரென மறைந்த இச் செயல்களை நேரிற் கண்டவர்கள் எல்லோரும் தம்முடைய வாழ் நாட்கள் முழுவதும் இந்த அற்புத நிகழ்ச்சியைக் கூறிக் கூறி வியந்துள்ளனர். இந்நினைவு வரும்போ தெல்லாம் அவர்கள் தேகம் சிலிர்த்துப் புல்லரிக்கும். அவர் ஈசுவர அனுக்கிரகத்திற்குப் பெரிதும் ஆளான தன்மையை நினைந்து மெய் சிலிர்த்து உருகுவர்.

● மகாவைத்தியநாத சிவன் தமது நாற்பத்தொன் பதாவது வயதிலேயே இவ்வுலக வாழ்வை நீத்து விட் டார். அவர் அவ்வாறு இப்பூத உடலை மிக விரை வில் நீத்ததற்குப் பல காரணங்கள் உண்டு. அவர் தம் ஏழு வயது தொடங்கி நாதப் பிரம்மமான நாதோபா சனையின் அனுபவத்தைப் பரிபூரணமாகப் பெற்று விட் டார். சிறிது காலத்தில் சிவ பூசை, பாராயணம் இவை களை ஏற்றுக் கொண்டு சிவத் தியானபரராகத் திகழ்ந்து விட்டார். இன்னிசை, சிவகதாப் பிரசங்கம் இவற்றைச் சர்வ சதாகாலமும் செய்து வந்த அவர் தபஸ் சித்தி களுக்கு உரிய விருதங்களையும் அனுட்டானங்களையும் முறை பிறழாமல் அனுட்டித்து வந்துள்ளார். இளம்

வயதிலேயே உடல் வலுவுக்கான உணவு வகைகளை நெய் பால் முதலிய சத்து உள்ளவற்றை நிரம்பச் சாப்பிடவில்லை. நல்ல இளமைப் பருவத்தே சத்துள்ள உணவைப் புசிக்க வேண்டிய அவர் அவ்வாறு செய்யாமல் உடல் நலிதற்குரிய உணவுக் கட்டுப்பாடு, சத்துணவைத் தள்ளுபடி செய்தல், அத்துடன் பட்டினி பாரணை ஆகியவற்றை மேற் கொண்டார். இதனுல் அவருக்கு உடல் நலிதல் ஏற்பட்டுச் சிறு வயதிலேயே உடல் தளருவதற்கான நிலை ஏற்பட்டது. பாடும் போதும், கதை சொல்லும் போதும் வெளியாகும் பிராண சக்தி அவருடைய இயற்கை சக்தியின் விரையமேயாகும். உடலுக்கு வலுவூட்டும் செயற்கைச் சக்தியைத் தாம் ஏற்றுக் கொள்ளாமல் அறவே விலக்கி விட்டார்.

● அவர் இசை ஞானச் செல்வத்தைச் சிவபெருமான் அருளால் நிரம்பப் பெற்றவர். அதுபோல சிவத் தியானத்திலும் சிவ பூசையிலும் அதிகப் பற்று உள்ளவர். தமிழறிவில் மிகச் சிறந்தவர். இத்தகைய உதவியினுல் அத்துவைதமாகிய வேதாந்த ஞானத்தில் உள்ளம் ஊறியவர். எனவே பொதுவாக இந்த உலக வாழ்க்கை அவருடைய உள்ளத்திற்கு உவகை தராமல் ஒருவிதப் பற்றற்ற நிலையினையே தந்தது என்றுங் கூறலாம். அதுவும் அவருடைய வாழ்க்கை நீடித்து நிற்காததற்கு ஒரு காரணமாகும்.

அவர் மூன்றும் முறையாகத் தமது நாற்பத்து ஏழாம் வயது நடந்து வரும் போது மைசூர் அரசாங்

கம் சென்று திரும்ப வரும் வழியில் சென்னையில் இரண்டு மாதங்களுக்கும் மேல தங்கினர். அப்பொழுது தான் வேணு நாயுடுவுடன் அவர் இசைவாதப் போர் செய்யும் படியான நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டார். அவர் தாம் பாடும் போதெல்லாம் அவ்விசையை ஈசுரார்ப்பணமாகவே இசைத்து வந்தார். அவ்வாறு செய்து வரும் தம்மை இசைவாதப் போர் செய்யும் படி அழைக்கின்ற இத்தரக் குறைவாகிய செயல் அவருடைய மனத்தைத் தாக்கி விட்டது. இனி அம் மாதிரியான நிலைகளுக்குத் தாம் ஆளாதல் கூடாது என்ற எண்ணம் அவருடைய மனத்தில் உறுதியா யிற்று. இசைவாதப் போருக்கு அழைக்கும் போது போகவில்லையாயின் வித்தியாபலம் உள்ளவரன்றென் றும், வித்தியாபயம் உள்ளவரென்றும் புகழ்க் குறைவு ஏற்பட வழிகோலும். வாதப் போரை ஏற்றுக்கொண் டால் காமியார்த்தமான இசையாகிவிடும். எனவே இனி அகௌரவமான நிலைக்கு ஆளாகாமல் கௌரவ மான நிலையில் நாம் இவ்வுலகினின்று விடுபடுதலே சிறந்தது என்ற எண்ணங் கொண்டு விட்டார். அம் மனத்தாங்கலும் அவருடைய உடல் நலிதற்கு ஒரு காரணமாயிற்று.

● சென்னையில் பல மக்களின் அபிமானத்தைப் பெற்ற வேணு நாயுடுவினுடைய அழைப்பிற்கிணங்க நடைபெற்ற இசைவாதப் போரில் மகாவைத்தியநாத சிவன் நல்ல திறமை காட்டி மக்களின் அன்பையும், இசை அறிஞர்களின் அன்பையும் பெற்றுர் எனினும் அந்த இசை நாதத்திலே தம் மனத்தைச் செலுத்த

வும் மெய் மறந்து ஈசுரார்ப்பணமாகச் செய்யவும் இயலாமல் அவ்விசையைக் கோபதாபங்களுக்கு உரியதாக்கவும் ஒருவருக்கொருவர் மனக் கசப்பினுல் வெறுப்புணர்ச்சி மேலிடத்தக்கதாகவும் ஆகிய துர்விநியோகம் செய்தற்குரிய நிலை ஏற்படுகின்றதே என்ற வியாகூலம் உள்ளவரானுர். அவ்வித நிலை இனி தனக்கு ஏற்படலாகாது என்றெண்ணிக் கடவுளிடம் முறையிட்டார். எனவே அங்கு நடந்த இசை நிகழ்ச்சிகளுக்கு முன்பு மனத்தில் யாதொரு களங்கமின்றிக் கடவுளையே நினைந்து அவ்விசையைக் கடவுளுக்கே அர்ப்பணித்துச் செய்து வந்த அச் செயலுடனேயே இவ்வாழ்வு முடிந்து விடல் வேண்டுமென்ற எண்ணம் அவருடைய மனதில் வேரூன்றியதால் அவரது உடல் நலம் நலியலாயிற்று.

● மகாவைத்தியநாத சிவன் பெரியவைத்தியநாத ஐயர், சின்னவைத்தியநாத ஐயர், கோயம்புத்தூர் இராகவ ஐயர் ஆகியவர்களுடன் சேர்ந்து இசைத்துள்ளார். இன்னும் வீணை கல்யாண கிருஷ்ண பாகவதர், வீணை வைத்தியநாத ஐயர், வீணை சுப்பண்ணு, சேஷண்ணு, ஆகியவர்களுடனும் சேர்ந்து பாடியுள்ளார். அவர்களுடன் பாடியது இசைவாதப் போரல்ல. இசையின் மேலாம் சிறப்பை எடுத்து விளக்கும் அருஞ் செயலான இசை நிகழ்ச்சியாகும். அவர்களுடன் பாடும் போது அவருக்கு மனக்குறை ஒன்றும் ஏற்படவில்லை. தமக்குச் சமமான வித்யா பாரங்கதர்களுடன் பாடுகிறேமென்ற எண்ணமிருந்தது. அவ்விசையானது கடவுளுக்கு அர்ப்பணம் செய்யக் கூடிய

வகையில் பாடுதற்கு அங்கு இடமிருந்தது. குறையற்ற மன நிறைவும் இருந்தது. சென்னையில் பொருமை எண்ணங்கொண்டு எவ்வாறேனும் அவரை அவமதித்தல் வேண்டுமென்ற நோக்கோடு வாதப்போருக்கு அழைத்தபடியால் மனம் உடைதற்குக்காரணமாயிற்று.

● சென்னையில் நடந்த இசைவாதப் போரானது அவரது நாற்பத்தேழாவது வயதின் கடைசிப் பகுதியில் நடந்ததாகும். ஒரு புரட்டாசி மாதத்தில் மைசூர் தசராவிற்குச் சென்று நவராத்திரி விழாவில் கலந்து கொண்டு அரச மரியாதைகளைப் பெற்றுக் கொண்டு திரும்பி வரும் வழியில் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி முற்பாதி வரை சென்னையில் தங்கினர். அப்பொழுது போட்டோகிராப் மாசிலாமணி முதலியார் தலைமையில் சாத்தாணித் தெருவிலுள்ள இராமையாப்பிள்ளை வீட்டிலே வேணு நாயுடுவின் குழுவினரால் ஏற்பாடுகள் செய்திருந்த படி வாதப் போர் கச்சேரியை நிகழ்த்தினர்* மார்கழி மாதம் பிற்பகுதியில் தமது ஊர் ஆகிய வையைச்சேரி வந்து அகத்தீசுரரையும் மங்களாம்பிகையையும் தம்மால் தாபிக்கப் பெற்ற நடராஜா சிவகாம சுந்தரி மூர்த்தங்களையும் வழிபட்டுத் தரிசித்தார். பின்பு திருவையாறு வந்து சேர்ந்தார். அங்கு பிரணதார்த்திஹரர் சுவாமியையும், தர்மசம்வர்த்தனித் தாயையும் வழிபட்டார். பிறகு சில மாதங்களுள் சிதம்பரம் நடராஜா கோயில் கும்பாபிஷேகத்

---

*இச்செய்தியை **இசைக் கலை வல்லுநர்கள்** என்ற புத்தகத்தில் காண்க.

திலே நடராஜா சந்நிதியிலே யாவரும் களிக்கப் பாடி ஞர். அதன் பின்பு சில மாதங்களுள் தம்முடைய நாற்பத் தொன்பதாவது வயது நடந்து வரும் போது ஆவணி மாதத்தில் நோயாகப் படுத்தார். ஐந்து மாத காலங்கள் நோயினுல் வாடினுர். பின்பு தை மாதத்தில் சிவ பரம் பொருளின் திருவடிகளை எய்தினுர்.

● மகாவைத்தியநாத சிவன் இசையிற் சிறந்த புல வராக இருந்தும் வேணு கோபாலதாசு நாயுடு என் பவர் இசைவாதப் போருக்கு அழைத்ததால் தாம் மனம் நொந்து வாழ்க்கையிலே வெறுப்புற்று அதன் காரணமாக உடல் நலம் குறைந்து காலகதிக்கு ஆளா ஞர் என்று கூறுதல் ஒரு சிறந்த புலவருக்கு ஏற்ற தல்லவே என்று ஐயங் கொள்ளுவர். "மயிர் நீப்பின் வாழாக் கவரிமாவன்னுர்" என்பதற்கேற்ப மிக்க மான முள்ளவராதலின் யாவற்றையும் மறந்து துன்பத்தி லாழ்ந்தார் எனக் கொள்ளல் வேண்டும். "இதை நிதர்சனமாக எடுத்துக் காட்டுதற்கு உண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சி எனக்குக் கேள்வியுண்டு. அது வருமாறு:—பல செல்வர்களினுடைய ஆதரவில் திரு நெல்வேலியில் வாழ்ந்து வந்த பெருமாளையர் என்ற மாபெரும் இயற் புலவர் நெல்லைவர்க்கக் கோவை யென்ருெரு நூலியற்றி அதை அரங்கேற்றம் செய் யும் போது 'தேரோடும் வீதியெலாம் செங்கயலும் சங்கினமும் நீரோடுலாவி வரும்' என்ற காப்புச் செய்யுட்களைக் கூறிப் பொருள் கூறும் போது, எடுத்த எடுப்பிலேயே ஒருவர் எழுந்து அதனை மறுத்துப்

பேசும் வகையில் தேரோடும் வீதியிலே கயலும் சங்கினமும் நீரோடு உலாவி வருகின்றனவா!' என் றூர். பெரும் புலவராகிய பெருமாளையர் இதன் பொருள் தெரியாதவரல்லர். அவர் கலையின் எல்லாத் திறமும் படைத்தவராயினும் இதன் பொருள் அவருக்கு எளிமையாயினும் தொடங்கும் போதே சகுனத்தடை யாயிற்றே என்று வருந்தி மனந் தளர்ந்தார். அதற்கு அவர் ஏதும் பதில் கூருததினுல் அவருக்குப் பதில் கூற இயலவில்லையென்று யாவரும் எண்ணி விட்ட னர். அரங்கேற்றம் நடவாமல் நின்று விட்டது. பெருமாளையர் அதிலிருந்து மனம் புண்பட்டு உடல் நலிந்து சிறிது காலத்துள் நோய்வாய்ப்பட்டு இறை நிழல் அடைந்தனர். அதனை அவர் குமாரர் தக்க பருவமடைந்தபின் கேள்வியுற்று அந்நூல் மிக அழ காக அமைந்திருத்தலைக் கண்டு தாமே அரங்கேற்றம் செய்து தம் தகப்பனுருக்கு நேர்ந்த அவமானத்தைப் போக்கினுர் அச்செய்யுளில் யாதொரு குற்றமும் இல்லையென்பதை எடுத்து உணர்த்தினுர். 'வீதி யெல்லாம் தேரோடும், கயலும் சங்கினமும் நீரோடு உலாவிவரும்' என்ற இச்சாதாரணமான பொருள் என் தகப்பனுருக்குத் தெரியாததன்று. அவர் மானம் பெரிதென்று வாழ்ந்தவராதலால் எடுத்த எடுப்பி லேயே சகுனத்தடைபோல மறுப்பு வந்து விட்டதே என்று மனம் உடைந்தார் என்று எடுத்து விளக்கி அந்நூல் முழுவதும் பொருள் கூறி யாவரும் வியக்கும் படி விளக்க உரையாற்றி அரங்கேற்றினுர். எனவே எத்துணைச் சிறந்த புலவராக இருந்தாலும் அவர்கள் மானம் பெரிதென்று எண்ணுவாராதலால் மகா

வைத்தியநாத சிவனவர்களும் தம்மை வாதப் போருக்கு அழைக்கிறார்கள் என்று எண்ணியதும் தம் மானம் பெரிதென்று எண்ணி அது முதல் மனம் புண் பட்டு வருந்தினர் என்பதில் வியப்பில்லை. அவர் ஆத்துமார்த்தமாக கடவுளிடம் ஈடுபட்டு மனம் ஒன்றி இசைப்பவர் ஆதலால் இவ்வாறான வாதப் பிரதிவாத மான வீண் நிகழ்ச்சியை விரும்பவில்லை. எனவே தான் அவரது மென்மையான மனம் துன்பத்திற் குள்ளாகியது.

● மகாவைத்தியநாத சிவன் அவர்கள் தம் பூத உடலை நீத்ததன்மை குறித்துப் பலரும் அவரவர் மன நிலைக்கு ஏற்பப் பேசுவர். ஆயினும், நானும் என்னோடு ஒத்த பலரும், மகாவைத்தியநாத சிவனி டம் நெருங்கிப் பழகிய அனுபவம் இருப்பதனால் உள் ளது உள்ளபடியே கூறல் வேண்டுமென்றே எண்ணு கிறேன். அவர் இசை ஞானத்தின் திறத்தைச் செவ் வனே பெற்றுத் தமது இனிய குரல் வளத்தை இறை வனைப் பாடுவதிலேயே ஈடுபடுத்தினர். எப்பொழுதும் தமது ஒழுக்கம் தவறாமல் சிவ பூசை, பாராயணம், செபம், தபம், சிவாலயதரிசனம், விருதம் முதலியவை களை ஒழுங்குபெற நடத்தி வந்தார். எக்காலமும் தமிழறிவினைப் பெருக்கி வந்தார். அவ்வாறான குண நலன்களைப் பெற்ற அவர் வேதாந்த அனுபவத்தைப் பெற்றவரே என்பதை ஐயமறக் கூறலாம். அந்நிலை யைத் தமது சுவானு பூதியிற் கண்டவர் ஆவர்.

● அவர் இவ்வுலகில் வாழ்க்கை நடத்திய நாற்பத் தொன்பது ஆண்டுக் காலமும் சீவன் முக்தராக

இருந்து, தமது பூதவுடலை இவ்வுலகினின்று நீத்துத் தம் ஆத்துமா சிவப்பேற்றை அடைந்த நாள் முதல் அவர் சிவசாயுச்சிய பதவியாகிற பேரின்பத்திலே சிவ ரூபமாகவே ஒன்றி விட்டார் என்றும், இனி இவ் வுலகிலே அவர் பிறப்பில்லாத பெருநிலை பெற்று விட்டார் என்றும் எம் போன்றவர் எண்ணுவதில் வியப்பில்லை.

● மகாவைத்தியநாத சிவன் இசை நிகழ்ச்சிகள், கதாப்பிரசங்கங்களில் ஈடுபாடு கொண்டவர். பொது மக்கள், குழந்தைகள், அறிஞர்கள், பெரியோர்கள், துறவிகள் ஆகியோரிடம் உள்ளக் கனிவுடன் கூடிய அன்புப் பெருக்கு, தயாள குணம், போன்ற எத் துணையோ சிறப்புக்களும் செயல்களும் நிறைந்தவர். அவைகளில் நான் ஏழாண்டுக் காலம் குருகுலவாசம் செய்தபோது (1876—1382 ஆம் ஆண்டு வரை) அறிந்தனவும், 1895 ஆம் ஆண்டு எனது மூத்த குரு வான இராமசாமி சிவனவர்கள் திருநெல்வேலிக்கு வந்திருந்த சமயம் அவர் மூலம் கேள்விப்பட்ட சில செய்திகளும் மட்டும் இங்குக் குறித்துள்ளேன். அவ ருடைய வாழ்க்கையில் நடந்த ஒவ்வொன்றும் ஏனை யோர் பயன்படுத்திக் கொள்ளத் தக்கனவாகவே இருக்கும். வள்ளுவப் பெருமான் வாழ்ந்து காட்டிய நெறிபோல இசைப் புலமை பெற்ற அவர் இசைக் கலைஞர்கள் எவ்வாறு வாழ்க்கை நடத்துதல் வேண் டும், எவ்வாறு ஒழுக்கத்தைக் கைக்கொள்ளல் வேண் டும் என்ற நெறியை எடுத்துக் காட்டும் முறையில் வாழ்ந்து காட்டினர். அவருடைய செயல்களெல்லாம்

தெய்வச் செயல்களுக்கு ஒப்பாகும். அல்லது ஓர் அவதார புருஷனின் செயல் திறம் போன்றதாகும். பெரிய சிவபக்தரும் ஞானியுமாகிய சம்பந்தமூர்த்தி சுவாமிகள் பதினாறு வயதிலும், சுந்தர சுவாமிகள் பத்தொன்பது வயதிலும், மாணிக்கவாசகப் பெரு மான் முப்பத்திரண்டு வயதிலும் சிவப்பேறு பெற்றது போல எனது குருவாகிய மகாவைத்தியநாத சிவன் நாற்பத்தொன்பதாவது வயதிலே சிவப்பேறு பெற்றார்.

● மகாவைத்தியநாத சிவன் காலமான பின்பு இராமசாமி சிவன் ஒரு முறை திருநெல்வேலிக்கு வந்தி ருந்தார், அப்பொழுது நான் கல்லிடைக்குறிச்சி ஏகாம் பரபுரத் தெருவில் வசித்து வந்த சுப்பிரமணிய சுவாமி கள் என்ற பிச்சு சாஸ்திரிகளிடம் வேதாந்த வித்தை யைப் பயின்று வந்த காலம். அதாவது 1895 ஆம் ஆண்டு அவர்கள் வந்திருந்ததைக் கேள்வியுற்ற நான் திருநெல்வேலி சென்று அவரைச் சந்தித்து அளவளா விக்கொண்டிருந்தேன். அப்போது எனது மூத்த குரு நாதரான இராமசாமி சிவன் கூறிய சில செய்திக ளாவன: "அருமைக் கண்மணி தம்பியார் பதினாறும் பிராயத்தை அணுகும் முன்பு பதினாராம் பட்டத் திலமர்ந்து எழுந்தருளியுள்ள மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் என் தம்பியாருக்கு மகாவைத்தியநாத ஐயரென்ற சிறப்புப் பட்டம் அளித்து, உலகம் முழு தும் பெரிதான புகழை உண்டு பண்ணிவிட்டார்கள். அடிக்கடி ஏராளமான பரிசுப் பொருள்களையும் பணத் தையும் கொடுத்து உதவி, வாழ்க்கைநிலை ஓங்கும் படி செய்து வந்தார்கள். தம்பியார் மறைந்து பட்ட

பிறகும் எங்களால் யாதொரு பயனும் இல்லாதிருந்தும் இக்காலம் பதினேழாம் பட்டத்திலெழுந்தருளியுள்ள அம்பலவாண தேசிகரவர்கள் யாதொரு குறைவுமின்றி இன்னமும் எங்களுக்கு வெண்டியதைச் செய்து வருவது சந்நிதானம் எங்கள் பால் வைத்திருக்கும் அன்புப் பெருக்கே தவிர வேறன்று. இனியார் அவ்வாறு செய்யப் போகிறுர்கள். இக்கடனுக்கு என்ன கைம் மாறு இனி செய்யப்போகிறோம்'' என்று கண்களில் நீர் மல்கக் கூறினூர்கள்.

● மற்றும் சென்னையில் நடந்த இசைப் போட்டி பற்றியும் அங்கு நாராயணகவுளை இராகம் பாடி, அதில் பல்லவி பாடிய விபரமும், மைசூர் சென்றிருந்தபோது பக்ஷி சுப்பண்ணு அவர்கள் வீட்டில் விலோஹித மென்ற தாளத்திலே பல்லவி பாடிய பெருமையையும், சென்னையில் தங்கி இருந்த போது பல்லவி சேஷய்யர் முதலிய இசைப் புலவர்கள் மணிகளின் தாகத்தைத் தீர்க்கும் பொருட்டு சிம்மந்தன தாளத்தில் பாடிய பல்லவியின் சிறப்பையும், புதுக்கோட்டை அரச அவையிலே வீணை சுப்பையர் முன்னிலையில் கஜஜம்பை என்ற தாளத்திலே பாடிய பல்லவியின் பெருமையையும், 72-மேளகர்த்தாவை 16 களைச் சவுக்கத்தில் ஆதி தாளம் ஒன்பதாவர்த்தனத்துள் பாடிச் சிறப்பித்த திறனையும், பாண்டித்துரைத் தேவர் அவையிலே பார்வதீலோசனம் என்ற தாளத்தில் பல்லவி பாடி யாவரையும் மகிழச் செய்த திறத்தினையும், பாண்டித்துரைத் தேவர் அவையிலே மகாவைத்தியநாத சிவன் வீற்றிருக்கும் போது

குன்னக்குடி கிருஷ்ணையர், பட்டினம் சுப்பிரமணிய ஐய்யர், பல்லவி சேஷய்யர் ஆகியோர் பாடிய பல்லவியின் அம்சங்களையும், திருக்குற்றுல நாத சுவாமி கோயிலில் பாடிய பஞ்சகதிப் பல்லவி, ஊற்று மலைச் சமீன்தார் முன் பாடிய டமருகத்தாளப் பல்லவி, சகாராம் சாகேப் அவையிற் பாடிய லக்ஷ்மீசத் தாளப் பல்லவி, எட்டையபுர அரசவையிற் பாடிய தத்தாத்ரேய தாளப் பல்லவி, வேங்கடகிரி அவை யிற் பாடிய கோபுச்சயதிப் பல்லவி, பெரும் சதஸிலே பாடிய சமடமருக தாளப் பல்லவி, சிறுவயல் சமீன் தார் முன் பாடிய பிரதாப சேகரத் தாளப் பல்லவி, சகாராம் சாகேப் அவையில் பாடிய சிம்மனந்தனத் தாளத்திலமைந்த கல்யாணித் தில்லானு, அத்தில் லானுவை அம்பலவாண தேசிகர் விருப்பப்படி கான டாவிற் பாடிய சிறப்பு, மற்றும் பற்பல நிகழ்ச்சிகளை யும் எடுத்துக் கூறினுர். அவைகளில் சில குறித் துள்ளேன். அவையே இங்குச் சிறப்புறுகின்றன. இன் னும் பல குறிக்காமலிருந்தபடியால் என் ஞாபகத்தி லிருந்து மறைந்து விட்டன. அது விஷயத்தில் பெரும் பிழையை நான் செய்து விட்டேன். இப் பல்லவிகளை ஆங்காங்குக் காண்க.

● இசைக்கு 'ச ரி க ம ப த நி' என்ற ஏழு சுரங் களே சிறப்பாகும். அதுபோல மகாவைத்தியநாத சிவன் வீட்டுக் கொல்லையில் ஏழு தென்னை மரங்களே உண்டென்பதும், அவர் சப்தத்தானங்களிலும் பற்றுள் ளவர் என்பதும் சிறப்பைத் தருகின்றது. இசைக்குப் பன்னிரண்டு சுரத்தானங்களே உண்டு. அப்பன்னி

ரண்டும் மிக முக்கியம் வாய்ந்தவை. அதை உணர்த்துவது போல ஒவ்வொரு சமயமும் பன்னிரண்டு பன்னிரண்டு மாணவர்களே அவர் வீட்டில் தங்கி இசை பயின்று வந்தனர் என்பது ஒரு சிறப்பேயாகும். இசைக்கு இருபத்திரண்டு சுருதிகளே (அலகு) முக்கிய அம்சமுடைத்து. அது போல அவருடைய வயல் வரப்பில் இருபத்திரண்டு தென்னை மரங்கள் உண்டு. இருபத்திரண்டு அரசர் மடாதிபதி ஜமீன்தார்கள் "ஆயில்யம் திருநாள், விசாகம் திருநாள், மைசூர் அரசர், வேங்கடகிரி அரசர், பித்தாபுரம்அரசர், புதுக்கோட்டை அரசர், எட்டையபுரம் அரசர், திருவாவடுதுறைஆதீனம் சுப்பிரமணிய தேசிகர், அம்பலவாண தேசிகர், தர்மபுர ஆதீனம், சொக்கம்பட்டி சமீன், தளவாய் குமாரசாமி முதலியார், சிங்கம்பட்டி சமீன், ஊற்றுமலை சமீன், பாலவனத்தம் சமீன், ஐயம்பாளையம் தாண்டவராயபிள்ளை, கொழுமம் பண்ணை, கன்னிவாடிசமீன், தஞ்சை சக்காராம் சகேப், நங்கபுரம் சமீன், முத்துராமலிங்க சேதுபதி, பாஸ்கர சேதுபதி" அவருக்கு உதவிய சிறப்பும் குறிப்பிடத்தக்கது சிலப்பதிகாரத்துள் இசைக்கு நாற்பத்தொன்பது வனப்புக் கூறியது போல அவர் இசைத் திட்ப நுட்பப் பகுதிகளைச் செவ்வனே அறிந்த அறிஞராகையால் நாற்பத்தொன்பது வனப்பை உணர்த்துவது போல நாற்பத்தொன்பது ஆண்டுக் காலங்கள் வாழ்ந்தாரென்பது மிகப் பொருத்தமாக உள்ளது. இராக இலக்கணங்கள் முப்பத்திரண்டு. அது போல அவருடைய உபதேச குருவான சுந்தர சுவாமிகள் பல மாதங்கள் வெளியிடங்களுக்குச் செல்லுவாராயினும் 1847 முதல் 1878

வரை முப்பத்திரண்டு ஆண்டுகள் அவர்கள் வீட்டிற்கு வருவதும் வெளியிடங்களுக்குச் செல்வதுமாக இருந்தார். ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பது போல கோடகநல்லூர்ச் சுந்தர சுவாமிகளால் செய்விக்கப் பெற்ற அறுபத்து நான்கு தலங்களின் கும்பாபிஷேக விழாவில் அவர்கள் கூட கலந்து கொண்ட பேறு மிகப் பெரிது. எனவே எல்லா வகையாலும் அவர் மேன்மையுடையவர்களாக விளங்கினர்.

● எனது குருவாகிய இராமசாமி சிவன் 1895 ஆம் ஆண்டில் திருநெல்வேலிக்கு வந்திருந்த சமயம் அவரிடம் "தாங்கள் வெளியிட்ட விஜய சங்கிரகத்திலே சிவகங்கை பெரிய வைத்தியநாத ஐயர் சின்ன வைத்தியநாத ஐயர், கோயம்புத்தூர் இராகவ ஐயர், பட்டினம் சுப்பிரமணிய ஐயர், குன்னக்குடி கிருஷ்ணையர் ஆகிய பிரபல இசைப் புலவர்கள் எல்லோரும் தங்கள் தம்பியாரிடம் பாட இயலாமலிருந்தார்கள், பாடப் பின் வாங்கினர்கள் என்றெல்லாம் எழுதியுள்ளீர்களே தாங்கள் அவ்வாறு எழுதலாமா! அவ்வாறு எழுதுவதற்குக் காரணமென்ன"வென்று கேட்டேன். அதற்கு அவர் கூறியவை:—

● பெரிய வைத்தியநாத ஐயர் சின்ன வைத்தியநாத ஐயர் ஆகிய இருபெரும் இசைப் புலவருடன் தம்பியார் பாடும் போது நாட்டையைப் பாடி அதிலுள்ள ஷட்சுருதி ரிஷபதைவதங்களைப் பிடிக்க அவற்றை அவர்கள் அறிய மாட்டாதவராக இருந்தனர். தம்பியார் சக்கரவாக இராகம் பாடுகின்ற போது அது என்ன இராகமென்று புலப்படாமல்

மூக்கில் விரல்வைத்துப் பிரமைதட்டி இருந்தனர். அதனுல் பாடத் தெரியாமலிருந்தார் என எழுதும் படி ஏற்பட்டது என்று கூறினுர்.


● திருவனந்த புரத்து அரச அவையிலே என் தம்பியார் பயிரவி இராகம் பாடும் போது கோயம் புத்தூர் இராகவ ஐயர் அதைக் கேட்டுத் தம்பித்து இருந்தார். பிறகு பன்முறையும் தம்பியார் பயிரவி இராகத்தை ஆலாபித்துக் காட்டியும் அதனை அறிந்து கைவரப் பெருதவராய் இருந்தார். அதை அவர் பாடுதற்கு இயலாத காரணம் கொண்டு அவ்வாறு எழுதலானேன் என்று கூறினுர்.

● பட்டினம் சுப்பிரமணிய ஐயரும் குன்னக்குடி கிருஷ்ணையரும் பாஸ்கர சேதுபதியவர்கள் தம் கல்யாணத்தில் என் தம்பியார் பாடியதைக் கேட்டு மகிழ்ந்து அவ்விருவரையும் என் தம்பியாருடன் சேர்ந்து பாடுதல் வேண்டுமென்று தம்பந்துக்கள் அனைவர் முன்னிலையில் விரும்பிக் கேட்டார்கள். அதற்கு அவர் கள் சேர்ந்து பாடினுல் பயில்வான்கள் போன்று உள்ள சேஷ்டைகளை அறியலாமே தவிர இசையின் மேலாம் இன்பத்தை உணர்வதற்கு இயலாது என்று கூறிப் பயந்தமையால் அவ்வாறு எழுதினேன் என்று கூறி னுர். நான் அதற்கு மேல் அவரிடம் பேசுதற்கியலா மல் வாளா விருந்தேன்.

● கோடகநல்லூர்ச் சுந்தர சுவாமிகள் இராமசாமி சிவன் மகாவைத்யநாத சிவன் ஆகிய இருவருக்கும் உபதேசம் செய்வித்த குரு ஆவர். சிவபூசை தொடங்கி

வைத்த ஆசாரியராவர். எனவே அவ்விருவருக்கும் அவர்கள் பரம தேசிக சிகாமணியாக விளங்கியவரா வார்கள். அவர் சித்தி பெற்ற அருளாளர் ஆகையால் அவர்களுடைய கருணையின் பலத்தால் அவ்விருவரும் கலையுலகிலே சிறந்தோங்கினார்கள். அவர்களுக்கு மிஞ்சிய திறனுடையோர் எவருமிலர் என்ற சிறப்பைப் பெற்றார்கள். இசையில் சிம்மம் போன்றவர்களான பெரிய வைத்தியநாத ஐயரும் சின்ன வைத்தியநாத ஐயரும் அவரைப் போற்றிப் புகழ்ந்த பெருமையானது சுந்தர சுவாமிகள் அவர்களுக்குச் செய்த அனுக்கிரக சக்தி தான் என்பதைத் துணிந்து கூறலாம்.

● சுந்தர சுவாமிகள் நகரத்தார் வசிக்கும் தேவ கோட்டை முதலிய பல இடங்களுக்குச் சென்று சிவ புராணச் சொற்பொழிவுகள் செய்து அந்நகரத்தார் களிடமிருந்து பெரும் பணம் திரட்டுவார்கள். அவர் களை நகரத்தாரனைவரும் தங்களது குருவாக மதித்துப் போற்றினார்கள். எனவே அவர்கள் திரட்டும் பண மெல்லாம் அறப் பணிகளுக்குக்காகவே செலவிடப் படும் என்ற உண்மையை நகரத்தாரனைவரும் நன்கறி வார்கள். நாட்டுக் கோட்டைச் செட்டியார்களனை வரும் கோயில், குளம், கோபுரம், கோயில் மதிற்சுவர் ஆகிய தேவாலயத் திருப்பணி தர்மத்தில் மிகுந்த ஈடு பாடுடையவர்களாதலால் கோடக நல்லூர்ச் சுந்தர சுவாமிகள் கேட்காமலே அவர்களுக்கு அள்ளி அள்ளிப் பொருள்களைக் கொடுப்பார்கள். சுந்தர சுவாமிகள் அவ்வாறு ஒரு சமயம் நான்கு அல்லது ஐந்து லட்ச ரூபாய்களுக்கு மேல் நகரத்தார்களிட



மகா வைத்தியநாத சிவனின்
மந்திரோபதேச குருவாகிய
**கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள்**

மிருந்து திரட்டித் திருவையாறு முதலிய பல சிவத் தலங்களுக்கும் மகா கும்பாபிஷேகத்தை வேதாகம முறைப்படி வெகு விமரிசையாகச் செய்தார்கள். அவ்வாறு கும்பாபிடேக விழாவைச் சிறப்பாக நடத்தி வந்த நாளெல்லாம் இராமசாமி சிவன் மகாவைத்திய நாத சிவன் ஆகிய இருவரும் சுந்தர சுவாமிகள் கூட இருந்து அக்கும்பாபிடேக விழாவைக் கண்டு களித்து பேரானந்த வாரிதியில் மூழ்குவார்கள்.

● கோடகநல்லூர்ச் சுந்தர சுவாமிகள் பல சிவத் தலங்களில் கும்பாபிடேகத்தைச் சிறப்புறச் செய்து சிவ அருளுக்கு ஆளானுலும் அவற்றுள் அறுபத்து நான்கு சிவத் தலங்கள் சிறப்பாகத் திகழ்வன. அவ்வறுபத்து நான்கு தலங்களிலும் பேரன்பு பூண்டிருந்தார் களென்பது செவி வழியாகக் கேள்விப்பட்ட செய்தி களாகும். அந்தலங்களிலே சிவன் சகோதரரிருவரும் மெய்யுருகப்பாடி அங்குப் பக்திப் பரவசராக வந்துள்ள மக்களையெல்லாம் இன்பக் கடலில் மூழ்குவிப்பார்கள். சுந்தர சுவாமிகளால் நடத்தப் பெற்ற பல கும்பாபி டேகத் தலங்களுள் அறுபத்து நான்கு தலங்களிலே சுவாமி சந்நிதானத்திலே சிவன் சகோதரரிருவரும் அற்புதகானம் செய்து சிவனருளைப் பெற்றுள்ளார்கள். இவ்வாறு கலந்து பாடி மகிழ்வது அவர்களுடைய நடை முறைகளில் ஒன்ருக விளங்கிற்று.

● மகாவைத்தியநாத சிவனவர்களிடத்தும் இராம சாமி சிவனவர்களிடத்தும் நகரத்தாரனைவரும் தனிப் பட்ட முறையிற் பற்று அதிகமுள்ளவர்களாக இருந்த

னர். தங்களுடைய மதிப்பிற்கு உகந்த கோடக நல்லூர்ச் சுந்தர சுவாமிகளிடம் அவர்கள் வேதாந்த பாடங்களும், வடமொழிப் பாடங்களும், சூதசம்ஹிதை முதலிய பாடங்களும், சிவபூசையும், சில மந்திரோப தேசங்களும் பெற்றுக் கொண்டவர்கள் என்பது முதற் காரணம். மகாவைத்தியநாத சிவன் அற்புதமான இசையமுதை அமுத மழையாகப் பொழியும் ஆற்ற லுடையவர்களாக விளங்கினர்கள். அவருடைய இசையில் அனைத்து மக்களும் தங்களது மனதைப் பறி கொடுத்திருந்தனர். இசையறிவு உள்ளவர்களும், அல்லாதவர்களும் அவருடைய இசை ஒலியிலே மனம் ஒன்றித் தம்மை மறந்து விடுவார்கள். அத்துணை இசையாற்றல் அவரிடம் நிரம்பி இருந்தது மற்றுமொரு காரணம். மகாவைத்தியநாத சிவன் சிவ கதை செய்வதைக் கேட்ட நகரத்தார் அனைவரும் நெக் குருகி ஆனந்த கண்ணீர் பெருக்குவார்கள். பக்திப் பரவசர்களாகிவிடுவார்கள். இது மூன்ருவது காரணம். அவருடைய சிவ கதைகளைக் கேட்ட நகரத்தார்கள் அக்காலத்திலே வேறு எவருடைய கதைகளையும் கேட்கமாட்டார்கள். கேட்க வேண்டுமென்ற எண் ணம் அவர்கள் மனத்துள் எழாது. எனவே இம்மூன்று அம்சங்களையும் சிறப்புறப் பெற்றிருந்த காரணங்களால் அவரிடம் நகரத்தாரனைவரும் பெரும் மதிப்புடையவராகிப் போற்றிப் புகழ்ந்து ஈடுபட்டி ருந்தனர்.

● நகரத்தாரின் விருப்பத்திற்கிணங்க பெரிய புரா ணக் கீர்த்தனத்தை இராமசாமி சிவன் இயற்றினர்.

அப்புத்தகத்தில் 420-விருத்தப் பாக்கள்,321-கீர்த்தனைகள், 80-கண்ணிகள் (திப்தை), 2-வெண்பாக்கள் ஆகியவை அடங்கியுள்ளன. அப்புத்தகம் பிரஜோத்பத்திவருடம் கார்த்திகை மாதம் நகரத்தாரின் பெரும் உதவியால் அச்சேறி முடிந்ததும் அதனை நல்ல அரங்கிலே அரங்கேற்றம் செய்தல் வேண்டுமென்று கருதினர். அப்பொழுது அவர் தம்மை நன்ருக ஆதரித்து அன்பு காட்டும் திருவாவடுதுறை ஆதீனம் நினைவிற்குவரவே அக்காலம் அவ்வாதீனத்துத் தலைமைப் பட்டமாக வீற்றிருந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகர், மேலகரம் சுப்பிரமணிய தேசிகர், தமிழ்ப் பெரும் புலவர் மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோர் வீற்றிருந்த அவையிலே இசையோடு பொருள் கூறி முதன் முதலாகப் பெரிய புராணம் அரங்கேறிச் சிறப்புற்றது. அதனைக் கேட்ட யாவரும் மகிழ்ந்து போற்றினர்.

● அதன் பின்பு தேவகோட்டை நகரத்தார் சிவன் சகோதரர் இருவரையும் வரவழைத்து ஐந்து மாதங்கள் தங்கச் செய்து பெரியபுராண கீர்த்தனங்கள் அடங்கிய அறுபத்து மூவர் சரிதங்களையும் விடாமற் பிரசங்கம் செய்யும் படிச் செய்து, அப்பிரசங்கத்தை ஆண்பாலரும் பெண்பாலரும் பயபக்தியுடன் கேட்டு அந்தத் திவ்விய பிரசங்காமிருதத்தில் மெய் மறந்து இன்புற்ருர்கள். அந்தச் சிவத் தொண்டர்களின் கதாப்பிரசங்கத்தைச் செவிமடுத்த நகரத்தார் வைரங்களாலான அணிகலன்களை ஏராளமாகக் கொடுத்தார்கள். அவர்களுக்குக் கிடைத்த பொருள்களுக்குக்

கணக்கேயில்லை. பெரிய புராணம் முழுதும் முதலாவதாகத் தேவகோட்டை நகரத்திலேயே கதை உருவமாகச் செய்யப் பெற்றது. அப்போது மகாவைத்தியநாத சிவனுக்கு இருபத்தெட்டு வயது நடந்து கொண்டிருந்தது.

● மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள் 1888 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் பரிபூரணம் அடைந்தார்கள். அதன் பிறகு ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் பட்டத்திற்கு வந்தார்கள். அவர்கள் பல வித்துவான்களையும் தக்கபடி ஆதரித்த வள்ளலாவார்கள். எல்லாக் கலைகளையும் நன்கு சுவைப்பார்கள். அவர்களுக்கு வடமொழி தென்மொழி இசை ஆகிய இவற்றில் நல்ல பயிற்சி யுண்டு. வடமொழி நூலை கல்லிடைக் குறிச்சி வேதாந்த பாகவதரின் தகப்பனுரான முத்து சாஸ்திரியிடம் பயின்றுர்கள். கலைத்திறத்தில் தரம் குறைந்தவர்கள் அவர்களை நெருங்க முடியாது. அவர்கள் காலத்தில் மகாவைத்தியநாத சிவன் ஐந்தாண்டுக் காலம் வாழ்ந்தார்கள். நான்காண்டுகள் வரை திருவாவடுதுறை சென்று ஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்களைக் கண்டு இசை நிகழ்ச்சியும், கதாப் பிரசங்கமும் செய்து களிப்பித்துத் தகுந்த சன்மானங்களைப் பெற்று வந்தார். 1893 ஆம் ஆண்டு மகா வைத்தியநாத சிவன் நோய் வாய்ப்பட்டபடியால் திருவாவடுதுறைக்குத் தாம் செல்ல இயலாதவரானுர். அவ்வாண்டு இராமசாமி சிவன் மட்டும் சென்று எல்லா ஆண்டுகளையும் விட அதிகமான பரிசுகளைப் பெற்றுவந்தார். மகாவைத்தியநாத சிவனின் உடல்

நலமின்மையை அறிந்த ஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள் மிகவும் வருந்தினர்கள். அவ்வப்போது அவருடைய உடல் நலனை விசாரித்து வந்தார்கள். அவருடைய குடும்பத்திற்கு வேண்டிய செலவுகளுக்கு அவ்வப்போது இராமசாமி சிவனிடமோ அல்லது தமது அலுவலர் வாயிலாகவோ பணம் கொடுத்தனுப்பி உதவி வந்தார்கள். அவ்வித உபகாரச் சிந்தையைச் சிவனவர்கள் குடும்பம் எந்நாளும் மறந்ததேயில்லை.

● மகாவைத்தியநாத சிவன் பெரிய புராணக் கதாப் பிரசங்கத்தைத் தேவகோட்டையில் நகரத்தார்களின் ஆதரவில் தங்கி ஐந்து மாதங்கள் தொடர்ந்து செய்தார். அப்பொழுது அவருக்குச் சிவபக்திச் செல்வம் நிறைந்த நாயன்மர்ர்களிடத்து அளவு கடந்த பேரன்பு உடையவராக இருந்த உள்ளக் கிடக்கையை உணர்ந்த நகரத்தார்கள் தாம் ஒன்று கூடி அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய படத்தை அழகுறச் செய்து அதனை மகாவைத்தியநாத சிவனுக்குச் சன்மானித்து மகிழ்ந்தனர். அப்படத்தை அது முதல் மகாவைத்தியநாத சிவன் தம் வீட்டுப் பூசை அறையில் அமைத்து நாடோறும் புட்பம் சந்தனம் முதலியவைகளால் அர்ச்சித்துப் பூசித்து வந்தார். இன்னும் அப்படம் அவருடைய வீட்டுப் பூசையில் உள்ளது.

● மகாவைத்தியநாத சிவன் இன்னிசை சிவகதாப் பிரசங்கம் இவைகள் திருவாவடுதுறை ஆதீனம், இராமநாதபுரம் சமீன், புதுக்கோட்டைச் சமீன், திருநெல்வேலி, மைசூர், திருவனந்தபுரம், தஞ்சை

ஆகிய இன்னும் பல இடங்களிலும் நடத்தி வந்த காலத்து ஆங்காங்குள்ள இசைப் புலவர்கள், தமிழ்ப் புலவர்கள், வடமொழிப் புலவர்கள் ஆகிய பலரும் அவருடைய இசையறிவு, தமிழறிவு, வடமொழியறிவு, கதாப்பிரசங்க மகிமை ஆகியவைகளைப் புகழ்ந்து செய்யுள் மூலமாகவும் சுலோகங்கள் மூலமாகவும் பெருமையுறப் பாராட்டியுள்ளனர். அவ்வாறு பாராட்டப் பெற்ற ஏராளமான செய்யுட்களில் திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தாண்டவராயத் தம்பிரான், வேதநாயகம் பிள்ளை, தியாகராஜ செட்டியார், சிருங்கேரி பீடாதிபதி சிவாபி நவ நரசிம்ம பாரதி சுவாமிகள் ஆகியோர் முக்கியமானவர்கள். இச் செய்யுட் பாக்களையும், சுலோகங்களையும் தொகுத்தால் அவை ஒரு நூலாகும்.

● மகாவைத்தியநாத சிவன் தாம் எங்குச் சென்று இசை, சிவகதை செய்தாலும் அங்கெல்லாம் பண்டித பாமரர்களால் மிகவும் புகழ்ந்து கொண்டாடப் பெற்றார். அவருடைய இன்னிசையைக் கேட்டவர்களெல்லாம் பேரின்பக் கடலில் மூழ்கினர். அவருடைய சிவகதையைக் கேட்ட ஆண் பெண்கள் யாவரும் சிவபக்திச் செல்வத்தினை அடைந்து மகிழ்ந்தனர். மலையாளம், ஆந்திரம், கன்னடம் இம்மூன்றிலும் அவரைப் போல் பாடவல்லவர் இல்லையாதலால் பெரும் சிறப்புக்களை யடைந்தார். அவருடைய இசையும் சிவகதையும் தமிழ் நாட்டிற்குச் சிறந்த புகழை உண்டாக்கிற்று. சங்கீத வித்தியா கம்பீரர் என்ற சிறப்பு தானே வந்தடைந்தது அக்காலத்திலுள்ள

இசைப் புலவர்கள் சிலருக்கு அவரிடம் சிறிது பொருமை உண்டாயினும், அவருடைய இசையில் தாங்கள் அறியாமலே சிறந்த ஈடுபாடும் இருக்கத் தான் செய்தது. பொருமையுடைய அவர்களும் சிவன் சகோதரர்களுக்கு வரும் பெருமையானது தங்களுக்கே வருவதாக உணர்ந்து பொருமைக் குணத்தை நாளடைவில் அகற்றினுர்கள். அவருடைய இசை யைக் கேட்டவர்கள் அவர்களுடைய வாழ்நாள் முழு தும் அவரைச் சிறிதும் மறக்க இயலாது. அவரை அறியாதோர் கூட இன்றும் அவருடைய பெருமை களைச் செவியாரக் கேட்டதின் பயனுக அவரை ஓர் இசைத் தெய்வமாகவே கருதியுள்ளனர்.

● சிவன் சகோதரர்கள் தாம் இசைவினிகை செய்து வந்த செல்வர்களிடம் தம்மினும் சாதாரணமாக இசைக்கும் பல இசை வித்துவான்களின் வேண்டு கோளைச் செவிமடுத்து அவர்களைப் பற்றி எடுத்துக் கூறி அவர்களை இசைக்கச் செய்து அவர்களுக்கும் தக்க சன்மானங்களை அளிக்கும் படிச் செய்து அவர் களும் புகழும் படி உதவியுளளார்கள். அதன் பயனுகப் பல புலவர்களும் பயனடைந்துள்ளனர்.

● இசைத்துறையில் தமது வல்லமையைக் கேட் போருக்கு அறியச் செய்தல் வேண்டுமென்றெண்ணி இசைக்கு ஒவ்வாத எதனையும் மகாவைத்தியநாத சிவன் செய்யமாட்டார். அவர் செய்யும் இசைச் செயல் கள் எல்லாம் எளிமை கொண்டும் யாவரும் அறிந்து கொள்ளத் தக்கதாகவும் இருக்கும். அவர் இசைக் கும் முறைகளைக் கேட்போர் அது போன்று தாமும்

எளிமை பெற இசைத்தல் வேண்டும் என்ற எண்ண முடையவராவர். சிவகதை செய்யும் போது இடத் திற்குப் பொருத்தமல்லாத செய்திகள் பாட்டுகள் எவையும் அவரிடம் இல்லை. திருஷ்டாந்தங்கள் கூறும் போது முன்னோர்களின் அருமை மிக்க சொற் களையே எடுத்துக் கையாளுதல் அவருடைய சிறப்பு. படிப்பு வாசனையேயின்றி இருப்போர்கூட அவரு டைய அமுத வாக்கைக் கேட்டுத் தாமும் முயன்று படித்தல் வேண்டுமென்ற மன எழுச்சி கொள்வர்.

● மக்களுடைய குண இயல்புகள் வெவ்வேறானவை. மகாவைத்தியநாத சிவன் குணத்தில் சிறந்தவ ரென்றும், இசையில் மகா மேதையென்றும், தமிழறிவு நிறைந்தவரென்றும், வடமொழியில் ஆழ்ந்த அறிவு படைத்தவரென்றும், சிவபக்தியிற் சிறந்தவரென்றும், ஒழுகத்தில் ரிஷிகணரென்றும், ஈகையில் மேலானவர் என்றும், யாவரிடமும், பழகுவதில் எளிமையானவ ரென்றும், தர்மம் செய்வதில் புண்ணியரென்றும், வேதாந்த ஞான நிபுணரென்றும், பற்றற்ற பண்பு பெற்றவரென்றும், ஏனைய புலவர்களிடம் அழுக்காறு அற்றவரென்றும், பசித்தவர்களைக் காணச் சகியாதவ ரென்றும், ஏழை எளியோரிடம் அன்பு காட்டும் மனத்தவர் என்றும், தம்மிலும் மூத்தோரிடம் பணிவும் அடக்கமுமுடையவரென்றும், வித்தையில் குறைந்த வரிடம் எள்ளி நகையாடும் எண்ணமற்றவரென்றும், படிக்கும் இசை மாணவர்களின்பால் பரிவுடையவ ரென்றும், பரமசிவனே அவதரித்து வந்துள்ளா ரென்றும், சீலம் ஆசாரம் பக்தி சிவத் தொண்டு பூசை

அனுட்டானம் இவைகளில் சிரத்தையுள்ளவரென்றும், பலப்பலக் காரணங்களால் அவரிடம் அன்பும் மரியாதையுங் கொண்டு நடந்து சிநேகிதர்களாகினேர் பலர். அவரது உருவத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பதில் படிப்பு வாசனை யில்லாதோறும் அன்பு பூண்டனர்.

● தென்னாட்டு இசைக்கு எழுபத்திரண்டு மேளகர்த்தா என்பது வேங்கடமகியால் ஆக்கப் பெற்றது. சுமார் 1880 ஆம் ஆண்டிற்கு முன்பு அவைகள் பழக்கத்திலில்லை. நூல்களைப் பார்த்தவர்கள் அதிலுள்ள ஏதேனும் ஒரு செய்தி புலப்பட்டால் ஏதோ மந்திர சக்தி பெற்றவர் போலும், கிடைக்காத பொருள் கிடைத்து விட்டது போலும் பாவித்து அதனை வெளியிடாமல் இரகசியமாக வைத்துக் கொண்டு எல்லோரையும் மயக்குவது சாதாரணமாக நிகழும் செயலாக உள்ள காலம். மகாவைத்தியநாத சிவன் சங்கீத இரத்தினகரம், பரதம், சதுர்த்தண்டிப் பிரகாசிகை போன்ற வடமொழி நூல்களெல்லாம் நன்ருகப் பார்த்தவர் ஆதலால் எழுபத்திரண்டு மேளகர்த்தா முறைகள் அவருக்கு செம்மையாகக் கைவரப் பெற்றன. அக்காலத்தில் கனகாங்கி இரத்தினங்கி முதலிய இராகங்களைப் பாடுவோரே இல்லை. அவர்களுக்கு அவை சிறிதும் தெரியாது. எழுபத்தி இரண்டு மேள இராகத்திலே நாற்பது மேள இராகங்கள் பாடுவது மிகக் கடினம். ஏனெனில் இரண்டு ரிஷபத்தில் ஒன்றை ரிஷப ஒலியாகவும், மற்ருென்றைக் காந்தார ஒலியாகவும், இரண்டு காந்தாரத்தில் ஒன்றை ரிஷப

ஒலியாகவும், மற்ருென்றைக் காந்தார ஒலியாகவும், இரண்டு தைவதத்தில் ஒன்றைத் தைவத ஒலியாகவும், மற்ருென்றை நிஷாத ஒலியாகவும், இரண்டு நிஷாதத்தில் ஒன்றைத் தைவத ஒலியாகவும், மற்ருென்றை நிஷாத ஒலியாகவும் பாடுதல் வேண்டும். பாடுதற்கு எளிமை பெற்ற ஏனைய முப்பத்திரண்டு மேளங்களில் தேனுகா, நாடகப்ரியா, கோகிலப்ரியா, வகுளாபரணம், சக்ரவாகம், சூர்ய காந்தம், நடபயிரவி, சாருகேசி, ஷட்விதமார்கிணி, கீரவாணி, கௌரீமனோகரி, சரசாங்கி, பவப்ரியா, சுவர்ணுங்கி, நாமநாராயணி, சண்முகப்ரியா, தர்ம வதி, ஹேமவதி, ரிஷபப்ரியா, போன்ற இருபது அல்லது இருபத்திரண்டு இராகங்கள் கூட எளிமை பெறப் பாடி வரும் வழக்கம் அக்காலத்தில்லை. அப்பேர்ப்பட்ட காலத்திலே மகாவைத்தியநாத சிவன் எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்களையும் கேட்போர் மகிழும்படி அநாயாசமாகப் பாடுவார்.

● மகாவைத்தியநாத சிவனுக்குத் தெலுங்குக் கீர்த்தனம், சம்ஸ்கிருதக் கீர்த்தனம், மகாராட்டிரக் கீர்த்தனம், கன்னடக் கீர்த்தனம் முதலியவைகள் தெரியுமாயினும் இசைவினிகையிலும், சிவகதாப் பிரசங்கத்திலும் தமிழ்க் கீர்த்தனைகள், தேவாரம், திருவாசகம் ஆகிய இவைகளே தலையாக நின்று சிறக்கும். தமிழாக இருந்தாலும் எம்மொழியறிந்தோரும் அதனைக் கேட்டுச் சுவைப்பார்கள். தமிழ்ப் பாடல் என்று அவர்களைக் குறை கூறியோரில்லை. இசை, தரமற்று இருந்ததுமில்லை. எங்கும் இசைச் சுவையும் தமிழ்ச் சுவையும் மணக்கும்.

● மகாவைத்தியநாதசிவனுக்குப் பல இசைமாணவர்களுண்டு அவர்களில் என் காலத்தவர்களும் என் காலத்திற்குப்பின்வந்தவர்களும் நினைவில் உள்ளவரைக் குறிப்பிடுகிறேன். 1. திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த வாசுதேவநல்லூர் பல்லவி சுப்பையா பாகவதர், 2. பத்தமடை விச்வேசுரசிவன் என்ற பத்தமடை சிவன், 3. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பழமாநேரி (பழமாறனேரி–பழமாநகரி) சுவாமிநாத ஐயர், 4. உமையாள்புரம் சுவாமிநாத ஐயர், 5. சிவாஜி அரசரின் மைத்துனர் கிருஷ்ணசாமி ஜாதராவ் சாகேப், 6. சிவாஜி அரசரின் மாப்பிள்ளை சகாராம் சாகேப் 7. பாலக்காடு அனந்தராம பாகவதர், 8. திருவையாறு சபேச ஐயர், 9. மாயூரம் வீணை வைத்திய நாத ஐயர், 10. மன்னார் சுந்தரம், 11. உம்மாச்சி இராமசுவாமி, 12. இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த ஆவுடையார் கோயில் சுப்பிரமணியம், 13. திருப்பெருந்துறை தட்சிணாமூர்த்தி சிவன், 14. மலையாளம் வைத்தி ஆசியோரும் இன்னும் பலரும் உண்டு. இங்குக் கூறப் பெற்றோரில் இசையில் நற்றிறம் பெறல் வேண்டுமென்று கருதிப் படிந்தோர் சிலர், இசையறிவைத் தமக்குத் தாமே அறிந்து ஆனந்தித்தல் வேண்டுமென்று எண்ணிக் கற்றோர் சிலர், மகாவைத்தியநாத சிவனுடைய மாணவன் என்றுக் கூறிக் கொள்வதற்காகக் கற்றோர் சிலர், எனவே பலதரப் பட்ட மாணவர் கூட்டம் அவரைச் சூழ்ந்திருந்தது.

● மகாவைத்தியநாத சிவனிடம் நான் இசை மாணவனாகப் பயின்று வந்த காலத்தும், அதன் பிறகு

செவி வழியாகவும் பல செய்திகளை அறிவேன். அவரிடம் பயின்ற பல மாணவர்களின் நிகழ்ச்சி பற்றியும் அவர்களுடைய திறமைகள் பற்றியும் சில உள. மகாவைத்தியநாத சிவனுடைய இன்னும் பல செயற்பாடுகளை நேரிற்கண்டு அறிந்து அனுபவிக்கத்தக்கது. அவற்றை யெல்லாம் குறித்து எழுத இயலாது. என் சம்பந்தப்பட்ட சில நிகழ்ச்சிகளை மட்டும் குறித்துள்ளேன்.*

● மகாவைத்தியநாத சிவனாகிய எனது சங்கீத குரு 1893 ஆம் ஆண்டு தைமாதம் காலமனார். நான் 1876 ஆம் ஆண்டு முதல் 1882 ஆம் ஆண்டுவரை அவரிடம் இசை பயின்று அவருடைய ஆசியை முழுமையாகப் பெற்று எனது ஊராகிய வாசுதேவ நல்லூர் வந்து சேர்ந்தேன். 1891 ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்டத்திலே பலப்பல இசை நிகழ்ச்சிகளைச் செய்து யாவரும் போற்றிப் புகழும் படியான பேறு பெற்றேன். இன்னும் மேலகரம், மேலப்பாவூர், இலஞ்சி, செங்கோட்டை, தென்காசி ஆகிய இந்த ஐந்து ஊர்களில் நடக்கும் எல்லா விசேஷங்களிலும் என் கச்சேரி தவறாமல் இடம் பெற்றது. அக்காலம் வாசுதேவ நல்லூர் தேவஸ்தானம், சங்கரநயினார் கோயில் தேவஸ்தானம், தலைவன் கோட்டை சமீன், சேத்தூர் சமீன், சிவகிரி சமீன் ஆகிய ஐந்து தலங்களிலும் தலவித்துவானாக அமையும் பேறு கிடைத்தது.

---

*(அவை ''இசைவானில் பல்லவி சுப்பையா பாகவதர்'' என்ற தலைப்பிலே வரப்பெறும். அவைகளனைத்தும் அங்குக் காண்க. V. S. G.

அக்காலத்தில் வருடத்திற்கு இரு நூற்றைம்பது (250) ரூபாய் வருஷாசனமாக எனக்குக் கிடைத்தமையால் திருநெல்வேலி மாவட்டத்தோடு எனது இசை நிகழ்ச்சிகளை நிறுத்திக்கொண்டேன். அக்காலம் வெளியிடங்களுக்குச் செல்லுதற்குரிய பயண வசதிகள் மிகமிகக் குறைவு.

● பின்பு 1891 ஆண்டு முதல் கல்லிடைக்குறிச்சியில் ஏகாம்பர புரத்தெருவில் வசித்துவந்தவரும், ஸ்ரீவித்யா உபாசனையிற் சிறந்தவரும், வேதாந்த விசாரணையில் தலை சிறந்தவருமாகிய சுப்பிரமணிய சுவாமிகள் என்ற பிச்சு சாஸ்திரிகளிடம் வேதாந்த சாத்திரத்தை கற்றுணரும் பேறு பெற்றேன். அப்போது எனது குருநாதர் மகாவைத்தியநாத சிவன் காலமான செய்தியறிந்து என் மனம் பட்ட பாடு சொல்லக் கூடியதன்று. என் மனத்துடி துடிப்பையும் வேதனையையும் அடக்கிச் சாந்தியடைதலை முன்னிட்டு அன்றைய நாளிலிருந்து தொடங்கி மூன்று மாதத்திற்குள்ளாக சாட்சிக் கும்மி என்ற ஒரு வேதாந்த நூலை இயற்றினேன். பெண்பாலரும் ஈசுர சைதன்யத்தையும் சாட்சாத்காரத்தையும் பெறல் வேண்டுவது அவசியமென்று எண்ணி அந்நூலைக் கும்மி வடிவில் இயற்றினேன். ஆத்துமாவை அறியும் ஒவ்வொருவரும் பிரம்மானந்த சுகத்தை அடைந்து அனுபவிப்பரென்பதனுல் அந்நூலின் இறுதியில் பிரம்மானந்தக் களிப்பு என்ற சிந்து ஒன்றையும் இயற்றி உலகோர் உய்யும் பொருட்டுச் சேர்த்துள்ளேன். 1893 ஆம் ஆண்டு சித்திரை மாதத்திலே அவர்களின் ஞாபகம் என் மனதில் நிலைத்

தற்தும் அவர்கள் ஆத்துமா பிரம்மானந்த சுகத்தை அடைதற்குமாக அந்நூலை அச்சிட்டேன்.

● விஜய வருடத்தில் (1894) மகாவைத்தியநாத சிவனின் தமையனும் எனது மூத்த குருவுமாகிய இராமசாமி சிவன் அச்சிட்ட மகாவைத்தியநாத ஐயரின் விஜய சங்கிரகம் என்ற நூலைப் பார்த்தேன். அதில் யாவும் சற்று மிகைப்படக் கூறியது போலத் தோன்றும். இராமசாமி சிவன் எனது குருமூர்த்தியாகையால் அவரை வெளிப்படையாக நான்குறை கூறலாமா? ஆயினும் சிலவற்றைக் குறையெனக் கருதி அவ்வப்போது குறித்து வைத்தேன். என் மனத்துக்குள்ளே அவரைக் குறை கூறும் படியான ஒரு தவறு செய்து விட்டேனுகையால் அதன் நிவர்த்தியை முன்னிட்டு பிரம்மானந்த அந்தாதி, பிரம்மானந்தக் கலிரஸவெண்பா, சப்தசப்தக சகஜ சமாதி நிரூபணம் என்ற மூன்று வேதாந்த நூல்களை இயற்றி என் மனத்தைச் சமாதானம் செய்து கொண்டேன். இம் மூன்று நூலும் அச்சேறவில்லை. கைப்பிரதியாகவே உள்ளன.

● கோடகநல்லூர்ச் சுந்தர சுவாமிகள் 1831 கார்த்திகை மாதம் பிறந்தார். எல்லாச் சாத்திரங்களையும் தமது பதினறு வயதுக்குள் பூரணமாக அடைந்தார். அவர்கள் தமது பதினருவது வயதில் காசியாத்திரை தொடங்கிச் செல்லும் வழியில் முதன் முதல் வையைச் சேரிக் கிராமம் வந்தடைந்தார். மகாவைத்தியநாத சிவனின் தந்தையாராகிய துரைசாமி ஐயரும் தாயார் அருந்ததி அம்மாளும் யாத்திரையாக வந்த சுந்தர சுவாமிகளை நலம் விசாரித்து உபசரித்து உதவினுர்கள்.

அப்பொழுது மகாவைத்தியநாத சிவனுக்கு மூன்று வயது நடந்து கொண்டிருந்தது. அன்று முதல் சுந்தர சுவாமிகள் வெளியூர்கள் சென்று சிவப்பிரசங்கம் செய்யச் செல்லும் போதும் வரும் போதும் மகாவைத்திய நாத சிவனுடைய வீட்டிற்கு வந்து தங்குவது வழக்கமாயிற்று. 1878 ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் அரிமளத்தில் சுந்தர சுவாமிகள் சித்தியானுர்கள். வெகுதானிய வருடம் ஆவணி மாதம் வரை மகா வைத்தியநாத சிவனுடைய வீட்டில் முப்பத்திரண்டு ஆண்டுகள் வரை தங்குவதும் வெளியூர் செல்லுவது மாக இருந்து வந்துள்ளார்கள்.

● சிதம்பரம் நடராஜா கோயிலில் கரவருடம் சித்திரை மாதம் (1891—1892) நடைபெற்ற மகாகும்பாபிடேக விழாவிற்கு அவ்வாண்டு வையை இராமசாமி சிவனும் மகாவைத்தியநாத சிவனும் வந்திருந்தார்கள். மற்றும் எண்பத்து ஒன்பது (89) வயது முதிர்ந்த கோபாலகிருஷ்ண பாரதியார், அவருடைய மாணவர் பொன்னுசாமி தீட்சிதர் முதலியவர்களும்கூட இருந்தனர். கும்பாபிடேகம் குறிப்பிட்ட முகூர்த்தத்தில் முடிந்தது. அக்கும்பாபிடேக நாளன்று சந்ததாரையாக மழை பெய்தபடியால் அனைத்து மக்களும் நடராஜா சந்நிதியிலே கூடிக்குழுமி நெருங்கி இருந்தனர். நடராஜா சந்நிதியின் முன்பாக தீபாராதனை நடந்தது. அத்தீபாராதனைக் கற்பூர தரிசனத்தை யாவரும் கண்குளிரக் கண்டு கைகூப்பித் தொழுது தோத்திரங்கள் பல சொல்லி முழங்கிக் கொண்டிருந்தார்கள்.

வடமொழி தென்மொழிப் புலவர்கள் யாவரும் போற்றி வணங்கப் பெறுபவரான '**அப்பைய தீட்சிதர்**'' என்பவர் கணக்கிலடங்காத நூல்கள் செய்துள்ளார். அவர் சிவத்தோத்திரமாக பல சுலோகங்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் ''**உன்மத்த பஞ்சாசத்**'' என்பது மிகப்பெருமையாக மதிக்கத்தக்க ஒரு நூல். அது ஐம்பது சுலோகங்கள் கொண்டது. அவற்றுள் ஆத்மார்ப்பண ஸ்துதியாக ஐந்து சுலோகங்களை மன்னார்குடி இராஜு சாஸ்திரிகள் பொறுக்கி எடுத்துக் கொண்டார். அச்சுலோகங்கள் மிகுந்த கருத்துச் செறிவு உள்ளனவாகும். நடராஜா சந்நிதானத்திலே உலகப்புகழ் பெற்ற பண்டிதர்களால் போற்றப் பட்ட வடமொழிப் புலவரான இராஜு சாஸ்திரிகள் தாம் பொறுக்கி எடுத்த அந்த ஐந்து சுலோகங்களையும் கூறிச் சிவத்துதி செய்து கொண்டிருந்தார். அவர் தம்மை மறந்து பக்தி வெள்ளம் ததும்பச் சிவன் பால் தம் மனத்தை ஈடுபடுத்தித் துதித்துக் கொண்டிருந்த அச்சிவத்துதிகளைப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த யாவரும் கேட்டு மனமுருகி நின்றனர்.

அவர் அச்சுலோகங்களைக் கூறி முடித்ததும் சற்று நிம்மதியாக இருந்தார். அப்பொழுது ராஜு சாஸ்திரிகள் பக்கத்திலிருந்த கோபாலகிருஷ்ண பாரதியாரும் மதிப்புக்குரிய மற்றும் சிலரும் இராஜு சாஸ்திரிகளுக்கு இராமசாமி சிவனையும் மகாவைத்தியநாத சிவனையும் நடராஜாவின் சிவ சந்நிதானத்திலே அறிமுகம் செய்து வைத்தார்கள். இராஜு சாஸ்திரிகள் சிவன் சகோதரர்களைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தார்களே

தவிர அவர்களைச் சந்தித்துப் பார்த்துப் பேசிப்பழகும் வாய்ப்பு அதுவரை அவர்கட்கு ஏற்படவில்லை. அவர்களுடைய தமிழ்ப்பேரறிவு, இசையறிவு வடமொழி அறிவு ஆகியவற்றின் திறமைகள் பற்றிச் சிறப்பாகக் கேள்விப்பட்டிருந்தார்கள்.

கோபால கிருஷ்ண பாரதியார் இராஜு சாஸ்திரிகளிடம் "**மகாவைத்தியநாதசிவன்** மிகவும் நயமான குரல்வளம் பெற்றவர்; அவரின் இன்னிசை தேனினும் இனிமைதரும்; வடமொழியில் சிறந்த அறிவுபெற்றவர்; தென்மொழியில் உயர்ந்த பண்டிதர்; தாங்கள் அவருடைய வாக்குவன்மையையும் இன்னிசையையும் அவசியம் கேட்கவேண்டும்," என்று கூறினர். இராஜு சாஸ்திரிகள் தமக்கு வேண்டிய நண்பர்களெல்லாம் அத்துணைச்சிறப்பாக அவரைப் பற்றிக் கூறுவதாலும் அதுகாறும் அவருடைய இசையைத் தாம் கேட்டவரல்லர் ஆகையாலும், தமக்கு இசையில் அத்துணைமோகம் இல்லாவிடினும் அவர் வடமொழிச் சுலோகங்களைக் கையாளும் முறை, சுலோகங்களை உச்சரிக்கும் போது உண்டாகும் வாக்குச் சாதுரியம், அறிவுத்திறம் ஆகிய உண்மைகளைக் காணலாம் என்றெண்ணினர். உடனே "அப்படியா! மிக்க சந்தோஷம்," என்று கூறிவிட்டு, மகாவைத்தியநாதசிவனை நோக்கி நடராஜா சம்பந்தமாக ஏதேனும் ஒன்றிரண்டு சுலோகங்களைக் கூறுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

அப்பைய தீட்சிதரால் இயற்றப்பெற்றதும், இராஜு சாஸ்திரிகளால் துதிசெய்யப்பெற்றதுமான "உன்மத்த

பஞ்சாசத்'' என்ற ஐம்பது சுலோகங்களும் மகா வைத்தியநாதசிவனுக்கும் பாடமுண்டு ஆதலால் இராஜு சாஸ்திரிகள் தேர்ந்தெடுத்துத் தோத்திரம் செய்த அந்த ஐந்து சுலோகங்களையும் பதப்பொருள் கெடாமல் பல இராகங்களிலும் இயக்கிப் பாடினார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் நெருசலிலே ஆரவார மிகுந்த பேரொலியே எங்கும் பரவியிருந்தது. மகா வைத்தியநாதசிவன் பாட ஆரம்பித்த உடனே அத்துணை ஆரவார ஒலிகளும் எப்படித்தான் அடங்கிற்றோ! மிகுந்த வியப்புக்குரியது. எல்லா மக்களும் இசையைச் சுவைக்கலானார்கள். அச்சுலோகங்கள் ஒவ்வொன்றையும் பல்வித கருத்துக்கள் தோன்றுமாறு பதப்பிரிவு செய்து, பொருட்சுவைமேலோங்க, இசையழகு எங்கும் செழிப்புறப் பாடினார். எந்த வர்ணனையை அடிக்கடி சொன்னால் பண்டிதர்கள் சுவைப்பரோ, அதனை அடிக்கடி இசைத்து எல்லோரையும் மெய்மறக்கச் செய்தார். அந்த ஐந்து சுலோகங்களையும் கானம் செய்து நிறுத்த சுமார் ஒருமணி நேரம் ஆயிற்று. அவ்விசையைக் கேட்ட மக்களுக்குக் கால்வலியில்லை, பசிப்பிணியில்லை, மக்களுடைய நெரிசலின் துன்பமில்லை. அவர் பாடிய இன்னிசை செவிகளில் ஒலித்தும், நடராஜாவின் ஆனந்தத் தாண்டவம் கண்ணிற்குக் காட்சியளித்தும் வந்தன. மக்கள் அனைவரும் அங்குள்ள சூழலில் நடராஜமூர்த்தியே கானம் செய்வதாகவே உணர்ந்து மெய்சிலிர்த்தார்கள்.

''மகாவைத்தியநாத சிவன் பாடிய சுலோகங்கள் வருமாறு'':—

(உன்மத்த பஞ்சாசத்)

# ஆத்மார்ப்பண ஸ்துதி

1. அத்3யைவ த்வத் பத3 நளினயோ ரர்ப்பயாம்யந்த ராத்3 மன்
ஆத்மானம் மே ஸஹ பரிகரை ரத்3ர கன்யாதி4 நாத2
நாஹம் பே3ாத்4 தும் தவ சிவ பத3ம் நக்ரியா யோக3 சர்யா:
கர்த்தும் ச5க்னோ ம்யத்திதர க3தி: கேவலம் த்வாம் ப்ரபத்3யே.

2. ஸர்வம் ஸத3ா சி5வ ஸஹஸ்வ மமாபராத4ம்
மக்3னம் ஸமுத்3த4்ர மஹத்யமு மா பத3 ப்3 தெ4ள
ஸர்வாத்மநா தவ பத3ாம் பு3ஜமேவ தீ3த:
ஸ்வாமின்ன நன்ய ச5ரண: ச5ரணம் க3தோஸ்மி.

3. சாரு ஸ்மேரானன ஸரஸிஜம் சந்த்3ர ரேக2ா வதம்ஸம்
பு3ல்லன்மல்லீ குஸும கலிகா த3ாம ஸௌ ப4ாக்3ய சோரம்
அந்த: பச்5யாம்யசல ஸுதயா ரத்ன பீடே2 நிஷண்ணம்
லோகாதீதம் சு5ப4த3 ஸததம் ரூபம ப்ராக்ருதம் தே.

4. விஹர பித்ரு வனே வா விச்5வ பாரே புரேவா
ரஜத கி3ரிதடே வா ரத்ன ஸானு ஸ்த2லே வா
தி3ச5 ப4வது3 பகண்ட2ம் தே3ஹிமே ப்ருத்யப4ாவம்
பரம சி5வ தவ ஸ்ரீ பாது3கா வாஹகானும்.

5. ஆத்மார்ப்பண ஸ்துதிரியம் ப4க3 வன் நி ப3 த்3 தா4
யத்3ருப்ய நந்ரு மனஸாந மயா த த2ாபி

வாசாபி கேவல மயம் ச₃ரணம் வ்ருணீதே
தீ₃னே வராக இதி ரக்ஷ க்ருபா நிதே₄ மாம்.

இசையைக்கேட்டு ஆனந்திக்க வேண்டுமென்ற ஆசையற்ற இராஜு சாஸ்திரிகள் மகாவைத்தியநாத சிவன் அச் சிவத்தோத்திரமாகிய சுலோகங்களை இசைக்க ஆரம்பித்ததும் ஆனந்தக் களிப்பினல் தம் இருகண்களையும் மூடிக்கொண்டார்கள். அச்சுலோகத்தில் அமைந்த நல்ல கருத்துக்களும் அவருடைய குரலினிமையும் சேர்ந்து இராஜு சாஸ்திரிகளுக்கு மன நிறைவை யளித்தன. எனவே இசையிலும் சுலோகத்திலும் நன்ருக ஈடுபட்டார்கள். அவர் பாடப்பாட சாஸ்திரிகளின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் கரைபுரண்டோடிற்று. சாஸ்திரிகளின் நிலைகண்டு யாவரும் வியந்ததுடன் அயர்ந்து நின்றனர். சாஸ்திரிகளைக் கண்ட எல்லார் கண்களிலும் நீர் சோர ஆரம்பித்தது. மகாவைத்தியநாதசிவன் பாட ஆரம்பித்ததிலிருந்து பாடி முடிக்கின்ற வரை இராஜு சாஸ்திரிகள் மூடிய கண்ணைத் திறக்கவேயில்லை. வழிந்த ஆனந்தக் கண்ணீரும் நிற்கவில்லை.

மகாவைத்திநாதசிவன் பாடி முடித்தார். பின்பு சாஸ்திரிகள் கண்ணைத்திறந்தார். நடராஜாவை வணங்கினர். பிறகு மகாவைத்தியநாதசிவனை அணைத்து ஆலிங்கனம் செய்து கொண்டார். "சுந்தரர் ஏவியபடி சிவபெருமான் தூதுநடந்து அவரை ஆட்கொண்டார். அதுபோலத் தாங்கள் நடராஜாவை வசப்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். அந்த நடராஜ மூர்த்தியை இந்த ஒருமணி நேரமும் எனது இருதயத்

திலே குடிபுகச் செய்துவிட்டீர்கள். இதுவரை கனக சபையில் ஆடும் அந்த நர்த்தனஈசன் எனது இருத யத்திலே தாண்டவமாடிக் கொண்டிருந்தான். என்ன ஆனந்தம்! இது போன்றதோர் ஆனந்தத்தை நான் எக்காலத்தும் அடைந்ததில்லை. அச்சுலோகம் தங்கள் வாக்கினின்று வரும்போது சொற்பொருள் மனதைக் கவர்ந்தது. இசையானது தேகாத்யந்தம் பரவி மெய் மறக்கச் செய்துவிட்டது. அற்புதம்! அற்புதம்!! நான் இசையில் ஈடுபட்டவனல்ல. அப்பேர்ப்பட்ட அரசி கனுக்கு இசையின் மேலாம் தன்மையான ஈசுவரத்து வத்தைக் கண்ணெதிரேயே காண்பித்துவிட்டீர்கள். இதுவரை தங்களுடைய இசையைக் கேட்கக் கொடுத்துவைக்காத அதிர்ஷ்ட ஈனனாக இருந்தேன். இன்று ஏதோ பெரும்புண்ணியத்தின் பயனாக நடராஜா சந்நிதியிலே பல பண்டிதர்களும் சூழ இருக்கும் இந்தச் சூழலிலே தங்களுடைய இசையையும், வாக் கினின்று வரும் வாசாம கோசரமான வாக்குச் சம்பத்தையும் கேட்கும் புண்ணியத்தைப் பெற்றேன். எல்லாம் ஈசுவரார்ப்பணம்''. என்று கூறி மிக்க மகிழ்ச்சி யடைந்தார்கள். பின்பு அன்புடன் விடைபெற்றுக் கொண்டார்கள். அன்று முதல் மகாவைத்தியநாத சிவனுடைய இசைத்திறம் பற்றியும் சிவபக்திபற்றியும் வாக்கின் மகிமைபற்றியும் பல இடங்களில் பலரிடத் தில் இராஜு சாஸ்திரிகள் எடுத்துக்கூறி மகிழ்ந்து வந்தார்கள்.

● கரவருடம் (1891—1892) சித்திரை மாதம் நடந்த நடராஜா பரிவார மகா கும்பாபிடேக விழா நாளிலே, இராஜு சாஸ்திரிகள், கோபாலகிருஷ்ண

பாரதியார் முதலிய பெரியோர்கள் குழுமியிருந்த போது, நடராஜா சந்நிதியிலே மகாவைத்திநாத சிவன் பாடிய பின்பு; கரவருடம் புரட்டாசி மாதத்திலே நவராத்திரி கொண்டாட்ட விழாவை முன்னிட்டு மைசூர் சென்ருர். அங்கு அரண்மனையில் இசை நிகழ்ச்சி நடந்தது. அங்கு ஒன்றறை மாதம் தங்கி விட்டு கார்த்திகை மாதம் சென்னை வந்து சேர்ந்தார். சென்னையில் இரண்டு மாதங்கள் தங்கினுர். அப்போது தான் மகாவைத்தியநாதசிவனை வாதப்போர் கச்சேரி செய்ய வேணு நாயுடு அறைகூவி யழைத்தார். அதாவது கரவருடம் மார்கழி மாதம். (1891 டிசம்பர் மாதம்) அந்த இசைப் போட்டியை ஏற்று இசைத்து வெற்றி பெற்று இரண்டாயிரம் பெறுமான சன்மானத்தோடு ஊர் திரும்பினுர்கள்.*

மார்கழி மாதம் கடைசி வாரத்திலே தம் பூர்வீக ஊராகிய வையைச்சேரிக்கு மகாவைத்தியநாதசிவன் வந்து சேர்ந்தார். அங்கு பல நாட்கள் தங்கினுர். அக்கிராமத்தில் தம்மால் நிறுவப்பெற்ற நடராஜா சிவகாமசுந்தரி மூர்த்தங்களுக்கு அபிஷேகாதி உபசாரங்களைச் செய்து வழிபட்டார். கரவருடம் தைமாதத்திலே திருவாரூர் தியாகேசர் சந்நிதானத் திலே அருமையான ஓர் இன்னிசை நிகழ்ச்சி நடந்தது. அதைச் செய்துவிட்டு அங்கிருந்து நேராகத் திருவையாறு வந்தடைந்தார். 1892 நந்தன வருடம் சித்திரை மாதம் வழக்கம் போல் திருவையாற்றில்

* இந்த வாதப்போர் கச்சேரி விவரத்தை ''இசைக்கலை வல்லுநர்கள்'' என்ற நூலில் கண்டுக்கொள்க.)



மகா வைத்தியநாத சிவனல்

வழிபாடு செய்யப்பட்ட நடராசர் திருவுருவம்

சப்தஸ்தான உற்சவம் நடந்தது. அந்த உற்சவத்திலே மகாவைத்தியநாதசிவனும் கலந்துகொண்டார். சுவாமிகூடப் பாடிவந்தார். சுவாமி ஆங்காங்கு தங்கும் தலங்களிலே மகாவைத்தியநாதசிவன் இன்னிசை யமுதினைப் பொழிந்து மக்களை மகிழ்வித்தார். அவர் சப்தத்தான உற்சவத்திலே சுவாமிகூடப் பாடிவந்ததில் ஏழு தலங்களிலும் விடாமல் இசைத்தது இதுவே முதல்முறையாகும்.

அதற்கு முன் ஏழு தலங்களிலும் அவர் இசைத்த வரன்று. தில்லை ஸ்தானத்தில் மட்டும் காவேரி ஆற்று மணலில் அமர்ந்து பாடுவார். அவ்வாறு ஏழு தலங்களிலும் இசைத்தது மக்களுக் கெல்லாம் ஒரு புதுமையாக இருந்தது. அவ்வாறு செய்த பின்பு அவர் எங்கும் இசை நிகழ்ச்சி செய்ததில்லை. நந்தன (1892-1893) வருடம் ஆவணி மாதத்தில் நோயாகப் படுத்துவிட்டார். பின்பு அவர் உடல் தேறவில்லை. தமிழ்நாடு பெற்றெடுத்த தவப்புதல்வர், தெவிட்டா இசைப்புலவர், கண்கொள்ளாக் காட்சியாளர், தமிழ்த் துறைச்செல்வர் ஆகிய மகாவைத்தியநாதசிவன் 1893-நந்தன வருடம் தை மாதத்தோடு நம்நாட்டுத் தமிழ்மக்களை ஏங்கித்தவிக்கும்படி விட்டுவிட்டுத் தம் பூத உடலை நீத்துச் சிவப்பேரின்பத்தைப் பெற்று விட்டார்.

● மகாவைத்தியநாதசிவனின் வாழ்க்கை நிரம்பிய சுவையுள்ளது. அவரிடம் எல்லாமக்களும் ஒவ்வோர் வகையில் அன்புடையவராக இருந்தனர். அவரிடம் பல அரசர்களும், பல தமிழ்ப்புலவர்களும், பல வட

மொழிப் புலவர்களும், பல இசைப் புலவர்களும் மிகுந்த பற்றுதலுடையவராக இருந்தனர். எல்லோரையும் இங்கு குறிக்க இயலாதாயினும் சிலரைமட்டும் எடுத்துக் கூறுதல் நன்ருகும்.

● மகாவைத்தியநாத சிவனுடைய இன்னிசையில் ஈடுபாடு உடைய அரசர் மடாதிபதி பிரபு ஆகிய பலருள் முக்கியம் வாய்ந்த சிலருடைய பெயர் பட்டம், தோற்றம், மறைவு.

| | | பட்டம் | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவனந்தபுரம் ஆயில் திருநாள் அரசர் ... | 1860 | | 1880 |
| 2 | ,, விசாகம் திருநாள் அரசர் ... | 1880 | | 1885 |
| 3 | மைசூர் அரசர் கிருஷ்ணராஜ உடையார் ... | 1779 | | 1868 |
| 4 | ,, சாமராஜேந்திர உடையார் ... | 1868 | | 1894 |
| 5 | தஞ்சை 2-ஆவது சுவீகாரப்பிள்ளை சரபோஜி அரசர்... | 1855 | | 1903 |
| 6 | ,, 2-ஆவது சிவாஜி அரசர் மாப்பிள்ளை சகாராம் சாகேப்.. | | | |
| 7 | சொக்கம்பட்டி ஜமீன்தார் கருணலய வணங்காப்புலித்தேவர்... | 1859 | | 1892 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | இராமநாதபுகம் சேதுபதி அரசர் ரீஜண்ட் பர்வதவர்த்தினி நாச்சியார்... | 1846 | | 1862 |
| 9 | ,, ,, முத்துராமலிங்கத்தேவர்... | 1862 | | 1873 |
| 10 | ,, ,, பாஸ்கர சேதுபதி ... | 1889 | 1867 | 1903 |
| 11 | பாலவநத்தம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவர்... | | 1867 | 1911 |
| 12 | ஊற்றுமலைஜமீன்தார் ஹிருதயாலய மருதப்பத் தேவர் சுமார்... | | 1835 | 1907 |
| 13 | புதுக்கோட்டை அரசர் இராமச்சந்திரத் தொண்டைமான்... | | | |
| 14 | எட்டையபுரம் அரசர் ராஜஜகத் வீரராமகுமார எட்டப்ப மகாராஜா... | | | 1899 |
| 15 | ,, ராஜஜகத்வீரராமவேங்கடேச்வர எட்டப்ப மகாராஜா... | 1899 | | |
| 16 | இராமநாதபுரம் ஜமீன் பேஷ்கார் பொன்னு சாமித்தேவர்... | | 1837 | 1870 |
| 17 | திருவாவடுதுறை ஆதீனம் 15-ஆவது பட்டம் ஸ்ரீ அம்பலவாண தேதிகர்... | 1845 | | 1869 |
| 18 | ,, 16-ஆவது பட்டம் மேல கரம் சுப்பிரமணியதேசிகர்... | 1869 | 1825 | 1888 |
| 19 | கல்லிடைக்குறிச்சி சின்னப்பட்டம் நமச் சிவாயதேசிகர்... | | | 1883 |

| | | பட்டம் | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|---|
| 20 | திருவாவடுதுறை ஆதீனம் 17-ஆவது பட்டம் ஸ்ரீ அம்பலவாணதேசிகர்... | 1888 | | 1920 |
| 21 | திருப்பனந்தாள் ஆதீனம் தலைவர் குமரசாமித் தம்பிரான்... | | | |
| 22 | சிறுவயல் ஜமீன்தார் முத்துராமலிங்கத் தேவர்... | | | |
| 23 | குடியாலம் வாசுதேவ ஐங்கார் ... | | | |
| 24 | ஆழ்வார் குறிச்சி தளவாய் குமரசாமி முதலியார்... | | | |
| 25 | வேங்கடகிரி சமஸ்தானம் வீணையரசர் ... | | | |
| 26 | கொச்சியரசர் ... | | | |

இன்னும் பல ஜமீன்தார்களும் பிரபுக்களும் உண்டு.

● மகாவைத்தியநாத சிவனுடைய இன்னிசையிலும் சிவகதையிலும் வடமொழியிலும் ஈடுபட்ட வடமொழிப்புலவர்களும் வேதாந்தப் புலவர்களும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீங்கேரி ஜகத்குரு சச்சிதானந்த சிவாபிநவ நரசிம்மபாரதி சுவாமிகள்... | 1866 | 1858 | 1912 |

| | | | |
|---|---|---|---|
| 2 | கோடகநல்லூர் சுந்தரசுவாமிகள் சித்த புருடர்... | 1831 | 1878 |
| 3 | திருவனந்தபுரம் நீலகண்ட சிவன் கவி, வேதாந்தம், சிவபக்தர்... | | |
| 4 | கல்லிடைக்குறிச்சி முத்துசாஸ்திரிகள் வட மொழி சாஸ்த்ரஞ்ஞர் | | |
| 5 | கல்லிடைகுறிச்சி சுப்பிரமணிய சுவாமிகள் என்ற பிச்சு சாஸ்திரிகள் ஸ்ரீ வித்யா உபாஸகர், வேதாந்தி, திரிகாலஞானி சுந்தரசுவாமிகளின் பிரதம சீடர்... | | |
| 6 | ,, இராமசாமி சாஸ்திரிகள் வேதாந்தி சிவபூஜா துரந்தரர்... | | |
| 7 | மன்னார்குடி இராஜு சாஸ்திரிகள் சாஸ்திர மகாமேதை... | | |
| 8 | கிருஷ்ணபுரம் மகாபண்டிதர் சாமுசாஸ்திரிகள்... | 1865 | 1930 |
| 9 | திருவனந்தபுரம் மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை இயற்புலவர் வேதாந்தி... | 1854 | 1897 |
| 10 | ஆனதாண்டபுரம் கோபாலகிருஷ்ண பாரதி தமிழ்புலவர் கவிஞர் வேதாந்தி .. | 1803 | 1899 |
| 11 | திருநெல்வேலி ஜயாசாமிபிளளை வேதாந்த நிபுணர்... | | |
| 12 | ,, மாவடி சிதம்பரம்பிள்ளை ,, | | |

| | | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 13 | ,, பஜனைமடம் சிதம்பரம்பிள்ளை ,, | | |
| 14 | பழமானேரி சுந்தர சாஸ்திரிகள் வடமொழிப் புலவர்... | | |
| 15 | திருவையாறு பாலகிருஷ்ணசாஸ்திரிகள் ,, | | |
| 16 | திருவாலங்காடு தியாகராஜசாஸ்திரிகள் ,, | | |
| 17 | சிதம்பரம் பொன்னுசாமி தீட்சிதர் இளஞர், இயல், இசைப்புலவர்... | | |

இன்னும் பல வடமொழிப்புலவர்களும் வேதாந்தப் புலவர்களுமுண்டு.

● மகாவைத்தியநாத சிவனுடைய இன்னிசையிலும் தென்மொழிப்புலமையிலும் ஈடுபட்ட தமிழ்ப்புலவர் மணிகள்.

| | | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாவடுதுறை ஆதீனம் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை... | 1822 | 1876 |
| 2 | ,, வித்துவான் டாக்டர் உ. வே. சாமிநாதஐயர்... | 1855 | |
| 3 | பூண்டி ராய்பகதூர் அரங்கநாத முதலியார்... | | |
| 4 | யாழ்பாணம் ராய்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை... | 1832 | 1901 |

| | | | |
|---|---|---|---|
| 5 | மாம்பழக்கவிச் சிங்கநாவலர், இராமநாதபுரம் சமத்தான வித்துவான்... | 1836 | 1886 |
| 6 | சின்னிகுளம் அண்ணுமலைரெட்டியார் (காவடிச் சிந்து அரசர்)... | 1861 | 1891 |
| 7 | மாயூரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளை ... | 1826 | 1886 |
| 8 | திரிசிராப்பள்ளி தியாகராஜ செட்டியார் (தமிழ் பண்டிதர் கும்பகோணம்)... | | |
| 9 | திருவாவடுதுறை தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள்... | | |
| 10 | செவ்வந்திபுரம் வேணுவனலிங்கத் தம்பிரான் சுவாமிகள்... | | |
| 11 | காசிமடம் தலைவர் குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்... | | |
| 12 | திருநெல்வேலி சிரஸ்தேதார் வீரபத்திர பிள்ளை... | | |
| 13 | மதுரை சிரஸ்தேதார் வேங்கசாமிநாயுடு காரு... | | |
| 14 | தண்டலம் கோபாலராவ் (கும்பகோணம் கல்லூரி பிரின்ஸிபல்)... | | |
| 15 | இராமநாதபுரம் ரிஸீவர் ஸ்ரீனிவாச ஐயங்கார்... | | |
| 16 | பச்சாம்பேட்டை மிராசுதார் நடராஜஐயர்... | | |

| | | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 17 | காசிவாசி செந்திநாத ஐயர் ... | | |
| 18 | பண்டித நடேச சாஸ்திரி ... | | |
| 19 | நெல்லையப்பபிள்ளை திருநெல்வேலி ... | | |
| 20 | மேலூர் தாசில்தார் சீதாராம ஐயர் ... | | |
| 21 | வள்ளியூர் சிதம்பரநாதத் தம்பிரான் சுவாமிகள்... | | |
| 22 | யாழ்ப்பாணம் சபாபதி நாவலர் ... | | |
| 23 | கீழக்கல்லூர் ஆழ்வாரப்பிள்ளை ... | | |
| 24 | திருச்சி சிந்தாமணி அமிர்தம்பிள்ளை ... | | |
| 25 | கொழும்பு இராமநாதன் ஸர் பொன்னம்பலம்... | | |
| 26 | யாழ்ப்பாணம் சங்கர பண்டிதர் ... | | |
| 27 | வாசுதேவநல்லூர் சின்னசுப்பராயர் ... | | |
| 28 | சேலம் இராமசாமி முதலியார் ... | | |
| 29 | அவிநாசி விருதை சிவஞான யோகிகள் ... | | |
| 30 | தொழுவூர் வேலாயுத முதலியார் ... | | |
| 31 | பேரறிஞர் கந்தசாமி முதலியார் (இன்னும் பலரும் உண்டு)... | | |

மகாவைத்தியநாத சிவனுடைய
இசையில் ஈடுபட்ட இசைப் புலவர் மணிகள்

1-திருவனந்தபுரம் வேதஸ்ரீ பரமேசுவர பாகவதர், 2-சாம்ப பாகவதர், 3-கிட்டு பாகவதர், 4-மொக்கே கணபதி பாகவதர், 5-இராமசாமி பாகவதர். 6-மலையாளம் வைத்தி பாகவதர், 7-வில்லடி மகாதேவ பாகவதர், 8-வீணை கல்யாண கிருஷ்ண பாகவதர், 9-வீணை இராமச்சந்திர பாகவதர், 10-அப்பு பாகவதர், 11-கோயம்புத்துர் இராகவ ஐயர், 12-பாலக்காடு அனந்தராம பாகவதர், 13-செங்கோட்டை சீதாராமசுவாமி பாகவதர்;

14- திருநெல்வேலி வீணை சின்னைய பாகவதர், 15-பிச்சுமணி பாகவதர், 16-ஸ்ரீவைகுண்டம் சுப்பையர், 17- வெள்ளங்குழி சாமிபாகவதர், 18- பத்தமடை விசுவேசுரசிவனென்ற பத்தமடை சிவன், 19-வாசுதேவநல்லூர் பல்லவி சுப்பையா பாகவதர், 20-பிடில் வெங்குப்பிள்ளை, 21-ஆழ்வார்குறிச்சி அனந்தகிருஷ்ண பாகவதர், 22-எட்டையபுரம் பாலுசாமி தீட்சிதர், 24-நகரம் முத்துசாமிக் கவிராயர், 25-வாசுதேவநல்லூர் மூக்கரைக் கந்தசாமிப் புலவர், 26-செவ்வற்குளம் கந்தசாமிப் புலவர்;

27-சிவகங்கை பெரியவைத்தியநாத ஐயர், 28-சின்ன வைத்தியநாத ஐயர், 29-குன்னக்குடி கிருஷ்ணையர், 30-ஆவுடையார் கோயில் சுப்பிரமணியம், 31-திருப்பெருந்துறை தட்சிணாமூர்த்தி சிவன், 32-இராமநாதபுரம் பூச்சி ஸ்ரீனிவாச ஐயங்கார்,

33-ஸ்ரீவில்லிபுத்தூர் மடவார் குளம் முத்தையா பாக வதர், 34-புதுக்கோட்டை வீணை சுப்புக்குட்டி ஐயர், 35-வீணை சுப்பையர்,

36-தஞ்சை மானம்பூச்சாவடி வேங்கட சுப்பையர், 37- சுப்பராய சாஸ்திரி, 38-அண்ணுசாமி சாஸ்திரி, 39-வீணை ஆதிமூர்த்தி ஐயர், 40-இரட்டைப் பல்லவி சிவராம ஐயர், 41-மிருதங்கம் நாராயண சாமியப்பா, 42-சாமாரா, 43-துக்காரம், 44-சேது ராமராவ், 45-பெரிய இராமசாமி பாகவதர், 46-திருவையாறு பிடில் சாம்பசிவ ஐயர், 47-T. S. சபேச ஐயர், 48-பட்டினம் சுப்பிரமணிய ஐயர் 49-பிடில் சுப்பராயர், 50-புல்லாங்குழல் சரப சாஸ்திரிகள், 51-பிடில் சுப்பையர், 52-பிடில் வெங்கோபராவ், 53-திருக்கோடி காவல் பிடில் கிருஷ்ணையர், 54-பிட்சாண்டார் கோயில் சுப்பராயர், 55-திருக்கோகர்ணம் நாராயணசாமி ஐயர், 56-கடம் நாராயணசாமி ஐயர், 57-உமையாள்புரம் சாமிநாதையர், 58-பழமானேரி சாமிநாத ஐயர், 59-மெலட்டூர் சுப்பையர், 60-திருத்துறைப்பூண்டி பாகவதர், 61-சாத்தனூர் பஞ்சுவய்யர், 62-மாயூரம் வீணை வைத்தியநாத ஐயர், 65-கோட் வாத்தியம் கிஷ்ணையர்;

64-சென்னை பிடில் போட்டோகிராப் மாசிலாமணி முதலியார், 65-ஆர்மோனியம் கந்தசாமி முதலியார், 66-வேணுகோபாலதாஸு நாயுடு, உருத்திர ஐயா, 63-பிடில் கோட்டப்பநாயுடு, 69-பிடில் இராமையா பிள்ளை, 70-பொன்னுசாமி நட்டுகர்,71- பிடில் கிருஷ்

ணசாமி முதலியார், 72-பிடில் பட்டினம் சுப்பிரமணிய ஐயர், 73-நெய்க்காரப்பட்டி பல்லவி சேஷ ஐயர்;

74- மைசூர் கிருஷ்ணையங்கார், 75- வீணை சாமண்ணு 76-வீணை சேஷண்ணு, 77-வீணை சுப்பண்ணு, 78-பக்ஷி வீணை சாம்பஐயர்.

இன்னும் பல இசை வித்துவான்களும் உண்டு

● மகாவைத்தியநாத சிவன் அவர்கள் ஞானிபோல் வாழ்ந்தார். யோகி போல நின்றொழிகினுர். சந்நியாசி போல மனத்துறவு பூண்டார். அவருடைய சொல்லும் செயலும் சிவார்ப்பணமாவே இருந்தன. உலகில் தோன்றும் ஒவ்வொருவரும் எவ்வாறு வாழ வேண்டு மென்பதை வாழ்ந்து காட்டினுர். அவருடைய இசை போலவும் சிவகதை போலவும் இனிக் கேட்பது என்பது மிக அரிது. அவரைப் போன்ருெருவர் நந்தமிழ் நாட்டில் பிறப்பது அரிதினும் அரிது- நந்தமிழ் நாட்டில் தோன்றிய முத்தமிழில் நடுவாகிற இசைத் தமிழ் செய்த பெரும் பேறு 27-1-1893 ஆண்டோடு முடிவு அடைந்து விட்டது. அவரால் செய்யப்பட்ட இசையின் மார்க்கங்களே இப்போதும் நம்மிடையே எழிலும் ஏற்றமும் பெற்றுத் திகழ்கிறது.

● நம் கர்ஞடக இசை வளர்ச்சிக்குப் பாடுபட முதன் முதலாக ஓர் இசைக்கல்லூரி 1929-ல் அண்ணுமலைப்பல்கலைக்கழகத்திலேதான் தோன்றிற்று. அண்ணுமலைப்பல்கலைக்கழகத்து இசைக்கல்லூரிக் கட்டிடத்தின் எதிரே நின்று கொண்டு அக்கல்லூரியை நோக்குவோ

யின் நம் இடது கைப்பக்கம் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராக மதிக்கப் பெறுகின்ற ஸ்ரீ தியாகராஜ சுவாமி களின் திரு உருவச்சிலையைக் காணலாம். இசைக் கல்லூரியிற் பயிலும் மாணவ மாணவிகள் இசையை மட்டும் கற்றுக்கொண்டால் போதாது என்றும் பாட்டு இயற்றுதல், பாட்டிற்கேற்ப இராக தாளங்களில் வர்ணமெட்டுக்கள் (சுரஅமைப்பு) அமைத்தல் ஆகிய இவற்றிலும் அறிவு பெறல் வேண்டுமென்ற குறிப்பை உணர்த்தவே அத்திருவுருவம் அமைக்கப் பெற்ற தாகும்.

நம் வலது கைப்பக்கம் மகாவைத்தியநாத சிவனின் உருவச்சிலை அழகுற அமைந்துள்ளது. இசைக்கலையைக் கற்கும் மாணவர்கள் இசை இலக்கணம் பாட்டு இயற்றுதல் இசையமைப்பு செய்தல் ஆகியனவற்றை அறிந்திருத்தல் மட்டும் போதாது என்றும், மகாவைத்தியநாதசிவன் அவர்களின் தூய ஒழுக்கம் இசையைச் சிறக்கும் படி கச்சேரி செய்தல், தமிழ் அறிவின் திறத்தைப் புலவர்களும் மகிழும்படி வெளிப்படுத்துதல், வடமொழியின் ஆழத்தை அறிந்து தக்கவாறு பயன் படுத்துதல், தம் அன்றுட நெறி முறைகளைக் காலந் தவறுது கைக்கொள்ளுதல், சிவபூசை, சிவலாயதரிசனம், சிவத்தியானம் முதலியவைகளை நெறியோடு செய்தல், தன்னுடைய வித்தையை பிறருக்குச் சொல்லி வைத்து உவத்தல், மாணவர்களிடம் கழிவிரக்கம் கொண்டு கருணை உள்ளத்தோடு பழகுதல், பெரியோர்களிடம் மரியாதையாக இருத்தல், கடுமையான சொல்லைப் பேசாமல் மெள்ளப்பேசுதல், எப்போதும் கலையைப்

பற்றியே சிந்தனை செய்தல் போன்ற அருங்குணங்களோடுதாமும் விளங்குதல் வேண்டும் என்ற எண்ணத்தையும் மாணவர்களுக்கு உணர்த்துதலை முன்னிட்டு அவருடைய திருவுருவம் அமைக்கப்பெற்றது என்பதே பொருந்துவதாகும்.

தியாகராஜ சுவாமிகள், மகாவைத்தியநாத சிவன் ஆகிய இவ்விரண்டு திருவுருவங்களையும் அமைக்கும் போது டாக்டர் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள், பல்கலைக் கழகத்து அதிகாரிகளுடனும் அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த பல இசைப் புலவர்களிடமும் பன்முறை கலந்து ஆலோசித்து இத்திரு உருவங்களை இடம் பெறச் செய்தார்கள். அவ்விருவர்களுடைய செயற்பாடுகளை அரசரவர்கள் நன்கு கேட்டறிந்த பின்பே தகுதியும், சிறப்பும் மிக்க அவர்களின் இத்திருவுருவங்கள் பல்கலைக் கழக இசைக் கல்லூரித் தலைவாயிலை அலங்கரிக்க வேண்டுமென முடிவு செய்தார்கள்.

எனவே இசைகற்கும் மாணவ மாணவியர் தியாகராஜ சுவாமிகள் போலவும் மகாவைத்தியநாத சிவன் போலவும் படிப்பும் பண்பும் பெற்று மேலும் சிறப்படைதல் வேண்டுமென்று எல்லாம் வல்ல தில்லைகூத்தனை வணங்கி வாழ்த்துகிறேன். (V. S. G.)

இசையுலகில் மகாவைத்தியநாத சிவன்
இரண்டாம் பாகம் முற்றிற்று.

---